உயிர்க்காற்று

மேலாண்மை பொன்னுச்சாமி

வானதி பதிப்பகம்

உயிர்க்காற்று

(பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது பெற்ற நூல்)

மேலாண்மை பொன்னுச்சாமி

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை—17.

முதற் பதிப்பு : செப்டம்பர், 1996

இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2004

© உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 70.00

- TITLE : **UIER KAATTRU**
- AUTHOR MELANMAI PONNUSAMY
- LANGUAGE : TAMIL
- SUBJECT : STORIES
- EDITION : SECOND EDITION
  DECEMBER 2004
- PAGES : 224
- PUBLISHED BY : **VANATHI PATHIPPAKAM**
  23, DEENADAYALU STREET,
  THYAGARAYA NAGAR,
  CHENNAI - 600 017.
- PRICE : RS. 70.00

Type setting : **AMARAVATHI** Chennai - 83. Cell : 9444169725
Printed by : **Malar Printers 044-8224803**

சமர்ப்பணம்

சின்னவயசிலேயே விவசாயத் தொழிலாளி யாகி - சொந்த முயற்சியிலேயே தார்ச்சாலையில் ஓவியம் போட்டுப் பழகி பயிற்சி பெற்று, ஓவியராகி, 'செம்மலர்' மாத இதழின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்று, கடின உழைப்பில் ஈடுபட்டு, கால் நூற்றாண்டுக்கும் மேலாக பணியாற்றி வருகிற மதிப்பிற்குரிய தோழர். தி.வரதராசன் அவர்களுக்கு... (எனது முதல் சிறுகதையான 'பரிசு' என்ற சிறு கதையை படித்துப் பார்த்து பிரசுரித்த நாள் முதல், இன்று வரை செம்மலரில் பிரசுரமான என் எல்லாச் சிறுகதைகளைப் பற்றியும் என்னைவிட நுட்பமாக ஞாபகத்தில் வைத்திருக்கிற அவரது அன்பும், தோழமையும், பொறுமையும், உயர்பண்பும், தாயுள்ளமும்... அவரது அகமனச் சிறப்புகளை வார்த்தைப்படுத்த என் கைவச முள்ள தமிழுக்கு வலிமை போதாது.)

உள்ளடக்கம்

பசு	23
உயிர்க் காற்று!	37
பூமிக்குப் பொறுக்காது	58
புது ஐயா	76
மாயமாகும் மயில் உலகம்	91
பார்வை	109
கூமுட்டை	122
கலர்க்கலராய் ஆசை	134
தாய்மை	145
கரும்பு	163
பிரிவு	174
ஒரு நாள்	191
சபிக்கப்பட்ட ஆன்மாக்கள்	204

ஒரு பேட்டி முன்னுரையாகிறது

இந்தத் தொகுப்புக்கான முன்னுரை என்னவாக இருக்கலாம் என்று ரொம்ப நேரம் யோசித்துப் பார்த்தேன். ஒவ்வொரு நூலுக்கும் இதே சிக்கல்தான்.

இந்த முன்னுரையில் நான் பேச நினைக்கிற விஷயம் பூராவும், சமீபத்தில் வெளியான எனது பேட்டியில் இருப்பதை நினைவுபடுத்திக் கொண்டேன்.

ஏன்... அந்தப் பேட்டியையே இதன் முன்னுரை யாக்கி விடலாமே என்று யோசித்து, முடிவும் செய்து கொண்டேன்.

வந்தவாசியிலிருந்து அ. வெண்ணிலா நடத்துகிற சிற்றிதழ், ‘பூங்குயில்’ அழகான அச்சும், அமைப்பும், சமூக அக்கறையும் கொண்ட அந்த இதழில் வெளிவந்த பேட்டி, ‘ஹைக்கூ’வில் புதிய மைல் கல் நாட்டிவரும் தோழர் மு. முருகேஷ் தொகுத்த கேள்விகளுக்கான எனது பதில்கள் பிப்ரவரி, மார்ச் (1996) மாதப் பூங்குயில்களில் பிரசுமாகியிருந்தது.

இதோ... இதன் முன்னுரையாக அந்தப் பேட்டி:

1. உங்களுக்குள்ளிருந்து ஒரு எழுத்தாளன் வெளிப் பட்டது எப்படி... எப்போது?

எழுத்தாளனாக வெளிப்படுவதற்குரியதாகக் கருதப்படுகிற எவ்விதச் சூழலும் என் குடும்பத்திலோ... பாரம்பரியத்திலோ... இல்லை. அப்பாவின் அப்பா... அப்பா... நான் எல்லோருமே பலசரக்குக் கடை நடத்தியவர்கள். கணக்கு பிடிபட்ட அளவுக்கு கவிதை பிடிபட நியாயமில்லை. லாபத்திலேயே குறியாக இருந்து உலர்ந்து போய்விடக் கூடிய மனசையே கடை வாழ்க்கை வழங்கும். இலக்கியத்துக்குரிய கனிந்து குழைந்த மனசுக்கு இடமில்லாத சூழல்.

ஆயினும் எழுத்தாளனாக ஆகியிருக்கிறேன். எப்படி என்ற கேள்விக்கு நேர்மையான பதில் என் கைவசத்தில் இல்லை. நானாக ஊகிக்கிற பதில் கூட எந்தளவுக்கு உண்மையாக இருக்கும் என்று எனக்கு விளங்கவில்லை.

தலைப்பிள்ளையான எனக்கு பதினொரு வயசு. அப்போது என் அப்பா செல்லச்சாமி மரணமடைந்து விட்டார். என் அம்மா அன்னபாக்கியம் நடக்க முடியாத நோயாளி. பள்ளியில் நன்றாக படிக்கக் கூடிய முதல் மாணவனாக இருந்த எனக்கு, கல்வி மறுக்கப் பட்டது. கல்வியுடனான எனது உறவும் அறுபட்டு, காயமாயிற்று. என் தம்பி கரிகாலனையும் படிக்க வைக்க முடியாத சோகம்.

சின்ன வயசிலேயே குடும்பபாரம். மனித உறவுகளுடன் உரச வேண்டிய அனுபவங்கள். சில்லறை வியாபாரத்தின் சிக்கல் சிடுக்கலுக்குள் சிக்கி மீள வேண்டிய போராட்டம். வயசுக்கு மீறிய அனுபவங்களும்,

ரணங்களும் என்னுள் ஏகப்பட்ட குழப்பங்கள் உண்டு பண்ணியிருந்தன.

இந்தச் சமயத்தில் எனக்கு மார்க்ஸீய இயக்கத்துடன் ஏற்பட்ட பரிச்சயம். அந்த ஒளியில் எனக்குள் குழம்பிக் கிடந்த அனுபவங்களை அலசிப் பரிசீலித்து புதிய முடிவுகளுக்கு வர முடிந்தது.

மர்மக்கதைகள், சாண்டில்யனின் சரித்திர நாவல்கள், டாக்டர் மு.வ.வின் படைப்புகள், கலைஞர் கருணாநிதி, அண்ணா போன்றோரின் படைப்புகளில் கரைந்திருந்த நான் - ஒரு திருப்தியின்மையில் தடுமாறிக் கொண்டிருந்த எனக்கு - மார்க்ஸீயப் பரிச்சயத்திற்குப் பிறகு கிடைத்தன ருஷ்ய நாவல்கள். வீரம் விளைந்தது, கன்னி நிலம், தாய், மூவர், அன்னை வயல் போன்ற நாவல்கள்.

நிஜ வாழ்க்கையின் சகல பரிமாணங்களையும் துல்லியமாக உணர்த்திய இந்த நாவல்கள் என்னைப் பிரமிக்க வைத்தன. எட்டிப் பிடிக்க முடியாத சிகரமாகத் தோன்றியது. மலைக்க வைத்தது. தமிழில் இம்மாதிரிப் படைப்புகள் படைக்கவே முடியாதோ என்று ஆயாசப் பட்டிருந்தேன்.

அப்போது... எனக்குக் கிடைத்த ஜெயகாந்தனின் சிறு கதைத் தொகுப்பு, ''யுக சந்தி''. தமிழிலும் யதார்த்த இலக்கியம் சாத்தியமாகியிருக்கிறது என்ற நிரூபணம். அது தந்த நம்பிக்கை வெளிச்சம்.

ஆம்... கல்வியைத் தொடர முடியாமல் போன காயத்தின் உள் ரணத்தின் போர்க்குணம், மார்க்ஸீய வெளிச்சத்தில் ஜெயகாந்த தடத்தில் சிறுகதைப்

படைப்புகளாக வெளிவந்தன. கல்வியில் பதிக்க முடியாமல் போன முத்திரைகளை இலக்கிய படைப்பு களில் பதிக்க முயல்கிறேன். முதற் சிறுகதை செம்மலரில் 1972-இல் வெளிவந்தது. நான் எழுதிய முதற் சிறுகதையே அது தான். அக்கதையின் தலைப்பு ''பரிசு.''

2. தமிழ்ச் சிறுகதையின் தற்போதைய போக்கு தங்களுக்கு நம்பிக்கையளிக்கிறதா?

ஆம், நம்பிக்கையளிக்கிறது. நாவல், கவிதை, திறனாய்வு இவைகளிலெல்லாம் ஒரு தேக்கமும் திகைப்பும், திசையறியாத் தன்மையும் நீடிக்கிற இக்காலத்தில் சிறுகதை இலக்கியம்தான் செழிப்பாக வளர்திசையில் இயங்குகிறது.

வாழ்க்கையில் கட்டிப் புரண்டு காயத் தழும்புகள் ஏறிய இளைஞர்கள் யதார்த்த இலக்கியப் போக்கை உணர்ந்து பிரதிபலிக்கிறார்கள். அப்படிப்பட்ட படைப்பாளிகள் சிறுகதையில் பூத்துக் கொண்டே யிருக்கின்றனர். தேனீ சீருடையான், மாதவராஜ், ரோஜா குமார், சோ. தருமன், ஷாஜகான் என்று ஏகப்பட்ட இளம்படைப்பாளிகள் சமூக அக்கறை மிக்க சிறுகதை யாளர்களாக மலர்கின்றனர். மொழி நுட்பமிக்கவர்களாக வருகின்றனர்.

3. ஒரு நல்ல சிறுகதையின் வெற்றி என்பது எதை நோக்கியதாக இருக்க வேண்டும்?

வாழ்க்கையின் ஆழ்ந்த ஒருதுளியை வார்த்தைப் படுத்துகிற கச்சித நேர்த்தியில் வாசகனின் வாசிப்பு ஆர்வத்தை ஈர்ப்பதை முதல் நோக்கமாகவும், வாசக

ஆத்மாவில் ஒரு கனிவை - ஒரு குழைவை சகமனிதர்பால் பரிவுணர்வை ஏற்படுத்துவதை மறுநோக்கமாகவும், வாழ்க்கை குறித்த ஆழ்ந்த ஓர் உணர்வை வாசக நெஞ்சில் உறைய வைத்து, சிற்பமாக்குவதை மூன்றாவது நோக்கமாகவும் ஒரு வெற்றிகரமான நல்ல சிறுகதை கொண்டிருக்கும்.

4. எழுத்தாளராகி விட்டோமே என்று எப்போதேனும் வருந்திய சம்பவமுண்டா?

இல்லை. இல்லவேயில்லை. இன்னும் சமூக விளைவு நிகழ்த்தக் கூடிய வலிமையான எழுத்தாளனாக வளர வில்லையே என்கிற ஏக்கமும், திருப்தியின்மையுமே என்னைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது.

5. உங்கள் கதைநாயகர்கள் பெரும்பாலும் ஒரே தளத்தில் இயங்குபவராக இருப்பதால் சலிப்பு தட்டுவதுபோல் தோன்றியதுண்டா?

நேர்மையாகவும் உண்மையாகவுமே இருப்பது என்று முடிவுக்கு வந்துவிட்டவனுக்கு... நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதில் சலிப்பு தட்டுமா... என்ன? வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் உண்மையாக இருக்க வேண்டுமானால்... நான் வாழ்ந்து உணர்ந்த தளத்தையும், மனிதர்களையுமே இலக்கியமாக பிரதிபலித்தாக வேண்டும். நான் பிறந்தது, வாழ்வதும், அனுபவமாகி யிருப்பதுவும் கரிசல்காடும், சம்சாரி மனிதர்களும்தான். இவர்களுக்குள் அள்ள அள்ளக் குறையாத சமுத்திரப் பிரச்சினைகள். வகைவகையான மனிதர்கள். விதவிதமான குணசித்திரங்கள்.

இவர்களை வார்த்தைப் படுத்துகிற போதுதான், ரத்தமும், சதையுமாக இயங்குகிற மனிதப் பாத்திரங்களாக இருப்பார்கள். உயிர்ப்போடு இருப்பார்கள். வாழ்க்கை குறித்த உணர்வுண்மையே. கலையுண்மையாக ஜீவத் துடிப்போடு வெளிப்படும். இதில் சலிப்பு எப்படி வரும்?

சலிப்பு வருகிற போது எழுதுவதை நிறுத்தி விடுவதே நேர்மையாகும். ஏதேனும் வித்தியாசமாக செய்ய வேண்டும் என்பதற்காக... எனக்குள் பரிச்சயமாகாத ஒரு தளத்தையோ, மனிதர்களையோ, என்னால் பிரதிபலிக்க முடியாது.

''முற்றுகை''யில் வருகிற சொர்ணமும், ''அச்சமே நரகத்தில்'' வரும் பூங்கிளியும் எனது மண் மக்கள்தான். ஒரே மாதிரியானவர்களா? ''இனி'' யில் வருகிற ஜம்புலிங்க நாடார் மாதிரியான பாத்திரம் வேறு என் கதைகளில் உண்டா? ''அரும்பில்'' வரும் செல்லியும், ''மைதானத்'' தில் வரும் சிறுமியும் தீப்பெட்டியாபீஸில் பணியாற்றும் சிறுமிகள்தாம். ஆனால் ஒரே மாதிரியானவர்களா? ''கணக்கில்'' வருகிற வண்டிக்காரத்தேவர், 'விரலில்'' வருகிற வெள்ளையப்ப நாயக்கர், ''மீண்டாள்'' குறுநாவலில் வருகிற அர்ச்சுனன், ''அந்நியம்'' குறுநாவலில் வருகிற ஆதியப்பன், ''சிபி''களில் வருகிற மயிலப்பன், ''அவனாகி''யில் வருகிற சின்னாண்டி, ''தாய்மதி''யில் வருகிற முப்பிடாதி இவர்களை மாதிரியே வேறு பாத்திரங்களை என் பிற கதைகளில் காட்ட முடியுமா?

ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற ஒற்றுமையிருக்கும், என் கதை நாயகர்களில், ஆனால்

தனித்துவமான வித்தியாசங்களுடன் சுயமாக இயங்குவார்கள்.

எனது தொகுப்புகளையும், நாவல்களையும் முழுசாகப் படிக்காமல்... மேலோட்டமாக என் படைப்புகள் பற்றிக் கேள்விப்பட்டு, அதில் உருவாகிற இமேஜ்தான் என் கதை மாந்தர்கள் ஒரே மாதிரியானவர்கள் என்கிற கருத்து.

6. சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்ட நீங்கள் கவிதை எழுதிய எழுத்தனுபவம் எப்படியிருந்தது?

நல்ல கவிஞர்கள் நல்ல சிறுகதை எழுத்தாளராகவும் மிளிர முடிந்திருக்கிறது. கவிஞர் கந்தர்வனையே உதாரணமாகச் சொல்ல முடியும். ஆனால் நல்ல சிறுகதைப் படைப்பாளிகள் கவிஞராக ஜொலித்ததில்லை. ஜெயகாந்தனைக் கூட இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். நான் கவிதை என்று சில எழுதியிருக்கிறேன். அவை கவிதைகள் தானா என்றே எனக்கு ஏராளமாய் சந்தேகமுண்டு. கவிதைகள் குறித்து ஆழ்ந்த கருத்து உண்டு. படைத்த அனுபவம் என்று பெரிதாக சொல்லிக் கொள்கிற மாதிரி கிடையாது என்பதே நிஜம்.

7. முற்போக்கு எழுத்தாளர்கள் வெகுஜன அங்கீகாரம் பெற்றது சமீப காலங்களில் தான். இந்த மாற்றத்திற்குக் காரணம் மக்களா... அல்லது... எழுத்தாளர்களா?

மக்கள் மொழியில் எளிமையாக வலிமையான விஷயத்தை அழுத்தமாகப் பேசுகிற முற்போக்குப் படைப்பாளிகள்தாம் வெகுஜன அங்கீகாரம் பெற

முடிந்திருக்கிறது. இது இடதுசாரிச் சிந்தனையுள்ள இலக்கியப் பார்வையுள்ள வாசகர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருப்பதால்தான், இந்த அங்கீகாரம் நிகழ்கிறது.

ஜெயகாந்தன் அந்த மாதிரி 60-களில் அங்கீகரிக்கப் பட்டவர். அவர் ஒருவர்தாம், அவர் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டவர். இப்போது ஒருவர் மட்டும் என்ற நிலையில்லை. நல்ல முற்போக்கு படைப்பாளிகள் பலர் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

அதற்குக் காரணம், இவர்களது ஆரோக்கியமான சமுதாயப் பார்வையுடன் கூடிய அழுத்தமான எழுத்து வலிமை. அத்துடன், அமைப்பாகத் திரண்டு, போராடி, சமூக அனுபவம் பெற்றிருக்கிற படித்த உத்யோகவர்க்கம் எண்ணிக்கையில் பெருகிய வாசகர்களாக இருப்பதாலும் தான்.

8. நீங்கள் எழுத நினைத்து, இன்னும் எழுத முடியாத, எழுதப்படாத சம்பவம் உண்டா?

ஒன்றா... ரெண்டா? நிறைய்ய. அப்படி நிறைய இருப்பதால்தான் என் பேனாவில் மை இருந்து கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து எழுதிக் கொண்டிருக் கிறேன். எங்கள் குடும்ப பாரம்பர்யமே சில்லறை மளிகைக் கடை வியாபாரம்தான். அது எனக்கு மீனுக்குத் தண்ணீர் மாதிரி. அதன் சகல நுட்பங்களும் என் ரத்த அணுக்களில். அதுபற்றி இன்னும் எழுதவே யில்லையே...! அதை யெல்லாம்... தலை முழுக்க நரைத்த பிறகு எழுதுவதற்காக சேமித்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

9. எழுத்தாளர்கள் சங்கமமைத்து ஒரு நோக்கம் கருதி எழுதும் படைப்பில் எதார்த்தமிருக்காது என்று சொல்லப்படுகிறதே... அது பற்றி!

அப்படிச் சொல்லப்படுவதில் ஓர் இம்மியளவு கூட யதார்த்தமில்லை என்பதுதான் சமகால நிரூபணம். த.மு.எ.ச. அமைப்பின் முன்னணி ஊழியர்களும், கலை இலக்கியப் பெருமன்ற முன்னணி ஊழியர்களும் படைக்கிற படைப்புகள் யதார்த்தமாகவும் கலை நேர்த்தியாகவும் அமைந்திருப்பதால்தானே... வெகுஜன அங்கீகாரம் பெற முடிந்திருக்கிறது?

நோக்கமில்லாமல் ஒரு மனிதன் கூட வாழ்வ தில்லை. பைத்தியம் முற்றிப் போன நோயாளிக்கும், கோமா நிலைக்குப் போய் விட்டவனுக்கும் தான் நோக்கமிருக்காது. உச்சரிக்கப்படும் ஒவ்வொரு வார்த்தையிலும் நோக்கம் உள்ளார்ந்த சாராம்சமாக உட்கார்ந்தேயிருக்கும்.

நோக்கமேயில்லாமல் போய் விட்டவனுக்கு எதற்காக இலக்கியப் படைப்பு? படைக்கிற இலக்கியத்தின் மூலம் ஏதோ ஓர் அனுபவத்தை, அது சார்ந்த உணர்வை, உணர்வுகளில் உறைந்த ஓர் அபிப்பிராயத்தை சகமனிதர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற உந்துதலில் தானே இலக்கியமே மலர்கிறது.

''நோக்கமற்றவன் எல்லாம் நடுநிலையான நீதியாளன்; நோக்கமுள்ளவன் எல்லாம் முன் முடிவுகளும், ஒரு சார்பும் உள்ளவன்'' என்கிற பொய்யான மாயக் கருத்து ஒன்று நிலவுகிறது. அந்தக் கருத்திலிருந்துதான்... இப்படிப்பட்ட அபிப்பிராயம் சொல்லப்படும்.

உண்மையில், நோக்கமற்றவன் என்று எவனுமே பூமியில் இல்லை. அதிலும் இலக்கியம் படைக்கிற எல்லோருமே நோக்கங்களுடன் தான் இயங்குகிறார்கள். நல்நோக்கம் கொண்டவர்கள் முற்போக்காளர்களாக இருக்கிறார்கள். கெடு நோக்கம் கொண்டவர்கள் வேறு ''ஆளர்'' களாக இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

நதி, காலம், வரலாறு, வாழ்க்கை, மனிதகுலம் எல்லாமே காலம் காலமாய் முன்னோக்கிய திசையிலேயே நகர்ந்து இயங்கி வளர்கிறது என்கிற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, உடன் செல்கிற நோக்கம் கொண்டவர்கள், முற்போக்காளர்கள்.

யதார்த்தத்திலிருந்து மலர்ந்து விரிந்த நோக்கங் களையே கொள்கையாகக் கொண்டிருக்கிற முற்போக்குப் படைப்பாளிகள் படைக்கிற படைப்புகளிலும் யதார்த்த மணமே வீசும் என்பதே நிஜம்.

நோக்கமற்ற நீதிமான்களைப் போல் பாவனை செய்து பகட்டுகிறவர்கள்தான் நேரத்திற்கொன்றாக பேசுவார்கள்; கணத்துக்குக் கணம் முரண்படுவார்கள்; யதார்த்தமற்ற படைப்புகளை வழங்குவார்கள்.

வாழ்க்கை அனுபவங்களுடன் உடன்பட்டு கை கோர்த்துச் செல்கிற நோக்கமாக ஒரு எழுத்தாளர் சங்கத்தின் கொள்கைகள் இருக்குமானால், நிச்சயமாக அவர்கள் படைப்பில் யதார்த்தமும் கலையழகும் இருக்கவே செய்யும்.

10. ஒரு படைப்பு தன் கலைத் தன்மையை இழந்து பிரச்சாரமாகி விடுகிற அபாயம் எதனால் ஏற்படுகிறது?

சுயமான வாழ்க்கை அனுபவங்களிலிருந்து ஊற்றெடுக்கும் உணர்வுகள், நல்நோக்கம் எனும் கரைகள் அமைத்து இலக்கிய வடிவம் கொண்டு பயணப்படுகிற போது, நதியின் பேரழகு எனும் கலைத்தன்மையும், பாசனம் என்கிற பிரச்சாரமும் இயல்பாக இருக்கும், செடியிலிருந்து பூ அரும்பி பூப்பதைப்போல அப்படியில்லாமல் போதிய வாழ்க்கையனுபவங்கள் - சுய தரிசனங்கள் இல்லாமலேயே, ஒரு சரியான கருத்தில் மட்டும் காலூன்றி நின்று கொண்டு, இட்டுக்கட்டிய பொய்யான வாழ்க்கையைப் பிரதி பலிக்கிற போது படைப்பில் யதார்த்தமுமிருக்காது. கலைத்தன்மையுமிருக்காது; பிரச்சாரம் மட்டுமே அம்மணமாய் நிற்கும்.

உணர்வுண்மையே கலையுண்மையாகிறது. கலை யுண்மையே பிரச்சாரத்தை பன்முகவீச்சில் நிகழ்த்துகிற கலையழகாகிறது.

11. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்துகிற கலை இரவுகள் இலக்கியத்தை விலையுயர்ந்த விஷயமாக்கி விட்டதாக குற்றஞ்சாட்டப் படுகிறதே...!

விலையுயர்ந்த விஷயமாக்கவில்லை. வெகுஜன விஷயமாக்கியிருக்கிறது. 40 பேர் கலந்து கொண்ட இலக்கியக் கூட்டம் நடத்திவிட்டு, மகத்தான இலக்கியப்

பணியாற்றிவிட்டதான மனநிறைவில் வாழ்கிறவர்கள், மக்கள் பங்கெடுப்பை மறந்து விடுகிறார்கள். விரிந்து பரந்த உழைக்கும் மக்களிடமும், ஜனநாயக உணர்வு கொண்ட வியாபாரப் பிரமுகர்களிடமும், கலையும் இலக்கியமும் செல்ல வேண்டியது அவசியம். இந்தக் கால கட்டாயத்தை கலை இரவுகள் நிறைவுபடுத்துகின்றன. பரந்துபட்ட மக்களிடம் செல்லுகிற போது... சற்று செலவு அதிகமாகும். அதையும் கூட மக்களே பார்த்துக் கொள்வார்கள். ஆக... கலை இரவுகள் கலையையும் மக்களையும் சரியாக இணைக்கிறது.

12. தமிழில் இன்று வருகின்ற சிறுபத்திரிக்கைகள் குறித்த உங்களின் பார்வை என்ன...?

பிரசுரம் பெற முடியாமல் தவிக்கிற நூற்றுக் கணக்கான இளம் படைப்பாளிகளுக்கு முதல் நாற்றங்காலாக சிறுபத்திரிக்கைகள் பயன்படலாம், பயன்படுகின்றன.

மொத்த இலக்கியத்துக்கே புதிய நிகழ்ச்சி நிரலை உருவாக்கி பயணப்படுத்துகிற நவீன இலக்கியப் பிரச்சினைகள் சிறுபத்திரிக்கைகளில் அடர்த்தியான செறிவோடும், தீவிரத்தோடும் விவாதிக்கப்பட வேண்டும்.

இது போதுமான அளவுக்கு சிறுபத்திரிக்கைகளில் நிகழவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

குறிப்பாக எண்பதுகளில் சிறு பத்திரிக்கைகளிலிருந்த உக்கிரமும் அடர்த்தியும் தொண்ணூறுகளில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

13. அரசியல் கட்சி சாராமல் எழுதப்படும் எழுத்தாளர் களால் நல்ல சமூக நோக்கம் குறித்து எழுத முடிகிறதே... எப்படி?

மகாகவி பாரதி காங்கிரஸ்காரர், பாவேந்தர் பாரதிதாசன் திராவிடர் இயக்கம் தழுவி நின்றவர். பட்டுக் கோட்டை பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்திருந்தவர். வெவ்வேறு இயக்கங்களைத் தழுவி நின்ற இந்த் மூவராலும் நல் சமூகப் பார்வை மிக்க படைப்புக்களை வழங்க முடிந்ததே... அது எப்படி?

கட்சியோடு தழுவி நின்ற மாக்ஸிம் கார்க்கி, அலெக்ஸி டால்ஸ்டாய், மைக்கேல் ஷோலக்கோவ் போன்ற இலக்கிய மேதைகளின் படைப்புகளை விடவும்... எந்த இயக்கத்தையும் தழுவி நிற்காத ஆண்டன் செக்காவ்வின் படைப்புகள் மிக உயர்வாக மதிக்கப் படுகிறதே அது எப்படி?

பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்து எழுதத் துவங்கிய ஜெயகாந்தன் அவர்களே போற்றி மதிக்கக்கூடிய உன்னத ஸ்தானத்தில், எந்த இயக்கத்திலும் சம்பந்தமற்ற புதுமைப்பித்தன் திகழ்ந்தாரே... அது எப்படி?

ஆக... நல்ல சமூக நோக்கம் என்பது ஓர் அரசியல் கட்சியின் சார்பால் மட்டுமே விளைவதல்ல. வரலாறு குறித்து நிஜமான ஞானம், வாழ்க்கை அனுபவங்கள் செறிந்த சுயதரிசனங்கள், சமூக வாழ்வியல் யதார்த்தங் களையெல்லாம் அதற்குரிய உண்மையோடு நேருக்கு நேராக எதிர்கொள்கிற மனோபலம், இவற்றிலிருந்து விளைகிற எதிர்காலம் குறித்த கனவுகள்... சமூகமும் சக மனிதர்களும் நல்லபடியாக வாழ வேண்டுமே என்கிற

விருப்பத்தைக் கொண்ட கனிந்த மனசு இவை எல்லாமே ஒன்று கலந்து உருத்திரண்ட ஒரு விஷயம்தான், நல்ல சமூக நோக்கு.

அப்படியானால், ஒரு சரியான அரசியல் சார்பின் முக்கியத்துவம் எங்கே வருகிறது?

நல்ல சமூக நோக்கத்துடன் சமகால நிகழ்வுகளை பார்க்கிற போது - ஆய்வு செய்கிற போது - கூடுதலான துல்லியமும், அழுத்தமும் ஆழமுமான முடிவுகளுக்கு வருவதற்கு சரியான அரசியல் சார்பு அவசியமாகும்.

ஆக... அரசியல் சார்பு இல்லாமலேயே கூட நல்ல சமூக நோக்கு கொண்ட படைப்பாளிகள், சமூகத்தை முன்னெடுத்துச் செல்கிற ஆரோக்கியமான படைப்புகளை வழங்கவும் முடியும் என்பது நிஜம்தான்.

14. தமிழில் எழுதப்படுகிற ஹைக்கூ கவிதைகள் குறித்து உங்களின் கருத்து...?

தமிழில் ஹைக்கூ மிகப் பெரிய அமோக விளைச்சல் கண்டு கொண்டிருக்கிறது. சமீப நாட்களில் அதில் தங்கம் மூர்த்தி, மு. முருகேஷ் போன்றோர் குறிப்பிடத்தக்க முத்திரை பதித்து வருகிறார்கள். ஹைக்கூ நிறைய எழுதப்படுவதால் மலினப்பட்டுவிடும் என்ற கருத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை. நிறைய வரலாம், படைப்பாளியின் சமூக அக்கறையும் அனுபவ வளமையும் தான் படைப்பின் வலிமையைத் தீர்மானிக்கின்றன; எண்ணிக்கையல்ல. நிறைய நிறைவாய் வருகிற தமிழ் ஹைக்கூ... இன்னும் அடர்ந்து ஆழ்ந்த அழுத்தமான அழகை நோக்கி நகர வேண்டும்.

15. தமிழில் இதுவரை நல்ல நாவல் வரவில்லை என்று சொல்லுகின்ற கருத்தை ஏற்கிறீர்களா?

ஏற்கவில்லை. ஜெயமோகன் தமிழில் நாவலே வரவில்லை என்று கூறிவிட்டு... மலையாள வளமையோடு எழுதப்படுகிற ஒன்றிரண்டு படைப்புகளை மட்டுமே நாவல் என்று ஒப்புக் கொள்கிறார். இதில் இவரது அறிவார்நத நடுநிலைமையை விட, சுயநலமே மிக மேலோங்கி நிற்கிற தன்மை பளிச்சென்று தெரிகிறது.

தமிழ் நாவல்கள் 70-களிலும் 80-களிலும் படைக்கப் பட்ட அளவுக்கு 90-களில் இல்லாமல் ஒரு தேக்கம் இருப்பதாக வேண்டுமானால் சொல்லலாம். நாவல்களே தமிழில் வரவில்லை என்பதெல்லாம் தடாலடி மூலம் கவனத்தை ஈர்க்க விரும்புகிற கோழைத்தனமான சண்டியர்த்தனம்.

ஜெயகாந்தன் எழுதிய 'பாரீசுக்குப்போ', 'ஒரு வீடு ஒரு மனிதன் ஒரு உலகம்' போன்ற நாவல்கள் தமிழில் வரவில்லையா? கி.ரா.வின் கோபல்ல கிராமத்தையும், கோபல்ல கிராம மக்களையும் எதில் கொண்டுபோய் சேர்க்க? நாவல்களிலில்லையா? டி.செல்வராஜின் 'மூல தனமும்' கு. சின்னப்ப பாரதியின் 'தாகம்', 'சங்கம்' எல்லாம் தமிழில் வராமல், எந்த மொழியில் வந்த நாவல்கள்?

தமிழில் எல்லாம் வந்துவிட்டன என்பது எப்படி தவறோ... அதேபோல் எதுவுமே வரவில்லை என்பதுவும் ஊனப்பார்வையே; புறநிலை யதார்த்தத்தை உள்வாங்கிய முழுமை நோக்கல்ல.

16. நீங்களே ரசித்த உங்களின் படைப்பு என்று எதைச் சொல்ல விரும்புகிறீர்கள்...?

நிறைய. மானுடப் பிரவாகம் சிறுகதை இப்போது வாசித்தாலும் எனது கண்களில் ஈரக்கசிவு ஏற்படுவதை தடுக்க முடியவில்லை. 'கட்டிப்புரளு' அதை இப்போது நான் வாசித்தாலும்... எனக்குள் ஒரு நெகிழ்வு ஏற்படுகிறது. நானே ரசித்த எனது படைப்பாக 'இனி' நாவலைக் கூறியாக வேண்டும். அச்சில் இருக்கிற 'ஊர்மண்' நாவலையும் சொல்லலாம்.

17. உங்களின் அடுத்த எழுத்து முயற்சி என்ன...?

அப்படிப்பட்ட நிதானமெல்லாம் இப்போது என்னிடம் இல்லை. ஏக காலத்தில் இரண்டு நாவல்கள் எழுதிக் கொண்டிருக்கிறேன். இடை இடையே சிறுகதைகளும் எழுதுகிறேன். ஆகவே அடுத்த முயற்சிக்கு மிக திட்டமிட்டு காத்திருக்கிற மாதிரியாக... ஆற அமர நான் இல்லை. தொடர்ந்து எழுதுகிறேன் என்பதே நிஜம்.

ஆமாம். இன்னும் நான் எழுதிக் கொண்டே யிருக்கிறேன். முன்னும் பின்னுமாய் முடிவற்ற மகாநதியாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் எனது கைகளுக்குள் சிக்கிய நீரையள்ளி தமிழில் தந்து கொண்டேயிருக்கிறேன்.

இதில் 'உயிர்க்காற்று' பற்றி ஒரு விஷயம் கட்டாயமாகச் சொல்லியாக வேண்டும். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் டி.லட்சுமணன் அவர்கள், இலக்கிய தாகமுள்ள

நல்ல அரசியல்வாதி. வாழ்க்கையை - மனிதர்களை - நிகழ்வுகளை மிகுந்த நுட்பமாகவும் மாறுபட்ட கோணங்களிலும் பார்த்து உள்வாங்குகிறவர். என்னைச் சந்திக்கிற போதெல்லாம் இலக்கியம் குறித்தே பேசுவார்.

நிறைய சம்பவங்களைச் சொல்வார். ரயிலில் பார்த்த நிகழ்ச்சிகள், பக்கத்து வீடுகளில் நிகழ்ந்த வித்தியாசமான சம்பவங்கள், நண்பர்களின் வாழ்க்கையில் நடந்த வினோதங்கள் என்று நிறைய விஷயங்களைச் சொல்வார். சொல்லுகிற விதமே, தனியழகு. அவர் சொல்லும் விதத்திலேயே நம் மனசுக்குள் ஒரு கதையாக வந்து உட்காரும்.

அப்படி அவர் சொன்ன ஒரு சம்பவம்தான், 'உயிர்க் காற்று' கதையாக என்னுள் மலர்ந்தது. அவர் சொன்ன இன்னொரு நிகழ்ச்சி, என்னுள் ஒரு நாவலுக்கான விதையாக நனைந்து ஊறிக் கொண்டிருக்கிறது.

அவருக்கு எனது நன்றிகளை எப்படிச் சொல்லப் போகிறேன்? எனக்குத் தெரியவில்லை.

அந்த 'உயிர்க் காற்று' வாசுகியில் பிரசுரமாகி யிருந்தது. இத் தொகுப்பிலுள்ள எல்லாக் கதைகளும் செம்மலர், கல்கி, ஆனந்த விகடன், தமிழன் எக்ஸ்பிரஸ், குமுதம், புதிய பார்வை, கதிரவன் நாளிதழ், மற்றும் கோவை சி.ஐ.டி.யூ. வெள்ளிவிழா மலரிலும் பிரசுரமாயிற்று.

பிரசுரித்ததோடு... இத்தொகுப்பில் இணைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கிய அந்த இதழ்களின் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்,

தோளுக்குமேல் வளர்ந்த மகனாகவும், தோழனாகவும் கருதிப் பாசத்தைப் பொழியும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எனும் மாபெரும் இலக்கிய அமைப்பிற்கும்,

என்னை ஆக்கபூர்வமான முறையில் பாராட்டியும், விமர்சித்தும் நெறிப்படுத்துகிற அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

நன்றி!

மேலாண்மறைநாடு
626127
விருதுநகர் மாவட்டம்

என்றும் உங்கள்
மேலாண்மை பொன்னுச்சாமி
30-8-96.

பசு

"பசுமதி வீட்டிலா... இப்படி?"

"இப்படியும் ஆகும்னு... எவளாச்சும் நெனைச்சுக் கூடப் பாத்துருக்க முடியுமா?"

"இதென்னடி கூத்து? பசுமதி வீட்டிலுமா... இப்படி?"

"தெற்கே உதிச்சு வடக்காலே பொழுது அடைஞ்சாலும் அடையும். பசுமதி வீட்லே மட்டும் அப்படி நடக்காதுன்னு மலைபோல நம்பியிருந்தேன். மலையிலே மண்ணு விழுந்துருச்சே."

"இந்தக் கூத்து, வாடைக் காத்து மாதிரி. இரும்புக் கோட்டைக்குள்ளே கூட மூஞ்சியைக் காட்டிரும். பசுமதி வீடு எம்மாத்திரம்?"

ஊர் முழுக்க இதே பேச்சு, கண்மாய்க் காட்டு கொக்கு மாதிரி மாறி மாறி வட்டம் போட்டுக் கொண்டேயிருந்தது. வீட்டுக்கு வீடு இதே பேச்சுத்தான். பெண்டுகள் ஆச்சரியம் தாங்காமல் பேசிப் பேசி வாயாறினார்கள்.

எல்லாம்... கொஞ்ச நாளைக்குத்தான். ஆச்சரியமான இந்த விஷயம், போகப் போக ஊர் ஜனத்துக்குப் பழகிப் போகும். மரத்துப் போகும். கண்டுக்காமல் விட்டு விடுவார்கள். "வீட்டுக்கு வீடு வாசப்படிதான்" என்று சொல்லிச் சொல்லி சமாதானம் ஆகிப் போவார்கள்.

2

போன வருஷம், மார்கழி முடியப் போகிறது. தை பிறக்கப் போகிறதென்கிற சந்தோஷம். தெருவெல்லாம் கரும்புச் சக்கை. பிள்ளைகள் ஆசை ஆசையாக கடித்து உரித்து 'சப் சப்'பென்கிறார்கள். 'ஸ்ஷ்ஷ்...' என்று எச்சிலோடு சாறைச் சேர்த்து விழுங்குகிறபோது அதுகள் முகத்தில் அப்படியோர் இனிப்பு. இனிப்பின் பூரிப்பு.

''ம்மா...''

''என்னடா.''

''கரும்பு வேணும்மா... கடையிலே வாங்கிக்கிடடா?''

''வாங்குவம்.''

''நா ஒரு துண்டு வாங்கிக்கிடுதேம்மா. கடையிலே நறுக்கி வச்சிருக்காக.''

''இருடா... அம்மா கடைக்குப் போக வேண்டியிருக்கு. வாங்கிட்டு வாரேன்.''

பசுமதி கடைக்குப் போனாள். சாமான்கள் வாங்கி முடித்தாள்.

கடையில் நறுக்கப்பட்ட துண்டுகள். கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட முழுக் கரும்புக்கட்டு, தோகைகளுடன்.

''முழுக் கரும்பு என்ன விலை தம்பி?''

''ஆறு ரூவாக்கா.''

''அந்தக்கடையிலே அஞ்சு ரூபாயாம்லே? எல்லாரும் சொல்தாக.''

''அதுவும் கரும்பு. இதுவும் கரும்பா? இது ரஷ்தாழிக் கரும்பு, முத்தி வெளைஞ்ச கரும்பு. தேனா தித்திக்கும்.''

''ம்... ஒம் பேச்சுதா தேனா இருக்கு. விலை தேளா இருக்கு.''

கடைக்காரன் சிரித்தான்.

''உங்க பேச்சுதா வெவராமமாவும் இருக்கு. வெவகாரமாவும் இருக்கு.''

கட்டில் ஆய்ந்தாள். நீள நீளக் கணு உள்ள கரும்பு. செம்மை கனிந்த கறுப்பு. தொட்டால்...சம்பலாய் விரலில் ஒட்டுகிறது. இருப்பதில் நல்லதாக ஒன்றை உருவினாள்.

முழுக் கரும்பை தோகையுடன் பார்த்தவுடன் பயலுக்கு ஒரே ஆதாளி. ''அய்ய்... அய்ய்... அய்ய்...'' என்ற ஆனந்தக் கூவக்காடு. குதூகலமாகக் குதித்தான். அவனது கும்மாளத்தில் இவளுக்குள் இறங்கிய கரும்புச் சாறு. சாற்றின் இனிமைக் கரைசல்.

''அவரு வந்து பாத்தா... கரும்பு வாங்குனதுக்கு 'தங்கு, புங்கு'ன்னு குதிப்பாரோ... 'காச்சு பூச்சு'ன்னு கத்துவாரோ...''

சாறுடன் சேர்ந்து சக்கை இணுக்குகளாக நெருடும் நினைவுகள்.

''கத்துனா... கேட்டுக்கிட வேண்டியதுதான். நாம கம்ம்முன்னு இருந்துட்டா... சண்டை சத்தம் எதுக்கு வரப் போவுது.''

சக்கை இணுக்கு தொண்டைக்குக் கீழே போய் விட்டது. நெருடல் இப்போது இல்லை.

3

நாளை தை. விடிந்தால் மாதம் பிறக்கிறது. இன்றைக்கு வேலைக்குப் போகவில்லை, பசுமதி. மதியம் ஆகவில்லை. இளமதிய வெயில் சுகமாக இருக்கிறது. பனி நனைந்த வெயில்.

ஸ்டூலை எடுத்துப் போட்டு ஏறினாள். பரணில் கிடந்த சாக்குமூட்டையைப் பார்த்தாள். பாத்திரமூட்டை. பூராவும் வெங்கலப் பாத்திரங்கள். குத்துவிளக்கு, சருவச்சட்டி, குத்தண்டா, குடம், பானை, இட்லிக் கொப்பரை, பொங்கல் பானை, சருவக்கரண்டி, கும்பா லோட்டா, செம்பு என்று பலவகையான வெங்கலச் சாமான்கள். அம்மா தந்த சீதனம். ஆசை ஆசையாக சேகரித்து பாச மகளுக்குத் தந்த சீதனம்.

இவற்றில் எந்தப் பாத்திரத்தையும் புழங்கமாட்டாள் பசுமதி. மூட்டைகட்டி பரணியில் போட்டு வைப்பாள். நெகிழ்ந்த மனநிலை ஏற்படுகிற போதெல்லாம்... கண்கலங்க ஏறிட்டுப் பார்த்துக் கொள்வாள். அம்மாவையே நேரில் பார்க்கிற மாதிரியோர் உணர்வு. அம்மாவின் பாசம், பிரியம், ஆசையெல்லாம் வந்து மனசுக்குள் கனவுகளாக மொய்க்கும். அவள்பட்ட வேதனைகள், சொற்காயங்கள், விட்ட கண்ணீர், பட்ட அவமானம் எல்லாம் படைபடையாக வந்து நெஞ்சை ரணமாக்கும். அம்மாவே பரணிலிருந்து ஆறுதல் சொல்கிற மாதிரியிருக்கும்.

பசுமதிக்கு உலகத்தில் இருந்த ஒரே நாதி, அம்மாதான். அவள்தான் அய்யா, அண்ணன், தம்பி

எல்லாம். அம்மாவைத் தவிர சொந்தம் என்று சொல்லிக் கொள்ள ஒரு நாதி கிடையாது பூமியில்.

அம்மா உயிர் வாழ்ந்ததே இவளது கல்யாணத்திற் காகத்தான். இருந்த கூரை வீட்டை விற்று நகையாக்கிப் போட்டு கல்யாணத்தை முடித்தவுடன், பிறந்த கடன் முடிந்துவிட்ட மாதிரி... கண்ணை மூடிவிட்டாள்.

சாகும்போது பசுமதி கைகளை இருகைகளாலும் பற்றிக் கொண்டாள் அம்மா. நடுங்கும் கைகளால் மகள் கைகளைப் பிசைந்தாள். கண்களில் மாலை மாலையாக வழிகிற கண்ணீர். உதடுகள் நடுங்கிற்று. ஏதோ சொல்லத் துடித்தது.

''என்னம்மா... என்னம்மா...'' என்று அழுதாள் பசுமதி.

ஆயுள் முழுக்க பட்ட ரணத்தின் வலியில் திணறித் தவித்தாள் அம்மா.

''பட்ட கஷ்டமெல்லாம்... பஞ்சாய்ப் பறந்துருச்சு. ஒன்னைக் கரை சேத்துட்டேன். ஒனக்கொரு பாதையைக் காட்டிட்டேன். இனிமே... நா செத்தாலும் கட்டை நிம்மதியா வேகும்மா...''

''ம்மா... ம்மா... ம்மா...''

''பசுமதி அழாதேடி. புகுந்த எடத்துலே புத்தியோட நடந்துக்கம்மா. சண்டை சத்தம்னா... கோவிச்சுக்கிட்டு வந்து நிக்க... ஒனக்கொரு நெழலு கெடையாதும்மா... நா போய்ட்டா... ஒனக்கு ஒரு நாதியில்லே. 'வா, வந்து உக்காரு, கஞ்சிக் குடி'ன்னு சொல்ல ஒருத்தருமில்லே...

இதை மனசுலே வைச்சுக்க. பதிச்சு வைச்சுக்கோ... பத்திரமா நடந்துக்க. புத்தியோட பொழைச்சுக்க...''

அப்புறம்... நாலைந்து விக்கல்கள். 'கொரட், கொரட்'டென்று கொஞ்சநேர இழுப்பு. அவ்வளவுதான். அம்மாவின் ஜீவச்சுடர், காற்றுக்கு அலைப்புண்ட தவிப்போடு அடங்கி அணைந்து போயிற்று.

சின்ன வயசில் தாலியறுத்த ஒரு பெண் ஆதரவற்று வாழ்வது சுலபமா? அதிலும் ஒரு பொட்டைப் பிள்ளையை வளர்த்து, தன் வயிற்றையும் நனைப்பது அத்தனை சாதாரணமா? வளர்ந்து பூப்பெய்திய ஒரு பெண்ணை மானமரியாதையோடு கட்டிக்காத்து, யார் உதவியும் இல்லாமல் ஒரு கல்யாணம் பண்ணிப்பார்ப்பது... நடக்குற காரியமா?

நடத்திக் காட்டினாளே... அம்மா. சாதித்துக் காட்டினாளே... வைராக்கியக்காரிதான்.

தை பிறப்பதற்கு முதல் நாள்தான், பரணிலிருந்து மூட்டையைப் பிரிப்பாள். நீரில் நனையப் போடுவாள். புளியும், செங்கல்த் தூளும் கொண்டு மினுக்குவாள். வீட்டு முற்றத்தில் கட்டில் போட்டு மினுக்கிய பாத்திரங்களை யெல்லாம் குப்புறப் போட்டு உலர வைப்பாள்.

பார்த்துப் பார்த்துப் பூரிப்பாள். பார்க்கட்டும். தெருவில் வருவோர் போவோரெல்லாம் இதைப் பார்க்கட்டும். சூரிய ஒளிபட்டு தங்கத் தகதகப்பாக ஜொலிப்பதைப் பார்க்கட்டும். அம்மா தந்த சீதனம். பட்டினி கிடந்து சேகரித்த பாத்திரங்கள். அம்மாவின் தியாகத்தில் - பாசத் துடிப்பில்வந்த பாத்திரங்கள். எல்லாரும் கண் குளிரப் பார்க்கட்டும்.

சாயங்காலம் வரை பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கும். அப்புறம் எடுத்து... பலகையில் அடுக்குவாள். வரிசை வரிசையாக அம்சமாக அடுக்குவாள். ஆசை ஆசையாகப் பார்ப்பாள். பார்க்கப் பார்க்க மனசு கிடந்து மலரும்.

நாலைந்து நாளைக்குப் பிறகு... மறுபடியும் மூட்டையாக்கி பரணில் ஏற்றி வைத்துவிடுவாள், அம்மாவை.

இதெல்லாம்... போன வருஷம் தை வரைதான்.

இந்தத் தையில்தான் கதையே மாறிப் போயிற்றே. கதை கந்தலாகி விட்டதே. அதுவும் சாதாரணக் கந்தலா? நாய் கிழித்த சர்க்கரைச் சாக்காக... நூல் நூலாக... பிய்ந்து...

4

அம்மா தந்த சீதனங்களில் மிகப் பெரிய சீதனம், சாகும்போது தந்ததுதான். ''வா, வந்து உக்காரு, கஞ்சி குடின்னு சொல்ல நாதியில்லே. கோவிச்சுக்கிட்டுப் போய் நிக்க நெழல் இல்லே'' என்றாளே... அந்தச் சூன்யப் பயங்கரம். அதுவே பசுமதியை ''புத்தியோடு'' பிழைக்க வைத்துவிட்டது. பூமி மாதாவை மிஞ்சிய பொறுமையை அவளுள் சுபாவமாய் திணித்துவிட்டது. பயந்த சுபாவமே அவள் மனசின் வடிவம் போலாகி விட்டது.

வீட்டு நாயைப் போலாகிவிட்டாள். எந்த வலியையும் ரோஷமில்லாமல் விழுங்கித் தீர்த்தாள்.

அம்மாவின் இழப்பு, அவளுக்கு காலடித் தரை உருவின மாதிரியாகி விட்டது. அவளது ஆன்மாவின் உஷ்ணத்தையே அவித்துவிட்டது.

சண்டை சத்தம் இல்லாத வீடாகி விட்டது. புருஷன்காரன் அர்த்தம் இருந்தோ - காரணம் இல்லாமலோ - காட்டுக் கூப்பாடு போட்டாலும், காது கேளாதவளைப் போல இருந்துவிடுவாள்.

ரெண்டு கை தட்டினால்தானே சத்தம் வரப் போகிறது? ரெண்டு மனசின் வெக்கை சீறி, வார்த்தைப் பொறிகள் மோதினால்தானே... சண்டை வரப் போகிறது? புருஷனை எதிர்த்து ஒரு சொல்கூட பேசவே மாட்டாள் பசுமதி.

சண்டை சத்தம் நடந்தது, கூட்டம் கூடியது, கோபித்துக் கொண்டு போனாள் என்று ஒரு நாளும் கிடையாது. ஊரே பசுமதி வீட்டைப் பார்த்து ஆச்சர்யப் பட்டது.

''பசுமதி மாதிரி கொணம் எந்தப் பொம்பளைக்கு வாய்க்கும்? ஒரு பொழுதாச்சும் அவுக வீட்லே 'கீச்சு'ன்னு சத்தம் வந்ததுண்டா?''

''கொணத்துலே பசுதான்... பசுமதி. அவா குடும்பம் நடத்துற லட்சணமே... தனீ. ஒரு சண்டை, ஒரு சத்தம், ஒரு கோபதாபம்னு என்னிக்காச்சும் உண்டா?''

''கொணம், மனம்ங்குறதெல்லாம் பிறவியிலேயே அமையணும். கடைக்காட்டுலே காசு குடுத்தா வாங்க முடியும்?''

அவரவர் மனசில் பட்டதை வெள்ளந்தியாக வெளியே கொட்டினார்கள். ஊர் முழுக்க இதே பேச்சுத்தான். 'பசுமதி, பசுமதி' என்று கிடந்தது.

இது பசுமதிக்கும் தெரியும். அடிமனசுவரைக்கும் கசந்து அழறும். ''ஏலாத நாய்க்கு பொறுமை 'அழகு'ன்னு, நாம ரோஷங்கெட்ட சவத்துப் பொழைப்பு பொழைச்சிக் கிட்டிருக்கோம். இதுக்குக் கிரீடம் வேற வேணுமாக்கும்? கெரகசாரம்'' என்று உள்ளுக்குள் அறுக்கிற அவலச் சோகத்தில் வெந்த பசுங்கொடியாக வெம்புவாள், ரகசியமாக. பாத்திர மூட்டையாக பரணில் கிடக்கும் 'அம்மா'வைப் பார்த்துக் கொள்வாள், கலங்கும் கண்களுடன்.

5

கூட்டுறவு சொஸைட்டிக்காரர்கள் வந்து ஜப்தி செய்யப்போவதாக் மிரட்டி விட்டுப் போனார்கள். முருகேசன் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. எச்சரிக்கை நோட்டீஸ்களையும் பொருட்டாக நினைக்கவில்லை.

எப்படி நினைக்க? இவன்பட்ட கடனா? இவன் வாங்கிய கடனா? இல்லையே! கூட்டுறவு சொஸைட்டியில் பரஸ்பரம் கடன்தாரர்களையே ஜாமீன்தாரராக்கிக் கொள்வார்கள். இதற்குச் சம்மதமும் கேட்பதில்லை. முருகேசனுக்கு ஒரு கடன்தாரர் ஜாமீன் கையெழுத்துப் போட்டிருப்பார். முருகேசன் வேறு ஒரு கடன்தாரருக்கு ஜாமீன் போட்டிருப்பான்.

இது எப்பவும் இப்படித்தான். இதில் எப்பவும் ஒரு சிக்கல், சிரமம் வந்ததேயில்லை. ஆனால் முருகேசனுக்கு சிக்கல் வந்துவிட்டது.

இவன் ஜாமீன் போட்ட கடன்தாரர் இறந்து போய் விட்டார். அவரது மனைவி மக்கள் இருந்த சொச்ச மிச்சத்தை விற்று கைமாற்றிவிட்டு கேரளாப் பக்கம் பிழைக்கப் போய்விட்டார்கள்.

நாலைந்து வருஷமாய் பிரச்சினை வரவில்லை.

இப்போது கெடுபிடி வசூல். ஜப்தி வசூல் பண்ணும்படி அரசாங்கம் உத்தரவு போட, அதிகாரிகள் தூசிதட்டி பேரேடுகளைத் தூக்க... இறந்து போனவரின் பழைய கடன், வட்டி, அபராத வட்டி எல்லாம் சேர்ந்து ஒன்பதாயிரம் வந்து நிற்க, வசூல் பண்ண வழி என்ன என்று யோசிக்க... சட்ட ஜாமீன் முருகேசனை நீட்ட...

பிரச்சினை பூதமாக வந்து நிற்கிறது. முருகேசன் அசால்ட்டாக இருந்தான். ''எவனோ பட்ட கடனுக்கு நம்மவூட்லே எப்படி ஜப்தி பண்ண முடியும்? இது என்ன... ஊரா, காடா? அந்த அளவுக்கா நாட்லே தர்மம் அழிஞ்சு போச்சு?'' என்ற எண்ண ஓட்டம் அவனுள்... அவனுக்குத் தெரியவில்லை, ''அதர்மம்தான் ஆட்சி பண்ணுகிறது'' என்று.

6

அது வைகாசி மாதம். கடைசியாகி விட்டது. பசுமதி கோடைப் பருத்திக்குக் களைவெட்டிக் கொண்டிருந்தாள். கூலியாட்கள் ரெண்டு பேர். அவர்களை வேலை வாங்கணுமே என்று இவள் ஓடி ஓடி களைவெட்டினாள். நிறைபிடித்து நிமிராமல் வெட்டினாள்.

புஞ்சையை ஒட்டி வண்டிப்பாதை. கலிங்கப் பட்டிக்குப் போகிற வண்டிப் பாதை. சைக்கிளிலும், நடந்துமாக போகிற வருகிற வெள்ளையும் சொள்ளையுமான ஆட்கள்.

''சாம்சாரிமேலே கை வைக்க சர்க்காரு எப்பவும் தயங்கும். இப்ப என்னடான்னா... அடாவடித்தனமா கை வைக்காகளே...''

''என்ன கொடுமை செய்ஞ்சாலும், ஜனங்க குருட்டுத் தனமா ஓட்டு போட்டுருவாகன்னு ஆளுங்கட்சிக்கு திமிரான எண்ணம்.''

''அதானே? இந்த ஊர்லே மட்டும் அஞ்சு சம்சாரிக வீடுகள்லே ஜப்தி நடக்கப் போகுதாம். ஜீப்லேயும் கார்லேயும் ஆபிஸர்மார்க வந்து குமிஞ்சிட்டாக...''

''சம்சாரிக போராட்டம் பண்ணுவாகன்னு பயம் இருந்தா... இம்புட்டுத் தெம்பா... அதிகாரிக வருவாகளா?''

சைக்கிளில் போகிறவர்களின் பேச்சு. இவள் காதிலும் வந்து விழுகிறது. இவளுக்குள் ஏனோ... மனசுக்குள் இனம் புரியாத நமைச்சல். குருட்டாம் போக்கிலான மனக் கஷ்டம். குழப்பம்.

மணி மூன்று. வேலை முடிந்து, அகத்திக்கொழை ஒடித்துக்கொண்டு வந்தாள் பசுமதி. ஊருக்குள் வந்தாள். இவளையே எல்லாப் பெண்களும் வினோதமாகப் பார்க்கிற உணர்வு. அனுதாபப்பட்டு சூள்கொட்டுகிற சத்தம்.

இவளுக்குள் பூரான் ஊர்கிற மாதிரி... ஓர் உணர்வு. என்னவோ மனசுக்குள் நறுக்கிட்டது.

தெருமுனை திரும்பி விட்டாள். தன் வீட்டின் முன்னால் —

நாலைந்து குழாய்ச் சட்டைக்காரர்கள். மாராப்பு போட்ட அமீனா. வீட்டு முற்றத்தில் ரேடியோ, சைக்கிள், கம்பு மூட்டைகள்.

நம்ம வீட்டிலேயும் ஜப்தியா?

அடிமனசு வரை மின்சாரம் பாய்ந்த அதிர்வு. பதைப்புடன் ஓடி வந்தாள். உயிர் ஒடுங்கிப் போன அவமான அவஸ்தையில் தலைகவிழ்ந்து நிற்கிற முருகேசன்.

கொழையையும், சுரண்டியையும் கீழே போட்டாள். அவள் பார்வை அந்த மூட்டையின் மீது.

பாத்திர மூட்டை. சீதனம். அம்மாவின் உயிர். அம்மாவின் ஆயுள் கால வியர்வை. அம்மாவையுமா ஜப்தி?

இவளுக்குள் உயிர் கொதித்தது.

ஒருவன் பாத்திர மூட்டையின் கழுத்துக் கட்டை அவிழ்க்கிறான். கீழே கொட்டி பாத்திரங்களை பட்டியல் போட்டு புருஷனிடம் கையெழுத்து வாங்கவா?

இவள் இவளாக இருக்க முடியவில்லை. பசுமதி பசுவாக இருக்க முடியவில்லை. குடையைக் கண்ட காளையாகிவிட்டாள். வெறி கொண்ட பாய்ச்சலாக முன் வந்தாள்.

அதற்குள் அவன் சாக்கைக் கொட்டிவிட்டான்.

'கணங், கணங், கணங்'கென்ற சப்த சிணுங்கல்களோடு சிதறிய பாத்திரங்கள். வெங்கலப் பாத்திரங்கள். அம்மாவின் எலும்புகள். சதைத் துண்டுகள். கண்கள் கனவுகள். அம்மாவின் உயிர்த்துளிகள்.

இவளுக்கு குலையைப் பிடுங்கி வெளியே போட்டது போலிருந்தது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். பாத்திரங்களையெல்லாம் ஆவி ஆவி அணைத்துக் கொண்டாள்.

''எந்தப் பயலாச்சும்... இது மேலே கைவெச்சா... உசுரோட போய்ச் சேர முடியாது. தாலியத்துருவண்டா... திருட்டு நாய்களா...''

இந்த ஆவேசத் தீயின் வெக்கையில் அதிகாரிகள் மிரண்டனர். இருப்பினும் கெத்துவிடாமல் நின்றனர்.

''தள்ளியிரும்மா... தள்ளு... யோவ், ஒங்க பொஞ்சாதியை அப்புறப்படுத்துங்கய்யா...''

முருகேசன் பசுமதியின் தோளைத் தொட்டான். கையைப் பற்றித் தூக்க எத்தனித்தான். அவள் அவனை உதறிய உதறலில் சிதறிப் போய்விட்டான்.

பத்ரகாளியாக புருஷனைப் பார்த்தாள். பார்வையில் தீ.

''எங்க அம்மாவை விக்குறதுக்கு நீ யாரு? அடப்பாவி மனுசா... கிட்டே வந்தே... கொடலை உருவி மாலை போட்டுருவேன் பாத்துக்கோ...''

முருகேசன் அதிர்ந்து போனான். யார் இது? நம்ம பசுமதிதானா? எதிர்த்துப் பேசவே பேசாத நம்ம பசுமதி தானா?

அதிகாரிகள் முன்னிலையில் அவமானத்தில் இருண்ட முகத்தைக் காட்டாமல் சமாளித்தான். செத்துவிடாமல் அதட்டினான்.

''ஏய்... பசுமதி, வா... இங்குட்டு.''

பசுமதி சற்றும் பதறவில்லை. அதைவிட உக்கிரமமான சத்தத்தில் வீறிட்டாள். ''எங்க அம்மாவை முத்தத்துலே தூக்கிப் போட்டிருக்கியே... பாவி, நீ வெளங்குவியா? நாசமாய் போயிருவே... நீ போயா... அங்குட்டு.''

அதிகாரிகள் போய்விட்டனர், எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு. முருகேசன் அடிபட்ட நாகமாய் பலர் முன்னிலையில் தன்னைத் திட்டிவிட்டாளே என்கிற கோபமாய்... 'கறுமுறு'வென்று திருகிக் கொண்டிருந்தான். அம்மாவை மறுபடியும் பறிகொடுத்த தகிப்பில் வெறிபிடித்தவளைப் போல சண்டை போட்டுக் கொண்டேயிருந்தாள். அந்த வீட்டில்-

அப்புறம்... அனுதினமும் சண்டைக் காடுதான்.

ஏப்ரல் 1995, செம்மலர்

'மாலைமதி'யில் மறுபிரசுரம் செய்யப்பட்ட சிறுகதை

உயிர்க்காற்று

பழநிச்சாமிக்கு தலைகால் புரியாத சந்தோஷம். அந்த ஓட்டு வீடே ததும்பிக் கொண்டிருந்தது, மகிழ்ச்சிப் பரபரப்பில். வீடு கட்ட லோன் கிடைத்துவிடக் கூடிய வாய்ப்பு, ரொம்ப நெருக்கத்தில்.

'பிளானை நீட்டினால்... உடனே ஸாங்சன்' என்ற அளவில் பக்குவ நிலை.

இவனுக்கு இன்னும் நாற்பது வயது கூட ஆகவில்லை. அதற்குள் பக்காவான காரைக் கட்டிடமாக்கப் போகிறான். பெருமைப் பூரிப்பில் பழநிச்சாமி ஒரு சுற்று பெருத்துவிட்டான். முகத்தில் ஒரு தேஜஸ். கண்களில் கனவு மின்னல்கள்.

அவன் மனசு பூராவும் வீடு... வீடுதான். வாயைத் திறந்தாலே... செங்கல், இரும்பு, சிமெண்ட், பலகை இந்தப் பேச்சுத்தானே. 'எட்டுக்கு எட்டு... பத்துக்கு பத்து... லாப் அலமாரி' என்கிற சிந்தனைதான்.

பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்குப் போயிருக்கிற தேவானையைப் பற்றி யோசிக்கக்கூட நேரமில்லை. யோசனைகள் முழுவதையும் கட்டிடக்கனவே விழுங்கித் தீர்த்தது.

இந்த வீட்டுக் கனவுதான்... இந்த வேப்ப மரத்துக்கு மரணமாக வந்து நிற்கிறது. என்ன செய்ய?

சாயங்காலம். சைக்கிளில் வந்து இறங்கினான், பழனிச்சாமி. மூன்றாவது மைலில் இருக்கிற ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உத்தியோகம். சைக்கிள் மிதித்த வேகத்தில் உடம்பெல்லாம் குப்பென்று வியர்வை. பனியனுக்குள் நெருஞ்சி முள்ளாகி உறுத்துகிற ஈர நச நசப்பு.

பேண்ட், சட்டை, பனியன் எல்லாம் கழற்றி... கைலிக்கு மாறினான். தொட்டித் தண்ணீரில் நெஞ்சு, முதுகு, முகமெல்லாம் கழுவித் துடைத்தான். அழுக்கோடு சேர்த்து அலுப்பையும் இறக்கி வைத்த ஆசுவாசம். திரேகமே புடைத்தெடுத்த மாதிரி சுகமாக இருந்தது. வீட்டுத் தாழ்வாரத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். கண் நிறைய வேப்ப மரம். கண்ணுக்குக் குளிர்ச்சியான கனிந்த பச்சை நிறம்.

வேப்ப மரத்தின் செல்லச் கிணுங்கலான சிரிப்பில் வந்த மென் காற்று. மழலையின் பிஞ்சு விரல்களாக நெஞ்சு ரோமங்களுக்குள் பரவிப் படர்ந்து புல்லரிக்க வைக்கிற காற்றின் சுகம். உயிரைத் தழுவும் உயிர்க் காற்று. அக்கணத்தில்-

பரவச உச்சத்தில் அவன். கிளுகிளுப்பில் கண்களை மூடினான். மூடிய கண்ணுக்குள்ளும் நிறைந்து பரவிய வேப்பமரம்.

"டேய் பழநி... டீ தரட்டா... டா?"

"ரெடியாயிருக்கா அய்யா?"

''ம்ம்''

''சமையலுக்கு நானும் கூடமாட ஹெல்ப் பண்ணட்டுமா, அய்யா?''

''வேண்டாம்பா... எல்லாம் முடிஞ்சது.''

பேச்சு இங்கேயிருந்தாலும், மனசும் கண்ணும் வேப்ப மரத்தில்தான். டீயை தந்த அய்யா, வாசல் திண்ணையின் எதிர்ப்புறத்தில் துண்டைப் போட்டு உட்கார்ந்தார்.

''மரம் வெட்டுற மாரிக்காளை வந்துருந்தான்.''

''அப்படியா...''

''நான்தான். அவனை வரச்சொன்னேன்.''

''என்னத்துக்குய்யா?''

''வேப்ப மரத்தை வெட்டத்தான்.''

உள் உலகத்திலிருந்து தூக்கியெறியப்பட்டவனாய் உணர்வு பெற்றான். துணுக்குற்றுப்போய்... அய்யா முகத்தை 'விலுக், விலுக்' கென்று பார்த்தான். அவன் முகத்தில் திகைப்பும், குழப்பமும்.

''இந்த மரத்தையா? இந்த மரத்தை வெட்டுறதுக்கா?'

அதிர்வின் உறைவிலிருந்து விலகாத அவனது மயக்கக் குரல்.

''ஆமா...'' என்று வெகு சாதாரணமாக தலையசைக்கிற அய்யா.

''டேய் பழநி, பாசம், பிரியம், சாமி, சடங்குன்னு இருக்கிறதெல்லாமே நம்ம வசதிக்குத்தான். முன்னேற்றத்துக்குத்தான். அதுவே... குறுக்கே மறிச்சுக்

கிட்டு நிக்கக் கூடாது. புரியுதா? அதோட... இந்த மரத்தை வெட்டியே ஆகணும்ங்கிற கட்டாயமாயிருச்சு... இப்ப''

அய்யா பேச்சில் உலர்ந்த காரியார்த்தம். உணர்ச்சி மயக்கத்தைத் தாண்டிய புறநிலை யதார்த்தம்.

வீடு கட்டுவதற்குத் தேவையான மரம், பலகை எடுப்பதில் ஏழாயிர ரூபாய் மிச்சமாகும், இந்த மரத்தை வெட்டி ஆறப்போட்டு அறுத்தால்.

இந்த மரம் இருக்கிற இடமும் சேர்ந்தால்தான், வீட்டுக்கான பிளான் முழுமையடையும். மரம் இருக்கிற இந்த இடத்தில்தான்... அநேகமாய் பாத்ரூமும் லெட்ரீனும் வரும்.

ஆனால்...

அதுக்காக இந்த மரத்தை வெட்டுறதா? இந்த மரத்தையா?

... பழநிச்சாமி டவுசரும் சட்டையுமாக அலைந்த அந்த விடலை நாட்கள். டென்த் படித்துக் கொண்டிருந் தான். வகுப்புத் தோஸ்துகளோடு சேர்ந்து சாயங்காலம் பூராவும் காடுகரைகளில்தான். லீவ் நாட்களில் சொல்லவே வேண்டாம். பொந்தும், புதர்க்காடுமாய் சுற்றுவான். மயில் முட்டைகளை பொறுக்கி பொரித்துத் தின்பார்கள். காடைகளை கதிகலங்க விரட்டி கும்மாளிப்பார்கள். கிணற்று உள்ச்சுவர் பொந்துகளில் தலை கீழாகத் தொங்கி கைவிடுவான். புறா முட்டைகளை அள்ளுவான். சில சமயம் புறாக்களே பிடிபடும்.

ஒரு மஞ்சனத்தி மரத்து நிழலில் அணிலுக்கு குறி வைத்துப் பதுங்கியிருந்தபோது-

காலடியில் நிறைய கொறண்டிச் செடிகள். முள் முள்ளாக நாயுருவிச் செடிகள். காய்ந்து மாராகிப் போன துளசிச் செடிகள். இதுகளின் உலர்ந்து போன வறண்ட மேக நிறத்துக்குள் ஒரு பசிய ஒளித்துளியாக... அந்த ஈர்க்குச்சி மாதிரி, சின்னஞ்சிறு பிஞ்சுத் தாவர உயிர். பார்க்க லட்சணமாக இருந்தது. பழநிக்குள் ஏதோ ஒரு மாயாஜாலம். ஆர்வப் புடைப்பு.

அந்தக் கன்றை பதனமாய்ப் பிடுங்கி... அதன் வேரில் வெயில் பட்டுவிடாமல் ஈர மண்ணப்பி... குருவிக் குஞ்சைக் கொண்டு வருகிற பதனப் பாதுகாப்போடு வீட்டுக்கு வந்து கூரை வீட்டுக்கு முன்னால்... விரிந்த முற்றம். தினசரியான சாணப் பாலில் நிறம் மாறி இறுகிப் போன முற்றம். அதன் மாரி மூலையில் வெளிப்பானை. நாலைந்து பனைகளில் தண்ணீர். சிமிண்டுத் தொட்டி. அதைச் சுற்றி எந்நேரமும் ஈரப்பதம். பாசி பிடித்துப்போன சகதி. சுவர்க் கோழியின் இரைச்சல் எந்நேரமும் 'ங்ங்ஙீய்ய்' யென்று.

அங்கே வந்து அதை ஊன்றினான். உயிர் பிழைத்து விடுமா? வேர் அழுகிப் போகுமா? அவனுக்குள் ஒரே சஞ்சலம்.

ரெண்டு நாளாக அதே நினைப்பு. கலக்கம், சாமக் காட்டில் 'ஒன்னுக்கிருக்க' வரும்போதுகூட.... நட்சத்திர வெளிச்சத்தில் 'அது இருக்குதா' என்று பார்த்துவிட்டுத் தான் படுப்பான். உயிரில் கலந்த உயிராகி... உயிரை அலைக்கழிகிக்கிற விஷயமாகிவிட்டது.

நாலாவது நாளில்-

அதன் 'இத்துனூண்டு' இலைகள் நான்கும் பழுத்து உதிர்ந்து போயிற்று. இவனுக்கு ரொம்பக் கவலையாகப் போயிற்று. 'வேர் அழுகிப் போயிருக்குமோ' என்று பதறிப் பதைத்தான்.

ஆறாவது நாளில் அந்த ஈர்க்குச்சியின் உச்சியில் ரெண்டு புதிய பசிய ஒளிப்புள்ளிகள். தளிர்கள். அதற்குப் பிறகுதான், அவனுக்கு உயிரே வந்தது.

அடுத்த வருஷமே ஆள் உயரத்துக்கு வளர்ந்து விட்டது? குடை மாதிரி விரிந்து கவிழ்ந்த பச்சைத் தலை. ஆனால்... அதுவரை பழநி பட்டபாடுகள்...

தூண்டில் போடுகிறவர்கள் மண் புழு தோண்ட இந்த மாதிரியான ''வெளிப்பானை''க்குத்தான் வருவார்கள். அப்படி சுரண்டியோடு வருகிற எவரையும் கண்ணில் படவிடமாட்டான். சண்டை போட்டு விரட்டிவிடுவான். கோழிகுஞ்சுகளைக் கூட கிண்ட விடாமல் பற்றிவிடுவான். ஆடு குட்டிகளை அந்த ஏரியா பக்கமே அண்டவிட மாட்டான். 'விர்... விர்'ரென்று கற்கள் பறந்து பாயும். காரணமில்லாமல் வைவான், ஆடு குட்டிகளை.

இவன் இந்தக் கன்றின்மீது உயிரையே வைத்திருந்தான். பழநியின் தங்கச்சி அதைச் சொல்லிச் சொல்லி கேலி பண்ணுவாள்.

விளையாட்டுச் சண்டை வருகிற போதுதெல்லாம்... ''அந்த வேப்பங்கன்னை பிடுங்கிப் போட்டுடுவேன்'' என்று பயமுறுத்தி, போக்குக் காட்டுவாள். அவனுக்குச் சண்டாளமாய் கோபம் வரும். தங்கச்சியைப் போட்டுச் சாத்துவான், மொத்து மொத்தென்று.

தங்கச்சியை அடித்ததற்காக அய்யாவிடம் வசவையும், அடியையும் வாங்கிக் கட்டிக் கொள்வான், நிறைய்ய தடவைகள்... வேப்பங் காய்க் கொத்துகளைப் போல.

அந்த மரம்தான்... இருபது வயசு மரமாகி, ஒரு கோபுரக் கூடாரம்போல உயர்ந்து படர்ந்து பிரம்மாண்டமாகிக் கிடக்கிறது, ஒரு கோயிலைப் போல.

நாளாக... நாளாக... விபரம் தெரிந்த பிறகு, உயிராக இருந்த வேம்பு, பழநிக்கு வெறும் மரம் என்றானதும், பிடுங்கிப் போடுவதாக மிரட்டிய தங்கச்சிக்கு அதுவே கோயிலானதும்... தனிக் கதை.

அந்தக் கோயிலைதான் அய்யா வெட்டணும் என்கிறார். அய்யா சொல்கிற தர்க்கரீதியான காரணங்களைக் கேட்டால்... அதுவும் சரியென்றே படுகிறது. மறுக்க இடமில்லை. ஆனாலும்-

இவனுக்குள் ஏதோ ஒரு நெருடல். இனம்புரியாத பயம். மயக்கம். தடம் தெரியாத தயக்கம்.

வாசல் திண்ணையிலேயே துண்டை விரித்துச் சாய்ந்தான். சுவரில் தலையைச் சாய்த்து தாழ்வாரத் தூணில் பாதங்களை வைத்தான். ஒரு மயக்கத்தோடு மரத்தைப் பார்த்தான்.

சாயங்காலத் தங்க வெயில், வேப்பமரத்து பச்சை இலைகளில் தழுவிக் கிடக்கிறது. எண்ணெய் தேய்த்துக் கொண்டதைப்போல பசிய இலையில் ஒளிஜாலம் செய்கின்றன. அதன் நிழல், கீழ்த்திசையில் நீளமாய் விழுந்து கிடக்கிறது.

மெல்லிசான உப்பங்காற்றுக்குச் சலனமடைகிற வேப்பமரம். மரணத்தை முன்னுணர்ந்து அழுது சிணுங்குகிற இலைகள், தாய்க்கோழியை இழந்து தவிக்கும் குஞ்சுகளைப்போல.

இவனுக்குள் ஏதேதோ யோசனைகள். வேதனையும் குழப்பமுமாய் வாட்டுகிற நினைவுகள், நினைவுகள்... நினைவுகள்... மூடிய கண்களுக்குள்ளும் அவலச் சோகமாக ஆடிக் குலுக்குகிற வேப்ப மரம்.

... அலுவலகம் முடிந்து அயர்ச்சியோடு வந்து கொண்டிருக்கிறான் பழநிச்சாமி. ப்ரீவில் இரைச்சலோடு சைக்கிள் தெருவுக்குள் நுழைகிற போது, ஏதோ ஒரு புதிய வெறுமையை உணர்ந்தான். 'என்னவோ... வெறிச்சின்னு தெரியுதே... என்னது?' என்கிற எண்ணக் குறுகுறுப்பு.

வீட்டை நெருங்குகிறபோது, வீடே வழக்கமான அடையாளம் இழந்து வேற்று வீடாகத் தோன்றியது. பகீரென்றது.

கோயிலைக் காணோம். பச்சைக் கோபுரக் கூடாரத்தைக் காணோம். கொப்பும் கொழையுமாக நாலாதிசையும் ஓடிப் படர்ந்திருக்கும் பச்சைப் பேரழகைக் காணோம்.

அய்யா மரத்தை வெட்டிட்டாரா?

குப்பென்று அவனுக்குள் வியர்வை. பயப் படபடப்பு. வியர்த்த பாதம் பெடலில் வழுக்கியது. ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர்கொள்கிற வேதனை. திகில். வீட்டு முற்றமே கொலைக் களமாகிக் கிடந்தது.

புழுதியும் உதிர்ந்த இலைகளு மாய். மரம் இருந்த இடத்தில் குடைந்து தோண்டிய கிடங்கு மட்டும். கத்தரிக்கப்பட்ட வேர்கள், அந்த மண்ணுக்குள் வெட்டுண்ட கைகளாய்த் துடித்தன. முற்றத்தின் மூலையில் வெட்டி ஒதுக்கப்பட்ட கிளைகள். தடித்தடியான கிளைகள். அதற்கும் அப்பால் அம்பாரமாய் குச்சிகளும், கொழைகளும். கொழைமலை. பருத்து உருண்ட நீண்ட தூர், ஒரு ராட்சஸ மனிதனைப் போல கீழே கிடந்தது. கோடாரியும், அரிவாளும் பட்ட இடமெல்லாம்... மஞ்சள்ச் சதையும், சந்தன ரத்தமுமாய் குதறிப் போயிருந்தது.

பார்க்கப் பார்க்க அவனுள் எரிந்தது. அழுகை அழுகையாய் வந்தது. அய்யாவுடன் சண்டை போடணும் போல ஒரு மனத் திமிறல். கெட்ட வார்த்தைகளுடன் பீறிட்ட உணர்ச்சித் திரள்.

வீட்டில் அய்யாவைக் காணோம். துணிமணியை மாற்றினான். உடம்பைக் கழுவத் தோன்றவில்லை. மனதுக்குள் இனம் புரியாத விசனம். பொங்கிப் பொங்கிக் குமைந்த துக்கம்.

வாசல் நிலையைப் பற்றியவாறு நின்று வெறித்தான். முற்றம் முழுக்க சதைச் சிதறலாய், சிறாய்கள், மஞ்சள்ச் சதைத் துண்டுகள் இருபது வயது வாலிபனை வெட்டிக் கூறு போட்ட மாதிரி. தேவானை வந்து இதைப் பார்த்தால்... பொறுப்பாளா? கண்ணகியாய் நின்று கொதிப்பாளே... வந்து நின்று, முகத்துக்கு முகமாய் பார்த்துக் கேட்டால்... என்ன பதில் சொல்ல?

''ஏங்க... என் மாரித்தாயை எங்க? அவளை வெட்டிச் சாய்ச்சிட்டுத்தானா... நாம வீடு கட்டணும்?'' என்றெல்லாம் ஆங்காரமாய் கதறுவாளே.

அவளுக்கு என்ன பதில் சொல்லிச் சமாளிக்க? எப்படிச் சமாதானம் சொல்ல? சொல்லி ஆறுகிற கொதிப்பா... அது?

பழநிச்சாமி - தேவானை தம்பதிக்குக் கல்யாண மாகி ஆறு வருஷமாயிற்று. ரெண்டு தடவை 'தங்கி'யிருந்து 'கழிந்து' போயிற்று. இன்னும் குழந்தை பிறக்கவே யில்லை. பிறக்கும் என்கிற அறிகுறியும் தென்படவில்லை.

கல்யாணம் 'மூய்ந்த' மறுவருஷமே பிள்ளையோடு ஊர் திரும்புகிற பெண்களைப் பார்க்கும்போதெல்லாம் இவளுக்குள் எத்தனையோ பிசாசுகளும், வேதாளங்களும் ஆட்டம் போடும். நாளாக நாளாக நம்பிக்கைகள் சிதைந்து... ஒரு தாழ்மையுணர்ச்சிக்கும் குற்ற உணர்ச்சிக் கும் ஆளாகி விட்டாள், தேவானை. கண்ணில் தென் படும் எல்லாப் பெண்களுமே இவளை 'மலடி' என்று இழிவாக நினைப்பதாக ஒரு பயம். ஒரு மிரட்சி.

குழாயடிக்குப் போய்விட்டு வந்தால்... அழுகையும் விசும்பலுமாய் வருவாள். 'நல்லது பொல்லது' என்று பிற வீடுகளுக்குப் போய்விட்டு வந்தாலும்... அங்கலாய்ப்பும், புலம்பலும்தான்.

'மலடி' என்று 'அவள் பேசினாள், இவள் பேசினாள்' என்ற குமுறல் மயம்தான். 'அவள் குத்திக் காட்டினாள் - இவள் குசுகுசுவென்று பேசினாள்' என்று குருட்டாம் போக்கிலான சகட்டுமேனியான குற்றச்சாட்டுகள்தான்.

இதமாய் - பதமாய் - கனிவாய் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தான், பழநிச்சாமி. போகப் போக அவனுக்கே சலித்துப் போயிற்று. அடைக்கோழி மாதிரி அவள் அங்கலாயப்பதே இவனுக்கு சள்ளையாகி விட்டது. 'ச்சீ'யென்றாகி விட்டது.

"ஆமா... ஒன்னோட இதே தொல்லைதான். எப்பப்பாரு... இதே நச்சரிப்பு. ச்சேய்! நாறவாய்லே குடியிருந்தாலும், நச்சரிப்புலே குடியிருக்க முடியுமா... மனுஷன்?"

சள்ளென்று எரிந்து விழுவான். அப்புறம்... வீடே அழுகை மயம்தான். விசும்பலும், மூக்குச் சீறலும்தான். அய்யா தலையிட்டு நாலு வார்த்தை சொன்ன பிறகுதான்... சகஜ நிலைமை திரும்பும்.

இந்தத் தொல்லைகளுக்கிடையில்... தங்கச்சி யின் கல்யாணப் பிரச்சினை. வரன்கள் வந்து வந்து நழுவிப் போகிற கொடுமை. மன உளைச்சல்கள். நகைப் பிரச்சினை. பணப் பிரச்சினை. கொசுக் கூட்டமாய் வந்து மொய்க்கிற ரணங்கள். இச்சிலாத்திகள்.

எப்படியோ ஒரு வரன் அமைந்து, நல்ல படியாக முடிந்தது.

மறுவீட்டுக்குப் புறப்படுகிறபோது-

மதினியின் ரெண்டு கைகளையும் பற்றிக் கொண்டாள். கண் கலங்கினாள். தொண்டை கரகரத்தது. அந்த உணர்ச்சி மோதலுக்கு நடுவில்-

''மயினி, வயசுலே சின்னவா... நா. எஞ்சொல்லைக் கேப்பீங்களா?''

''சொல்லும்மா?''

''எனக்குக் கல்யாணம் ஆகுமோ ஆகா தோன்னு நம்ம வீடே பதறிப் போயிருந்துச்சு. அதுவே ஒரு கவலையா யிருந்துச்சு. எங்க அண்ணன் எனக்காக பட்ட பாடுகளை நா மறக்கலே. ஓடி ஓடி ஒழைச்சான். ஓய்வில்லாம அலைஞ்சான். ஆனா... எனக்கும் இந்தக் காரியம் கைகூடி வந்துருக்குன்னா... அதுக்குக் காரணம் இந்த மரம்தான்... மயினி.''

''என்னம்மா சொல்லுதே?''

''ஆமா மயினி, யாருக்கும் தெரியாம இந்த மரத்தை மாரியாத்தாளா நெனைச்சு, வெள்ளி, செவ்வாய் தவறாம கும்புட்டு வந்தேன். அதனாலேதா... எனக்கு மாலை பூத்துச்சு.''

''ம்.''

''மயினி, நீங்களும் இதை மாரித்தாயா நெனைச்சு கையெடுத்துக் கும்புட்டு வாங்க. நம்பிக் கும்புட்டா... நல்லது நடக்கும் மயினி. இந்த வீட்லே யும் ஒரு கொழந்தை தவண்டு வெளையாடும்.''

இதை அவள் சொல்லும் கணத்தில் தேவானை பற்றியிருந்த நாத்தனார் கையை இறுக்கினாள். அந்த இறுக்கத்தில் தெரிந்த தேவானையின் மனத்தாபம். உயிர்த் தவிப்பு.

அவ்வளவுதான்.

ஓர் ஆள் சேர்ந்து கட்டக்கூடிய பருமனிலிருந்த அந்த மரத்தில், முண்டு மாதிரி ஒரு திரடு. அது சின்னக் கன்றாக இருந்தபோது, ஒரு கிளை ஒடிக்கப்பட்ட காயம். அதன் தழும்பு. அந்தத் திரடையே மாரித் தாயின் முகமாகக் கருதி... தேவானை மறு வெள்ளியே மாலை போட்டாள். மஞ்சளும், சந்தனமும் பூசினாள். குங்குமம் வைத்தாள். வலம்வந்து விழுந்து வணங்குவாள், ஒவ்வொரு வெள்ளி, செவ்வாயும்.

அவளைப் பொறுத்தவரையில்-

அது மரமில்லை. மரம் மட்டுமில்லை.

பழநிச்சாமி பழுத்த ஆத்திகனுமில்லை, பக்கா நாத்திகனுமில்லை. சராசரியான லௌகீகவாதி.

இவன் கன்று வைத்து வளர்த்த மரத்தையே கடவுளாக நினைப்பதையும், அதுவே குழந்தைப் பாக்கியத்தை வழங்கிவிடும் என்று நம்புவதையும் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

தங்கை இல்லாத தைரியம். கூச்சமில்லாமல் தேவானையைக் கேலி பண்ணி விளையாடுவான்.

''ஏய்... இதென்ன வேம்புத் தாயா, மரச் சாமியா? புதுச் சாமிகளை பொம்பளைக உருவாக்கிடுதீகளே...''

"உங்க ஜோலியைப் பார்த்துக்கிட்டுப் போங்க. எனக்கு இதான்... மாரித்தாய். சாமி... ஏங் கொல தெய்வம்."

"மாரித்தாய் மழையைத் தரும். மழலையுமா தரும்?"

"இங்க பாருங்க. ஏ வழியிலே குறுக்கே வராதீக. வந்தா... எனக்குக் கெட்ட கோவம் வந்துரும்."

"வந்தா... என்ன செய்வே?"

"வாய்க்கு வந்தபடி வைவேன்."

"வைவீயா? என்னையா?"

"ஆமா, நீங்க என்ன பெரிய கொம்பா? நாலு பேரு கூடுன இடமெல்லாம் முள்ளு குத்துன மாதிரி, வார்த்தை கேட்டவளுக்குல்லே... வலி தெரியும்?"

இவன் சிரிப்பான்.

இப்படிப் பேச்சு, அந்த வீட்டில் அடிக்கடி நடக்கும்.

வயசுக்கு வந்த பருவப் பெண்ணான தங்கைச்சி, வாழ்க்கைப்பட்டுப் போய்விட்டாள். அவள் இல்லாத சுதந்திரம். கூச்ச நாச்ச மில்லாத கேலிகள். கிண்டல்கள். ஆசையும் மோகமுமான கொஞ்சல்கள். மயக்கச் சிரிப்புகள், உச்சத்தைத் தொட்டுக் கிறங்கிய போதை முனகல்கள். தழுவல்கள். விளையாட்டு மும்முரங்கள். மனசும் உடலும் கலந்து, கரைந்த போகப் பொழுதுகள்.

நிஜமாகவே... கர்ப்பமாகிவிட்டாள். அவளுக்கு மரம், மாரித்தாயாகவே ஆகிவிட்டாள். குலதெய்வமாகவே நம்பி... பூஜையும் புனஸ்காரமும் செய்து, தடபுடல் பண்ணினாள்.

அந்த மரத்தைத்தான் - மாரித்தாயை - அய்யா வெட்டிச் சாய்த்திருக்கிறார்.

நிறைமாசக் கர்ப்பிணியாக அம்மா வீட்டுக்குப் போயிருக்கிற தேவானைக்கு பிரசவத்தில் ஏதாச்சும் சிரமம் ஏற்பட்டு விட்டால்? ஏதேனும் விபத்து நிகழ்ந்து விட்டால்? நடக்கக் கூடாதது நடந்து விட்டால்? ஐயோ! அதை என்னால் தாங்க முடியுமா? பழநிச்சாமிக்குள் பதற்றம். அடிமனசின் ஆழத்தில் பதைப்பும், பயப் படபடப்பும்.

தேவானையை நினைத்தாலே, மனசுக்குள் 'பகீர், பகீ' ரென்கிறது.

''என்னை நீங்க மனுசியாக்கூட மதிக்கலியா? நா சாமின்னு நெனைச்சு கும்புட்ட மரத்தை வெட்டுறதுக்கு முந்தி, ஏங்கிட்டே ஒரு வார்த்தை யாச்சும் கேட்டீங்களா? கேக்க வேண்டாமா?'' என்று விரல் நீட்டிக் கேட்டால்... அது நியாயம்தானே? அந்த விரலை எப்படி மடக்க? என்ன சொல்லிச் சமாளிக்க? நம்ம பக்கம் என்ன நியாயம் இருக்கு? வாய் திறந்து பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கு?

பழனிச்சாமி வாசலில் நின்றான். மனசுக்குள் அலை அலையாக ரசாயன நினைவுகள்.

மனக்கரையில் மோதி மோதி நிறம் மாற்றுகிற நினைவுகள். ரணப் படுத்துகிற நினைவுகள்.

முற்றத்தில் யாரோ வருகிற அரவம். அய்யாவா? இல்லை. தபால்காரர். தந்தி வந்தது. தந்தி என்றவுடனே அவனுக்குள் குப்பென்று பற்றிய தீ. அச்ச நடுக்கம். மனம், திரேகமெல்லாம் பற்றிப்படர்ந்த படபடப்பு. தேவானை பற்றி நினைத்து... ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. அது சம்பந்தமாகத்தான். தந்தியா? 'ஏதாச்சும் ஆகிப் போச்சா?'' அபசகுனமாய் நினைப்புகள்.

கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கையெழுத்து போட்டு முடிப்பதற்குள் பலவிதமான தீ நினைப்புகள்.

தந்தியைப் பிரித்தான். அப்பா...டா! நல்ல... வேளை! ''காலையில் 9.30-க்கு பிரசவம். ஆண் பிள்ளை. தாயும் சேயும் நலம்.''

அவன் தன்னிலைக்கு வரவே கொஞ்ச நேரமாயிற்று. இருதயம் சீரான நியில் ஓடி, உயிர் திரும்பி வந்தது ஆசுவாசமாக மூச்சுவிட்டான்.

தந்தியை நூறு தடவைக்கு மேல் படித்து விட்டான். திடுமென்று அவனுள் மின்னலாய்... ஒரு நினைப்பு.

'மரத்தை எந்நேரம் வெட்ட ஆரம்பிச்சிருப் பாங்க? ஒம்பதரைக்குத்தான் வெட்டத் துவங்கி யிருப்பாங்க. அதே நேரத்துலே அங்க ஆண் குழந்தை பொறந்துருக்கு, சுகப்பிரசவம்.'

இந்த நினைப்பில் ஏதோ ஒரு வினோதம் ஒளிந்திருப்பதாக அவனுக்குள் ஒரு பிரமை. மர்மமான மயக்கம்.

சாய்ந்து கிடந்த மரத்தூரைப் பார்த்தான். மாரித்தாய் முகமாக தேவானை நினைத்த அந்தத் திரடு, குப்புறக் கிடந்தது. தரையைக் குத்திக் கிடந்தது.

'முகம் வலிக்குமோ... அந்த மரத்தூரை புரட்டிப் போடலாமா' என்று யோசித்தான். மறுகணமே விழித்துக் கொண்டான். யோசித்த யோசனையிலுள்ள பலவீனத்தையும், மூடத்தனத்தையும் எண்ணி, அவனே ஏளனமாகச் சிரித்துக் கொண்டான்.

அந்த யோசனையின் மின்னல் வெளிச்சம், அவனுக்குள் கிடந்த ஆழங்களை அவனுக்கே உணர்த்தியது. நிஜந்தான். இந்த மரம், தேவானைக்கு மட்டுமா மாரித்தாய்? இவனுக்கும்கூட அது வெறும் மரமாகவா இருந்திருக்கிறது?

அம்மா செத்திருந்த துக்கமான நாட்களில் - அந்த இழப்புச் சோகத்தின் அடர்த்தியால் ஏற்பட்டிருந்த மனப்பாரத்தை இறக்கி வைக்க இடமில்லாமல் அந்தரங்கமாய் திணறித் தவித்த போது, இந்த மரத்து நிழலில்தான் துண்டு விரித்து மல்லாக்க படுப்பான். மரத்தின் இலைகளுக்குள் சிந்தனையும் பார்வையும் பதியும்.

அசைகிற இலைகளுக்கு நடுவில் ஆடுகிற ஒளிப்புள்ளிகள். லட்சக்கணக்கில் வெட்ட

வெளித்துளிகள். உற்று உற்றுப் பார்க்க, பார்வையில் மனம் மயங்க... இலைகளா, வெளித் துளிகளா... எது பருப்பொருள் என்கிற இனிய குழப்பத்தில் அறிவு மயங்கித் திளைக்க... மாய நினைப்பில் மனசு பிரமை கொள்ள...

இப்படியே நீள்கிற நேரங்களில்... அவனது மனப்பாரம் கரைய, அந்த மரமே அம்மாவாக நின்று ஆறுதலாய் வருடிய கணங்கள்.

தங்கச்சிக்கு வந்த வரன்கள் நழுவிப் போகிற நாட்களின் கவலைகளை - குமைச்சல்களை - குழப்பங்களையெல்லாம் இந்த மரத்தோழனின் முகம் பார்த்தே தணித்துக் கொண்ட நிமிடங்கள்.

இந்த மரச்சகோதரனின் ஆதரவான அன்புக் காற்றின் தழுவல்களில் தைரியம் பெற்ற நேரங்கள். ஆம்... இந்த மரம், இவனுக்கும் மரமாக மட்டும் இருந்ததில்லை. ஆத்ம மடிப்புகளை நீவிவிட்டு நேராக்கி ஆத்ம தோழமையாகவும் இருந்திருக்கிறது. அதனால்தான்-

மரம் வெட்டுப்பட்டு கிடப்பதைக் கண்டவுடன், இவனுள் அத்தனை கலக்கமும் அவஸ்தையும் ஏற்பட்டதா?

யோசிப்பின் தீவிரம், அவனை அவனுக்குள் ஆழ ஆழமாய் கொண்டு சென்றது.

வீடு கட்டி, ஃபோன் மாட்டி செயற்கையான முறையில் வசதி பெறுவதற்காக... காற்றை (பிராண வாயு) உயிர்க்காற்றாக மாற்றித் தருகிற இயற்கைத்

தாவரங்களை வெட்டுவது என்ன புத்திசாலித்தனம்? சுற்றுச் சூழலை நரகமாக்கிவிட்டு, இயற்கைத் தாவரங்களை வெட்டி வீழ்த்தி விட்டு... மனிதன் எப்படி வாழ? உயிர்க்காற்று இல்லாமல் எப்படி உயிர் வாழ? 'பிராண வாயு ஷாப்'பில் போய் உயிர்க் காற்று வாங்க முடியுமா?

உயிர்க்காற்று அற்றுப் போகிற சுற்றுச் சூழலை நினைத்தாலே, பயத்தில் மனம் பதறிப் பதைக்கிறது.

முற்றத்தில் —

கையில் குழந்தையுடன் தேவானை. தேவானையின் முதற்பார்வையே சாய்ந்து கிடக்கும் மரத்தூரின் மேல்த்தான். அவள் கண்ணில் பாம்பைக் கண்ட அதிர்ச்சியும், பய உணர்வும்.

"ஏங்க... இதை வெட்டுனீக? என்னோட மாரித் தாயை எதுக்காக வெட்டுனீக? சொல்லுங்க."

பழநிச்சாமிக்கு ஒன்றும் பதில் பேச வழியில்லை. பிடிபட்ட கள்வனைப் போல தட்டுத் தடுமாறினான்.

"இல்லே... வந்து அய்யாதான்."

"ஏங்க... மலடியாயிருந்து சீரழிஞ்ச என்னை தாயாக்குன மாரித்தாயை வெட்டிட்டீகளே... இது ஞாயமா? இந்த வங்கொடுமையை யாராச்சும் செய்வார்களா? நீங்க ஒரு மனுசன்தானா? நாளைக்கு நம்ம புள்ளைக்கு தெய்வ குத்தம் நேராதா? ஏதாச்சும் ஆகாதா? அப்படி ஆச்சுன்னா... நா உசுர் வச்சி

மண்ணுலே இருப்பேனா? சொல்லுங்க... சொல்லுங்க.''

கோபமும் குலைகொதிப்புமாய் சீறுகிற தேவானை. பதில் சொல்ல முடியாமல் தத்தளிக்கிற பழநிச்சாமி. குற்ற உணர்வின் பாரம் தாளாமல் தடுமாறுகிற அவன். பேச நா எழாமல் - அவள் கண்களைக் கூட நிமிர்ந்து பார்க்கத் தெம்பில்லாமல்...

''என்னோட மாரித்தாயை என்னத்துக்காக வெட்டுனீங்க? சொல்லுங்க'' கோபமும் சீற்றமுமாய் பத்ரகாளியாகக் கதறுகிற தேவானை. உணர்ச்சியின் உக்கிரமத்தில் கொதி நிலையாக அவள். அவனது ஆத்மாவையே பற்றி உலுக்குகிற ரௌத்ரக் குரல்.

''எதுக்கு வெட்டுனீங்க...? எதுக்கு வெட்டுனீங்க? சொல்லுங்க... வாயைத் தொறந்து சொல்லுங்க...''

''வெட்டலை... வெட்டலை... மரத்தை நா வெட்டலை'' என்று உறக்கத்திலேயே பதறிப் பதறிப் புலம்பற பழநிச்சாமி. சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த அய்யா, அவனை அதட்டி எழுப்பினார்.

''டேய் பழநி, ஏண்டா பொலம்புறே?''

தாழ்வாரத்தூணில் வைத்திருந்த பாதத்தை எடுத்து விட்டு, விருட்டென்று எழுந்தான் பழநிச்சாமி. சுற்று முற்றும் பார்த்தான். திகைப்பும் குழப்பமுமாய் அய்யாவைப் பார்த்தான். சுவரில் அண்டக் கொடுத்த தலை. பின்னங்கழுத்து முழுக்க வலித்தது.

தேவானையைக் காணோம்.

சட்டென்று எதிரில் பார்த்தான். வெட்டுப்படாமல் மரம் முழுசாக நின்றது. தங்க வெயில் மறைந்த அந்தி. மரத்திற்குள் வந்து அடைந்திருந்த மைனாக்களின் சத்தமும், இருட்டும்.

''என்னடா... பழநி...'' என்ற கேள்வியோடு நிற்கிற அய்யாவைப் பார்த்தான்.

''அய்யா... வேப்பமரத்தை வெட்டாமலேயே வீட்டைக் கட்டுவோம்யா. மரத்தை வெட்ட வேண்டாம்'' என்று தெள்ளத் தெளிவான வைராக்யத்தோடு சொன்ன பழனிக்குள்... அரைகுறையாக முகம் காட்டிய அந்தக் கனா.

மகனை புரியாமையோடும் சூட்சுமமாகவும் பார்த்தார் அய்யா, லௌகீக வாழ்க்கையைப் போல.

நவம்பர் 1995, வாசுகி

பூமிக்குப் பொறுக்காது

''ஏய், இந்தா... காயிதம் போட்டுருக்குற புள்ளைக்கு ரூவா அனுப்பப் போறீயா... இல்லியா?''

கோபமும் குமுறலுமாய் கொந்தளிக்கிற பெண் டாட்டியை எரிச்சலாய்ப் பார்த்தான், சங்காண்டி. ''ரூவா யாருகிட்டே கொட்டிக்கெடக்கு? என்னத்தை வைச்சு அனுப்ப? நாயி, வாயைப் பொத்திக்கிட்டு சும்மா கெடையேன்...''

''தூரந்தொலையிலே ஓசிச்சோத்தை துன்னுக்கிட்டு நாதியத்தவன் போல எம் புள்ள படிக்குது. செலவுக்குமா அனுப்பக்கூடாது, துட்டு? நீயெல்லாம்... ஒரு அப்பனா? த்தூ!''

''ஆமடி... எளிய சாதிப்பய புள்ளே படிச்சு, சர்க்கார் நடத்தப் போகுதாக்கும்? படிச்சு, என்னத்தைக் கிழிக்கப் போறான்? வரச் சொல்லு. நாலு பன்னியை பத்திக்கிட்டுத் திரியட்டும்.''

இன்னும் வாயைத் திறக்கிறாள். மல்லுக்கு நிற்பாள். நச்சரிப்பு கேஸ். தப்பித்து விட வேண்டியதுதான்.

துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வெளியேறி விட்டான் சங்காண்டி. அவனும் ஏதோ முணங்கினான், எரிச்சலில்.

''சாராயத் தண்ணிக்கே வழியில்லே... இவ... என்னமோ 'புள்ளை, புள்ளை'ன்னு கெடந்து சாகுதா. அறிவு கெட்ட கழுதை. ஆஸ்டல்லே சோத்தைத் துன்னுட்டு படிக்குற பயலுக்கு, துட்டு எதுக்கு? பெரீய்ய சீமான் மகனாக்கும்?''

'உர்ர், உர்ர்ர்'ரென்று வாலையாட்டிக் கொண்டு திரிகிற பன்றிகளைக் கடந்து வந்தான், சங்காண்டி. மாட்டுத் தோலும் ஜவ்வுகளும் காய்ந்து கொண்டிருக்கிற நூல் கயிற்றுக் கொடிக்குத் தலைகுனிந்து வந்தவனை, முத்தாண்டி வந்து மோதினான். ஓடி வந்திருக்கிறான். 'தஸ்ஸு புஸ்ஸு'யென்று இளைத்தான். நெஞ்சுக்கூட்டில் துடிப்பும், வேர்வை கசிவும்.

''என்னலே... எழவெடுத்த நாயி. என்ன இப்படி வாரே?''

''எழவுதான்.''

''என்னலே சொல்லுதே?''

''பெரிய வீட்டுச் சாமியவுக செத்துட்டாரு.''

''போய்ட்டாரா...? ச்சேய், இன்னைக்கும் சுடுகாட்டு ஜோலிதானா?'' அவனுக்குள் அடர்த்தியான சோர்வும், அயர்ச்சியும். பொண்டாட்டியிடம் எகிறிக்குதித்த கோப உணர்ச்சி, கல்லைக்கண்ட நாயாக வாலைக் காலிடுக்கில் இடுக்கிக் கொண்டு பம்மியது. நெஞ்சுக்குள் ஒரு கனம். பார அழுத்தம். சட்டென்று மாறிப் புரண்ட உணர்வுகளின் தடப்பதிவு.

உள் ஒடுங்கிய கோபக் கொந்தளிப்பு, ஒரு சோர்ந்த பெருமூச்சாக நிறம் மாறி வெளிப்பட்டது.

'பெரிய வீட்டுச் சாமியவுக' ஊரிலேயே பெரிய கை. சம்சாரிச் சாதி பெருத்த ஊர். ஒரே சாதி. மூர்க்கக் குணம். 'ஏலேய்' என்று வயசான கிழவனையும் சொடக்குப் போட்டுக் கூப்பிடுகிற அதிகாரக் குணம் ரொம்ப சகஜம் என்று நினைக்கிற ஊர். ஊருக்கே நாட்டாண்மை, பெரிய வீடு. சமுத்திரமாய் காடு கரைகள், நாலா திசைகளிலும். ஏகப்பட்ட பம்ப்செட்கள். வட்டிக் கொடை வாங்கல். ஏழு தலைமுறைக்கு இருந்து தின்றாலும்... தீராத சம்பாத்தியம். சமுத்திர சம்பாத்தியம்.

அப்பேர்ப்பட்ட சீமான் செத்திருக்கிறார். ஊரே திரண்டு அலைமோதும். போட்டி போட்டுக்கு கொண்டு ஓடியாடி வேலை செய்வார்கள். கொஞ்ச நேரம் தாமதமாகப் போனாலும், வசவு நாறிப் போகும். ஆள் ஆளுக்கு ஏகமாய் எகிறுவார்கள்.

''எளிய ஜாதிப் பயலுகளுக்கு இப்ப இப்ப ரொம்பத் திமிரு. ஊர்க்காரியம் செய்யணும்னா... ஒடம்பு வளைய மாட்டேங்குது.''

சங்காண்டிக்குள் கசப்பலைகள். வேப்பங் கசாயம் குடிக்கிற மாதிரியோர், மனக்குமட்டல். அடிபட்டுச் சோர்ந்த முகம். கிள்ளிப் போட்ட தளிராகத் துவண்ட மனம். முத்தாண்டியை ஒரு மெல்லிய சோகத்துடன் ஏறிட்டான்.

''ஹூம்... சரி வாலே, போவம்'' காலை வெய்யிலே சுள்ளென்று தொட்டது.

டயர் செருப்பு 'லடப் லடப்' பென அடிக்க, ஊர் ஊராய் அலைச்சல். 'பெரிய வீட்டு' உறவுக்காரர்களைத் தேடித் தேடி... வீடுவீடாய்... துட்டி சொல்ல... வந்த வருமானம், ஆறுபடி தவசமும் (தானியம்) 12 ரூபாய்

பணமும். அதை வீட்டில கொடுத்து விட்டு... அவசர அவசரமாய்ப் புறப்பட்டான், சங்காண்டி. 'லொக், லொக்' என்று ஓட்டமாய் மயானக்கரை வந்து சேர்ந்தான்.

முத்தாண்டி விறகுப் பாரத்துடன் டக்கரில் வருவான்.

ஊரின் மாரி மூலையில் சுடுகாடு. ஓடையைத் தாண்டிக் கரையேறினால்... மயானம். கூடாரம் எதுவுமில்லை. வெறும் வெம்பரப்பு. நிழல்தர முடியாத வேலிக்கருவைக் குட்டிகள்.

வெக்கரித்த வெயில். சித்திரை மாசத்து வெயில். காலத்திலும், கோடையிலும் மழையில்லாக் கொடுமை. பூமியே கொதித்துப் போய் அனலைக் கக்குகிறது. பொறுமை மாதாவான தரையே, கால் வைக்கவிடாமல் சுட்டுப் பொசுக்குகிறது.

பொழுதுக் காலைப் பார்த்தான். மணி மூன்றிருக்கும். கன்னக் கதுப்புகளிலும், முதுகுத்தோலும் தகிக்கிறது. தீ வெயிலாயிருக்கே' என்று முணங்கிக் கொண்டான்.

முந்தாநாள் எரிந்த கிழவியின் திரேகச் சாம்பல். பொது, பொது'வென்று கிடக்கிற கடுஞ்சாம்பல். சங்காண்டிக்குள் கற்றைக்கற்றையாய் அந்தக் கிழவியின் நினைவுகள்.

மூன்று ஆண் சிங்கங்களைப் பெற்றவள். புருஷனைப் பறிகொடுத்துவிட்டு வறுமையோடு மல்லுக்கட்டிப் பிள்ளைகளை வளர்த்தவள். எல்லாம் கல்யாணமாகி, மருமகள்களின் முந்தானைகளில். தொலை தூர டவுனில் ஆளுக்கொரு உத்தியோகம். ஆத்தாளை நாதியத்தவளாக்கி விட்டனர்.

அனாதைப் பொணமா செத்துக்கிடந்த கிழவி. ஊர்ச் செலவில் மயானம். விறகுகூடப் பற்றாக்குறை. சாராயம் வாங்கித்தரக்கூட ஆளில்லை. சாமக்காட்டில் ஏதோ பயங்கரச் சத்த அதிர்வில் முழித்தான். ''டப்... டப்... டபீ...ர்'' ரென்ற பயங்கரச் சத்தம்.

சிதையில் பிரேதத்தைக் காணோம். வெறும் தீ. பதறிப் போய்ப் பார்த்தான். சற்றுத்தள்ளி, கரிக்கட்டையாய் பிரேதம் ஆடிக் கொண்டிருந்தது. ஒரு காலை மண்டி போட்டு, தலைகுனிந்து வணங்குகிற நிலையில் கரும்பிரேதம். நெஞ்சுக்கூடு வெந்து எரிகிறபோது, திரேக நரம்புக் கொடிகள் முழுவதும் திரவம் கசிய முறுகி விறைக்கும். விடைத்து நிமிரும். அப்போது... விறகுக்கனம் இல்லாவிட்டால்... பிரேதம் இப்படித் துள்ளிக் குதித்து விடும்.

சிதையின் நெருப்பு வெளிச்சத்தில் படுபயங்கரமாக அந்தப் பிரேதக் கரிக்கட்டை. சங்காண்டிக்குள் நையாண்டிச் சிரிப்பு, மெல்லிசா வெடித்தது. ''இம்புட்டுச் சீரழிஞ்ச பெறகும்... கெழவிக்குச் சாகப் பிடிக்கலியா? வாழ்றதுலே இம்புட்டு வெறியா? கசிந்துருகுகிற மிச்ச உயிர்ப் பலத்துலே துள்ளிக்குதிச்சு வெளியேறிட்டியே...'

பொதுவாக இப்படியான சமயத்தில், பிரேதத்தைக் கவட்டைக் கம்பால் 'நாயறை, பேயறை'யாக அடித்து, நொறுக்கி, அள்ளிச் சிதைக்குள் போட்டு விடுவதுதான் வழக்கம்.

ஆனால்... இதை அப்படி அடிக்க மனசு வரவில்லை. அநியாயமாக ஆயுள் பூராவும் வாழ்க்கையால்

மிதிபட்டவள். 'நாமளும் போட்டு அடிச்சு நொறுக்கவா? பாவமில்லையா?'

முத்தாண்டியையும் எழுப்பி, அதட்டி இரண்டு பேருமாய் கவட்டைக் கம்பால் தூக்கி, சிதையில் போட்டு நிமிர்த்திப் படுக்க வைத்து, நெஞ்சுக் கூட்டில் கருங் கல்லைத் தூக்கி வைத்தான்...

இன்றைக்குப் பெரிய வீட்டுச் சாமியவுக. விறகுத் தட்டுப்பாடு இருக்காது. சீமான் சாவு. இழவிலும் கூட 'ஜேஜே' என்றுதானிருக்கும். ரூபாய் நோட்டுகளைப் போட்டே கூடப் பிரேதத்தை எரிக்கச் சொன்னாலும் சொல்வார்கள். துள்ளாமல் துடிக்காமல் பஸ்பமாகிற மாதிரி 'வசதி' பண்ணித் தருவார்கள். எல்லாம்... செய்வார்கள். விடிய விடிய பாம்பு, பேய் பயமில்லாமல் மயானம் காக்கிற சங்காண்டிக்குச் சம்பளம் தரமட்டும்... நூறு அழிச்சாட்டியம் பண்ணுவார்கள். இன்னைக்காச்சும் சாராயத் தண்ணிக்கு வழி பண்ணுவார்களா...? பார்ப்போம்.

சாம்பலுக்குள் கிடந்த கருங்கல்லைத் தூக்கி வெளியே போட்டான். காலால் எற்றித்தள்ளி ஒதுக்கினான். 'குப், குப்'பென்று எழுகிற சாம்பல் தூசி. வியர்த்துக் கொட்டுகிற உடம்பெல்லாம் வந்து அப்பிக் கொள்கிற மனிதச் சாம்பல். எரியாமல் கிடந்த கால் மூட்டு எலும்புகளைப் பொறுக்கி வெளியே எறிந்தான். திரேக ரோமங்களெல்லாம் அப்பியிருக்கிற கருஞ்சாம்பல்.

பருத்தி மார்க்குச்சிகளை கூட்டிப் பிடித்துக் கொண்டு, தூசி துப்பட்டைகளைப் பெருக்கித் தள்ளினான்.

கொளுத்துகிற வெயில். நிமிர முடியவில்லை. கண்ணிமை முழுவதும் காந்துகிறது. கண்ணே திறக்க முடியவில்லை. எரிக்கிற வெயிலில், மிதக்கிற கானல் அலைகள். முத்தாண்டி இருந்தாலும் வாய்க்குத் துணையாயிருப்பான். மனசின் கசப்புகளை பேசியாச்சும் தீர்க்கலாம்.

சூழ்ந்து நெருக்குகிற சூன்ய உணர்ச்சி. உள்ளுக்குள் முட்டி மோதித் தத்தளிக்கிற தனிமைத் தீ.

டிராக்டர் வருகிற சத்தம்... நிமிர்ந்து பார்த்தான். டிரெய்லர் நிறைய அம்பாரமாய்... விறகு. அதன் மேல், முத்தாண்டி உட்கார்ந்திருக்கிறான்.

வட்டமடித்துத் திரும்பிய டிராக்டரிலிருந்து குதித்தான், முத்தாண்டி. அரைச் சாக்கு மூட்டையைத் தூக்கிப் போட்டான். சளபளவென்று சத்தம். விறகுகளை இறக்கிப் போட்டனர்.

''என்னதுடா... சாக்குலே?''

''தேங்காய்களும், ஆமணக்குமுத்துவும்.''

டிரைவர் பக்கத்தில் போய் தலையைச் சொரிந்தான் சங்காண்டி. முகத்தில் ஒரு குழைவு.

''என்ன சங்கா...'

''வேனாக் கொதிக்குற வெயில்லே கெடந்து வெந்து செத்துக்கிட்டிருக்கேன். என்னமாச்சும் கவனிக்கக் கூடாதா?''

''என்னது? தண்ணியா?''

''உம்... உத்தரவாகட்டும்.''

டிரைவர் உதடுகளில் ஏளனச் சிரிப்பு.

''ஒன்னைப் பத்தித் தெரியாதா? இந்தா... ஒரு பாட்லு''

''ரெண்டு பேருக்குமா?''

''ஆமா. சங்கா, இதை இப்ப அடிச்சுட்டு 'சடபுடா'ன்னு வேலையைப் பாருங்க. ராத்திரிக் காவலுக்கு பிராந்திப் பாட்டில் ஏற்பாடு பண்றோம்.''

''அப்படியா... சாமி''

சங்காண்டிக்குள் குற்றால அருவி. ஜில்லென்று மகிழ்ச்சியின் குளிராட்டம். பிராந்திப் பரவசம். குழந்தை மனசாகக் கும்மாளமிடுகிற மனசு. குதூகலத்தில் நனைந்து பீறிடுகிற பரவச வார்த்தைகள்.

''ஏதோ... ஒங்க புண்ணியம். பெரிய உசுரு. மணக்க மணக்க வாழ்ந்த சாமி. கொடிகட்டி அரசாண்ட தர்மதுரை. அவுக சாவுலே... எங்களுக்கு இந்த ருசியாச்சும் கெடைக்கட்டும்.''

''சங்கா... மண்ணைக் கொத்தி கொழைச்சுவை. செதை பூராவும் பூசி மெழுகணும். ஜோலிகளை நல்லாப் பாருங்க. தீ வைச்ச பெறகு... ஆளுக்கொரு குவார்ட்டர். சர்த்தானே?''

''சந்தோஷம் சாமி... தர்மதுரையைப் பூசி மொழுகி... பத்திரமா சாம்பலாக்கித் தாரேன்.''

டிராக்டர் தடதடத்துப் போனது. ஊருக்குள் மனித சத்தம். பெரும் கூட்டமாய் இரைச்சலிடுகிற சத்தம். டங்கா மேளத்தின் அதிர்வோசைகள். நாதஸ்வர வாசிப்புச் சத்தம். சத்தங்களில் வடிவமாகிற ஊர். இழவுக் கோலாகலம். ராஜ இழவுக் கொண்டாட்டம்.

முத்தாண்டி வேலித் தூர்களைப் புரட்டி சிதையில் வைத்தான். சங்காண்டி விறகுக் குச்சிகளை அடுக்கினான். தேங்காய்களை உடைத்து, சில்லு சில்லாக்கி உள்ளே போட்டான். ஆமணக்கு முத்துக்களையும் பரவலாகத் தூவினான். ரெண்டுமே எண்ணெய்ச் சத்து. தீயை அணையவிடாமல் பார்த்துக் கொள்ளும். ஈரமண்ணால் சிதையை மொழுகிப் பூசி விட்டாலும்... உள்ளேயே தீயை எரிய வைத்து, பிரேதத்தை அஸ்தியாக்கி விடும்.

வேலை வேலையாக இருக்க... சங்காண்டிக்குள் எறும்பு ஊர்கிற மாதிரியான ஒரு நினைவு.

''மணக்க மணக்க வாழ்ந்த சாமி. கொடிகட்டி அரசாண்ட தர்மதுரை...''

பிராந்தி பரவசத்தில் நிதானம் தப்பிப் பேசிவிட்ட வார்த்தை.

சங்காண்டிக்குள் கரிசல்காடு ஞாபகத்தை உழுதது.

ஊருக்குத் தெற்கே உப்பு மூலையில் நாலு குறுக்கம் கரிசல்க்காடு. நற்சதுரமான காடு. நல்லமண் கண்டம். உழுது போட்டால், ஈரல்கறி மாதிரி மினுமினுக்கும். சொல்லி வைத்த மாதிரி விளையும். காணப்பயறு, தட்டைப்பயறு, எள், நாற்றுச் சோளம் எது போட்டாலும், ஒன்றுக்கு நூறாக விளைச்சல் காட்டும்.

தாத்தன் காலத்துச் சொத்து. வம்சத் சொத்து.

பெரிய வீட்டுச் சாமியிடம் ஒரு பிரசவச் செலவுக்காக கைநாட்டு வைத்து, முந்நூறு ரூபாய் வாங்கினான். அந்த ரூபாய்க்காக ஒன்றரை வருஷம் அவர் வீட்டில் பாடுபட்டான். மாடு மாதிரியான பாடு.

அவரும் கடனைக் கேட்கவில்லை. இவனும் ஒன்றரை வருஷச் சம்பளத்தில் கடன் அடைபட்டுப் போயிற்று என்று நினைத்துக் கொண்டான். ஏழெட்டு வருஷமாய்க் கடனைக் கேட்கவேயில்லை.

அதிசயமாய் ஆடிப்பட்ட மழை. கனத்த மழை. ராத்திரி பிடித்த மழை, கோழி கூப்பிடத்தான் ஓய்ந்தது. வாடகை ஏரைக் கூட்டிக் கொண்டு, விதைப் பண்டங்களோடு போய்ப் பார்த்தால்-

நெஞ்சில் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி யிருந்தது.

உழுது விதைத்து விட்டு, பெரிய வீட்டு டிராக்டர் போய்க் கொண்டிருந்தது. குலையே கிடந்து கொதித்தது. அந்தக் கொதிப்போடு 'வேகு, வேகு' என்று வந்தான். சாமியவுகளைக் கடித்துக் குதறிவிட வேண்டும் போல... வெறி.

வீட்டில் இருந்தார். கோபமாய் திமிறிக் கொண்டு வந்த சங்காண்டி.

''என்னலே?''

''ஏம் புஞ்சையிலே உங்க பண்ணையாளுக வெதைச்சிருக்காக?''

''அதுக்கென்ன? அது இப்ப எங்க புஞ்சை.''

''இது என்ன சாமி... அநியாயம்? அடுக்குமா?''

''வாங்குன முந்நூறுக்கு வட்டி போட்டுப்பாரு. ஏழு வருஷ வட்டி.''

''ஒன்றரை வருஷம் பாடுபட்டேனே... சாமி''

''ஏலேய்... ஒனக்கென்ன திமிரா? கும்பா கும்பாவா கஞ்சியைக் குடிச்சுட்டு, தொழுவத்துலே ரெண்டு சாணி சகதி அள்ளுனியே... அந்த ஒத்துழைப்புக்கா சம்பளம் போடச் சொல்லுதே?''

தன் காலடித்தரை உருவுகிறது. ஒரேடியாக அடித்து விட்டார். அவனுக்குள் வியர்த்தது. அடிவயிற்றில் 'பகீர்' என்கிற சூன்யம். மனசில் கலக்கம். உடைகிற குரல். தோல்வி நெருங்குவதை முன்னுணர்ந்த மன அதிர்வு.

''சாமி... எங்க வம்சச் சொத்தே... இந்த மண்ணுதான் சாமி...''

''அதுக்கு நா என்ன செய்ய? உங்க தாத்தன் ஐயாயிரம், பத்தாயிரம் போட்டா, புஞ்சை வாங்குனான்? மூனு மரக்கா தவசத்துக்கு கைமாறுன நெலம்தானே?''

''சாமி... இந்தக் கொடுமையை பூமியே பொறுக்குமா?''

''பொளந்து முழுங்கிட்டுப் போவட்டும். நீ ஒன்றும் எங்களைக் காப்பாத்த வேண்டாம்.''

''ஏழை எளியதுக நெஞ்சு கொதிச்சா... நீங்க நாசமாய்ப் போயிருவீக.''

''ஏலேய்...'' என்று வீடே அதிர்கிறமாதிரி, கத்தினார்.

''நிதானம் தப்பிப் பேசாதே. நீ என்ன சாதி, இது என்ன ஊருன்னு ஞாபகத்துலே வைச்சுப் பேசு. தூண்லே கட்டி வைச்சு, தோலியை உரிச்சுப் போடுவேன், ராஸ்கல். என்ன நெனைச்சுக்கிட்டுருக்கே? படுவா, தெலைச்சுப் போடுவேன்... தெலைச்சு. போடா நாயே.''

சங்காண்டி அரண்டு போனான். அவர் முழித்த முழி. அதிலிருந்த உக்கிரம். முகத்தின் குரூரம். கழுத்துக்குமேல் ஓநாய்த்தலை இருப்பதுபோல ஒரு மருட்சி.

நாட்டாண்மை. ஊரில் மேல்க்கை. சாதியைச் சொல்லி உசுப்பி விட்டால், திரண்டுவரப் போகிற படை பட்டாளம்.

இவனைக் கொன்று பொசுக்கினால் கூட... ஏன் என்று எதிர்த்துக் கேட்க சுடுகுஞ்சு கூடக் கிடையாது. வாயடைத்துப் போய் வெளியேறினான், சங்காண்டி. போக்கிடமின்றி உள்ளுக்குள் முட்டுகிற ரௌத்ரம்.

அதே கரிசல்க்காடு, இப்போது தோட்டமாகி, கிணறு வெட்டி, பம்ப் ஷெட் மோட்டார் மாட்டி, பெரீய்ய கொய்யாத் தோப்பாகிவிட்டது.

அந்தப் புஞ்சையைப் பார்க்கிற போதெல்லாம், இவன் மனசு கிடந்து தகிக்கும். வம்சப் பறிமுதல். ரத்தமே கொதிக்கும். கொதித்து என்ன செய்ய?

''கோயிந்தா... கோயிந்தா... கோயிந்தா''

பொழுது சாய்ந்த அந்தி வெளிச்சத்தில் பூப்பல்லக்கில் பிரேதம் வந்தது. ராஜபிரேதம். ராஜ ஈமச்சடங்கு. சுத்துப் பட்டி பத்து ஊர்ஜனமும் திரண்டு வந்திருந்தது. வெள்ளையும் சொள்ளையுமாய். 'ஜேஜே' என்று வந்திருந்த பெருங்கூட்டம். பெரிய பெரிய பணக்கார மகாராசாக்களெல்லாம் தூய வெள்ளையாய் வந்திருந்தனர்.

சாஸ்திரங்கள் நடந்தன. பிரேதம் சிதையில் பதனமாக வைக்கப்பட்டது, அலுங்காமல். கதர்வேட்டி, கதர்சட்டை

மீசையில்லாமல், மழுங்கச் சிரைத்த கனிந்த முகம். கண்ணியமான முகம்.

எருக்கள் அடுக்கப்பட்டன. நாவிதர் சாஸ்திரங்கள் செய்தார். சங்காண்டி குழைத்து வைத்திருந்த ஈரமண்ணால் சிதையைப் பூசினான். முத்தாண்டியும் பூசினான். துரிதகதி.

சடங்குகளெல்லாம் முடிந்து, சிதைக்குத் தீவைத்து விட்டு, எல்லா ஜனமும் போய்விட்டனர், வெள்ளம் வடிந்துபோன மாதிரி.

சங்காண்டியும், முத்தாண்டியும், சுடுகாடும் மட்டுமே மிஞ்சி நின்றனர். சொன்னபடியே ஆளுக்கொரு குவார்ட்டர் பாட்டில், சப்பட்டையான பாட்டில்.

ஈரமண் பூசிவிட்டதால்... தீச்சுடர் வெளியே தெரியாது. விறகுக்குள் தேங்காயும் ஆமணக்கு முத்தும் எண்ணெயாகக் கசிய, உள்ளேயே எரியும் தீ. சத்தமில்லாமல் சாம்பலாகும் பிரேதம்.

இவர்களுக்கு வேலையே இருக்காது. சும்மாவே காவல் காத்துக்கிடக்க வேண்டியதுதான். அரிக்கேன் லைட்டின் வெளிச்சம். சுற்றிலும் இருட்டு. கனத்த இருட்டு.

லைட் வெளிச்சத்தில் பாட்டிலைப் பார்த்தான், சங்காண்டி.

உறைந்த ரத்த நிறமாய், பாட்டில்த் திரவம். இது இவன் ரத்தம். அப்பன் ரத்தம். தாத்தனின் ரத்தம். வம்ச ரத்தம்.

''தூண்லே கட்டி வைச்சு, தொலியை உரிச்சுப் போடுவேன், ராஸ்கல்...'' கொடிகட்டி அரசாண்ட தர்ம

துரையின் மிரட்டல். ஈரக்குலையை நடுங்க வைத்த மிரட்டல் இன்னும் நெஞ்சுக்குள் அச்சுறுத்துகிற அந்த மிரட்டல் குரல்.

நற்சதுக்கமான கரிசல்க்காடு. தாத்தனின் வியர்வைச் சம்பாத்தியம். அப்பன் ஆத்தாளின் காலடிபட்ட மண். என் பிள்ளைகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டிய வம்சச் சொத்து. பறிபோய்விட்ட தர்மம். தட்டிப் பறித்த அதர்மம். நியாயம் கேட்கப் போன என் தொலியை உரிக்கப் போவதாய் மிரட்டிய அநியாயத் துரியோதனன்.

அவன் மனசு கிடந்து கொதித்தது. மதியம் குடித்த கஞ்சி. வெறும் வயிற்றில் தீப்பசி. சாயங்காலம் குடித்த சாராயம். அதன் காந்தல்.

பிரேதம் எரிகிற சிதைத்திரடையே வெறிக்கிற சங்காண்டி. அவனுக்குள் கொதி உலையாய் தளதளக்கிற நினைவுகள். உஷ்ண நினைவுகள்.

குவார்ட்டரையும் காலி பண்ணினான். அதன் ருசி. சாராயத்திலிருக்கிற காந்தலில்லாத மென்மைச் சுவை. ஒரு பூவை விழுங்குகிற சுகம்.

அவனுக்குள் ஜ்வாலைவிடுகிற நினைவுகள். ஒரே திசையில் உக்கிரமாகிற நினைவுகள். ஒருப்போக்காய்ப் பாய்கிற போர்க்குணத் தீவிரம்.

துரியோதனன்... இப்ப இவன் ராஜ்யத்தில். இங்க இவன்தான் ராஜா. நீதிபதி. இவன் செய்வதுதான் சட்டம்.

சிதையை உடைச்சு... பிரேதத்தை எடுத்து... மாட்டுத் தொலியை உரிக்கிற மாதிரி, இவன் தொலியையும் உரிச்சு... தனித்தனியா வேகவைச்சா... என்ன!

அவனுக்குள் முளைவிடுகிற குரூரம். முளைத்த கணத்தில் விருட்சமாகிற உணர்ச்சி உன்மத்தம். போதையில் அவன், அவனாகிறான்.

ஊர்... ஜாதி... ஊர்க்கட்டுமானம்... ஜாதியாதிக்கம்... அடிமைப்பட்ட நிலை எல்லாம் மறந்த சுயநிலை. அவன், அவனாகவே...

கவுட்டைக் கம்பைத் தூக்கினான். ஓங்கிவிட்டான்.

முத்தாண்டி வந்து சிக்கென்று பிடித்துக்கொண்டான்.

''என்ன செய்யப் போறே?''

''இதை உடைக்கப் போறேன்.''

''எதுக்கு?''

''தொலியை உரிக்கணும்.''

''புத்தி கெட்டுப் போச்சா... ஒனக்கு?''

அவன் கவட்டைக் கம்பைப் பிடுங்கிக் கொண்ட முத்தாண்டி.

கோபமும், கொந்தளிப்புமாய் அவனிடம் சீறிப் பாய்ந்தான், சங்காண்டி. எகிறிக் குதித்தான்.

''இது யாரு தெரியுமாடா? தரும தொரையில்லேடா, பாவி. மகா பாவி. கேடுகெட்ட நாய். எம் புஞ்சையை நக்கித்தின்ன நாயி...''

போக்கிடமற்று உள்ளேயே முட்டி மோதிக் கொண்டிருந்த கோப உணர்ச்சியெல்லாம் வசவுகளும் சாபங்களுமாய். முடிவேயில்லாத வசவுகள். இன்னும் கெட்ட வார்த்தைகள். தூஷண வசவுகள்.

உடைந்த ரிக்கார்டாய்... போதையில் சொன்னதையே சொல்லிக்கொண்டு... கொதி உணர்ச்சி மாறாமல்...

வசவுமேல் வசவுகளாய்... நாற வசவுகளாய், தூஷண வசவுகளாய்.

ரொம்ப நேரம் கழித்துத்தான்... உறங்கினான்.

விடிந்து நேரமாகிவிட்டது. ஏழு மணியிருக்கும். மஞ்சள் வெயில் முகத்தில் உரசியது. முழித்துக் கொண்டனர். அரிக்கேன் விளக்கு எண்ணெய் வற்றி அணைந்திருந்தது. சிம்னியெல்லாம் புகை இருட்டு.

சிதை நன்கு எரிந்து சாம்பலாகிவிட்டது, கருப்பு கருப்பாய் உலர்ந்து வெடித்துக் கிடந்த மண் தகடுகள். புறப்பட்டனர். ஊரை நெருங்கும்போது-

''சாமியவுக மூத்த மகன் ஒன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாக.''

''எங்க இருக்காக? வீட்லேயா?''

''இல்லே. தொழுவத்துலே?''

இவனுக்குள் திக்கென்றது. முத்தாண்டியை வெல வெலத்துப் போய் பார்த்தான். அவன் முகத்திலும் மருட்சி. கிலி. திகைப்பு.

மயானத்திற்குப் பக்கத்தில் கிடந்த கிடையும், கிடைகாவல்காரர் விடிய விடிய விழித்திருந்ததும், அவருக்கு எல்லாச் சத்தமும் கேட்டது என்பதுவும் இவர்கள் அறியாத விஷயம்.

விடிவதற்கு முன்பே மயான சமாச்சாரம், பெரிய வீடு போய்ச் சேர்ந்துவிட்டது என்பதுவும் இவர்களுக்குச் சுத்தமாய் தெரியாது.

குழப்பமும், கிலியுமாய் அவனுக்குள் பிசைவு. நிஜ உலகத்தின் குரூரமுகம். நிஜத்தை, நிஜ உணர்ச்சியை, நிர்த்தாட்சண்யமாக நசுக்குகிற உலகம்.

அவன் கால்கள் பின்னித் துவண்டன, மனசைப் போல.

தொழுவத்துக்குள் போன சங்காண்டி, அரைமணி நேரமாயிற்று. முத்தாண்டி பதற்றமும் பதைப்புமாய்க் காத்திருந்தான்.

சங்காண்டி வந்தான், கிழிந்த கந்தல்த் துணியாக. உடம்பெல்லாம் ரத்தக் கீறல்கள். பெல்ட்டின் தடங்கள், அகல அகல தடிப்புகள்.

சாகப் போகிறவனைப் போல் துவண்டு கிடந்தான்.

பதைப்போடு கேட்டான் முத்தாண்டி.

''என்னண்ணே... இந்தக் கொடுமை?''

''எளியவங்க அடிபட்டாலும் கோபப்படலாமா? குமுறிப் புலம்பலாமா. அதுக்குத்தான்... இது.''

அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். சங்காண்டியால் நடக்கக்கூட முடியவில்லை. முத்தாண்டிக்கு அழுகை அழுகையாய் வந்தது.

''இது... சாமிக்கே பொறுக்காது.''

''பூமிக்குப் பொறுக்குதே... என்ன செய்ய?''

கசந்த குரல். விரக்தியின் விளிம்பில் உடைந்து கசியும் குரல். தலைமுறை தலைமுறையான நூற்றாண்டு காலக் கசப்புக் குரல்.

மெல்ல மெல்ல நடந்தான், சங்காண்டி. கைத்தாங்கலாய் பிடித்துத் தாங்கிக் கொண்டு முத்தாண்டி. சங்காண்டியின் உடல் நடுக்கம்.

''நம்ம தலைமுறையோட மயானக்கரை வேலையைத் தலைமொழுகிறணும்டா. என்னத்துக்கு இந்த அடிமைச் சோலி?''

சங்காண்டி நைந்த குரலில் கசிந்தான்.

ஆனால்... மனசுக்குள் இறுகிப் போன வன்ம வைராக்கியமாய் ஒரு நினைவு. 'படிக்குற புள்ளைக்கு மொதல்லே ரூபா அனுப்பி வைக்கணும்!'

மே 1996, தமிழன் எக்ஸ்பிரஸ்

புது ஐயா

வீட்டுக்குப் போகவே மனசில்லை பாண்டிக்கு. 'எப்படிப் போக' என்று தயக்கம்... தடுமாற்றம். 'புது ஐயா இருப்பானே' என்கிற கசப்பு. எந்தக் காட்டுப் பயலோ... அவன் மூஞ்சியும் மொகரையும். நினைத்தாலே வேப்பங்காயாகக் கசக்குது.

பொழுதடைந்து விட்டது. மேகத்து வெளிச்சம் மட்டும் மிச்சமாக இருக்கிறது. தவிட்டு நிறம். விளையாட்டு முடிந்து போகுமோ என்று பயமாக இருக்கிறது. தெருப்புழுதியில் தாறுமாறாய் ஓடிப் பிடித்து விளையாடுகிற பொடுசுகளின் முகம் மங்குகிறது.

பாண்டிக்கு விளையாட விளையாட ஆசையா யிருக்கிறது. ஓட ஓட விளையாட்டு. ஓடி ஓடி இளைக்கிற டவுசர் பையன்கள். மனசு கிடந்து கூத்தாடுகிறது. 'கேது கேது' என்று இளைத்தாலும்... கும்மாளக் குதூகலிப்பில் திளைக்கிற மனசு. 'இன்னும் இன்னும்' என்று மனசு ஏங்கித் தவிக்கிறது. தெருப்புழுதியின் மென்மைக் கதகதப்பு. தாய் மடியைவிடச் சுகமாய்... பரவசமாய்... இதுவே உலகமாய்... விட்டுச் செல்ல மனசே வரமாட்டேன் என்கிறது.

'எழவெடுத்துப் போற சனியனே, இம்புட்டு நேரமா எங்கே போய்த் தொலைஞ்சே? வாய்லே அள்ளிப் போடுறதுக்கும் ஒன்னைத் தேடணுமோ?'' என்று அம்மா இழுத்துப் போட்டுச் சாத்துவாளே என்ற பயம், எறும்புக் கடியாகப் பையன்கள் மனசுக்குள். வீட்டுக்குப் போயாகணுமே என்கிற சலிப்பு. வேறு வழி இல்லை பையன்களுக்கு.

''அவரவரு வூட்டுக்கு அவரைக் கஞ்சி குடிக்கப் போகலாம்'' என்ற ராகப் பாட்டு. கோரஸ் கோரஸாக ராக இழுப்புகள். விளையாட்டுக்கு 'ஜன கண மன' போட்டுவிட்டு... சிட்டாய்ப் பறக்கிற சிறுவர்கள். ஓடுகிற வேகக்காற்றில் உப்புகிற முதுகுச் சட்டை. அந்தப் புடைப்புச் சந்தோஷத்துக்காகவே இன்னும் வேகமாய் ஓட்டம்.

ஓடுகிற வேகத்திலும் விளையாட்டு. காராக நினைத்துக் கொள்கிற கற்பனை. வாயிலிருந்து லயம் தவறாத சப்த சீறல். ''டர்ர்ர்... டர்ர்ர்ரூஊ... ஊ...''

செட்செட்டாய் பறந்து போய்விட்ட சிட்டுக் குருவிகள். ஒற்றைக் குருவியாக நிற்கிற பாண்டி.

இவனுக்கு இருக்கிற கூடு சரியில்லை. கூட்டுக்குள் ஒரு வேற்றுக் குருவி. 'ஐயா' என்று உரிமையை எடுத்துக் கொண்டு, அழிச்சாட்டியம் பண்ணுகிற அந்நியக் குருவி. அம்மாக் குருவியை நினைத்தால் அழுகை அழுகையாக வருகிறது பாண்டிக்கு.

எம்புட்டு நேரம் தெருவில் நிற்க? சப்பென்று அறைகிற தனிமை உணர்ச்சி. வந்து சூழ்ந்துகொண்ட

வெறுமையின் உறுத்தல். நாதியற்றுப் போய்விட்டோமே என்கிற சோகப்பாரம். அதன் அழுத்தம்.

பாண்டி தெருப்புழுதியை வெறித்தான். தெருவிளக்கு வெளிச்சத்தில் நிறம் மாறித் தெரிகிற புழுதி. நொறுங்கிச் சிதறிக்கிடக்கிற சருகுகள். ஓடிப்பிடித்து விளையாடிய பிஞ்சுத் தடங்கள்.

வீசுகிற ஊளைகாற்று... கூதலடிக்கிறது.

இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, இடுப்பு வேட்டியை உடம்பில் போர்த்திக் கொண்டு ஒரு பெரிசு.

''என்னலே பாண்டி, ஒத்தையிலே நிக்கே?''

''சும்மாதா...''

''வீட்டைப் பாத்துப் போடா. ஒங்க ஆத்தாக்காரி தேடியலையப் போறா... போ...''

கண்டித்து விட்டுக் கடந்து போகிற பெரிசு. போகிற போக்கில் மட்டப் பொடியை வாயில் இழுவிக்கொண்டு 'வ்ப்பூ...'' என்று ஊதிக் கொள்கிற தாத்தா.

அடிமனசில் ரணம். நிர்ப்பந்தமாய் வீட்டை நோக்கி நகர்கிற பாண்டி. மனசில்லாத மனசின் நடை... தயக்கமும் சோர்வுமாகப் பின்னிக் கொள்கிற பிஞ்சுக் கால்கள்.

புது ஐயா வீட்டிலிருப்பான். அவன் இவனைப் பார்த்ததும் கொஞ்சுவான். ''ஏலேய் பாண்டி... ஏலேய் பாண்டி'' என்று குழைவான். இவனுக்கு அவனைக் கண்டாலே பற்றிக் கொண்டு வரும். ''இந்தாடா... கடையில் ஏதாச்சும் வாங்கித் தின்னுக்கோ'' என்று கால்ரூபாயை நீட்டுவான்.

பாண்டி வாங்கவே மாட்டான். ''எனக்கு வேண்டாம்'' என்று வெடுக்கென்று சொல்லிவிட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொள்வான்.

அம்மாவுக்கும் இப்ப இப்ப அறிவே இல்லாமப் போச்சு. வெக்க மானத்தை உதுத்துட்டா. 'நெறையக் குளிச்சா கூதல் இல்லே'னு துணிஞ்சிட்டா.

எந்தக் காட்டுப்பயலோ அவன். ''வாய்யா... சாப்புடுதீயா?''னு அவனைக் கூப்புட்டு வெச்சு சோறு போடுதா. அவன் திங்குற அழகை, பக்கத்துலே உக்காந்து ரசிக்கா... புதுப்பொண்ணு போல சிரிப்பு வேற. வெக்கக் கேடு!

பாண்டிக்கு எரிச்சல் எரிச்சலாய் வருது.

தெருவை அடைத்துக் கொண்டு நெருக்கியடித்து நகர்கிற செம்மறியாடுகள்... புழுதி கிளம்புகிறது. தூசிப் புகையாய் எழுந்து, தெருவிளக்கு வெளிச்சத்தில் வெள்ளைப் படுதாவாக நெளிகிறது.

ஆடுகள் கடந்து போன பிறகும் ஒதுங்கியே நிற்கிற பாண்டி. கிராமத்து ராத்திரியின் மழலைப் பருவம். எருமைகளும் வெள்ளாடுகளும் மனிதர்களுமாய்த் தெருவில்.

வீட்டுக்கு வீடு சத்தம். வாசல் அளவுக்கு வெட்டியெடுத்த வெளிச்சத் துண்டமாய் முற்றத்தில். சாப்பாடு நடக்கிறது. பிள்ளைகளை அதட்டுகிற அம்மாக்கள். போதைவெறியில் தள்ளாடித் தடுமாறி, 'காச் மூச்' சென்று சவடால் பண்ணுகிற ஆண்குரல்கள்.

''அட... நீ வேற இச்சிலாத்தி! ஆட்டம் போட்டுப் போதையைக் காட்டு தீயாக்கும்? வாயைப் பொத்திக்கிட்டு சும்ம கிட'' என்று பயமில்லாத... அலட்சியமாய் அதட்டுகிற பெண்குரல்கள்.

தெருப்புழுதியைப் பிஞ்சுப் பாதங்கள் எற்றியெறிய... மெதுநடையாய் நடக்கும் பாண்டி.

அவனுக்குள்...

அவனது ஐயா. வயசு நாற்பது இருக்கும். காதோரம் ஒன்று ரெண்டு நரை. அழுக்கு வேட்டியும் அழுக்குத் துண்டுமாய் ஐயா. ரத்தச் சிவப்பாய் கண்கள். எந்நேரமும் போதையில்தான். கிட்ட வந்தாலே... அழுக்கு நாற்றமும், சாராய நெடியும் 'குப்... குப்...'பென்று வீச்சமெடுக்கும். கறுத்துச் சொரசொரத்த ஒடம்பு. விறகு வெட்டி வெட்டிக் கை காய்த்து மரத்துப் போயிருக்கும்.

அப்பனுக்குரிய ஆசையோட பாசத்தோட ஒருநாளும் சிரித்ததுமில்லே. கனிந்த பேச்சு பேசியதுமில்லே. பாண்டி மொகம் பார்த்தாலே, அவன் மொகம் ஏழு கோணலா கோணிக்கொண்டு போகும். வெறுப்பும் அசூயையுமாய் சீறுவான்.

கண்ணில் காணவிடமாட்டான். சும்மா நின்றால் கூடச் சுள்ளென்று அடிப்பான். ''என்னலே, வெறகுக் கட்டையா நிக்கே? ஓடுறா... அங்குட்டு'' என்று துரத்துவான்.

''இந்தாடா காசுவா. கடையிலே ஏதாச்சும் தீம்பண்டம் வாங்கிக்கோ'' என்று ஒருநாள்கூட நீட்டியது

மில்லை; இவனும் கையேந்தி வாங்கியதுமில்லை. இவனைப் பார்த்தாலே தீயாய்ச் சீறி விழுவான்.

''எவனுக்கோ பொறந்த ஈனப்பய. ஏந்தலையிலே ஏம்புள்ளைன்னு... த்தூ'' என்று அடிக்கடி கசந்தகுரலில் காறித் துப்புவான்.

பாண்டிக்கு அந்த வார்த்தையின் அர்த்தம் புரியாது. ஆனால், ஐயா முகத்தில் நெளியும் அசூயைச் சுருக்கங்கள் தெரியும். மனசுக்குள் இனம் புரியாத ஒன்று. இடறலாய் தட்டுப்படும்.

ஒரு நாள்-

நாலாப்பு வாத்தியார் பள்ளிக்கூடத்தில் அதட்டலாய்க் கேட்டார். அவர் கத்திய கத்தலில் கதிகலங்கிப் போனான் பாண்டி.

''எவண்டா... பாண்டியராசுங்குறது?''

''என்ன சார்?'' என்று நடுங்கிப்போய் எழுந்து நின்றான். மழையில் நனைந்த கோழிக்குஞ்சின் நடுக்கம்.

''நீதான்... பாண்டியராசா?''

''ஆமா... சார்'

அவனது அரைகுயர் நோட்டு, அவரது கையில், ''ஏண்டா... பேருக்கு முன்னாடி இன்ஷியல் போடவே மாட்டேங்குறீயே... ஏம்லே?''

''சும்மாதா... சார்...''

''என்ன சும்மா... அப்பன் இல்லாம... ஆகாசத்துலேயிருந்தா குதிச்சிட்டே? இனிமே எழுதறப்ப பேருக்கு முன்னாடி இன்ஷியல் போட்டு எழுது... ம்?''

''ஆட்டும் சார்...''

தலையையாட்டுவான். ஆனாலும் இன்ஷியல் போட மனசே வராது. அப்பனாயில்லாத ஒரு ஜென்மத்தை அப்பன் என்று எப்படி ஒப்புக் கொள்ள?

வாத்தியாருக்குப் பயந்து இன்ஷியல் போட அரை மனசாய் முயன்றால், அப்போது பார்த்துத்தான், பேனா சண்டித்தனம் பண்ணும். 'விட்டு விட்டு' எழுதும்.

ஐயாவை நினைத்தாலே மனசு கிடந்து நடுங்கும்.

அம்மாவையும் இப்படித்தான். ஒரு நிமிஷம்கூடச் சிரிக்கவிட்டதேயில்லை. அம்மா சிரிச்சு பாண்டி பாத்ததேயில்லை. அறுத்துப் போட்ட கீரைத்தண்டா அம்மா வாடிப் போய்க் கிடப்பாள். அருள் கெட்ட முகம். எந் நேரமும் அழுகையும் புலம்பலும்தான். காய்ந்த முடிக்கற்றை ரெண்டு பக்கமும் தொங்கும். உசுரில்லாத கண்கள். ஒளியில்லாத மொகம். கிழிஞ்சு நைஞ்ச சித்திரமாய்...

ஐயா, அம்மாவை அடிக்கும்... கணக்கு வழக்கு இல்லாமல். காய்ஞ்ச தலை முடியைக் கொத்தா பத்திக் கிட்டு... ஒரு சுண்டு இழுத்துப் போட்டு மிதிக்கிற கொடுமை. நாளெல்லாம் பார்த்த நரகக் கொடுமை. வாய்க்கு வாய் வசவுகள்தான். நாற வசவு. வார்த்தைக்கு வார்த்தை காறித்துப்புவான்.

பாண்டிக்கு அழுது அழுது அலுத்துப் போச்சு. பதறிப் பதறி மனசே மரத்துப் போச்சு.

இம்புட்டு நடந்தாலும் அம்மா ''அடப்பாவி மனுசா... இப்புடிப் போட்டு கொல்லுதீயே...'' னு அழத்தான் செய்வா. கதறிப் பொலம்பத்தான் செய்வா.

அம்மா கோபப்படவே மாட்டா. ஆனா, பாண்டிக்கு அம்மா மேலே கோபம் கோபமா வரும்.

அம்மா எதுக்கு இம்புட்டுப் பொறுத்துப் பொறுத்துப் போறா? சூடு சொரணை அத்துப் போச்சா? ''போடா நாயே''ன்னு விளக்குமாறால் அடித்தால் என்ன? ஏன் அடிக்க மாட்டேங்குறா? என்னத்துக்கு? எதுக்காக?

குடிகார நாயாயிருந்தாலும் புருஷன்னு மதிக்கணும் குறதுக்காகவா? என்னத்துக்கு மதிக்கணும்? வாலைச் சுழட்டிக்கிட்டு காலைச்சுத்துற நாய்க்கு வெறி புடிச்சுட்டா... அடிச்சுக் கொல்லுறதில்லையா?

இந்த வெறி நாயை மட்டும் அம்மா இப்புடி அதிகாரத்தோட உரிமையோட எதுக்கு அலைய விட்டுருக்கா? கடிபட்டுக் கடிபட்டு ரத்தத்தையும் கண்ணீரையும் வடிச்சிக்கிட்டிருக்கா? ச்சேய்!

ஐயா பொண்ணு கேட்கிற காலத்துலே, அம்மா சம்மதிக்கலியாம். 'மாட்டேன்'னாளாம். பெரியாள்க தலையிட்டுப் பேசி, அம்மாவுக்குப் புத்திமதி சொல்லி... கல்யாணத்தை 'மூய்ச்சி' வெச்சாகளாம்.

அதுவே ஐயா மனசுக்குள்ளே வன்மம்... வெறி... தாலி கட்டுன நாளிலிருந்தே ஐயாவுக்கு ஆத்திரம். நாளாக நாளாக அதுவே ஐயாவுக்குச் சுபாவமாயிருச்சு.

''ஒன்னோட மூஞ்சி மொகரைக்கு நா எளப்ப மாயிட்டேனாக்கும்? நீ பெரீய்ய ரதியா? பழம் தின்னு, பால்லே கைகழுவுற சீமாட்டியா? எச்சிக்கலை நாயே எவனையாச்சும் மனசுலே நெனைச்சிருந்தியா? இல்லே... எவன் கூடயாச்சும் தொடுப்பு வெச்சிருந்தியா?'' என்று

நாக்கில் நரம்பில்லாமல், கத்தி வீச்சாகக் கேள்வி கேட்பானாம். அம்மாவைத் துன்பப்படுத்தி, துயரப்படுத்தி ரசிப்பானாம். அதுவே அவனுக்கொரு சந்தோஷம். ஆம்பளைங்குற வெற்றிக்கொடியை நட்டிவிட்ட மகிழ்ச்சி. குரூர மகிழ்ச்சி.

தலைப்பிள்ளையே பாண்டிதான். அதுவும் கல்யாணமான பதினொராவது மாதத்திலேயே அவசரமாய்ப் பிறந்து விட்டான். அம்புட்டுத்தான்.

அவனது வன்மத்துக்கு அவனளவில் நியாயம் தோன்றி விட்டது. 'எவனுக்கோ பொறந்த ஈனப்பய' என்கிற ஆத்திரப் பாட்டு. குரூரக் கூத்தாட்டம். ஓநாயின் ஊளைப்பாட்டு. பாட்டுக்கள்...

அன்றைக்கு-

பாண்டிக்குக் காய்ச்சல். வகுப்பிலேயே வாந்தியெடுத்து விட்டான். நாலாப்பு வாத்தியார் அவனை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார். கூலிவேலைக்குப் போயிருந்த அம்மா வரும் வரைக்கும் வாசலில் கிறங்கிப் போய்க் கிடந்தான்.

வந்து பார்த்த அம்மாவுக்குக் குலை பதறியது. தலையில் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். சாமியைச் சபித்துக் கொண்டே கசாயம் போட்டுக் கொடுத்தாள்... 'பத்து' அரைத்துப் போட்டாள்.

''எம்புள்ளைக்கா... இந்தக் கதி வரணும்? அடக் கூத்துவனே, தாயத்த புள்ளே மாதிரி வாசப் படியிலே கெடந்துருக்கானே'' என்று புலம்பிப் புலம்பி மருகினாள்.

காய்ச்சல் விடவில்லை பாண்டிக்கு. மண்டைக் குத்து வேறு. நெற்றிப் பொட்டில் கோழி கொத்துகிற மாதிரி வலி. ரணவேதனை. ஒறக்கம் வரவில்லை. கெட்ட கெட்ட கனாக்கள் வந்தன. அம்மிக்குழவியைத் தூக்கி ஐயா மண்டையில் போடுகிற மாதிரியான கனா. உடைந்த முட்டைக்கூடாக... ஐயா முகம் சப்பளிஞ்சு போன மாதிரி பயங்கரக் கனா.

ஐயா ராத்திரி, நேரம் கெட்ட நேரத்தில்... வழக்கத்தைவிடக் கூடுதலான போதையில் வந்தார். நிலைகொள்ள முடியாத போதை. நிற்கமாட்டாமல் தடுமாற வைக்கிற போதை. அத்துடன் உன்மத்தம் வேறு.

'சாப்புடுதீயா?'னு கேட்ட அம்மாவின் முந்திச் சேலையை உருவிய ஐயா. 'புள்ளை இப்படிக் கண்ணு முழியாத காய்ச்சல்ல கெடக்குதே' என்கிற குலைக் கொதிப்பிலிருந்த அம்மா.

''ஏய்... என்ன செய்தே?''

''வாடி, தாலி கட்ன புருஷன் தானே? வந்து படு...''

''புள்ளை முழிச்சுக்கிடக்கு துய்யா...''

பதறிப் பதைக்கிற குரலில் அம்மா. முந்திச் சேலையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, விலகுகிற யத்தனிப்பில் அவள்.

''அவரு முழிச்சுக் கெடந்தா... நா ஒறங்கணுமோ? அவன் கிடக்கட்டும்... நீ வாடி...''

''பாண்டி பாவம்யா. காய்ச்சல்லே அணத்திக் கிட்டுருக்கான்'' கருணையை எதிர்பார்க்கிற பிச்சைக்குரல்.

மனித மனசை அதிர வைக்கக்கூடிய அவலக் குரல். சோகம் அடர்ந்த ஹீனக்குரல்.

''காய்ச்சலா? அவனுக்கா? நல்லவேளை, செத்துத் தொலையட்டும். சனியனைத் தலைமுழுகிறலாம்''

அப்பத்தான்-

அம்மா, அம்மாவானாள். கொதித்துப் போனாள். காலம் பூராவும் தேக்கி வைத்திருந்த வெக்கையையெல்லாம் கூட்டிச் சேர்த்து... கற்றைத் தீயாகச் சீறினாள். பாச ஈரம், கோபாக்கினியாய் வெடித்தது!

பத்ரகாளியாகிப் போன அம்மா... ஓடிப்போய் அடுப்பில் கிடந்த கொள்ளிக் கட்டையைத் தூக்கி, ஐயா முகத்துக்கு நேராக நீட்டி - தெருவே அதிர்கிற மாதிரி பேய்க் கத்தலாய்க் கத்தினாள்.

''போடா வெளியே... மிருகமே!''

தெரு கூடிவிட்டது.

மறுநாளே, ஊர்க்கூட்டத்தைக் கூட்டினாள் அம்மா. ''இவனோட இனி நா வாழவே மாட்டேன். பட்டதெல்லாம் போதும். என்னை அத்துவிட்டுருங்க'' என்று ஒற்றைக்காலில் நின்றாள். பெரியவர்கள் சொன்ன வார்த்தைகள் எதற்கும் செவிசாய்க்க மறுத்து விட்டாள்.

ஐயா போட்டிருந்த பரிசப்பணம் 250 ரூபாய். அம்மா 500 ரூபாயைப் பஞ்சாயத்தில் கட்டினாள். சாதி வழமைப் படி, ஊர்ப்பெரியவர்கள் அவர்களது கல்யாண உறவை 'தீர்த்து' விட்டார்கள்.

அதற்குப் பிறகுதான் அம்மா ஒரு புது மனுஷியாக மலர்ந்தாள். அம்மா முகத்தில் ஒரு உயிர்க்களையே வந்தது. கண்ணில் ஒரு மின்னல் தெறித்தது. பாண்டிக்கு அம்மாவைப் பார்க்கப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது. விட்டு விடுதலையான சிட்டுக்குருவியாய் அம்மா சுற்றிச் சுற்றி வந்தாள். நாலு வயசு குறைந்த மாதிரி துள்ளித் துள்ளி வந்தாள். கண்ணில் ஒரு உயிரொளி சுடர் விட்டது.

பாண்டிக்கு றெக்கை முளைத்த மாதிரி இருந்தது. 'ஜிவ்வ்'வென்று ஆகாசத்தில் பறக்கிற பரவசம்.

அந்தப் பரவசம் ஆறு மாதத்துக்கு மேல் நீடிக்க வில்லை.

விறகு வெட்டுகிற இடத்துக்கு முள் நறுக்குகிற கூலி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள் அம்மா!

ஒரு நாள்-

அம்மா... நல்ல புதுச்சேலை கட்டினாள். பூ வைத்து அலங்கரித்துக் கொண்டாள். பார்க்க ரொம்ப அழகாக இருந்தாள். கண்ணுக்குக் குளிர்ச்சியாய்... லட்சணமாய்... உயிர் வெளிச்சமாய்... நிறைவு செய்கிற பந்தத்தில் பிணைந்து கொள்ளப் போகிற வேட்கையாய்...

வெறும் பீடத்தில், வெயிலில் உட்கார்ந்திருந்த அருவாச்சாமியின் முன்னால்... நாலைந்து பெரியவர்கள், அம்மா. இந்தப் புது ஐயா, அம்மா கழுத்தில் ஒரு மஞ்சக் கயிறைக் கட்ட... சுற்றியிருந்த ஏழெட்டுப் பெண்கள்... குலவையிட்டனர், மூணு தடவை.

பாண்டிக்கு ஒண்ணும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரியிருந்தது. பழைய சாபத்திலிருந்து விடுபட்டு, புதிய மன உறவில் கரைந்த அம்மாவின் மகிழ்ச்சியைக்கூட இவனால் ரசிக்க முடியவில்லை.

எங்கிருந்தோ வந்து முளைத்த இந்தப் புது மனிதன். வீட்டுக்குள் உரிமையோடு உலவுகிறவன். இவனிடம் கொஞ்சுகிற நடிப்புக்காரன்!

அம்மாவின் தோளில் ரொம்ப சகஜமாகக் கை வைக்கிற அத்துமீறல். கன்னத்தைக் கிள்ளி, நாசி நுனியை நிமுண்டுகிற திமிர். அம்மாவும் செல்லச் சிணுங்கலாய்ச் சிணுங்கி... புதுப் பொண்ணாக நெளிகிற குழைவு.

பாண்டிக்கு இதைத் தாங்கவே முடியவில்லை. சகித்துக் கொள்ளவும் முடியவில்லை. அம்மாவிடம் சொல்லலாமா? எப்படிச் சொல்ல? ''நீ நிம்மதியா சந்தோஷமாயிருக்குறது எனக்குப் பிடிக்கலே''ன்னு சொல்லவா? அது பாவமில்லையா?

பாண்டியின் பூ மனசுக்கு அதுவும் முடியவில்லை. என்ன செய்ய? இந்தப் புது ஐயாவை எப்படிச் சகிக்க? தனது அம்மாவை வேறு எவனோ பறித்துக் கொண்டிருப்பதை எப்படிப் பொறுக்க?

பாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டுக்குப் போகவே முடியவில்லை. பிஞ்சுக்கால்களில் இரும்புக் குண்டு போட்ட மாதிரியிருந்தது.

தெருவிளக்கு வெளிச்சத்தின் எல்லை முடிகிற இடத்தில், ஒரு சந்து. கண்ணைப் பொய்யாக்குகிற கனத்த இருட்டு. பழகிய தடத்தில் பாதங்கள் நகர-

'தக், தக், தக்'கென்று யாரோ நடந்து வருகிற அரவம். அதிர்வும் தவிப்புமாய் அலைமோதுகிற நடையின் உக்கிரம்.

'அம்மாவா...?'

பாண்டிக்குள் ஒரு சின்னச் சலனச் சந்தேகம்.

''யா... ரு...?''

''என்னம்மா?''

''ஏ ராசா... பாண்டி... எங்கடா போயிருந்தே...?''

தேடிய புதையலைப் பார்த்துவிட்ட பரவசக் கதறலாய் அம்மா. தவித்த மனசின் ஆறுதலாய்... உணர்ச்சித் தத்தளிப்பு.

''வெளையாடப் போயிருந்தேம்மா...''

''ஒன்னைக் காணாம ஊரெல்லாம் தேடித் திரிஞ்சேனடா... ஏங்கண்ணு... ஏஞ்செல்லம்... சாப்ட வேண்டாமா?''

சாப்பிட்டான். சாப்பிடுவதையே அழகு பார்த்தாள் அம்மா. கொஞ்ச நேரமாயிற்று. எங்கோ மயில் கத்துகிற சத்தம்!

''படுப்பமா? கதவைப் பூட்டுடா...''

கதவருகில் போய்... சில கணம் தயங்கினான்.

''பூட்டுப்பா...''

''அந்த... ஐயா?''

'அந்த'வில் துல்லியமாய் நின்ற அந்நியம். அம்மா சிரித்தாள். ''அது உள்ளே படுக்கமாட்டேன்னு சொல்லி யிருச்சு. இன்னிக்கு மட்டும்...''

''ஏம்மா?''

''வெறகு வெட்டுன அலுப்பு. கொஞ்சம் குடிச்சிருக்கு. அதான்... திண்ணையிலே படுத்துக்கிடு தேன்னு சொல்லி படுத்து ஒறங்கிடுச்சு...''

அவனுக்குள் ஏதோ ஒரு கதவு திறந்த மாதிரி... 'குப்'பென்று கற்றை வெளிச்சம் வந்து நுழைந்த மாதிரி... புழுக்க நெடியையெல்லாம் அடித்துச் செல்லும் காற்று புகுந்து பரவிய மாதிரி...

வெளித்திண்ணையை எட்டிப் பார்த்தான். மங்கலான வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தான். ஓர் ஆள் குண்டக்க, மண்டக்கப் படுத்திருக்கிற இருட்டு வடிவம்.

சாராய நெடியும், அழுக்கு வாடையுமாய் மூர்க்கமாய் ஐயா ஆடிய ஆட்டங்கள். அம்மாவை அடித்து மிதித்து, நாற வசவுகளாய் ஆர்ப்பரித்த பயங்கரங்கள். பயந்து பயந்து இவன் செத்த அந்த நாட்கள்... நரக நாட்கள்...

'குடிச்சிருக்கேன்... வெளியே படுத்துக்கிடுதேன்' என்று ஒதுங்கிக் கொண்ட புது ஐயா. இதில் தட்டுப்பட்ட இனம் புரியாத ஏதோ ஒரு பண்பு. மனுச மனசைக் கீறி விடக்கூடாதே என்கிற மனுசத்தனமான பண்பு. பாசப் பண்பு...

பாண்டிக்குள் அலைமோதுகிற பலவித உணர்வுகள்.

அடர்த்தியான பெருமூச்சு விட்டான்.

காலையில்-

இந்தப் புது ஐயா சிரித்தால்... முகம் கொடுத்துச் சிரிக்கணும். வாங்கித் திங்க காசு கொடுத்தால்... ஆசையோட வாங்கிக்கிடணும்!

9-6-96 ஆனந்த விகடன்

மாயமாகும் மயில் உலகம்

*ரா*த்திரியில் பொத்துக் கொண்டு ஊற்றியது, கோடை மழை. லேசு மாசான மழையில்லை, பேய் மழை. தாறுமாறான மழை.

இத்தனைக்கும்... பொழுது அடைகிற நேரத்தில்கூட மழைக்கான அறிகுறியே தட்டுப்படவில்லை. இறுக்கமும் புழுக்கமுமாயிருந்தது. பேச்சு மூச்சற்று உறைந்து போய் நின்ற மரங்கள். சலனமேயில்லாத இலைகள். எழுதி வைத்த சித்திரமாய் மௌனத்தில் திகைத்துக் கிடக்கிற செடி கொடிகள்.

சாமக்காட்டில் முழித்துக் கொண்ட பூதத்தின் வெறியாட்டம் போல... 'திடு, திப்'பென்று இடி முழக்கங்கள். வெட்டிச் சரித்த மின்னல். 'பளீ...ச், பளீ...ச்' சென்று வீசிய மின்னலில் காடே நடுங்கியதிர்ந்தது. மின்னல் வீச்சில் திகைத்துப் பதறிய தோப்பு.

எங்கிருந்தோ படையெடுத்து வந்த கடல் பிசாசின் சுவாசமாய் வந்து மோதிய குபீர் காற்று, புழுதியையும் மணலையும் அள்ளியெறிந்த சூறைக்காற்று. 'வாழ்... வாழ்' என்று கத்திய காற்றின் இரைச்சலில் பேய்க் கூத்தாடிய மரங்கள். மரக்கிளையில் உட்கார்ந்திருந்த ஆண் மயிலையும் பெண் மயிலையும் குப்புறத் தள்ள யத்தனித்த காற்று.

ஆண் மயிலுக்கு இனம் புரியாத மகிழ்ச்சி. தோகை விரித்து ஆடிக்கூவ ஆசை. காற்றின் சீற்றத்தில் பிய்த்துக் கொண்டு பறந்த ஆசை. பீதியில் 'கேர்... கேர்' என்று திகைத்துக் கூவுகிற பெண் மயில். பெண் மயிலின் பதற்றத்தில் ஆண் மயிலும் நனைந்தது. இனம் புரியாத பதற்றம்.

"சொட்... சொட்... சொட்..."

பெரிய பெரிய மழைத்துளிகள். அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழுந்த மழைப் புள்ளிகள். குப்பென்று எழுந்த பூமியின் வெக்கை. மண்ணின் ஈரவாசம்.

பதற்றத்தில் 'கூர்ர்... கூர்ர்ர்' என்று உறுமிய பெண் மயில். நெருங்கி நெருங்கி கிட்டத்தில் வந்தது. உரசிக் கொண்டு ஒண்டியது.

ஆண் மயிலுக்கு அது ஒரு பரவசம். காற்றும் மழையுமான பயங்கரத்திற்குள்ளும் மனசுக்குள் ஒரு ரகசிய கிளுகிளுப்பு.

மழை 'சட்டச்சட... சட்டச்சட'வென்று பெரு மழையாயிற்று. காற்று நின்று போயிற்று. மழை 'நின்று' பெய்தது. முரட்டு மழை. மூர்க்க மழை.

மயில்கள் இரண்டும் பரஸ்பரம் வெக்கையை பரிமாறிக் கொண்டன. ஒன்றுக்கொன்று ஆறுதலாய் - தோழமையாய் - நின்று, மழையைச் சமாளித்தன.

விடிந்தது. அந்தத் தோப்பு, எண்ணெய் தேய்த்த மாதிரி மினுமினுப்பாக ஜொலித்தது. பளிச்சென்கிற இலைகள். நேற்று பெய்த மழையில் கழுவித் துடைத்த சுத்தம். பசும் பளீர்!

எல்லா இலை நுனிகளிலும் முத்துப் புல்லாக்கு தொங்குவது போல மழை நீர்த்துளி. லேசாக காற்று 'கிச்சலம்' காட்டினால் கூட... மரங்களெல்லாம் ஆடிக் குலுங்கிச் சிரித்தன. ஈரச் சலங்கைச் சிரிப்பாக சத்தமாகச் சிதறும் நீர்த்துளி மின்னல்கள்.

இன்னும் பொழுது புறப்படவில்லை. மயில்கள் இரண்டும் தோப்புக்குள் தரையில் நடமாடித் திரிந்தன. காலார நடைபயின்றன.

கீழடிவானம் முழுதும் கறுத்த மேகத் துண்டுகள் குவிந்து கிடந்தன. சூரியச் சிவப்பில் முதுகு கனிந்த மேகங்கள்.

கிளையிலிருந்து றெக்கையடித்து இறங்கிய ஆண் மயிலுக்கு - என்ன காரணமோ தெரியவில்லை - கண் மூக்கு தெரியாத மனக் கொண்டாட்டம். சந்தோஷத் தத்தளிப்பு.

ஈரப் பூமியின் கனிவும் குழைவும்... அதன் சுவாசமான கூதலற்ற ஈரக்காற்றும்... அதுக்கு ரொம்பச் சுகமாயிருந்தது. கண்களைச் சொருகிக் கொண்டு இன்ப மயக்கமாயிருந்தது.

அதுக்குள் விளையாட்டுப் பிரியம். குறும்பும் கும்மாளமுமாய் ஆடித் திரிய மோகிக்கிற ஆசை மோகினி. நிலை கொள்ளாமல் ஆடிற்று.

குட்டிப் பறப்பாகப் பறந்தது. தேவையில்லாமல் றெக்கையடிக்க... எம்பிப் பறக்க... பத்தடி தூரத்தில் குப்புறச் சாய... சின்ன ஓட்டமாய் ஓடி பாலன்ஸ் பண்ண...

பெண் மயில் அதை எரிச்சலும் கண்டனமுமாய் பார்த்தது.

''ஏய்... இந்தா, நிலை கொண்டு நிக்க முடியலியா? ஒரே கூத்தாட்டம் போடுதே''

ஆண் மயிலுக்கு ஜோடியின் கோபம் சந்தோஷமாகத் தானிருந்தது. ஒரே கொண்டாட்டம்.

''ஆமா... கூத்தாட்டம்தான். எனக்கு ஒரே ஆதாளி (மகிழ்ச்சி)யாயிருக்கு. ஆடுதேன்... ஒனக்கென்ன... வலிக்கா?''

பெண் மயிலின் பொய்க் கண்டனம் ஆண் மயிலுக்குள் குஷியூட்டியது. இன்னும் குறும்பு பண்ணுகிற ஆசை, ஒரு வெறியாக பற்றிக் கொண்டது.

'பெண் மயிலை இன்னும் கொஞ்சம் கோபமூட்டிப் பார்க்கணும். கொதிக்க வைத்து ரசிக்கணும்.' ஆண் மயிலுக்குள் ஆர்வக் குறுகுறுப்பு.

தலைக் கொண்டை கோபுரச் சாய்வாக சாய... நீளக்கழுத்தை நெளித்துப் பார்த்தது. தூ... ரத்தில் ஒரு மின் கம்பம். மூன்று கம்பிகளைச் சுமந்து கொண்டு நிற்கிற கம்பம். அந்த மின் கம்ப உச்சியில் ஏறி நிற்க சம்மதிக்காது, பெண் மயில். காட்டுக் கத்தலாக கூப்பாடு போடும். கண் மூக்கு பாராமல் கோபத்தில் எகிறும். ''க்ய்யா... க்க்ய்ய்யா...'' என்று ஆங்காரமாய் கத்தும்.

அதன் பழைய ஜோடி செத்த அனுபவ அதிர்வு இன்னும் பெண் மயில் நெஞ்சுக்குள்.

இப்படிப்பட்ட காலைப் பொழுதுதான். தோகையை விரித்து, உயர்த்தி உல்லாசமாய் சுற்றி சுற்றியாடிய அந்த ஆண் மயில். பெண் மயிலை நெருங்கி நெருங்கி உர்ர்ர்... உர்ர்ர்...'ரென்று கொஞ்சிய மயில். என்ன

நினைத்ததோ... தோகையை மடக்கியது. தரையில் படிய விட்டது. மின்கம்ப உச்சியில் ஏறி நிற்கிற குறியில்... 'தம்ம்' பிடித்து றெக்கையடித்துப் பறந்திருக்கிறது.

ஒரே பாய்ச்சலில் போய் உட்காரணும். மறு பாய்ச்சலுக்கு வழியில்லை. குறி தப்பி விட்டால்... சிக்கல்தான். அடித்த றெக்கைகளை விரித்த நிலையில் நிறுத்தி, ஏறுமுக அம்பாக பறந்து... உச்சியை நெருங்குகிற கணத்தில்-

வழியில் குறுக்கிட்டு பறந்துவிட்ட கரிச்சான். இதன் குறிப் பாய்ச்சலில் தடுமாற்றம். சின்னக் குளறுபடி.

மின் கம்பிகளில் வலது றெக்கை பட்டுவிட... அவ்வளவுதான். பளீரென சீற்றமாய் ஒரு தீப்பொறி. காடே அதிர்ந்து நடுங்குகிற மாதிரி ஆண் மயிலின் கூப்பாடு. மரணக் கூப்பாடு.

பெண் மயிலின் கண் பார்வையில் நிகழ்ந்துவிட்ட துணையின் மரணம். பறக்கும் காதலனின் சாகசத்தில் பூரித்துப் போய், மிருதுவும் கனிவுமாய் குழைந்திருந்த உணர்வில், தீப்பந்தமாய் வந்து விழுந்த அந்தச் சாவு. றெக்கைகளால் மாரடித்துக் கொண்டு கதறிய பெண் மயில். கிறுக்குப் பிடித்த மாதிரி மின்கம்பத்தைச் சுற்றிச் சுற்றி வந்து புலம்பிய புலம்பல்கள்...

... அதை இப்ப நினைத்தாலும் நடுக்கமாயிருக்கிறது. ஈரமண்ணில் தடம்பதிய ஆதாளி தாளாமல் ஆட்டம் போடும் இந்த ஆண் மயிலை தலையை உயர்த்திப் பார்த்தது. அதன் கண்ணில் கண்டனமும் பதற்றமும்.

ஆண் மயில் நீள - நீல - க் கழுத்தை உயர்த்துவதும்... கண்ணைச் சாய்த்து தூரப் பார்வை பார்ப்பதுவும்... மின் கம்பத்தில் நோட்டமும் நாட்டமும் விழுவதுவும்...

பெண் மயிலின் பதற்றமும் கோபமுமான கத்தல். ''கேர்... கேர்... கே...ர்ர்''

அதன் எச்சரிப்பை அலட்சியப்படுத்துவது ஆண் மயிலுக்கு ஒரு விளையாட்டு. மீறுவதில் ஒரு குஷி. குறும்புச் சரசம்.

பம்மிப் பதுங்கி...மூச்செடுத்து... ஒரே பாய்ச்சல். மேல் நோக்கிய அம்புப் பாய்ச்சல். பாதி தூரம் சடசட சடவென றெக்கையடிப்பு. மீதி தூரம் விரிந்து உறைந்த றெக்கைகள், ஆகாய விமானம் போல மின் கம்ப உச்சந்தலையில் கால் பதித்து நின்று கொண்டது.

அங்கிருந்து பெண் மயிலைப் பார்த்து... ஒரு எக்காளக் கூவல். மனசில் கெந்தளிப்பில் வந்த உல்லாசக் கூவல்.

''க்யா... ய்க்..., க்யா... ய்ய்க்..., க்யா... ய்க்''

'சொன்னபடி கேளாத சனியன். எப்படியும் போய்த் தொலை' சலிப்பும் கோபமுமாய் பெண் மயில் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அங்குட்டுப் போயிற்று. மழைத் ததும்பலில் மறைந்திருந்த பழைய மண் கீறல்களைக் கொத்தியது. புழுக்களும் பூரான்களும். ஆவல் ஆவலாய்த் கொத்திய பெண்மயில் சுத்தமாய் மறந்து விட்டது, ஆண்மயிலை. குஞ்சுகள் ''கீயா... கீயா... க்யா...'' என்கிற குதூகலக் கூவலோடு... மழைக்கு வந்து செத்துக் கிடந்த ஈசல்களைப் பொறுக்கி முழுங்கின.

மழைநாளின் மறுநாளைய வெயில் இருக்கிறதே... அதன் இதமே, தனி. அதிகாலை வெயிலின் தங்கஜ்வலிப்பு. கதகதப்பும் குளுமையும் கைகோர்த்துக் கலந்த ஒரு புது சுகமாய் வருடுகிற வெயில். கோடையின் வெக்கை தணிந்த அந்த ஈரவெயில். அடடா... என்று கண் சொக்கிப் போய் நின்றது அந்த ஆண்மயில், மின் கம்ப உச்சந்தலையில்.

கழுத்தை எல்லா வடிவங்களிலும் நீட்டி வளைத்து, திரேக பட்டாடை மின்னல்களை விலக்கி, உள்ரோம வெள்ளையை அலகால் கோதிக் கோதி வெயிலுக்குக் காட்டுவதில் ஒரு பரவசம். புல்லரிப்பான போக சுகம்.

சுகக்கிறக்கத்தை அனுபவித்துக் கொண்டே இந்த உயரத்திலிருந்து தங்களது வாசஸ்தலமான அந்தத் தோப்பைப் பார்த்தது.

தோப்பு ரொம்ப அழகாக இருக்கிறது. மரங்கள். பெரிய பெரிய மரங்கள். மழையின் சுவாசத்துக்கான நுரையீரல்கள். மாரித் தாயின் திரேகங்கள்.

ராட்சஸக் குடையாக தலை விரித்துக் கிடக்கும் வேப்பமரங்கள், வாகைமரங்கள், புளியமரங்கள், அரச மரங்கள் தோப்புக்குக் காவல் வீரன்களாய் சுற்றுவரப்புகளில் வரிசையாக பனைமரங்கள். குளித்து முடித்த குமரிப் பெண்களாக மரங்களின் ஈர மினுமினுப்பு. ஒளிச் சுடர்களின் பசிய பேரொளி.

இந்தத் தோப்புதான் இவர்களுக்கு பரம்பரை வாசுஸ்தலம். ஆத்தா. ஆத்தாளின் ஆத்தா. பாட்டிகளின் ஆத்தா. ஆதி ஆத்தா. எல்லாரும் இங்குதான். தோப்புகளைச் சுற்றிலும் செவல்க்காடு. கடலை... சோளம்... துவரை

வெள்ளாமைகள். இரைக்குப் பஞ்சமே வராது, இதுகளுக்கு. கோடைக் காலத்திலும் வற்றாத இரை. அடிக்கடி மழை. ஆற்றிலும் ஓடைக்காட்டிலும் சந்தனக் கரைசலாய் மழைத் தண்ணீர். மீன், நண்டு என்று ஏகப்பட்ட ஜீவராசிகள், பொறுக்கித் திங்கக் குறையாத புழு பூச்சிகள். தட்டுப்பாடே இல்லை.

வேப்ப மரங்களில் பசிய இலைகள். கொத்து கொத்தாய் தொங்கும் காய்கள். பெரு வாகைமரம் ஓர் அதிசயம். கோடை வந்துவிட்டால்... இலைகளெல்லாம் பழுத்து சுத்தமாக உதிர்ந்துவிடும். மொட்டை மரமாகி விடும். ஆனால் மொட்டை மாதிரியே தெரியாது. அப்பத்தான் அது ரொம்ப அழகாக இருக்கும். இலைகள் உதிர்ந்தாலும் நெற்றுகள் உதிராது. நீள நீள நெற்று. தங்கநிறத்தில் அடர்த்தியாய்... மரமே தங்க மரமாய் தகதகக்கும். காய்ந்த நெற்றுகள் பூராவும் தங்கச் சலங்கைகள்.

லேசாக காற்று வந்து கிச்சலம் காட்டினால் கூட... மரம் முழுக்க சின்னப் பிள்ளைகள் சிரிப்பாக கலகலக்கும். அந்தச் சலங்கைச் சிரிப்பின் சங்கீதம், ஆண் மயிலுக்குள் கார்கால மேக நகர்வாகப் போதையூட்டும்.

மயில்களுக்கு இந்தத் தோப்பு, தாய் மாதிரி. நிழல் தந்து, மறைவிடம் தந்து பாசம் காட்டுகிற தாய். தமது நிழலிருட்டு றெக்கைக்குள் வைத்து இரையூட்டுகிற கருணைத் தாய்.

மழையை மாதிரியே இந்தத் தோப்பும் மயில்களுக்கு உயிர். உலகம்.

தோப்பின் காலடியில் காய்ந்த குச்சிகள். உதிர்ந்த இலைச் சருகுகள். காய்ந்த ஓலைகள். பனை மட்டைகள். ஆத்திச் செடிகள். ஆவரைச் செடிகள். தும்பைச் செடிகள். குஞ்சுகள் விளையாட ஏகப்பட்ட வசதிகள். மைனாக்கள்... கரிச்சான்கள்... காகங்கள்... பனங்காடைகள் என்று ஏகப்பட்ட தோழர்கள் உடன் வாழும் உலகம்.

சித்திரை பிறந்து விட்டால் போதும். ஆண் மயில் ஏக்கமாய் எதிர்பார்க்கத் துவங்கிவிடும். 'அந்தப் பையன்களைக் காணோமே' என்று ஆவலாய் கழுத்தைச் சாய்த்துப் பறக்கும்.

ரெண்டொரு நாட்களில் பையன்கள் வந்து விடுவான்கள். எல்லாம் டவுன்காரப் பையன்கள். லீவுக்கு வந்திருப்பான்கள். மயிலைப் பார்க்க தோப்புக்கு வந்து விடுவான்கள். அந்தப் பையன்களுக்குள் அந்தச் சிவந்த - குண்டுக் கன்னப் பையன் இருக்கானா என்று ஆசையோடு தேடும்.

அவன் இருப்பான். மயிலுக்குத் திருப்தியாக இருக்கும். ஆண் மயிலுக்கு அந்தக் குண்டுக் கன்னப் பையன் என்றால்... ஒரு பிரியம். பாசம். இனம் புரியாத ஒரு பிடிப்பு.

அந்தப் பையன்கள் மயில்களைப் பார்த்து சந்தோஷமும் கும்மாளமுமாய் கைதட்டுவார்கள். காணாத அதிசயத்தைக் கண்டுவிட்ட ஆச்சர்யத்தில் பரவசமாய்க் கூவுவார்கள்.

''அய்ய்... மயிலு... இங்க பார்டா... ஆண் மயிலு சூப்பராயிருக்குல்லே?''

''வாலைப் பார்டா... எம்புட்டு நீளம்னு? தரையெல்லாம் இழுபடுதே...''

''அது வாலு இல்லே... தோகைடா.''

''வாலுதான்...''

''தோகைதான்.''

உக்ரமமான மோதல், முடிவு பெறாமலேயே கரைந்து விடும்.

''மயிலுக்குக் கொண்டையைப் பாருடா''

''நாதஸ்வரத்துலே இருக்குற பீப்பீ மாதிரி இருக்குல்லே?''

''கழுத்தை பாருடா... கலர் சூப்பராயிருக்கு''

''தங்கம் மாதிரி மினுமினுக்குதுடா...''

''அய்ய்ய்... அங்க பார்டா... நாலைஞ்சு மயிலுக்குட்டிடா''

''குட்டியில்லே... குஞ்சுடா''

எல்லாப் பையன்களும் பரிகாசமாய்ச் சிரிப்பார்கள். அவர்களது சிரிப்பாணிக் கூத்தில் தோப்பே திகைக்கும்.

இதெல்லாம் ரொம்ப ரசிக்கும், ஆண் மயில். தான் பார்க்கப்படுவது... ரசிப்பது... வியப்பது... மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் தத்தளிப்பது... குதூகலக் கும்மாளத்தில் சிறுவன்கள் ததும்பிக் கிடப்பது எல்லாம் ஆண் மயிலுக்கு ரொம்பப் பிடிக்கும். ஒற்றைக் காலில் நின்று ஒரு கிறக்கத்தோடு பையன்களைப் பார்க்கும்.

அதிலும் அதன் கவனம் முழுவதும் அந்தக் குண்டுக் கன்னப் பையன் மீது மென்மையாய்க் குவிந்திருக்கும்.

அவன் இந்த ஆரவாரக் கூப்பாடுகளிலெல்லாம் கலந்து கொள்ள மாட்டான். மயில்களைத் துரத்தமாட்டான். சத்தமில்லாமல் அவர்களோடு சேர்ந்து நிற்பான். ரொம்பச் சாந்தம். அமைதி. ஆனால், ரசனைத் தீவிரம். மயில்களையே பார்ப்பான். வைத்த கண் எடுக்காமல் பார்ப்பான். அதன் நடைகளை - அசைவுகளை - தோகை விரிப்புகளை மயில்களுக்குள் நிகழும் செல்ல விளையாட்டுக்களையெல்லாம் இமை தட்டாமல் பார்ப்பான். மனசு கரைந்து போய், மௌனமாய் ரசிப்பான்.

சிந்தாத - சிதறாத - அவனது ரசிப்பின் உக்கிரம், ஆண்மயிலின் அடிமனசில் வருடும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அவனையே ஒரு பிரியத்துடன் கூர்ந்து பார்க்கும். அவனுக்காகவே அது அடிக்கடி தோகை விரித்தாடும்.

பச்சைப் புல்லுக்குள் கிடக்கும் மயில்த் தோகைகளைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். கையில் குத்து குத்தாக மயில்த் தோகைகள். அந்தக் குண்டுக் கன்னப் பையன் கையிலும் நீளமான தோகை ரெண்டு. சின்னது நிறைய்ய.

இந்தப் பையன்கள் பத்துப் பதினைந்து நாட்களுக்கு தொடர்ந்து வருவான்கள். வந்து போகிற அத்தனை நாட்களும் மயிலுக்குச் சந்தோஷம்தான். பூரிப்பும் பெருமிதமும் தான். இரை பொறுக்கக்கூட மனசு வராது. தனது பிறப்பின் அர்த்தமே பூர்ணப்பட்டுவிட்ட மாதிரி... உள்ளுக்குள் ஒரு நிறைவு. ஒரு மயக்கக் குழைவு. ததும்பல் கிறக்கம்.

அந்தப் பையன்கள் வருவதை நிறுத்தியபிறகும் கூட... ஏழெட்டு நாளைக்கு அதே எண்ணமாயிருக்கும்.

தினசரி இந்த உள்ளூர்ப் பையன்கள் வருவான்கள். அதுகளைக் கண்டாலே மயிலுக்குப் பிடிக்காது. ஆடுகாலிக் கழுதைகள். வெறுப்பும் எரிச்சலும் பொத்துக் கொண்டு வரும்.

கன்னங்கரேலென்று வருவான்கள், குரங்குச் சனியன்கள். டவுஷரை அர்ணாக்கயிறில் சொருகி யிருப்பான்கள். தினம் பார்த்துப் பழகிய மயில்களை ஒரு பொருட்டாகவே மதிக்கமாட்டான்கள். அவன்களைப் பொறுத்தவரை வீட்டுக் கோழியைப் போலவே இந்த மயிலும் ஓர் அசிங்கம் தான். காரண காரியம் இல்லாமலேயே கல்லை எடுத்து எறிந்து மயிலை விரட்டுவான்கள். கதிகலங்க வைத்து பதற வைப்பதில் அந்தக் குரங்குகளுக்கு ஒரு குஷி. மயில் முட்டைகளை தேடிப் பொறுக்கி எடுத்துவிடுவான்கள். பொறித்துத் தின்று தீர்த்துவிடுவான்கள். சேட்டைக்காரச் சனியன்கள்.

இந்தத் தோப்புலகத்துக்குள் ஊர் உலகமும் வந்து போகும். காய்ந்த குச்சிகளை பொறுக்கிக் கட்டிக் கொண்டு போக ஒன்றிரண்டு பெண்கள் வருவார்கள். ஊர்ப் பொரணிகளைப் பேசித் திரிவார்கள். அல்லது உள்சோக ரணங்களைச் சொல்லி ஆற்றிவிட்டுப் போவார்கள்.

மதிய நேரங்களில் செம்மறியாடுகள் மேய்ச்சலுக்கு வரும். ஆட்டுக்காரனும் கம்போடு வருவான். பேச்சுத் துணைக்கு ஆளில்லாத வெறுமையில், ஆட்டுக்காரன் ஆடுகளைப் பெயர் சொல்லி வைவான்.

கம்பைச் சாய்வாக, ஊன்றி, இடது கட்கத்தை அதன் மேல் போட்டு, உடம்பின் மொத்தப் பாரத்தையும் அதன் மீது கிடத்திக் கொண்டு கிருஷ்ண பகவான் மாதிரி நிற்பான்.

தனிமைச் சூன்யத் தகிப்பு தாளாமல் சத்தம் போட்டு பாட்டுப் படிப்பான். கெட்ட வார்த்தைப் பாட்டுகள். ஆபாசப் பாட்டு.

''ஏலேய்... பாட்டா படிக்கே? காடுகரைகள்லே பொம்பளைப் புள்ளைக இருக்கப் போறாக'' என்று யாராவது எச்சரித்துவிட்டுப் போனால்... வெட்கத்தில் தலை குனிந்து கொள்வான், கொஞ்ச நேரம். கொஞ்ச நேரம்தான். அப்புறம்... பாட்டு தூள் பறக்கும்.

பொழுதடைந்து கருகருவென்று மயங்குகிற நேரம். ஆளரவம் அற்றுப் போன நேரம். சிலசமயம்... எவனாச்சும் ஒரு விடலைப் பையன் வருவான். பதறிப் பதறிப் பம்முவான். நாலா பக்கமும் கிலியோடு பார்ப்பான்.

வேறொரு திசையிலிருந்து ஒரு பெண் வருவாள். கள்ளத்தனத்திற்குரிய பயம் அவள் கண்களில் அப்பியிருக்கும். நாலு வார்த்தைகள்கூட ஆற அமரப் பேச மாட்டார்கள். பதற்றமும் பரபரப்பும் மோக மோதலுமாய் படுத்துவிட்டு, அவசர அவசரமாய்ப் பிரிந்து ஓடுவார்கள்.

'என்னத்துக்கு இதுகள் இப்படிப் பயந்து சாகுதுகள்' என்று ஆண் மயிலுக்குப் புரியவே புரியாது. பயப்பட வேண்டிய குற்றமா இது? அதற்கு ஒரே புதிராகத் தோன்றும்.

பெண் மயிலோடு தான் ஆற அமர சல்லாபிப்பது, பயமில்லாத மன நிதானத்தில் விளையாடி முழுச்சுகம் பெறுவது எல்லாம் ஞாபகத்தில் முகம் காட்டும்.

இப்படி தோப்புக்குள் உலகம் வந்து போகும். தோப்பே ஓர் உலகமாயிருக்கும். வாழ்வின் ஜீவ அலைகள்

தோப்புக்குள்ளும் மதுர வெள்ளமாய் வந்து தழுவிச் செல்லும்.

...மின்கம்ப உச்சியில் நின்ற ஆண்மயில் றெக்கைகளை விம்மிப் புடைக்க வைத்து நெட்டி முறித்துக் கொண்டது. தன் ஜோடி ஞாபகம் வந்துவிட்டது. வெயிலும் சுள்ளென்று உரைக்க ஆரம்பிக்க, கீழே பார்த்தது. ஈரக் குழைவான சகதியாக தரை. திட்டுத் திட்டாக நீர்ப் பெருக்கு. இரை பொறுக்கணும் என்ற ஆசை வேறு...

றெக்கையடித்துப் பாய்ந்தது. உயிருள்ள அம்பாக கீழ் நோக்கி வந்தது. விரித்த றெக்கைகளோடு தரையிரங்கி, சின்ன ஓட்டமாய் ஓடி, பாலன்ஸாகி... நின்றது. மெது நடையிலேயே நடந்து... கண்ணில் தென்பட்ட பூச்சிப் புழுக்களைக் கொத்தி விழுங்கிக் கொண்டே... தோப்பை நெருங்கியது.

தோப்புக்குள்ளியிருந்து வருகிற கதறல்கள். எல்லா மயில்களின் கூட்டுக் கலவையான கூவல்கள். பீதியும் கிலியுமான ''க்யாய்... க்... யா... க்யா...'' க்கள்.

என்னாச்சு? ஆண் மயிலுக்குள் ஒரு திடுக்கிடல். ''என்னமோ... பயங்கரம்' என்று பதற்ற பரபரப்பில் ஓட்டமாய் ஓடிவந்து... தோப்புக்குள் நுழைந்தால்-

இதன் அடிவயிற்றிலும் இனம் புரியாத பய பதைப்பு. அதிர்வான குழப்பம்.

பத்துப் பேருக்கு மேலிருக்கும். எல்லாரும் சைக்கிள்களை நிழலில் வைத்துப் பூட்டியிருக்கிறார்கள். பீடிகளைச் சுண்டி இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். சைக்கிள்களின் ஹாண்டில்பாரில் தூக்குச் சட்டிகள். மதியச்

சோறு. கேரியல்களில் பெரிய பெரிய அரிவாள்கள். துரட்டிகள். கோடாரிகள்.

'என்னத்துக்கு வந்துருக்கான்கள்... இந்தப் பீமன் தடியன்கள்?' மயிலுக்குள் குழப்பம். பதற்றம். ஏதோ ஒரு பயங்கரத்தை உணர்கிற மனசு. உள்ளூர அதிர்ந்தோடுகிற மின் அதிர்வுகள்.

பேரழிவின் பெருமுழக்கம் போல நாராசமாய் தடதடத்துக் கொண்டு வந்தது, ஒரு கறுப்பு மோட்டார் பைக். அதிலிருந்து இறங்கிய ஒரு பணக்கார ஆசாமி. ஆசாமியின் வெள்ளையும் சொள்ளையுமான டிரஸ்ஸே அவனது பணக்காரத்தனத்தைக் காட்டியது. இடது கையில் தங்கநிற செயினோடு கடிகாரம். விரல் நிறைய மோதிரம்.

''மோலாளி வந்துட்டாரு'' என்று பரபரத்த சைக்கிள் காரன்கள்.

''என்னப்பா... எல்லாரும் வந்தாச்சா?''

''ஆமா... மோலாளி.''

''மத்ததெல்லாம் ரெடியா?''

''ரெடிதான். மோலாளி. வேலையை எங்க இருந்து ஆரம்பிக்கணும்?''

''மாரி மூலையிலேயிருந்து வேலையைத் துவக்குங்க. அதானே... சாஸ்திரம்?''

''சரிங்க''

''நீட்டி நிமர்த்தி நேரத்தைக் கழிச்சிராதீக. சட, புடன்னு வேலையை முடிக்கப் பாருங்க''

''ஆட்டும் மோலாளி.''

''செங்கல்ச் சூளையிலே உங்களை நம்பி ஆயிரக் கணக்குலே அட்வான்ஸ் வாங்கிட்டேன். நாலு நாளைக் குள்ளே லாரியிலே லோடு பண்ணி அனுப்பியாகணும், வெறகை''

ஆண் மயிலுக்குள் உயிரே அறுந்து போன மாதிரியிருந்தது. நிலை கொள்ளாத பதற்றம். நிற்கவும் முடியவில்லை. ஓடவும் முடியவில்லை. கழுத்தை உயர்த்தி சாய்த்துக் கொண்டு... பைக்காரனைப் பார்த்தது.

'அடப்பாவி... எங்க தாயையா வெட்டப் போறே? மாரித்தாயான எங்க மரமாதாவையா மாய்க்கப் போறே? வெளங்குவீயாடா... நீ? நாசமாய்ப் போயிருவே.''

......நினைக்க நினைக்க மயிலுக்குள் வருகிற ஆத்திரம் பொங்கிப் பீறிடுகிற ரௌத்ரம். முருகப் பெருமானின் வேலாகப் பாய்ந்தது. கோபமும், ஆவேசமுமாய் றெக்கையடித்துக் கொண்டு பைக்காரன் மீது பாய்ந்து மோதியது. 'க்யா... க்யா... க்யா...' என்ற ஆவேசக் கூவலோடு கண்டமேனிக்கு அவன் மூஞ்சியில் கொத்திப் பிடுங்கியது. அவன் அலற அலற... ஆசை தீரக் கொத்தியது. ரத்தக் குதறல்......

எல்லாம் நினைவு மயக்கம்தான். மயிலின் மனமாயம்தான். எல்லா மயில்களும் பீதியும் கிலியுமாக கத்திக் கொண்டிருக்க... இந்த ஆண் மயில் மட்டும் கத்தாமல் பார்ப்பது... முறைப்பதுபோல அவனை உறுத்தியதோ, என்னவோ... பைக்காரன் பேச்சுவாக்கில் குனிந்து ஒரு கல்லையெடுத்து விர்ரென்று எறிந்தான், இதன்மேல்.

ஆண் மயில் உயிரை கையில் பிடித்துக்கொண்டு 'கேர்... கேர்... கேர்'ரென்று அலறியது. திசைக்கொன்றாக சிதறிப்போய் ஓடின.

நாலைந்து நாட்களாய்-

மரங்கள் வெட்டப்படுகிற கோடரியின் சத்தம், அந்த ஏரியாவை அதிர வைத்தது. அதையும் அமுக்கிற அளவில் மயில்களின் கூட்டுக் கூவல்.

எல்லா மயில்களும் றெக்கைகளால் மாரடித்துக் கொண்டு அழுவதைப் போல வீறிட்டு அலறிற்று. பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்துவந்த வாசஸ்தலம் இடிபட்டுத் தூளாகிற சோகத்தில் ''கேர்... கேர்... கேர்...'' என்று கத்தித் திரிந்தன, கிறுக்குப் பிடித்த மாதிரி.

ஓர் உலகமாய் - மயில்களின் ஜீவ உலகமாய் - மழைச் சுவாசத்தின் திரேகமாய் திகழ்ந்து வந்த அந்தப் புராதன அழகுத் தோப்பு... நாலைந்து நாட்களில் ஒரு ராட்சஸ விறகுக் கடைமாதிரியாகிவிட்டது. தோப்பு இருந்த இடம் வெட்ட வெளியாகி... எல்லார் கண்களையும் உறுத்துகிற சூன்யமாகிவிட்டது.

மரங்களற்றுப் போய் வெற்றுத் தரிசாகிவிட்ட பூமியில் மழைக்கும் மயிலுக்கும் என்ன ஜோலி?

அந்த வட்டாரத்திலேயே கிறுக்குப் பிடித்த மாதிரி சுற்றித் திரிந்த மயில்கள்... 'உயிர் பிழைச்சாகணுமே' என்ற நிர்ப்பந்தத்தை உணர்ந்தன. பஞ்சம் பிழைக்க, அகதிகளைப் போல எல்லா மயில்களும் வாழ்வை நோக்கி வேறிடம் தேடி நகர்ந்தன. அந்த ஆண் மயிலும்தான்.

அந்த ஆண் மயில் மனசில் மட்டும் வேறொரு கவலை, கனத்த பாரமாய் உட்கார்ந்து அழுத்தியது.

அடுத்த சித்திரைக்கு வரப்போகிற அந்தக் குண்டுக் கன்னப் பையன். மரங்களையும், மயில்களையும் காணாமல் ஏமாற்றமடையப் போகிற அந்தப் பையனின் சோக முகம்.

அந்த பையனைப் பற்றிய சோகம் இதன் நெஞ்சில் நிழலாட... மாயமாகி வருகிற நிழலைத் தேடி மயில்களோடு சேர்ந்து நகர்ந்தன.

4-7-96-இல் சென்னை சாகித்ய அகாடமி கூட்டத்தில் வாசிக்கப்பட்ட இச் சிறுகதை செம்மலரிலும் பிரசுரமா யிற்று.

பார்வை

''ஏய் இந்தா... காருக்கு நேரமாச்சுலே? கெளம்புற வழியைப் பாருங்க.''

புருஷனை 'தார்க்குச்சி' வைத்து விரட்டிக் கொண்டிருந்தாள் வடிவு. அவளது இடுப்பில் கனத்த சாக்குப்பை. வலது கையில் பிளாஸ்டிக் கூடை. ரெண்டிலும் முண்டும் முடிச்சுமாக நிறைய சாமான்கள். பாரம், அவளை ஒருசாயலாக நிற்க வைத்திருந்தது.

நாளைய மறுநாள்... குலதெய்வம் கோவிலில் பொங்கல். ரெண்டாவது புள்ளைக்குக் காது குத்து, முடியெடுப்பு. அதற்காகத்தான் சாமான்கள் வாங்க வந்திருந்தனர்... அம்மனும், சாமியும்.

வேல்க்கனி, வெத்தலை பாக்குக் கடைக்காரனை கடித்துக் குதறிக் கொண்டிருந்தான். ''வெருசா... குடு... வெருசா... வெருசா...''

''செமந்துக்கிட்டு எம்புட்டு நேரம் நிக்க? வெருசா வந்து தொலையுங்களேன்? கார்லே கூட்டம் சள்ளை பறியும். நிக்கக்கூட எடம் கெடைக்காது.''

''நீ நடந்துக்கிட்டேயிரு. நா... வந்து பஸ்லே ஒன்னை ஒக்கார வைக்கேன்... போதுமா.''

"ஆமா... ஒங்கய்யா வீட்டுக் காராக்கும்?"

வாங்கிய சாமானை அவசர அவசரமாய் டவுசர் பைக்குள் திணித்துக் கொண்டு ஓடி வருகிற அவனைப் பார்த்து முகத்தை நொடிக்கிற வடிவு. சிரித்துக் கொள்கிற வேல்க்கனி. மானாவாரியாக முறுக்கிய மீசை நுனிகளில் வெத்தலைக் காவி. வேட்டியை உயர்த்தி மடித்துக் கட்டியிருந்தான். டவுசரின் அடிப்பட்டை வெளியே தெரிகிறது. தலையில் வட்டச் சுற்றாகக் கட்டியிருந்த கலர்த் துண்டு. உடம்பு முழுக்க ரோம அடர்த்தி.

ஆவணி மாசத்து வெயில். சுள்ளென்று உறைக்கிற மழைக் கோப்பான வெயில். ரோடு முழுக்க ஜனம். உரசி, இடித்துக் கொண்டு நகரும் ஜனம். 'டர்ர், புர்ர்' ரென்று விரைகிற வாகனங்களின் அதிர்வில் நடுங்குகிற ரோடு.

பஸ் நிலையத்திற்குள், ஏகப்பட்ட நெரிசல். ஆண்களும் பெண்களும் சிறிசுகளுமாக 'திருவிழாக்' கூட்டம். நெரிசலாக சொருகிக் கொண்ட பஸ்கள்.

வடிவுக்கு ஏகப்பட்ட பிரமிப்பு. 'இம்புட்டு ஜனமா...' என்று நினைத்து நினைத்து மாய்ந்தாள். கலர் டி.வி. பெட்டிகள் ரெண்டு ஓடிக்கொண்டிருந்தன. ஜவுளிக் கடை விளம்பரமும் நகைக் கடை விளம்பரமும் தூள் பறந்தது.

வேல்க்கனி, வருகிற பஸ்களையே கவனித்தான். ஏறுவதற்கும் இறங்குவதற்கும் நடக்கிற மல்லுக் கட்டுகள். உக்கிரமான தள்ளு முள்ளுகள். 'காச் மூச்' சென்ற காட்டுக் கத்தல்கள்.

ஜன்னல் வழியாக கர்சீப்பைப் போட்டு சீட் பிடிக்கிற சாமர்த்தியம். கர்சீப்பை எடுத்து கீழே போட்டுவிட்டு, ஜம்மென்று உட்கார்ந்து கொள்கிற கிராமத்துப் பெண்கள். ''இடிபட்டு மிதிபட்டு ஏறுன நாம, நின்று சாகணும். காத்தாட வெளியே நிக்குறவுக, கைக்குட்டை போட்டு உக்காந்து போகணும். நல்லாயிருக்கே ஞாயம்'' என்று வரப்போகிற சண்டைக்கு... இப்போதே கோபம் காட்டிச் சீறுகிற சீற்றம்.

''இதென்ன... இம்புட்டுக் கூட்டமாயிருக்கு... இன்னைக்கு என்னமும் விசேஷமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. தெனம் தெனம் இதே எழவுக் கூத்துதான்.''

வாய்க்குள் வார்த்தை வார்த்தையாயிருக்க... குபீரென்று பாய்ந்தான் வேல்க்கனி. முன் பக்கம் நெளிந்த பஸ் வந்து விட்டது. வடிவும் பாரத்தை இழுத்துக் கொண்டு 'தொக், தொக்'கென்று ஓடினாள்.

புளிச்சிப்பமாக அடைந்து சப்பிப் போய்க்கிடந்த கூட்டம், 'அப்பாடா' என்ற பெருமூச்சோடு இறங்கு வதற்குள் வந்து அப்பிக்கொண்ட கூட்டம். மனித நெறு நெறுப்பு. தள்ளுமுள்ளு. சண்டை சத்தம். முண்டியடித்து முட்டி மோதுகிற மூர்க்கம். எல்லார் கண்களிலும் 'சீட்' வெறி. அலைபாய்வு.

வேல்க்கனியின் பாய்ச்சல். காட்டுக் கூச்சல். தடலாடித்தனம். ஆளுக்கு முந்தி ஏறிவிட்டான். டிரைவர் சீட்டுக்கு இடது புறத்தில் ஓர் ஒற்றைச் சீட்டு. அதில் ஒடிப் போய் உட்கார்ந்துகொண்டு, வடிவைக் கூப்பிட்டான். ''இங்க வா... ஒக்காரு.''

முண்டியடித்து ஏறுகிற ஜனம். சரக்கு மூட்டைகளை 'முக்கித் தக்கி' கோணிப் பைகளையும், வாழைத் தாரையும் கொண்டுவந்து போடுகிற லோடு மேன்கள். 'மிதிச்சிராதே...', 'இடிக்காதே...' 'கொஞ்சம் தள்ளு...', 'எங்கே தள்ள' என்று ஒரே சத்தக்காடு. வாக்குவதாம்.

எப்படியோ இடித்துப் பிடித்து தடுமாறி ஏறிவந்தாள், வடிவு. சக்கையாகிப்போன அயர்ச்சி.

சாக்குப்பையையும் கூடையையும் வாங்கி காலடிக்குள் வைத்தான். ''இதுலே ஒக்காரு...''

''நீங்க?''

''எனக்குப் பின்னாடி ஒரு சீட் போடச் சொல்லியிருக்கேன்.''

போய்விட்டான். பஸ் முழுக்க மனித வெக்கை. நிற்கக்கூட இடமில்லாமல் மனிதத் தத்தளிப்பு. அப்பளமாய் சப்பிப்போய் திணறிய பெண்கள். ஒருத்தர் மூச்சு மற்றவர் செவியில் உஷ்ணமாய்...

என்ஜினைச் சுற்றியுள்ள இடைவெளிகளிலும் சாமான்கள், கால்கள். ஒற்றைச் சீட்டில் உட்கார்ந்து கொண்ட வடிவுக்குள் நசநசக்கிற புழுக்கம். சென்னி ரோமங்களுக்குள் ஊடுருவி நழுவுகிற வியர்வைக் கோடு. ஈரக் கூச்சம். வடிவின் முன்னாலும் கண்ணாடி, இடது பக்கமும் கண்ணாடியடைப்பு. காற்றேயில்லை. வெயிலில் காய்ந்த பஸ் தகரம், வெப்பத்தை உள்ளே கக்குகிறது. வெந்து தகிக்கிறது வேக்காடு. 'எப்படா பஸ் புறப்படும்.' எனறு தவிக்கிற தவிப்பு. என்ஜின் உஷ்ணச் சீற்றம் வேறு.

கண்டக்டர் வந்தார். ''டிக்கட்... டிக்கட்... யாரு டிக்கட்... எங்க போவணும்?'' என்று ஒரே சத்தமாய் கத்தினார். ''சில்லறையா குடுங்க'' என்று அதட்டினார். அவ்வப்போது 'டபார், டபார்' என்று புறங்கையால் பஸ்ஸின் 'டாப்'பை அறைகிறார்.

'இந்த மனிதச் சதையைக் கிழித்து உள்ளே புகுந்து எப்படித்தான் டிக்கட் போடுதாரோ...' என்று கண்டக்டரை நினைத்துப் பரிதாபப்பட்டாள்.

சிகரெட்டை கடைசி உறிஞ்சு உறிஞ்சி சுண்டி யெறிந்துவிட்டு, டிரைவர் சாவதானமாய் வந்தார். பஸ்ஸின் முன்பக்க டயர்களை தட்டிப் பார்த்தார். பஸ்ஸின் இடது பக்கம் வந்து, 'சைடு மில்லர்' கண்ணாடியை சரி செய்தார். வண்டிக்குள் ஏறி, கண்டக்டரைத் தேடினார்.

''என்ன தலைவா... டிக்கட் அடிச்சாச்சா? வண்டியை எடுப்பமா?''

''ம்... எடுங்க தலைவா. நா அடிச்சிக்கிடுதேன்.''

வண்டிக்கு உயிர் தந்தார். உறுமிவிட்டு மெல்ல நகர்கிற பஸ். கடைசி நேரத்தில் துள்ளலாய் ஓடிவந்து அப்புகிற இளவட்டங்கள்.

''படியில் நிக்காதீங்க... மேலே ஏறிருங்க... மேலே வந்துருங்க. சொல்றதைக் கேட்டுக்கணும். தாறுமாறா வையும்படி வைச்சிக்கிடாதீக...''

விளையாட்டாகவும் அதட்டலாகவும் எச்சரிக்கிற கண்டக்டரின் அலறல்.

பஸ்ஸின் வேகத்தில் உயிர் பெறுகிற காற்று. பஸ்ஸுக்குள் ஊடுருவி, வியர்வை நசநசப்பை தொட்டுக்

குசலம் விசாரிக்கிற காற்று. மூச்சுத் திணறிக் கிடந்தவர்களுக்குள் மெல்ல மெல்ல உயிர்ப்பரவல்.

பார்க் ஸ்டாப்பில் ஆள் ஏறியது. சங்கரன் கோவில் விலக்கில் நின்ற ஜனம், ஏற வழியற்றுப் பரிதவித்தனர். கடந்து செல்லும் பஸ்ஸைச் சபித்தனர்.

அங்கும் இங்குமாய் பார்த்துக் கொண்டிருந்த வடிவு, தற்செயலாக டிரைவரைப் பார்த்தாள். இவள் ஒற்றைச் சீட்டில். நடுவில், என்ஜின். ஒட்டினாற்போல் டிரைவர். இவளுக்குள் பகீரென்றது. உள்ளுக்குள் 'திகுதிகு'வெனத் தகிக்கிற தீ.

வடிவையே வெறிக்கிற டிரைவர். ஸ்டீயரிங்கில் வலது கையும், கியரில் ஒரு கையுமாக வண்டியை நகர்த்திக் கொண்டே இவளை இமை தட்டாமல் பார்க்கிற வக்கிரம்.

வடிவு பதறிப் போனாள். மாராப்புச் சேலை சரியாகத்தானே இருக்கிறது? பின்னும் இழுத்துச் சொருகிக் கொண்டாள்.

இவளுக்குள் கசந்து வந்தது. இப்படி... டிரைவர் பக்கத்தில் ஒற்றையாளாக வந்து உட்கார்ந்து விட்டோமே என்று குமைந்தாள். வெறுப்புடன் டிரைவரைப் பார்த்தாள். உள்ளுக்குள் சண்டாளமாய்ப் பொங்கிச் சீறுகிற நாறவசவுகள்.

வேகம் எடுக்கிற பஸ். போக்குவரத்து நெரிசலுக்குள் ஊடுருவிப் பாய்கிறது. டிரைவர் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறார்... முன்னால் பார்க்கிறார். இப்போது-

அவரது காது - செவிமடலின் மச்சம் - கன்னப்பகுதி - கழுத்து நரம்பு தெரிகின்றன. அடிக்கடி ஹாரனை அழுத்துகிறார். ஸ்டைலான அழுத்தம், அலட்டலான அழுத்தல் என்று இவளுக்குப் படுகிறது.

வடிவுக்குள் ஜ்வாலை விடுகிற தீ. நுனி நாக்குவரை வந்து எரிகிற ஜ்வாலை. ''மூஞ்சி மொகரையைப் பாரு. கருவாய்ப்பய. என்னமாய் மொறைக்கான்... பாரு? பொம்பளையே பார்க்காத பயமாதிரி. நாசமாய்ப்போக. அவன் கண்ணுலே பாம்பு புடுங்க. ஒரு நா பேதியிலே பாடையேற...''

கண்டமேனிக்கு பொடுபொடுவென்று துடிக்கிற அவள் உதடுகள்... தகிப்பும் கொதிப்பும் சாபமாகி சத்தமில்லாமல் சிதறின.

பி.எஸ்.கே. நகர் ஸ்டாப்பில் இறங்குகிற நாலைந்து டிக்கட்கள். ஓரக்கண்ணால் பார்க்கிற வடிவு. இவளையே நேர் கண்ணால் பார்க்கிற டிரைவர். நன்றாகத் திரும்பி... வசதியாக வெறிக்கிற கண்கள்.

தைரியமாய் உற்றுப் பார்க்கிற திமிர். கொஞ்சங்கூட கூச்சமில்லாமல் - அச்சமில்லாமல் - இம்மிகூட தயக்கமோ தடுமாற்றமோயில்லாமல் - கொத்திப் பிடுங்குகிற பார்வை. 'அப்படித்தாண்டி பாப்பேன். என்னை எவன் என்ன செஞ்சிட முடியும்?' என்று எகத்தாளமாய்ச் சவால் விடுகிற பார்வை.

கண்டக்டர் திரும்பத் திரும்ப 'படிப்பயணி'களை எச்சரிக்கிறார். ''ஏய்... பச்சைச் சட்டை, மேலே ஏறுதியா... என்ன வேணும்? மேலே ஏறுடா... ராஸ்கல்'' என்று

காட்டமாகச் சீறுகிறார். கெட்ட வார்த்தைகளில் 'சள், புள்'ளென்று விழ ஆரம்பித்து விட்டார். முடிவில்லாத நச்சரிப்பும், தொல்லைகளும் அவரை அப்பிவிட்டன. அவரது இயல்பை - மென்மையை - தின்று தீர்த்து விட்டன.

வடிவுக்கு ஒரு மனசாகவில்லை. வேறு எதிலும் ஒட்ட மறுக்கிற நினைவுகள். வேறு திசைகளில் விட்டாலும் போக மறுக்கிற பார்வை. சதா எந்நேரமும், தான் பார்க்கப்படுவதை உணர்கிற மனசு. முள்முள்ளாய்க் குத்துகிற 'பார்வைப்' பிரமைகள். கொதிப்பும் வேதனையுமாய்க் குழம்புகிற நினைவுகள்.

பஸ்... சத்திரப்பட்டியைத் தாண்டி... சங்கம் பட்டியையும் தாண்டிவிட்டது.

வேல்க்கனி எங்கே இருக்கான் என்று அலைபாய்கிற மனசோடு திரும்பித் திரும்பிப் பார்த்தாள். தட்டுப்பட வில்லை. இடையில் பெரும் உயிர்ச் சுவராக மறித்துக் கொண்டு நிற்கிற ஸ்டாண்டிங் பயணிகள்.

அடாவடித்தனமாக வெறிக்கிற இந்த டிரைவரைப் பற்றி வேல்க்கனியிடம் சொல்லி விடலாமா என்று தவித்தாள்.

அந்த யோசனையிலும் ஒரு நெருடல். தயக்கம்.

வேல்க்கனி ஒரு மதிக்காரன். பாய்ந்தால்... ஒரே பாய்ச்சல்தான். முரட்டுப் புத்தி. யோசிக்க மாட்டான்.

... இப்படித்தான்.

ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு சம்பவம். குழாயடியில் சண்டை. அதில் ஒரு பெண், 'வாய்க்கு வராத'

கெட்ட வார்த்தையில் வடிவை வைது விட்டாள். வெறுங்குடத்துடன் அழுதுகொண்டே வீடு வந்து விட்டாள். அவ்வளவுதான்.

வேல்க்கனி ஒரே கோபச் சீற்றமாய்ப் பாய்ந்தான். வசவுகளும் சண்டையுமாக தெருவே நாறிப் போயிற்று. ஒரே சத்தக்காடு. கைகலப்பாகி விட்டது. போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் விவகாரம் போய்... ஆயிரம் ரூபாய் செலவும், அவமானமுமாய் பிரச்னை முடிந்தது. ரொம்பக் கேவலமாகிப் போய் விட்டது...

பல்லைக் கடித்துக் கொண்டாள் வடிவு. சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள். ஒவ்வொரு ஸ்டாப்பிலும் அவன் பார்க்கிற வெறி. கோயில் மாட்டின் மேய்ச்சல் போன்ற திமிர். சுதந்திரமான பார்வை. அச்சமில்லாத - அத்துமீறலான பார்வை.

இவளுக்குள் கொதிப்பு. காலில் கிடக்கும் செருப்பால் அடித்து விடலாமா என்கிற மூர்க்கம். திமிறத் துடிக்கிற தன்மானச் சிலிர்ப்பு.

அவள் முகமெல்லாம் கடுப்பு. அடைக்கோழியின் சினசினப்பு. மூன்றுபடி பயிறு வறுத்துவிடலாம். அத்தனை கனல் நெருப்புச் சிதறலாய்... 'வெடுக், வெடுக்'கென்று ரெண்டு பார்வை பார்த்தாள், உயிர் அ(று)ந்து போகிற மாதிரி.

டிரைவர் அதற்கெல்லாம் அசந்த மாதிரி தெரிய வில்லை. சுரணையேயில்லாமல் மரத்துப் போனவனைப் போல வெறித்தான். நெஞ்சையும், முகத்தையும் நன்றாகத் திருப்பி, இவளை நேருக்கு நேராகப் பார்த்தான்.

தாராளமான பார்வை. 'இதோ... இவளை நான் பார்த்து ரசிக்கிறேன்... பாருங்கள்' என்று எல்லாருக்கும் காட்டிக் கொள்கிற பார்வை. உதடுகளில் சில பாவனைச்சலனங்கள். மெல்லிய துடிப்புகள்.

வடிவுக்குள் விசுவரூபமாக வடிவம் கொள்கிற பத்ரகாளி. அவனது தலையைத் துண்டித்து, கண்ணில்ஒட்டை போட்டு, கயிற்றில் கோத்து, கழுத்தில் போட்டு ருத்ரதாண்டவம் ஆட வேண்டும்போல... ஒரு தினவு.

கண்டக்டர் பின்னால் யாரையோ கோபமாக அதட்டுகிறார். ''யேய் தம்பி, ஏன் லேடீஸ் பக்கம் போய் இடிச்சுக்கிட்டு நிக்கே? அசிங்கமாயில்லே? ச்சேய்! ஆம்பளைக நிக்குற பக்கம் ஒதுங்கியிருப்பா...''

வடிவுக்குள் ஒரு நினைப்பு. கண்டக்டரையே கூப்பிட்டுச் சொல்லலாமா? 'மொதல்லே... ஒங்க டிரைவரு கண்ணை நோண்டிப் புடுங்குங்க' என்று.

அவளுக்குள் தீ ஜ்வாலைகள்...

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

'ஊரு வரட்டும். இந்தப் பயலை சும்மாவுடக் கூடாது. பஸ்ஸை விட்டு எறங்குறப்ப... இந்த நாயி மூஞ்சிக்கு நேரா, காறித் துப்பிட்டு எறங்கிற வேண்டியதுதான், செருப்பாலடிச்ச மாதிரி...'

ஆலங்குளம் முக்குரோடு. 'மொலேர்' என்று திரண்டு வந்து அப்பிய கூட்டம். வாசல்படியெல்லாம் கால் வைத்துத் தொங்கும் இளவட்டங்கள். 'படியிலே நிக்காதே'

என்று கண்டக்டர் சொல்ல முடியாத நிலைமை. பயங்கர நெருக்கடி.

ஒற்றைக் காலை கடைசிப் படியில் வைத்து, மறுகாலை வைக்க இடமில்லாமல் அந்தரத்தில் மிதக்கவிட்டு... விக்கிரமாதித்த வேதாளமாய்த் தொங்குகிற நாலைந்து பயணிகள்.

பின்னால் ஒரே கூச்சல். சந்தைக் கூச்சல்.

பஸ்ஸுக்கு முன்னால் ஓரங்கட்டி நின்ற லாரி. சிமெண்டு லோடு ஏற்றிய லாரி. தார்ப்பாய் போட்டு, வலைப்பின்னலாய் கயிறு கட்டப்பட்ட லாரி.

அவை எதையும் பொருட்படுத்தாமல் இவளையே வெறிக்கிற டிரைவர். ஸ்டீயரிங்கில் ஒரு கையும், கியரில் ஒரு கையுமாக இவளை இன்னும் அழுத்தமாக கூர்மையாய்... பார்க்கிற திமிர்.

நகர்கிற பஸ், லாரியை நெருங்கத் தயங்கியது. விலகிப் போகவும் போதிய இடமில்லை. பஸ், மெதுவாக ஊர்ந்து, லாரியை நெருங்க,

இவளையே வெறிக்கிற டிரைவர். வெறித்தனப் பார்வை.

''தலைவா...'' என்று சத்தம் போட்டு கண்டக்டரைக் கூப்பிடுகிற டிரைவர்.

''என்ன... பாஸ்?'' அங்கிருந்தே பதில் கூவல்.

''பின்வாசல்லே தொங்குற வெள்ளைச் சட்டையையும் ப்ளூ சட்டையையும் உள்ளே நெருங்கி வரச் சொல்லுங்க.''

''எடமில்லியே... பாஸ். வைச்ச காலை எடுக்கக்கூட முடியலே...''

''உள்ளே வரச் சொல்லுங்கன்னா... சொல்லுங்க... லாரியோட பாடி தட்டினா... என்னாகும்? ரெண்டு பேரும் ஸ்பாட்லேயே சாம்பாரு. தெரியுதா? உள்ளே வந்தாகணும்.'' கண்டிப்போடும் எரிச்சலோடும் அதட்டுகிற டிரைவரின் கோபச் சத்தம். பொறுமை சிதைந்த ஆத்திரம்.

அப்போதும்... இவள் மீதே பார்வை.

பார்வைக்கும், பேசுகிற பேச்சுத் தொனிக்கும் சம்பந்தமில்லை. ஒட்டவில்லை. வேறு வேறு தொனி. அபசுரமாய்...

வடிவுக்குள் பிடிபடாத மர்மம் வடிவமாகாத உருவச் சிதைவு. என்ன இது? என்ன இது?

இவள் திகைப்பும் குழப்பமுமாய் இடது பக்கமுள்ள கண்ணாடியைப் பார்த்தாள். அதற்கும் வெளியே-

நீள்சதுரமாய் ஒரு கண்ணாடி. ரசம் பூசிய கண்ணாடி. 'சைடுமில்லர்.' அந்தச் சிறிய கண்ணாடிக்குள் தெரிகிற பஸ்ஸின் இடது பக்கம் முழுமை. ரெண்டு வாசலுமே தெரியுது.

லாரியைவிட்டு விலகி மெதுவாக ஊர்ந்து... வேகம் எடுக்கிற பஸ்.

வடிவுக்குள் குழப்பமான நினைவுகள்.

இந்தக் கண்ணாடியைத்தான் இந்நேரம் வரைக்கும் பார்த்துக்கிட்டு வந்தாரா? போக்குவரத்து நெரிசல்லே ஏறுற

- எறங்குற - ஆளுகளைக் கவனிக்கத்தான்... இவரு இந்தப் பார்வை பார்த்தாரா? அப்ப... என்னைப் பாக்கலியா?

அடப்பாவி மனுசா, இது தெரியாம ஒன்னைப் பத்தி என்னென்னமோ நெனைச்சி... எப்படியெப்படியோ சபிச்சித் தொலைச்சுட்டேனே... நா ஒரு அறிவு கெட்டவ...

வடிவுக்குள் பரவிய ஒரு வெட்க உணர்வு. ஒரு தப்பும் பண்ணாத அப்புராணி மனுசனை, தப்பிதமாய் நினைத்து விட்டோமே என்கிற உணர்வு. நினைக்க நினைக்க அவளுக்கே கூச்சமாக இருந்தது.

இம்புட்டு நேரமாய் இவளைப் பாடாய் படுத்தி... பலதையும் நினைக்க வைத்து... வாட்டி வதைத்த நினைவுகள். ரணமாக்கிய ஆத்திர உணர்ச்சிகள்.

அதெல்லாம் வடிந்து விலகிய பின்னும்... மனசுக்குள் அதன் நிழலான சுவடுகள்.

ஊர் வந்து, வட்டமடித்து பஸ் நின்றது. கடைசியாக இறங்குவதற்காக எழுந்த வடிவு, டிரைவர் தம்பியின் முகம் பார்த்தாள். ஒரு கனிந்த பார்வையையும் குளிர்ச்சியையும் சிந்திவிட்டு இறங்கினாள்.

ரெண்டையும் உணராத டிரைவர், ஒன்றும் புரியாமல் திகைத்துக் குழம்பினார்... வாழ்க்கையைப் போல.

21-1-96
கல்கி

கூமுட்டை

தொடர்ந்து ஆறு நாள் லீவ். தலைவர்களின் பிறந்த தினம், இறந்த தினம் இவற்றோடு சனி, ஞாயிறு லீவ்களும் சேர்ந்து கொண்டன. வீட்டை நினைக்காமல், சோற்றை நினைக்காமல் பயல்களோடு சேர்ந்து காட்டு வழியில் திரிந்தான், சன்னாசி. எல்லாரும் 'எட்டாப்புப்' பையன்கள்.

காடை முட்டைகள் ஆவாரஞ் செடிக்கு அடியில் இருந்தன. தவிட்டுநிற முட்டைகள். எடுத்தார்கள். ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் இறங்கியதில் நாலு புறாக் குஞ்சுகள். எல்லாத்தையும் சுட்டுப் பொறித்துத் தின்றார்கள்.

அப்பத்தான் ஒரு பையன் சொன்னான். ''திருவேங்கடத்துலே 'பாட்சா' போட்டுருக்கு.''

சன்னாசிக்குள் குப்பென்று சந்தோஷப் பெருக்கு. ''நெசந்தானா? பாட்சாவா?''

''ஆமாங்நே... நான் பொய்யா சொல்லுதேன்?''

''போவமடா...?''

''ஊம்... போவம். துட்டு?''

சன்னாசி இந்த துட்டு விஷயத்தில் வந்து முட்டிக் கொண்டான். யோசித்தான். துட்டுக்கு என்ன செய்ய?

அம்மாவிடம் கேட்டால், விளக்கு மாறால் சாத்தாமல் விடமாட்டாள்.

''கஞ்சிக்கு வழி தெரியாம, கண்ணு முழி பிதுங்கிப் போய் நிக்கேன். ஒனக்கு... சினிமா கேக்குதோ... சினிமா? நம்ம பொழப்பே சினிமாதானே?'' என்று அடைக் கோழியாய்ச் சிடுசிடுப்பாள்.

அம்மா எப்பவும் சிடுசிடுப்புதான். வறுமைத் தீயில் உலர்ந்து போனவள். ஈரக்குளிர்ச்சியேயிருக்காது. எப்பவும் கோபமும் குதறலும்தான்.

மனசுக்குள் பாட்சா சுண்டியிழுத்தார். மனசின் சகல நரம்புகளையும் அதிர வைத்தார்.

''ஹேய்ய்... ஹேய்ய்... ஹேய்ய்'' என்ற சப்த கோரஸுடன் வருகிற பாட்சா. கையை ஒரு ஸ்டைலாய்ச் சுழற்றி 'விஷ்ஷ்'ஷென்ற இரைச்சலோடு 'பாட்சா ஒரு தடவை சொன்னா... நூறு தடவை சொன்ன மாதிரி' என்று ஆவேசமாய்ச் சொல்கிற உக்கிரம்...

சன்னாசிக்குள் ஆர்வத் துடிப்பு.

''ஏலேய்... எப்படி... யாச்சும் போயிருவோம்டா,'' என்று சன்னாசி பரபரத்தான். வைராக்ய முடிவாகவே அறிவித்தான்.

அவர்களுக்குள் பேச்சுவார்த்தை. ஆர்வப் பரபரப்பில் அவசர அவசரமாய்ப் போடுகிற 'குசுகுசு'த் திட்டம்.

வீட்டுக்கு நேராகப் பாய்ந்து வந்தான் சன்னாசி, கவட்டை வில்லிலிருந்து விடுபட்ட கல்லாக. அம்மா இருக்க மாட்டாள். இருக்கவும் கூடாது. கூலி வேலைக்குப் போயிருந்தாள். நல்லதாய்ப் போயிற்று.

வீட்டில் வந்து பார்த்தான். சுறு சுறுவென்று யோசித்தான். அங்குமிங்குமாய் அலை பாய்ந்தான். வெறும் வீடு. 'களவாங்க' ஒன்றுமில்லை. அதுவும்... அம்மாவிடம் பிடிபடாத திருட்டாக இருக்கணும். எதைத் துட்டாக்கலாம்? 'ஹேய்ய்... ஹேய்ய்... ஹேய்ய்...'

வீட்டுக்கு வெளிப்புறத்தில் தாழ்வாரம். எருமை மாடு இவன் வந்த அரவத்தில் 'தட புடா'வென்று எழுந்தது. ஆவல் பரபரப்பில் அதன் கண்கள். சாணத்திலும் மூத்திரத்திலும் நனைந்து சொதசொதப்பாயிருந்த அதன் வாலைச் சுழற்றுகிறது. 'புல் வரப்போகுது' என்ற கும்மாளம் அதற்கு.

புல்லையள்ளிப் போடலாம் என்று நினைத்தான். மாரி மூலையில் காய்ந்து சருகான பழைய புல்குவியல். அதை அள்ளப் போனான். ''குர்ர்ர்ர்... குர்ர்ர்ர்...'' அடைக் கோழியின் எச்சரிக்கையான பயந்த கூப்பாடு.

உடைந்த மண் குடத்தின் கீழ்ப்பாதி. அது நிறைய மணல். அதன்மேல் முட்டைகளை உள்ளடக்கிப் படுத்திருக்கும் கோழி, ரோமங்களைச் சிலிர்த்துக்கொண்டு மறுபடியும் 'குர்ர்ர்... குர்ர்ர்...' ரென்கிறது.

அம்மா, கோழியை அடை படுக்க வைத்து, நாலைந்து நாள்தான் ஆயிற்று. அம்மா சொல்லி... இவன்தான் ஓடைக்குப் போய், குத்துப் பெட்டியில் மணல் அள்ளிக் கொண்டு வந்தான். பதின்மூன்று முட்டைகள். நாட்டுக் கோழி முட்டைகள். செவ்வண்ணம் ஏறிய வெள்ளை முட்டைகள்.

'எப்படியும் ரெண்டு மூனு முட்டைகள் 'கூமுட்டை'யாய்ப் போனாலும்... பத்துக் குஞ்சுக்

பொறிச்சிரும். அதுலே ரெண்டு மூனு குஞ்சுகளை பெராந்து (பருந்து) லாவிக்கிட்டுப் போய்ட்டாலும்... ஏழு உருப்படிக தேறும். அதை ஏவாரிகிட்டே எடைபோட்டு வித்தா... வேலை ஜோலி கெடைக்காத நாலு பொழுதுகளை நல்லபடியா நகத்திக்கிடலாம்.'

இது அம்மா கணக்கு. கனவு. கணக்குக் கனவு.

அம்மா இதைத்தான் பார்க்க மாட்டாள். இன்னும் பதினெட்டு நாளைக்கு தேடமாட்டாள். குஞ்சு பொறித்த பிறகுதான்... 'எண்ணிப்' பார்ப்பாள். அப்பவும்கூட பூனையோ பெருச்சாளியோ தூக்கிட்டுப் போயிருக்கும் என்று நினைத்துக் கொள்வாள்.

சன்னாசிக்குள் 'கியா... கியா... கியா' என்று வெளிச்ச யோசனைகள்.

நாலு முட்டைகளை 'பெராந்தாய்' லாவிக் கொண்டான். டவுசர் பைக்குள் இரண்டையும், மேல்ச் சட்டைப் பையில் ரெண்டையும் பதனமாக வைத்துக் கொண்டான். பறிபோகிற முட்டைகளுக்காக கோழி, 'கேர்ர்... கேர்ர்... கேர்ர்ர்' ரென்று பெருங் கூப்பாடு போட்டு ஆட்சேபித்தது.

இவனுக்குள் இவனைச் சுண்டியிழுக்கிற "ஹேய்ய்... ஹேய்ய்... ஹேய்ய்... பாட்சா... பாட்சா..."

தெற்குத் தெருவில் ஒதுங்கலான மூலையிலிருந்த கடைக்குப் போனான். நாலு முட்டைகள். மூன்று ரூபாய் கிடைத்தது.

போதும். தரை டிக்கட் இரண்டரை ரூபாய். ஐம்பது பைசாவுக்கு அரிசி முறுக்கு. சரியாய்ப் போகும்.

இனி... அம்மாவிடம் அனுமதி மட்டும்தான் வாங்கணும். துட்டுக் கேட்டால்தான், திட்டித் தீர்ப்பாள். அழுகையும் புலம்பலுமாய்க் கண்ணீர் சிந்துவாள்.

''அறுதலி வளர்த்த புள்ளே... தறுதலையாய்ப் போயிரும்னு பெரியவுக சொல்லுவாக. அப்புடி நீ ஆயிரக் கூடாதுடா. செத்தும் தெய்வமாயிருக்குற உங்க ஐயா நெனச்ச மாதிரி... நீ படிச்சு, பெரிய ஆளாக ஆகணும்டா... நீ போற போக்கைப் பாத்தா... சரியாத் தெரியலியே... கனாவுலே தீயை வெச்சுருவே போலிருக்கே...'' என்று 'குண்டக்க மண்டக்க' என்னத்தையாச்சும் அங்கலாய்ப்பாள்.

'கோவணத்தில் முக்கால் துட்டு இருந்தால் கோழி கூப்பிட பாட்டு வரும்' என்பதைப் போல்... பையில் ரூபாய் ஏறியவுடன் சன்னாசியினால் நிதானமாயிருக்க முடியவில்லை. 'தறிய முறிய' விழுகிற மனசு. பறப்பெடுத்துப்போய் பரபரக்கிற உடம்பு.

அம்மா களைவெட்டிக் கொண்டிருந்த புஞ்சைக்குள் ஓடினான். ''மதியக் கஞ்சி குடிச்சீயா'' என்று முதலில் கேட்டாள். இல்லையென்று தலையசைத்தவுடன்... ஒரு பாட்டம் திட்டித் தீர்த்தாள்.

'ஆடுகாலிப் பயலே... எடுபட்ட பயலே... கழுதை பன்னி'யென்று தாறுமாறான வசவுகள். தலை குனிந்து மௌனமாய் பொறுத்துக் கொண்டான். காரியம் ஆகணுமே!

கடைசியில், 'செலவுக்கு சிநேகிதன் பொறுப் பேற்றுக் கொணடான், துணைக்குக் கூப்பிடுகிறான்' என்று

பாணத்தைப் போட்டான். அம்மாவுக்குச் சந்தேகம், ஆயிரம் குறுக்குக் கேள்விகள். எல்லாவற்றுக்கும் ஜோடனையாய்ப் பதில் சொன்னான். தேன் கூட்டை நெருங்குகிற நிதானத்துடன் எச்சரிக்கையுடன் பதில்களைச் சொன்னான். புஞ்சையில் களைவெட்டுகிற பிற பெண்கள் முன்னிலையில், இப்படி நின்று பதில் சொல்கிற அவமானத்தைக்கூட... பாட்சாவுக்காகத் தாங்கிக் கொண்டான், சன்னாசி.

''சாயங்காலம் வந்துருவேன். சாப்ட்டுட்டுப் போடா. பறப்பெடுத்துப் போய் வெறும் வவுத்தோட போயிராதேடா...''

''ஆட்டும்.''

புஞ்சையிலேயிருந்து ஒரே ஓட்டம். காலுக்குச் சக்கரம் கட்டிவிட்ட மாதிரியான பாய்ச்சல் வேக ஓட்டம். மனசுக்குள் 'பாட்சா' குஞ்சுகள். முட்டையோடுகளை மூக்கால் கொத்திக் கொத்தி உடைத்துவிட்ட குஞ்சுகள். சூரிய உலகைப் பார்க்கப் போகிற ஆவல் பெருக்கு. 'கியா... கியா... கியா' வென்று கீச்சிடுகிற மனத் தத்தளிப்பு.

வீடு வந்து சேர்ந்தான். இருப்பதில் கிழிசலில்லாத டவுசர், அந்தச் சாம்பல் கலர் டவுசர். சிமெண்ட் கலர் சட்டை. ரெண்டுமே ஏழுகோட்டை அழுக்கோடு கிடந்தது. எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

எடுத்துக் கொண்டு கிணற்றுக்குப் போனான். சோப்பு இல்லை. வாங்கினால் காசு குறைந்து விடும். நனைத்து... வெறுமனே துவைத்தான். 'டபா...ர்... டபா... ர்'ரென்று கிணறே அதிர்கிற மாதிரி ஓங்கியடித்தான். குளித்தான்.

துணிமணியை காயப் போட்டான். என்னத்தையோ வட்டிலில் கொஞ்சம் சோற்றைப் போட்டு... ஒரு கடமையை முடித்தான். கூடச் சேர்ந்து திட்ட மிட்ட பையன்களைப் போய்ப் பார்த்தான். சொல்லியிருக்கிற ஜோடனைகளைப் பேசிக் கொண்டனர். பொய் சொன்னாலும்... பொருந்தச் சொல்லணுமே, அதுக்காக.

'எந்நேரம் புறப்பட.... எப்படிப் போக... எந்த பாதையில் போக...' என்று எல்லா விஷயங்களையும் நுட்பமாகப் பேசி திட்டம் போட்டு முடித்தனர்.

வந்தவுடன்... சட்டைகளைத் தொட்டுப் பார்த்தான், 'உலர்ந்து விட்டதா' என்று. இன்னும் மிச்சமாய் ஈரம். டவுசரையும், சட்டையையும் திருப்பிப் போட்டான். எண்ணெய்ப் பாட்டிலில் ஒட்டியிருந்த எண்ணெயை வழித்து வழித்துத் தேய்த்துக் கொண்டான்.

ம்... எல்லாம் ரெடி. அம்மாதான் வரணும். மனசு கிடந்து தவித்தது. 'எப்ப வருவாள். எப்ப வருவாள்' என்று அம்மா வரும் திசையையே கவனித்தான்.

ஆயிற்று. அம்மா சொன்ன ஆயிரம் எச்சரிக்கைகள். 'பார்த்துப் போடா... இருட்டு...' 'கல்லு கில்லு எத்திராமப் போ...' 'காலைத் தூக்கி வைச்சுப் போ...' 'வர்ரப்ப இருட்டு. பூச்சி பொட்டு எதுவும் இருக்கும்.' 'பாத்து பத்திரமா வாடா.'

பாசப் பதைப்பில் அம்மா சொன்ன எல்லா வற்றுக்கும் எரிச்சலும் பதற்றமுமாய் 'ம்' போட்டுவிட்டு... புறப்பட்டான், சன்னாசி.

அஞ்சு மணி. பொழுதுக்கால் அடிச் சாய்ந்துவிட்டது. மஞ்சள் வெயில். நிழலைக் கிழக்காமல் இழுத்துக்கொண்டு போயிற்று.

நாலுபேரும் கூட்டாய்க் கிளம்பினார்கள். நடைதான். திருவேங்கடம் மூன்று மைல். கரிசல் காட்டுப் பாதை. ஒற்றையடித் தடம். எள்ளுச் செடிகளும், தட்டாங் கொடிகளும், கம்பந் தட்டைகளுமாய் சமுத்திரமாய் பரந்து கிடக்கும் கரிசல்க்காடு. உச்சி வகிடெடுத்த மாதிரி நீள்கிற வெள்ளைப் பாதை.

பேச்சும் சிரிப்புமாய், ஓட்டமும் பாட்டமுமாய் பயணம். கதை சொல்ல முனைந்த ஒரு பையனை அதட்டியடக்கினான் சன்னாசி, ''அதான்... பாக்கப் போறோம்லே?'' என்று.

கரிசல்க்காடு முடிந்தது. ரெண்டு ஓடைகள். விழுந்து எழுந்தால்... கம்மாய்க்கரை. நீளமான கரைப் பாதை. கரையின் முதுகில் நடக்கணும். இது சன்னாசிக்கு ரொம்பச் சந்தோஷம். தரையிலிருந்து உயரமான கரையின்மேல் நடை. உப்பங்காற்று வந்து மோதும். சட்டையைப் பறத்தும். முதுகுச் சட்டையை உப்ப வைக்கும். மலையின் முகட்டில் நடக்கிற மாதிரியான நினைவு மயக்கம். மேகங்கள் காதோரமாக உரசிக் கொண்டு போவதைப் போன்ற பிரமை...

கரை முடிகிற இடத்தில்... ஒரு ஆறு. கடந்தால்... திருவேங்கடம்.

கரையில் பாதி தூரம் கடந்திருப்பார்கள். பொழுது அடைந்துவிட்டது. புறவெளி முகம் கறுக்கத் தொடங்கி விட்டது.

தூ... ரத்தில் தியேட்டரில் பச்சை விளக்கு கண் விழிக்கிறது. 'வாதா.. பி கணபதி' என்று இசைத்தட்டுப் பாட்டின் ஒலி, உப்பங்காற்றில் மிதந்து வந்து எதிர்கொள்கிறது. சன்னாசிக்குள் பதற்றம். 'படம் போட்டுட்டாங்களோ...'

அம்புட்டுத்தான்.

மனசின் பதைப்பு கால்களுக்கும் இறங்க... ஒரே ஓட்டம்தான். 'நா முந்தி நீ முந்தி'யென்று நாயோட்டம். 'கேது, கேது' என்று இளைக்கிறது. நெஞ்சுக்கூடு காந்துகிறது. உலர்ந்து போன நாக்கு. உறைந்து போன எச்சில், மூச்சு முட்டியது. எதையும் பொருட்படுத்த வில்லை. ஓட்டம், ஓட்டம், ஒரே ஓட்டம். 'ஹேய்ய்... ஹேய்ய்... ஹேய்ய்... பாட்சா... பாட்சா... பாட்சா...'

கவுண்டர் வாசலில் முதல் ஆட்களாக நின்றுகொண்ட சிறுவர்கள். டிக்கட் வாங்குவதற்குள் கசங்கிக் கிழிந்து போன காகிதங்களாகிப் போயினர். வந்து திரைக்கு முன்னால்... மணல் கூட்டி உட்கார்ந்தனர்.

படம் முடிந்து வெளிவருவதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிவிட்டது. பசி வேறு. அரிசி முறுக்கு குடலுக்குள் போன மாயம் தெரியவில்லை. பசியும் வந்தது. உறக்கம் அதற்கும் மேல் வந்து அமுக்கியது. மணி பத்தரையாகிவிட்டது.

திரும்பி நடந்து வருகையில்-

வீடு வந்து சேர்வதற்குள்... போதும் போதும் என்றாகி விட்டது. சன்னாசி மனசுக்குள் வருந்தினான். 'சேய்! முட்டாத்தனமா ஆசைப்பட்டுட்டோம்...' என்று சங்கடப்பட்டான்.

வந்தவன்... பேசாமல் படுத்துவிட்டான். அடித்துப் போட்ட நாயாக, உறங்கிப் போனான். சாப்பிடவுமில்லை; ஒரு இழவும் கூட்டவுமில்லை.

நேற்று இரவு-

குருணை அரிசி கிடைக்காமல் கடைகடையாய் அலைந்ததும், தெற்குத் தெரு கடையில் போய் குருணை வாங்கியதும்... அப்போது, ''ஒம் மகன் குடுத்த முட்டைகள்லே ஒன்னு கூமுட்டையாயிருக்கு'' என்று கடைக்காரர் திருப்பிக் கொடுத்ததும்...

இந்தக் கதையெல்லாம்... சன்னாசிக்குத் தெரியவே தெரியாது.

விடிந்தது.

அவன் கண்விழிக்கிறபோது, மூஞ்சியில் சுள்ளென்று காலை வெயில் அடித்தது. உடம்பெல்லாம் முறுக்கிப் பிழிகிற வலி. கால் முழுக்க குத்திக் குடைகிற உளைச்சல். ரெண்டு மூனு தடவை 'முறிச்சு, முறிச்சு' கொடுத்தான். அப்புறம்தான் மெல்ல எழுந்தான். கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்தால்-

எதிர்ச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு, அழுது கொண்டிருக்கிற அம்மா. அவளது கன்னங்களில் மாலை மாலையாய் நீர்க்கோடு. முகத்தில் இருள்படிந்து கிடக்கிறது.

அம்மாவா... இது!

தாங்க முடியாத சோகத்தை சகிக்கிறவள் போல... அடிஉதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா... என்னம்மா...'' பதறிப் பதைத்துப் போய்க் கேட்டான்.

''ஒன்னுமில்லேப்பா... நான் நல்லவரம் வாங்கி வரலை. என் வவுத்துலே நல்ல புள்ளை வந்து பொறக்கலை. பொறந்த ஒரு புள்ளையும் கூமுட்டையாயிப் போச்சு. கூத்துவன் பண்ற கொடுமைக்கு, நீ என்ன செய்வே...?''

சபிக்காத அம்மா. எரிந்து விழாத அம்மா. கோபமில்லாத புது அம்மா. தன் விதியைத் தானே நொந்து கொள்கிற சுய பச்சாதாப அம்மா. அவலமும், சோகமுமாய் அடிமன ஆத்மாவின் புலம்பலாய்... அம்மா.

''ஏண்டா... பெத்த தாய்கிட்டே புள்ளை பொய் சொல்லலாமாடா? சொந்த வீட்லேயே களவாங்கலாமாடா?''

கசங்கியழுத மன வேதனையோடு குழைவாகக் கேட்கிற அம்மா.

சன்னாசிக்குள் பூரான் ஊர்கிற மாதிரியோர், உணர்வவஸ்தை.

''என்னமோ... ப்பா, உங்க ஐயா பேரைக் காப்பாத்துற மாதிரி நீ உருப்படியானா... எனக்கு நிம்மதி. இல்லேன்னா, ஒம்பாடு, கூத்துவன் விட்ட வழிப்படி... நடக்கட்டும்.''

கோழியின் காலடியில் மிதிபட்ட குஞ்சின் முணங்கல் போலத் தோன்றியது. சன்னாசிக்கு அம்மாவின் ஆத்மாவை மிதித்தது... என் காரியந்தானா?

''ஊம்...! போடா. அலைஞ்சு அலுத்துப் போய் வந்துருக்கே. வெண்ணி போட்டு வைச்சிருக்கேன். போய்க் குளிச்சிட்டு வா... சாப்புடு.''

பெருமூச்சில் மனசின் ரணத்தை ஆற்றிக் கொண்டு எழுந்திருக்கிறாள். கன்னத்தில் தொங்கி கண்ணீரில் நனைந்த கற்றை ரோமத்தை ஒதுக்கிவிட்டுக் கொண்டு, அடுப்பங்கரைக்குள் நுழைகிற சோக ஓவியம்.

வெந்நீரை அள்ளி மேலே ஊற்றினான். ரணப்பட்ட உடம்பில் தாயின் பாசமாய்த் தழுவிக் கதகதப்பூட்டுகிற வெந்நீர். அவனுக்குள் என்னென்னவோ பிரளயம்.

என்ன கழுதையோ... தெரியவில்லை, சன்னாசிக்கு. 'ஓ'வென்று வாய்விட்டுக் கதறியழ வேண்டும் போலிருந்தது. மேலே ஊற்றுகிற வெந்நீரில் அவனது கண்ணீர்க் கசிவும் கலந்து... அவனது கசடுகளைக் கழுவிக் கொண்டிருக்கிறது.

ஏப்ரல் 96 குமுதம் ஸ்பெஷல்

கலர்க்கலராய் ஆசை

ஆறாங் கிளாஸில் இருக்கிற ஆறுமுகத்துக்கு 'காய்ச்சல் வரவில்லையே' என்று வருத்தம் என்றால்... வருத்தம், அப்படி வருத்தம்.

'ஐயோ பாவம்' என்று நாலுபேர் பரிதாபப்படுகிற மாதிரி... ஏதாச்சும் நோய் வந்தால் நல்லது. நோயைத் தீர்க்க ஊசி மருந்து இருக்கிற மாதிரி, நோயை வரவழைக்க ஏதாச்சும் வழி வகை இருக்கிற மாதிரி தெரியவில்லை, ஆறுமுகத்துக்கு. தெரிந்தால்... செய்து கொள்வான்.

மதியம் ரெண்டு மணிக்கு இங்கிலீஷ் வாத்தியார் வந்துவிடுவார். நேற்றே கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

''நாளைக்கு 'ஃபார் வாண்ட் ஆப் ஏ நெயில்' போயமை மனப்பாடமா ஒப்பிக்கணும். படிச்சுட்டு வாங்க. எவனாச்சும் ஒப்பிக்கலே...? இந்தா இருக்கு பிரம்பு. முதுகுத் தோலு பிய்ஞ்சு போகும்.''

அவர் பிய்க்கிறவர்தான். அடித்தார் என்றால் நாயடி பேயடிதான். வகுப்பில் ரொம்பக் கண்டிப்பானவர்.

ஆறுமுகமும் நேற்று பூராவும் இங்கிலீஷ் புத்தகத்துடன் மல்லுக்கட்டிப் பார்த்தான். ராத்திரி பத்துமணி வரைக்கும் உருப்போட்டுப் பார்த்தான், ஊஹூம்!

''பார் வாண்ட் ஆப் தி ஹார்ஸ்'' பிடிபட்டால், ''தி ரைடர் வாஸ் லாஸ்ட்'' நழுவிக் கொள்கிறது. ஒரே வார்த்தை ரெண்டு வாக்கியங்களில் மாறி மாறி வரும். அது, ஆறுமுகத்தைக் குழப்பிவிடும். ஞாபகத்தில் பிடிபட்டிருந்த வாக்கியக் குருவியைப் பறக்க விட்டு விடும்.

வாத்தியார் வந்து கேட்பார். என்ன சொல்ல? எப்படிச் சொல்ல? அதுதான்... குதிரை றெக்கை விரித்துப் போய் விட்டதே... ஆணியுமில்லாமல், சாம்ராஜ்யமுமில்லாமல், சூன்யமாய்...

நிச்சயமாய் மப்பைக் கழட்டி விடுவார். பிரம்பு, தீச்சாட்டையாய் 'பளீர், பளீ' ரென்னும். அதை நினைத்தால், இப்பவே வயிற்றில் 'பகீர், பகீர்' ரென்கிறது.

என்ன செய்ய? காய்ச்சல் கீய்ச்சல் வந்துவிட்டால், தொல்லை கழிந்து விடும். வீட்டுக்குப் போய்விடலாம். இந்த நெயில் என்கிற இங்கிலீஷ் லாட ஆணி முகரையில் முழிக்காமல் தப்பித்து விடலாம்.

காய்ச்சலும் வரல்லியே... ஆறுமுகத்துக்கு தர்ம சங்கடமாக இருந்தது. மணி பன்னிரண்டை நெருங்குகிறது. தமிழய்யா இலக்கணத்தில் 'எழுவாய் பயனிலை' விளக்குகிறார்.

ஆறாம் வகுப்பு மட்டும் வெட்ட வெளியில். இடமில்லை. பள்ளி வளாகத்தில். வேப்ப மரத்தடியில். மரத்தை சுற்றி வட்டமாய் சிமெண்டுத் திண்ணை. அதில் ஆசிரியரும் கரும்பலகையும். பிள்ளைகள் மணலில்.

இங்கிருந்து பார்த்தால்... கடை நன்றாகத் தெரியும். வெள்ளையும் சொள்ளையுமாக ஏழெட்டுப் பேர்.

அவர்களை வரவேற்கிற பரபரப்பில் உள்ளூர்க்காரர். கடையிலிருந்து கலர்களை வாங்கி உடைத்துக் கொடுக்கிற விறுவிறுப்பு.

கலர் உடைக்கிற சத்தம். கலர் மூடிகள் விழுகிற 'கலீர், கலீர்' சத்தம். ஆறுமுகம் மனசுக்குள் கலர்ப்பானத்தின் வாசம். உடைத்தவுடன், பாட்டிலுக்குள்ளிருந்து திமிறிப் பீறிடுகிற நுரை. எழுகிற புகை இழைகள்.

இவனுக்குள் கலர்ச் சபலம். நாக்கில் எச்சில் ஊறுகிறது. கலர் குடித்தவுடன் ஒரு ஏப்பம் வருமே... நெஞ்சின் முட்டலைப் பிளந்து கொண்டு வருகிற ஏப்ப வாசம்.

ஆறுமுகம் வீட்டுக்கு விருந்தாளி ஒருத்தர் வந்திருந்த சமயத்தில், அம்மா சொன்னாள்.

''ஏலேய் ஆறுமுகம், கடையிலே போய் ஒரு கலரு வாங்கிட்டு வாடா. ஓடுறா.''

''கோலிக் குண்டு கலரா... டப்பா மூடிக் கலரா?''

''நல்ல கலரா பார்த்து கேட்டு வாங்கிட்டுவா.''

''எம்மா...''

''என்னடா? போடா, வெருசா.''

''எம்மா, எனக்கும் ஒன்னு.''

''சரி சரி... வாங்கிக்கோ.''

அம்மாவுக்கு விருந்தாளியை உபசரிக்கிற பரபரப்பு அவசரத்தில் இவனுக்கும் அனுமதி கிடைத்துவிட்டது. அன்றைக்கு குடித்த கலர்.

மடக்கு மடக்காக அனுபவித்து ரசனையோடு குடித்தான். கருந்திராட்சை நிறத்திரவம். வந்த ஏப்பத்தில் திராட்சை மணம்.

நாக்கை நீட்டி நீட்டி கண்ணாடியில் பார்த்தான். அந்தத் திரவ நிறம் நாக்கில் படிந்திருந்தது. பார்த்துப் பார்த்து ரசித்தான். ரசிக்க ரசிக்க மனசுக்கு றெக்கை முளைத்தது. பறந்தான்.

ஆறுமுகத்துக்கு இன்னைக்கு கலர் குடிக்கணும் போலிருந்தது. நினைக்க நினைக்க நாக்கில் ஊறுகிற எச்சில். விதையாக விழுந்த கணத்தில், விருட்சமாகி விடுகிற விநோத உணர்வு. ஆசைச் சலனம், விருட்டென்று பேரலையாகிறது. பிரளயமாகவே ஆகிவிட்டது.

எழுந்து நின்றான், ஆறுமுகம். நேராக நிமிர்ந்து நிற்காமல் குன்னிப் போயிருந்தான். தமிழய்யா அவனைப் பார்த்தார்.

''என்னலே?''

''சார்... வவுத்தை வலிக்குது'' அடி வயிற்றை அழுந்தப் பற்றினான்.

''எப்ப இருந்து?''

''அப்பவே வலிச்சது சார். இப்ப ரொம்ப வலிக்குது சார்... தாங்க முடியலே சார்.''

''சரி என்ன செய்யப் போறே? வீட்டுக்குப் போறீயா?''

''ஆமா... சார்.''

''ரைட். ஹெட்மாஸ்டர் கிட்டே சொல்லிட்டுப் போ.''

பைக்கட்டை தூக்கிக் கொண்டு ஹெட்மாஸ்டர் அறைக்கு வந்தான். அங்கேயும் அதே நடிப்புதான். வேதனை தாளாத முகச்சுளிப்பு. அடிவயிற்றைத் தாங்கிப் பிடித்து கோணி நின்ற பாவனை.

''சரி... போய்த் தொலை.''

இங்கிலீஷ் வாத்தியாரைச் சந்திக்காமல் தவிர்த்தாகி விட்டது. போயம் தெரியாமல், பேய் முழி முழிக்க வேண்டியதில்லை. பிரம்படியின் சுளீரடிகள் பட வேண்டியதில்லை. தப்பித்தாகி விட்டது.

இதே வயிற்றுவலியைச் சொல்லி... அழுது புலம்பி அம்மாவைக் கரைத்து... கலர் குடித்துவிடவும் செய்யலாம். ஒரே கல். ரெண்டு காரியம். அடி சக்கை!

அம்மா வீட்டில்தான் இருப்பாள். கூலி வேலைக்கும் நாலு நாளாய் கூப்பிடுவாரில்லை. காலையில் கூட அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

''கூத்துவன் பண்ணுற கொடுமை. மழை தண்ணி யில்லாம அத்துப் போச்சு. காடுகரைகள்லே வெள்ளாமை யில்லே. மனுச மக்களுக்கு வேலை ஜோலியில்லே. கூலி சனம் என்னத்தை வைச்சு... வவுறு நனைக்க?''

கடைக்காரர் கடன் கொடுக்க மலைத்தாராம். 'பாக்கி ரொம்ப இருக்கு. எப்படி கொடுக்க?' என்று குதர்க்கமாய் விசாரித்தாராம். அம்மா அதைச் சொல்லிச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

'ஏவாரி வரட்டும். இருக்குற நாலு கோழிகளையும், ஒரு சேவலையும் எடை போட்டு வித்துட்டு... கடைக்காரர்

பாக்கியை அடைக்கணும்' என்று ரோஷம் ரோஷமாய் முணங்கினாள். இந்நிலையில்...

''எம்மா... கலரு வேணும்'' என்று கேட்டால்... ஆங்காரம் தாங்காமல், அடிக்கவே வருவாள். செத்துப் போன அய்யாவை படைத்த சாமியை - வாய்த்த வாழ்க்கையை - எல்லாத்தையும் கூட்டிப் பிடித்து திட்டித் தீர்ப்பாள்.

''தாய் தவுட்டக்கு அலைஞ்சாளாம். புள்ளை இஞ்சிப் பச்சடி கேட்டு அழுதானாம். அப்படியில்லே இருக்கு உங்கதை'' என்று சொலவடை சொல்லி வைவாள்.

ஆனாலும்... இன்னைக்கு எப்படியாச்சும் கலர் குடிச்சேயாகணும்.

ஆறுமுகத்துக்குள் பதுங்கிப் பதுங்கி நகர்கிற யோசனைகள். குறி மீது பாய்ச்சலுக்கு பம்மிப் பம்மி நகர்கிற பூனை நினைவுகள்.

வீட்டுக் கதவு திறந்து கிடந்தது. வாசலில் தலை வைத்து அம்மா படுத்திருந்தாள். அம்மாவின் மெல்லிசான குறட்டை.

இவனது பிஞ்சுக் காலடி அரவம். மண்ணில் செவ்வந்திப் பூவிழுகிற சத்தம். ஆனாலும் மகன். ரத்தப் பிறப்பு. அந்த மெல்லிய அதிர்விலேயே விழித்துக் கொண்டாள்.

பைக்கட்டோடு ஆறுமுகம். அவள் பதறவில்லை. பதைக்கவில்லை. என்னமோ ஏதோ என்று துடிக்கவு மில்லை. பிள்ளை குணம் அறியாத பெத்தவளா?

எதிர் வீட்டு நிழலைப் பார்த்து, நேரத்தை உணர்ந்து கொண்டாள். மகனைப் பார்த்து கேலிச் சிரிப்பாய் வரவேற்றாள்.

''போன மச்சான் திரும்பி வந்தான்... பூமணத் தோடங்குற கதையா வந்து நிக்கீயே... என்னலே?''

''வாத்தியாரு போகச் சொல்லிட்டாரு.''

''எதுக்கு?''

''வவுத்தவலி.''

''வாத்தியாருக்கு வவுத்தவலின்னா... ஒன்னை எதுக்குப் போகச் சொல்லுதாரு? கோயமுத்தூர்லே இடி இடிச்சா... குத்தாலத்துல மழையா பெய்யும்?''

பைக்கட்டை வீட்டுக்குள் போட்டான். அம்மா காலடியில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்து சுவரில் சாய்ந்தான். அம்மாவின் கிண்டலில் புண்பட்டவனைப் போல, முகத்தில் ஒரு சிடுசிடுப்பு.

''வாத்தியாருக்கில்லே... எனக்குத்தான்.''

''ஒனக்கா? வவுத்தவலியா?''

''ஆமா. அடிவவுத்துலே 'சுருக், சுருக்'குன்னு குத்துது.''

''கோழிக்கறியும் சோறுமா தின்னுட்டுப் போனே? கொடல்லே குறுக்கே வுழுந்து வவுத்தை வலிக்க? பழைய கஞ்சிதானே குடிச்சிட்டுப் போனே?''

''ஆமா...''

''பெறகெதுக்கு வவுத்தவலி?''

''என்னத்துக்கோ!''

ஆறுமுகத்துக்குள் ஒரு புழு ஊர்ந்து செல்கிற மாதிரியான ஓர் உணர்வு. அம்மாவின் நக்கலும் நையாண்டியுமான குரல். இவனை நம்பவில்லை. இவன் ஏமாற்றில் ஏமாறாமலிருக்கிற அம்மா.

கலர் கிடைக்காமப் போயிருமோ... கதை கந்தலாகிப் போகுமோ... கடை வாசலில் வெள்ளை வேட்டிகள் குடித்த திரவம். அன்னைக்குக் குடித்த கலர். விட்ட ஏப்பம். மனசுக்குள் சோடா மூடிகள் விழுந்த 'கலீர் கலீர்' சத்தம்.

''அப்ப... வவுத்தவலிக்கு? ஊம்?''

''ஆமா. தாங்க முடியலே.''

''இன்னிக்கு 'வெளியே' போனீயா?''

''ம்.''

''போனதா?''

''அதெல்லாம் போச்சு.''

''அப்படியா...?'' அம்மா யோசிக்கிறாள். சில கணங்கள் இவனுக்குள் 'படக், படக்.'

''அஞ்சறைப் பெட்டியிலே ஒரு சுக்குத் துண்டு கெடக்கு. அம்மியிலே வைச்சு உணுக்கித்தாரேன். சக்கரைக் கட்டியைக் கடிச்சுக்கிட்டு தின்னுரு. வவுத்தவலி, மாயமாய்ப் போயிடும். ம்?''

''சுக்கா? அதெல்லாம் வேண்டாம்.''

''ஏண்டா?''

''அது ஒறைக்கும். அந்த ஒறைப்பை எவன் தாங்க?''

''வலிவுடணும்னா... ஒறைப்பை தாங்கித்தான் ஆகணும். விழுந்த பொதியை, சொமந்துதான் தீக்கணும் கழுதை.''

மகன் முகத்தையே பார்க்கிற அம்மா. விசனப்பட்ட சின்ன முகம். வயிற்றையே நசுக்கி அமுக்கி விடுகிற கை. கோபமும், வேதனையுமான முகம். 'நிஜத்திலேயே... வவுத்தவலி தானோ...''

பெருமூச்சோடு எழுந்தாள். புளித் தண்ணீர்ப் பானையில் ஒரு கிளாஸ் முகர்ந்து கொடுத்தாள்.

''குடிடா... சூட்டு வவுத்த வலின்னா... வுட்டுரும்.''

''வேண்டாம்... போ.''

''சுண்ணாம்பை கால் வெரல் நகங்கள்லே தடவட்டுமா? உள்ளங்கால்லேயும் தடவுனா... சூடு தணிஞ்சிடும்.''

''சுண்ணாம்பா? பொத்துப் புண்ணாப் போயிடும்.''

''வெத்தலையிலே சோத்துக்குப் போடுற உப்புக் கல்லை சுத்தித்தாரேன். மென்னு முழுங்குறீயா?''

''நீதான் முழுங்கு... அதை.''

சகிக்க முடியாத வெறுப்பில் எரிந்து விழுகிற ஆறுமுகம். அவனது சின்னக் கண்ணில் கோபத் தகிப்பு. நிராசையின் அரூபச் சுமையை முன்னுணர்ந்து விட்ட வலியின் துடிப்பு. அம்மாவுக்கு மெல்லிசான கோபம்.

''என்னதான்... செய்யணும்கே? வவுத்தவலின்னு வந்து நின்னு, உசுரைப் புடுங்குறே?''

"சோடா குடிச்சா சரியாப் போவும்!"

"சோடாவா... கலரா...?"

ரெண்டு பேர் பார்வைகளும் திடுமென்று மோதிக் கொண்டன. கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்த மைய உண்மையை நெருங்கி விட்ட மாதிரியோர் உணர்வு.

அந்தரங்கம் பிடிபட்டுப் போச்சோ என்கிற தடுமாற்றத்தில் விலகுகிற மகனின் பார்வை. அவன் கண்ணுக்குள் முகம் காட்டிவிட்டு மறைகிற ஒரு கள்ளத் தனம்.

"சொல்லுடா... சோடாவா, கலரா...?"

"ஏதாச்சும் ஒன்று."

முணுமுணுப்பாக கிசுகிசுக்கிற ஆறுமுகம். தொண்டைக்குள் உயிராக பம்மிப் பதுங்கிற குரல்.

"கடையிலே போய்... வாங்கிக்கறியா?"

"அப்ப... துட்டு குடு."

"ஊம்... சாயங்காலம் பால் வாங்கலாம்னு வைச்சிருந்தேன். அதுக்கும் சனியனா நீ வந்துட்டீயா?"

கவலைப் பெருமூச்சோடு... முந்திமுடிச்சை அவிழ்த்தாள். ஒன்னரை ரூபாய். எடுத்து நீட்டிவிட்டு... வெறும் முந்தியை உதறினாள். கடந்த கால முடிச்சின் அடையாளமாய் சுருக்கங்கள். வெறுமனே காற்றில் அசைந்தது. சோகமாய்.

துட்டை வாங்கிக் கொண்டான். அவனுக்குள் றெக்கையடிக்கிற சந்தோஷப படபடப்பு. விசிலடிக்கிற மனப் பரபரப்பு.

ஒரே ஓட்டமாய் ஓடினான். சிட்டாய்ப் பறந்தான். ஆகாயத்தில் மிதக்கிற ஆனந்தக் கிறுகிறுப்பு.

ஆசை ஆசையாய் ஓடினான். அவனுக்கும் முன்னால், அவன் மனசு. பாய்ச்சல் வேகத்தில் கடையில் நின்றான். கலர் வாங்கினான். ஆசை ஆசையாகக் குடித்தான். ஆரஞ்சுக் கலர். மிடறு மிடறாக, பதறாமல், ஆற அமர... ரசித்து ரசித்துப் பருகி...

நாக்கில் பரவுற தித்திப்பு. வருகிற ஏப்பம். நாசிக்குள் முட்டுகிற ஆரஞ்சு வாசம். நாக்கில் படிந்திருக்கும் திரவ நிறத்தைப் பார்க்கணும், கண்ணாடியில் வீட்டுக்கு ஆவலாய் வந்தான். வாசலை நெருங்கினான் அங்கே-

சோகத்தில் நனைந்து துவண்டு போன அம்மாவின் அங்கலாய்ப்புக் குரல். அழுகைக் கசிவான குழைவுக் குரல். தனிமைப் புலம்பல்.

''நாவுக்கு ருசியா நாலு பண்டங்க வாங்கிக் குடுக்குறதுக்கு வக்கத்துப் போன இந்தப் பாதகத்தி வவுத்துலே வந்தா... நீ பொறக்கணும்? ஏந் தங்கப் பெட்டி... ஒரு கலருத் தண்ணிக்கு இம்புட்டு வேஷமும் பாவ்லாவுமா... நீ போடணும்?''

வாழ்வின் அவலமாய் அம்மாவின் குரல். ஆறுமுகத்தை கற்றையாய் அறைந்த அம்மாவின் உள் மன ரணம். இப்போது கலர் கசந்தது, ஆறுமுகத்துக்கு.

10-3-96 கல்கி

தாய்மை

ரொம்ப நாளாயிற்று அந்தச் சங்க ஆபீஸுக்குப் போய். நாளாயிற்று என்று சொல்வதுகூட பொருத்தமில்லை. வருஷமாயிற்று என்றுதான் சொல்ல வேண்டும். நாலைந்து வருஷமிருக்குமா? கூடுதலாகவே இருக்கும்.

வெறுப்பும் பகையுமாக நீண்ட பெரிய இடைவெளி. கோபதாபங்கள். முகத்திருப்பல்கள். பார்வை முறைப்புகள். திருகல்முறுகலாகிப்போன உறவு, சுத்தமாக அற்றே போய்விட்டது.

இன்றைக்குப் போய் அந்த வாசல் படியை மிதித்தாக வேண்டிய கட்டாயம். அந்தச் சங்க அலுவலகத்துக்குள் நுழைந்தாகணும். அங்கிருக்கும் தோழர்களுடன் முகம் கொடுத்து பேசியாகணும்.

ராசேந்திரனுக்கு என்னவோ போலிருந்தது. தர்ம சங்கடமான தவிப்பு. மனசுக்குள் புழு நெளிந்தது. மலை போல மறித்துக் கொண்டு நிற்கிற கூச்சம். குற்ற உணர்வில் விளைந்த வெட்க உணர்ச்சி.

போக வேண்டிய கட்டாயம் வந்து மென்னியைப் பிடித்துக் கொண்ட பிறகுதான், போகாமலிருந்த நாட்களும், நடந்த நிகழ்வுகளும் ஞாபகத்தில் உரசுகின்றன. துருப்பிடித்த தகர உரசல் போல காந்துகிற மனசு. அலை

அலையாகப் புரண்டு வருகிற கசப்பு உணர்வுகள். வயிற்றுக்குள் குடலைப் புரட்டுகிற வேப்பெண்ணெய் அலைகள்.

முறித்துக்கொண்ட நாட்களின் நினைவுப் பாய்ச்சலில் குமட்டிக் கொண்டு வந்தது. முறிவின் கசப்பை முறித்து விட மனசு கிடந்து ஏங்கியது. அந்த ஏக்கம் உறவு நாட்களை நோக்கி தன் போக்கில் பாய்ந்தது. சங்க ஆபீஸுக்கு உறவோடும் உரிமையோடும் போய் வந்த நாட்கள். அந்த நாட்களின் அந்நியோன்யம். இழைந்த பாசம். மனசும் சொற்களுமாக கலகலப்பு.

''வாங்க தோழர் வாங்க... இப்பத்தான் வாரீகளா?''

''ஏழு டீக்குத்தானே சொல்லியிருக்கீக? ராசேந்திரனுக்கும் சேத்து எட்டா சொல்லிருங்க.''

''டீ சாப்பிடுங்க. ரெண்டு போர்டு கட்ட வேண்டியிருக்கு. நானும் வாரேன். தூக்கிக்கிட்டுப் போய் கட்டிட்டு வந்துருவோம்.''

செயற்கையற்ற வரவேற்பு. தன்னியல்பான உபசரிப்பு. பரஸ்பரம் தோழமையான வேலைப் பகிர்வு. உத்தரவிடுகிற அதிகாரத் தோரணை துளிக்கூட இருக்காது. தலைவர். தொண்டர் பேதம் இருக்காது. எல்லாப் பணிகளிலும் எல்லாத் தோழர்களும்...

ஆபீஸுக்குள் எப்போதும் கலகலப்பு, உயிர்ப்போடு இருக்கும். கேலியும், கிண்டலுமான மன வெளிச்சம். உணர்வைக் காயப்படுத்தாத தோழமையான கோபச் சீறல்கள். உஷ்ணமில்லாத கோபங்கள். குளிர்ச்சியான மென்னகைகள்.

மண்டையை பிளக்கிற கோடை வெயில் காலத்தில் கூட சங்க ஆபீஸுக்குள் போய்விட்டால்... அந்தச் சிமெண்டுத்தரை, ஜில்லென்று குளிர்ச்சியாக பாதங்களை முத்தமிடும். கண்களுக்குள் குளிர்ச்சியான நிழல் மோதி... கனிவான இருட்டாகக் கவியும். கருவறையின் நிழலிருட்டு. உயிரையும் மனசையும் வளர்க்கிற தாய்மை இருட்டு...

2

இப்போது-

ஐஸ்லேண்டும், டீக்கடையும் இணைந்த அந்தக் கடையில் உட்கார்ந்திருக்கிற ராசேந்திரன். அவன் கையில் விரிந்திருக்கிற 'கதிரவன்' பேப்பர். மனம் அங்கே கால் வைக்கவில்லை. எங்கோ... எங்கோ... கடந்த காலத்தில் கனிவான நிழலிருட்டில்... கருவறைக்குள் கால் பதிக்கிற நினைவு.

அடிவயிற்றிலிருந்து பீறிட்டு வெளிக்கிளம்பிய பெருமூச்சு. பாம்புச் சீறலான அந்த சுவாசச் சத்தத்தில் மனசின் ஏக்கம் ஒலித்தது.

''என்ன ராசேந்திரன் டீ வேணுமா, காப்பியா.''

''டீ குடுங்க.''

''என்ன ஒரு மாதிரியாயிருக்கீக?''

''எப்படி?''

''டல்லடிச்சுப் போய்...''

''ம்ள்ச்சு! சும்மாதா.''

''ஷிப்ட்டுக்குப் போகலியா?''

''இன்னிக்குப் ஃபோர் டு டுவல் (4மணி to 12 மணி) ஷிப்டுதான்.''

''அப்ப... இங்க இருக்கீக...?''

''இன்னிக்கு ஈவினிங்லே ஒரு கமிட்டிக் கூட்டம் இருக்கு. அதா... ன் பெர்மிஷன் கேட்டு... டுவல் டு எயிட் ஷிப்ட்டாக்கியிருக்கேன்...''

''கமிட்டிக் கூட்டம் எங்க?''

''அந்தச் சங்க ஆபீஸ்லே.''

எதிர் வரிசையில் சற்றுத் தள்ளியிருந்த சங்க ஆபீஸைக் காட்டினான். கடைக்காரர் உதடுகளில் ஓர் ஒளிப் புன்னகை. அர்த்தம் பொதிந்த மெல்லிய சிரிப்பு.

இவனது பழைய உறவுகளை, பிரிந்த நாட்களின் கசப்புகளை, மறுபடியும் அங்கே போக இருப்பதை சகலத்தையும் சட்டென உணர்த்தி பரிகசிக்கிற புன்னகை. அந்தப் புன்னகையின் மொழி, இவனுக்குள் சுரீரென்று சுட்டது.

கடைக்காரரின் உதடுகளின் ஓரத்தில், அந்தப் பரிகாச மின்னல் இன்னும் நிற்கிறது.

மீண்டும் ராசேந்திரனுக்குள் கசந்த உணர்வுகளின் சுழற்சி. மனசுக்குள் மண்டுகிற வேதனையோடு சாலையைப் பார்த்தான். சிமிண்டுத் தூசி படிந்த சாலை. சிமிண்டுத் தூசி அடர்த்தியான கொசுக் கூட்டமாய் காற்றில் நிறைந்து மிதக்கிறது. கொசு மிதப்பு... ஒரு பனித்திரை போல காற்றில் அலைகிறது. தடதடத்து ஓடுகிற

வேன்கள்... லாரிகள். பஸ்கள் வந்து நின்று திரும்புகிற விடாத விசில் சத்தங்கள். ஒரு பஸ் ஸ்டாண்டில் மாதிரி கும்பல் கும்பலாய் பயணிகளின் திரள். அவர்களுக்குள் ஊடுருவி நெளிந்தோடுகிற சைக்கிள்களின் சாகசம். வரிசையாகக் கடைகள். எழும்புகிற கட்டிடங்கள்.

கட்டிடங்களுக்கு மத்தியில் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கிற அந்தச் சங்க அலுவலகம். நெற்றியில் அரிவாள் சுத்தியலை பெரிய குங்குமப் பொட்டாக வைத்துக் கொண்டு, நெஞ்சு நிமிர்த்திய ஞானச் செருக்கோடு நிற்கிற அலுவலகம்.

அதன் தலையில் கம்பிக் குழாயில் பறக்கிற செங்கொடி.

மே தினத்திற்கு மாற்றியிருப்பார்களோ! ரத்த ஈர மினுமினுப்போடு சடசடக்கிற கொடி. தென்மேற்குப் பருவக்காற்றை அடையாளப்படுத்தி, கீழ்த்திசை காட்டிப் பறக்கிற கொடி.

சிவப்பு. செம்மை. கன கச்சிதமான ஒழுங்கின் முழுமையை உணர்த்தும் குறியீடு. செம்மையிலிருந்து நழுவுகிறவன், ஒழுங்கிலிருந்து உதிர்கிறான். ஒழுங் கின்மையில் வந்து விழுகிறான்.

மீண்டும் ஒரு பெருமூச்சு. வருத்த நிழல் படிந்த பெருமூச்சு.

அவனுள் பழைய நினைவுகள். இனிமை நிறைந்த உறவு நாட்கள். சங்கத்தில் ஓர் அங்கமாய் இவன் சங்கமித்துக் கிடந்த அந்தத் தோழமை நினைவுகள்...

3

...ராசேந்திரன் எட்டுவரைகூட ஒழுங்காகப் படிக்காதவன். கூலி வேலை செய்து கொண்டிருந்தான். விறகு வெட்டப் போனால், நாலு ரூபாய் சம்பளம்.

சிமிண்டாலை அமைந்திருக்கிற இந்த இடம், முன்பு கரிசல் காடாகக் கிடந்தது. 'நரி திரியும் கரிசல்' என்பார்கள். மஞ்சணத்தி மரங்களும், இலந்தை முட்புதர்களும், கருவேல மரங்களுமாக அடர்ந்து கிடக்கும். இங்கெல்லாம் கூலிக்கு விறகு வெட்ட ராசேந்திரனும் வந்ததுண்டு.

சிமிண்டாலை அமைப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நிகழ்ந்த நாளிலேயே... இவன் வேலைக்கு வரத் துவங்கி விட்டான். கல்குவாரியில் மஸ்தூர். கல்லுடைக்கும் தொழிலாளி. வெறும் ரெண்டரை ரூபாய்ச் சம்பளம். வாராந்தரப் பட்டுவாடா.

ஆலை அமைந்து உற்பத்தி துவங்கியபோது, இவன் வேலை நிரந்தரமாயிற்று. மாதச் சம்பளம் நானூறு ரூபாய். முதற்சங்கமாகத் துவங்கிய செங்கொடிச் சங்கத்தில் இவனும் ஓர் உறுப்பினர். சின்னச் சின்னப் போராட்டங்கள். ஆர்ப்பாட்டங்கள். தர்ணாக்கள்...

சம்பளம் எழுநூறு ரூபாய் ஆயிற்று.

அப்போதெல்லாம் தொழிலாளிகள் அடிமைகளைப் போல நடத்தப்பட்டனர். அதிகாரிகள் என்றாலே 'அர்ச்சுனன் பேர் பத்து' என்று பயந்து நடுங்குவார்கள்.

செங்கொடிச் சங்கம் மேடை போட்டு அந்த அதிகாரிகளை 'கிழி, கிழி' என்று கிழித்து, அம்பலப்படுத்தும். அந்த அச்சமற்ற துணிச்சலே, பல தொழிலாளிகளுக்கு உற்சாகமூட்டும்.

1974-இல் மிகப் பெரிய போராட்டம். இருக்கிற நாலைந்து சங்கங்களில் ஆளுங்கட்சிச் சங்கம் தவிர, எல்லாச் சங்கமும் சேர்ந்த போராட்டம். 25 நாட்களுக்கும் மேலாக ஆலை வேலையற்றுக் கிடந்தது. வேலை நிறுத்தம் மட்டுமல்ல, ஆர்ப்பாட்டம், மறியல், சிறை என்று அந்தப் போராட்டம் ரொம்ப வலுவாக - வீரமாக - நடந்தது.

அப்போதெல்லாம் ராசேந்திரன் சங்கத்தின் முன்னணி ஊழியன். தலைவர்களில் ஒருவன். எந்நேரமும் சங்க அலுவலகமே கதி என்று கிடப்பான்.

போராட்டம் வெற்றி பெற்றது. தொழிலாளிகளின் உழைப்பு இல்லையென்றால்... ஆலை வெறும் மலட்டுக் கட்டிடம்தான் என்ற நிரூபணம். ஒன்றுபட்ட தொழிற் சங்க ஒற்றுமை என்பது வெல்ல முடியாத தர்ம பலம் மிக்கது என்கிற நிஜம்...

போராட்டத்தை இத்தனை நாள் இழுத்து நஷ்டப்படுத்திய நிர்வாகத்தின் முட்டாள்தனத்தின் மீது வந்த கடும் விமர்சனங்கள்.

அப்புறம்... சம்பளம் உயர்ந்தது. கேண்டீன் வசதி கிடைத்தது. யூனிபார்ம், பூட்ஸ், தூசி அலவன்ஸ் என்ற சலுகைகள். வீட்டு வசதி, மருத்துவ வசதி, ஆலைத்

தொழிலாளர் பிள்ளைகளுக்கான கல்வி வசதி, வாகன வசதி போன்ற ஏகப்பட்ட உரிமைகள்.

நிர்வாகமே மூவாயிரம் டி.வி.களை வரவழைத்து தொழிலாளர்களுக்கு தவணை முறையில் விநியோகித்தது.

சலுகைகளும், உரிமைகளும், சம்பள உயர்வுகளும், வேலை உத்தரவாதங்களும் வந்த பிறகு, ''தொழிற் சங்கம் எதுக்கு'' என்கிற அசிரத்தை உணர்வு.

கேட்கிற சந்தாவும், நன்கொடையும் கூட ''பெரும் சுரண்டலாக'' உறுத்த ஆரம்பித்தது. இஷ்டத்திற்கு சங்கங்கள் முளைத்தன.

டிரில்லர் யூனியன், டிப்பர் டிரைவர் யூனியன் போன்று வேலைவாரியான சங்கங்களும், சாதிச் சங்கங்களுமாக பெருத்து... நாலைந்து சங்கங்கள் இருந்த ஆலையில், இப்போது 47 சங்கங்கள்.

இப்படியாகிவிட்டதே என்று ராசேந்திரன் ரொம்ப வருத்தப்பட்டான்.

தொழிற்சங்க வலிமை பலவீனப்பட்டால், தொழிலாளியும் பலவீனமாவானே என்று கலங்கித் தவித்தான்.

அப்போ-

ஆலையில் ஒரு காய்ச்சல் பரவியது. மஸ்கட் காய்ச்சல். அரபு நாடுகளுக்கு மூன்று, ஐந்துவருட காண்ட்ராக்ட்டில் போவது என்கிற காய்ச்சல். போய்

வந்தவர்கள் ''ஷபாரி'' யில் ஆபீஸர் போலத் தோன்றினர். டி.வி., டெக், லட்சக்கணக்கில் பணம் என்று ஜொலித்தனர்.

ராசேந்திரனுக்கும் போக ஆசை. விசாரித்துப் பார்த்தால்... ''பாஸ்போர்ட், விசா எல்லாம் எங்க பொறுப்பு'' என்ற உத்தரவாதம். இவனுக்கு ரொம்பக் குளிராட்டியது.

சங்கத்தில் மெல்லத் தன் ஆசையைச் சொன்னான். ''ஒங்களை மாதிரி ஓடியாடிச் செயல்படுற நேர்மையான ஊழியரை இழக்க சங்கத்துக்குச் சம்மதமில்லை.''

தடைதான் என்றாலும்... அதிலிருந்த புகழ்ச்சி இவனை மயக்கியது. ஆசையைத் தள்ளி வைத்தான்.

ரெண்டு வருஷம் ஆயிற்று.

அரபு நாடுகளுக்குப் போய் வந்தவர்களின் தடபுடல்களும், ஜொலிப்பும் இவனுள் மறுபடியும் சலனத்தை ஏற்படுத்தியது. சபலம் பிடித்து ஆட்டியது.

சங்கத்தில் இருந்த ரெண்டு மூன்று பேர் கமுக்கமாய் இயங்கி... அரபு நாடுகளுக்குப் போய்விட்டு வந்து விட்டனர். புறப்படுவதற்கு ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் சங்கத்திற்கு தகவல் சொன்னார்கள்.

அவர்கள் போய்விட்டு வந்தபின்பு, ஆகாய விமான அனுபவங்களையும், அயல்தேச மாயங்களையும் சொல்லச் சொல்ல... அதுவே ஒரு மாயலோக விசித்திரமாக இவனைப் போட்டு ஆட்டியது.

ஒரு சொர்க்க லோக அனுபவத்தை இளிச்ச வாய்த்தனமாக தவறவிட்டுவிட்டதாக உணர்ந்தான்.

அதுவே சங்கத்தின் மீதான கோபமாக மாறிற்று.

நான்கு ரூபாய்ச் சம்பளத்தில் விறகு வெட்டிக் கொண்டு, 'கைக்கெட்டினால் வாய்க்கு எட்டாத' வறட்டிழுப்பு வாழ்க்கையில் தவித்துக்கிடந்த அவன். நல்ல சம்பளமும், வீடும், வசதியுமாக சந்தோஷமாக இருப்பதற்கே... சங்கம்தான் காரணம் என்று நினைத்திருந்த அவனது ஆத்மாவில், சின்னச் சின்னக் கீறல்கள்.

'சங்கம்தான் தனக்கான வாய்ப்பை சமத்காரமாகப் பேசி தட்டிப் பறித்துவிட்டது' என்கிற குற்றச்சாட்டை வீசினான். கசந்துபோய் புலம்பினான். எல்லா இடங்களிலும் சங்கத் தலைமையை திட்டித் தீர்த்தான் அங்கலாய்த்தான்.

கடைசியில்-

தனிச் சங்கமே தொடங்கிவிட்டான்.

இப்போது அரபு நாடு தொலைதூர விஷயமாகி விட்டது. கிராக்கியான விஷயம். பாஸ்போர்ட், விசா, விமான டிக்கெட் இவற்றுக்கே எழுபதாயிரம் கேட்டார்கள்.

பயந்து பின்வாங்கிவிட்டான்.

தனிச்சங்கம் தொடங்குவதற்குள் தாய்ச் சங்கத்துடனான உறவு ரொம்பத் திருகல்முறுகலாகி விட்டது. வெறுப்பும், பகையுமான விமர்சனங்கள், எதிர்

விமர்சனங்கள், சண்டை சச்சரவுகள், வாய்ச் சத்தங்கள்... முக விறைப்புகள் என்று ஒரே குழறுபடியாகி விட்டன.

தனிச்சங்கம் பகையை நிரந்தரமாக்கிவிட்டது. அதுவும் நாலைந்து வருஷமாகிவிட்டது.

ஒயின்ஷாப் பழக்கவழக்கமெல்லாம் இப்போது வந்து விட்டது. தன் சங்க உறுப்பினர்களிடமே காரியம் சாதித்துக் கொடுக்க, லஞ்சம் வாங்க ஆரம்பித்துவிட்டான், ராசேந்திரன்.

அவ்வப்போது ஆத்மா அரிக்கும். குற்ற உணர்ச்சி தாளாமல் தவிக்கும். குணாம்ச வீழ்ச்சியை உணர்ந்து குமையும். அந்தக் குமைச்சலை பிராந்தியின் ருசி கொஞ்சம் ஏமாற்றும். மாய்மாலம் பண்ணும்.

சமீப நாட்களாக ஒரு புதிய நிலைமை. மத்திய அரசின் தாராளமாயப் பொருளாதாரக் கொள்கை. நலிவடைந்த ஆலைகளை மூடச் செய்து, நஷ்டமில்லாது இயங்குகிற பொதுத்துறை ஆலைகளை தனியாருக்குத் தாரைவார்க்கிற புதுக் கொள்கை.

இந்தச் சிமிண்டாலையும் தனியார் கைக்குப் போக இருக்கிற அபாயம்.

தனியார் கைக்கு மாறினால்... இப்போது இருக்கிற உரிமைகள், சலுகைகள் இருக்காது. பறிபோகும். நிச்சயமாக ஆட்குறைப்பு வரும். 'வாலெண்ட்டரி ரிட்டையர் மெண்ட்' கட்டாயமாகும். அந்த இடி யார் யார்

தலையில் விழும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் எல்லோருமே அந்த இடியை எதிர்பார்த்து கதிகலங்கினார்கள். அலுவலக ஊழியர்கள் ரொம்பப் பதறினார்கள். அதிகாரிகளே மௌனக் குமுறலாகப் பதறினர்.

தனியாருக்குத் தாரைவார்க்கப்படுவதை எப்படித் தடுக்க? எப்படி எதிர்க்க? என்ன வலிமையில் எழுந்து நிற்க? நாற்பத்தெட்டு துண்டுகளாக உடைந்து கிடக்கிற தொழிற்சங்கங்களின் கண்டனங் களுக்கும், முணுமுணுப்பு களுக்கும் என்ன மதிப்பு இருக்கும்?

தொழிலாளர்களிடையே தொழிற்சங்க ஒற்றுமையின் அவசியம் குறித்த உணர்வுகள். டீக் கடைகளில், கேண்டீன்களில் வெளிப்படையான பேச்சுகள்.

செங்கொடிச் சங்கம், தனியாருக்கு ஆலையை தாரை வார்க்கப்படுவதை எதிர்த்து தர்ணா, ஆர்ப்பாட்டம் நடத்தியது. 47 சங்கங்களுக்கும் எழுத்து மூலமான அறை கூவல் விடப்பட்டது.

பிரிந்து சிதறிய பிள்ளைகள் மீது தாய்க்கு என்ன கோபமா? வீறாப்பா? நன்றி இல்லாமல் நடந்து கொண்ட பிள்ளைகூட, நன்றாக வாழவேண்டும் என்று ஆசைப் படுகிற தாயுள்ளத்திற்கு... இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதில் ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி.

சங்கங்களின் கூட்டுக் கூட்டம் வெவ்வேறு பொது இடங்களில் நடந்தது. ஒரு பெரும் போராட்டத்திற்கான

ஆயத்தங்கள். தொழிலாளர்களிடையே கனல்விட்டெரிந்த போர்க்குணம்.

இப்படிப்பட்ட சமயத்தில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. ஜெயில் வரைக்கும் ஆளைக்கொண்டு போன சம்பவம்.

4

ஷிப்டு முடிந்து திரும்பிய ராசேந்திரன், கேண்டீனில் வடையும், டீயும் சாப்பிட்டுக் கொண் டிருந்தான். பக்கத்தில் சில தொழிலாளர்கள். ஷிப்டு முடிந்து வருகிறவர்கள். ஷிப்டுக்குப் போகிறவர்கள்.

அப்போதுதான் ஒரு தொழிலாளி பதற்றமாக ஓடி வந்தார். பரபரப்பில் மூச்சுத்திணறினார்.

''என்ன, என்ன'' என்று எல்லோரும் பதைத்தனர்.

''கழிவு சாமான்களை லோடு பண்ண ரெண்டு லாரி வந்துருச்சு.''

பெட்ரோலில் விழுந்த தீச்சுடராக விஷயம் குப்பென்று பற்றிக் கொண்டது. ராசேந்திரன் ''நெசம்மாவா?'' என்றான்.

''ஆமா.''

''எப்ப?''

''இப்பத்தான் லாரி குடோனுக்குப் போகுது.''

''வாங்க... இதை விடவே கூடாது. இதை அள்ளவுட்டுட்டா... பேக்டரியையே பார்ட் பார்ட்டா கழத்தி வித்துட்டுப் போயிருவாங்க.''

ராசேந்திரனைப் பின் தொடர்ந்த கொதி நிலையான தொழிலாளிகள். ஆலை தனியார் கைக்குப் போவதை எதிர்த்து பெரும் போராட்டத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிற போர்க்குணமிக்க தொழிலாளிகள்.

விஷயம் வேறொன்றுமில்லை. ஆலையிலுள்ள கழிவுச் சாமான்கள். இரும்பும் - எஃகுமான சாமான்கள். ரெண்டு லட்ச ரூபாய் பெறுமான சாமான்கள். ஆளுங் கட்சிக்காரர் ஒருவருக்கு வெறும் இருபதாயிரத்துக்கு விற்றாகி விட்டது. ஜி.எம்.மின் ஏற்பாடு. முறையான டெண்டர், ஏலம் எதுவும் கிடையாது. பயங்கரமான தில்லுமுல்லு.

இந்தக் 'குட்டு நட்டு' ஊரறிந்த ரகசியமாக ஏற்கெனவே பரவியிருந்தது. இந்தத் தில்லுமுல்லுவை எப்படியேனும் தடுத்தாக வேண்டும் என்கிற உறுதியில் சகல தொழிலாளர்களும்.

ராசேந்திரன் குடோனை நெருங்குகையில் ஏற்கெனவே அங்கே ஐந்நூறுக்கும் மேல் தொழிலாளர்கள். காட்டுக் கூச்சல். தாறுமாறான வசவுகள். கொதி நிலையான மனச் சாபங்கள்... ஆவேசப்பட்ட மனிதர்களின் உணர்வு வெக்கைகள்.

ஒரு விதமான பதற்ற நிலைமை.

ரெண்டு லாரிகள். லோடு பண்ணவந்த கூலியாட்கள். வெள்ளையும், சொள்ளையுமாக கரை போட்ட வேட்டியோடு ஆளுங்கட்சிக்காரர்.

அவர் பயந்த மாதிரியே தெரியவில்லை. ரொம்பத் தெனாவெட்டாக' இருந்தார்.

''ஜி.எம். ஆர்டர் போட்டுட்டார். நாங்க லோடு பண்றோம். நீங்க எதுவும் சொல்லணும்னா, உங்க ஜி.எம்.கிட்டே போய்ச் சொல்லுங்க.'' என்று எகத்தாளமாகச் சொன்னார்.

ஜி.எம். நேற்றே சென்னை போய் விட்டார் என்பது எல்லோருக்குமே தெரியும்.

''என்ன செய்ய...'' என்று புரியாமல் குருட்டுக் கோபத்தில் கொதித்துப் புலம்பிய தொழிலாளிகள்.

கூட்டத்தைப் பிளந்து கொண்டு ராசேந்திரன் முன்னால் வந்தான்.

''எங்க பேக்டரிக்குள்ளே வந்து அதிகாரம் பண்ண நீ யாருய்யா?''

அவனிடமும் ஆர்டரை எகத்தாளமாய் நீட்டிய கரைவேட்டி. ராசேந்திரன் அந்தத் தாளை வாங்கிய வேகத்தில் கிழித்துப் போட்டான்.

''எங்க பேக்டரிக்குள்ளே வந்து கொள்ளையடிக்க வந்துருக்கீக. இப்ப நீங்களா போறீகளா... இல்லே, போக வைக்கவா?''

''ஆர்டரை நாங்க நம்பலே. ஜி.எம்.ஐ நீங்க கூட்டிட்டு வாங்க. அவரு வந்து எங்க முன்னாடி லோடு பண்ணச் சொல்லட்டும். நாங்க பேசாமப் போயிடுறோம்.''

ராசேந்திரன் வாதத்தில் கரைவேட்டி திகைத்தது. தூண்டிலில் சிக்கிய மீனாகத் தவித்தது.

யார் காதையோ கடித்து... அவசரமாக அனுப்பி வைத்தது, கரைவேட்டி. அடியாட்களை கூட்டி வர ஆள் போயிருப்பதாக எல்லோருக்கும் யூகம். ஆத்திர மூட்டக்கூடிய யூகம். வெறியூட்டக்கூடிய யூகம். ''ஆலைத் தொழிலாளிகளை கிள்ளுக்கீரையாக நினைத்து விட்டானே இந்தக் கரைவேட்டி'' என்கிற ரௌத்ரம்.

லாரியின் கண்ணாடிகள் உடைந்தன. லாரிகள் மீது விழுந்து தெறித்த கற்கள். லாரிகளும், லோடுமேன்களும் ஓடி விட... கரை வேட்டி மட்டும் சிக்கியது.

அண் - டிராயரோடும் ரத்தக்கறையோடும் அதுவும் ஓடியது.

அன்றைக்கு வியாழக்கிழமை.

கைது செய்யப்பட்ட முதன்மைக் குற்றவாளிகள் ஏழு பேரில் ஒருவன் ராசேந்திரன்.

மறுநாள் வெள்ளி. அன்றைக்கு ஜாமீனில் வெளி வந்தாக வேண்டும். இல்லையென்றால்... சனி, ஞாயிறு கோர்ட் லீவ். ஜெயிலில் இருந்தாக வேண்டும்.

''என்ன செய்ய'' என்று குழப்பம் ராசேந்திரனுக்கு. ஒரு வழியும் புலப்படவில்லை. தவித்துப் போனான்.

ஆனால் செங்கொடிச் சங்கம், சொந்த முறையில் முயற்சி எடுத்து, எல்லாரையும் ஜாமீனில் எடுத்து விட்டது.

நாளைக்கு கோர்ட் வாய்தா. கேஸை எப்படி எதிர் கொள்வது என்று கலந்து பேசத்தான் இன்றைய கூட்டம். அதற்குத்தான் அந்தச் சங்க ஆபீஸுக்குப் போயாக வேண்டிய கட்டாயம் ராசேந்திரனுக்கு.

இந்த நிலைமை ராசேந்திரனுக்கு ரொம்பப் புதுசு. அவன் சர்வீஸிலேயே இந்த அவலம் நேர்ந்தது கிடையாது.

மெமோவோடும் தவிப்போடும் வந்த தொழிலாளி களுக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறான். பிரச்சினைகளின் பிடியில் சிக்கி அபயம் கேட்டு வந்தவருக்கு ரட்சகனாக இருந்து வந்திருக்கிறான்.

இன்றைக்கு...?

இவனே பிரச்சினைகளின் பிடியில் சிக்கிய பரிதாப அவலத்தில். 'காப்பாற்று' என்று கதறுகிற துன்பத்தில் இவன்.

5

சாயங்காலம். மணி மூன்று. அந்தச் சங்க அலுவலகத்தை நெருங்கினான். அவனுக்குள் படபடப்பு. வெட்கம் கலந்த கூச்ச உணர்வு.

கோபித்துக் கொண்டு போய் சீரழிந்து போன மகன், மீண்டும் தாய் வீட்டுக்கு தலைக்குனிவோடு திரும்புகிற போது... மனசுக்குள் இருக்குமே ஒரு தயக்க உணர்ச்சி. அதே அவஸ்தையில் ராசேந்திரன்.

செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தான். பாதங்களை குளிர்ச்சியாக முத்தமிடுகிற சிலிர்ப்பு. ஒரு தாயின் மடியில் முகம் புதைக்கிற சுகப்பரவசம்.

கருவறை நிழலிருட்டாக கண்ணுக்குள் வந்து அப்புகிற குளிர்ச்சியான நிழல்.

''கூட்டத்துக்கு நேரமாச்சே, ஆளைக் காணோமேன்னு நெனைச்சுக்கிட்டிருந்தோம். வந்துட்டீங்க. வாங்க... வாங்க... ராசேந்திரன்.''

''உக்காருங்க... தோழருக்கும் சேத்து பத்து டீயா சொல்லியிருங்க...''

''ம்... அப்புறம்? என்ன தோழர், அன்னிக்கு அந்தக் கரைவேட்டியை போட்டுப் புரட்டி எடுத்துட்டீகளோ?''

அதே அன்பு, அதே கலகலப்பு. அதே செயற்கையற்ற இயல்பான சிரிப்பு. நெருடலும் தயக்கங்களுமாய் மருகித் தவித்த அவனது அவஸ்தையே அனாவசியம் என்பது போல... ஓர் தோழமைப் பிரவாகம்.

வந்த இதயத்தை வாரிச் சுருட்டி அள்ளி முத்தம் சொரிகிற தாய்மைப் பரவசப் பிரவாகம்.

ராசேந்திரன் மனசுக்குள் ஒரு மகிழ்ச்சியின் மலர்ச்சி. தாய்க்கோழியின் றெக்கைக்குள் வந்து புகுந்து கொண்ட கோழிக்குஞ்சின் ஆசுவாசம்.

கோவை மாவட்ட சி.ஐ.டி.யு. மாவட்ட
வெள்ளிவிழா சிறப்பு மலர் 1996.

கரும்பு

கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரியிருக்கிறது, ராமசுப்புவுக்கு. 'என்ன செய்ய, ஏது செய்ய' என்று ஓர் இழவும் புரியவில்லை. எல்லா வழிகளும் அடைபட்டுப் போன மாதிரி... ஓர் முட்டிப்பு.

எல்லார்கிட்டேயும் கடன் கேட்டுப் பார்த்து விட்டான். மாறி மாறி வந்து முகத்தில் சப்பென்று அறைந்த ஏமாற்றங்கள். தோல்விகள். கடைசியிலும் கடைசியான நம்பிக்கையோடு மாரிச்சாமியிடம் போய் நின்றான். கடனாகக்கூட இல்லை. கைமாற்றாகத்தான் கேட்டான்.

மனசில் ஒட்டியிருந்த நம்பிக்கையின் கடைசித் துளியும் உலர்ந்து போயிற்று. ரொம்பத் துவண்டு போனான், ராமசுப்பு. 'என்ன செய்ய' என்கிற கேள்வி, கண்ணைக் கட்டிய குழப்பமாக நின்றது. நெஞ்சுச் சட்டையை கொத்தாக பற்றி உலுக்கியது.

வீட்டுக்கு எப்படிப் போக? எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு ரங்கம்மாவை எதிர்நோக்க...? ரங்கம்மாவை விட்டுத் தள்ளு... இவனே எப்படிப் பிள்ளைகளைப் பார்க்க?

... போன ஐப்பசி மாசம். தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. ரங்கம்மா வாசல் நடையில் உட்கார்ந்து

சிறு ஊசியில் நூல் கோர்த்துக் கொண்டிருந்தாள். நூல் நுனியை பல்லால் கடித்துத் துப்பி ஈரப்படுத்தி... முறுக்கி விட்டு... நுட்பமாக கோர்த்தாள்.

''ஏலேய்... இங்க வாடா...''

மூத்தவன் வந்தான். ''என்னம்மா...?''

''இதைப் பிடிச்சுக்க... நா தைக்கணும்டா...''

கிழிசலை பிடித்துக் கொண்டு அம்மா தைக்கிறவரை உட்கார்ந்திருக்கிற பொறுமையில்லை... அவனுக்கு. ''போம்மா... நா வெளையாடப் போவணும்.''

''ஏலேய்... வாடா கண்ணு...''

''போம்மா... போ...''

தெருவில் குதித்தான். சிட்டாய்ப் பறந்து விட்டான். திண்ணையில் உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்த ராமசுப்புவைப் பார்த்து முறைத்தாள், ரங்கம்மா.

''பாத்தீகளா... உங்க புள்ளையை? கொஞ்சமாச்சும் பயமிருக்குதா?''

''எதுக்கு பயப்படணும்? நீயும், நானும் சிங்கமும், புலியா?''

''இப்படி எந்தத் தகப்பனாச்சும் பேசுவாகளா? எனக்குன்னு வந்து வாய்ச்சீகளே...''

என்று சலித்துக் கொண்ட ரங்கம்மா, இளையவளைக் கூப்பிட்டாள். ''அடியே... இங்க வா. நீயாச்சும் இதைப் பிடி. தைச்சுக்கிடுதேன்.''

வந்தாள். அம்மா பிடித்துக் காட்டியபடி சேலையின் கிழிசலை பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள் எட்டு வயசு

பட்டாம் பூச்சி. அவள் பாவாடையிலும், சட்டையிலும் கூட கிழிசல்கள். அதைத் தொட்டுப் பார்த்த ரங்கம்மா. அர்த்தம் பொதிந்த கோபத்துடன் புருஷனைப் பார்த்தாள்.

கேலிச் சிரிப்பாணியாக இருந்த ராமசுப்பு, அந்தப் பார்வையின் தாக்குதலில் வெலவெலத்துப் போனான். வாழ்க்கையின் தாட்சண்யமற்ற மூர்க்கத்தைத் தாள முடியாத தத்தளிப்பு.

வாடிப்போன முகத்துடன் குற்ற உணர்வில் தலை கவிழ்ந்தான். முகத்தை எதிர்கொள்ள இயலாமல் அலைபாயும் பார்வையாக வேறுபக்கம் பார்த்தான்.

விடாமல் ரங்கம்மா வார்த்தைகளால் கவ்வினாள்.

''ஏங்க... கிழிஞ்சி போன துணிமணிகளோட புள்ளைக குறைக்கோலமாத் திரியுதுகளே... பாத்தீகளா?''

''ம்''

''தீபாவளிக்காச்சும் ரெண்டு துணிமணி எடுக்கலாம்லே?''

''ஒனக்குத் தெரியாதா? கையிலே வைச்சுக்கிட்டு வஞ்சகமா பண்ணுதேன்?''

''மானத்தை மறைக்க துணிமணி வேண்டாமா? பாக்குறவுக நம்மளைக் கேவலமா நெனைச்சு, சிரிக்க மாட்டாகளா?''

''தெரியத்தான் செய்யுது. கடன் கிடன் வாங்கி நெலத்துலே போடுற காலம்... மண்ணடிக்கணும். குப்பையடிக்கணும், நடுவை நட்டணும்''

''காலம் பூராவும் வேலைப்பாடுகதான். பாடுபட்டு என்னத்தைக் கண்டோம்? தீபாவளிப் பண்டிகை வெறும் பண்டிகைதானா?''

''ரங்கம், நாம தமிழ்ச் சம்சாரிக. தைப்பொங்கலைத் தானே கொண்டாடணும்? தைப் பொங்கல்தான் தமிழ்ச் சாதிகளோட நல்ல நாள்''

''இந்த வாய்சாமர்த்தியத்துலே ஒன்னும் கொறைச்சல் இல்லே''

- என்று ரங்கம்மா வேதனையும், கோபமுமாய் நொடித்துக் கொண்டாள். உஸ்ஸுன்னு உக்கார நேரமில்லாம ராவுண்ணும் பாராம, பகலுன்னும் பாராம பாடுபடுற நமக்கு... உடுத்தக்கூட உருப்படியா ஒரு நல்ல சீலையில்லியே என்கிற நினைப்பு.

புருஷன் மீது மட்டுமல்ல... சூழ்ந்த வாழ்க்கையின் மீதே வந்த கொதிப்பாக பொங்கிச் சீறிய நினைப்பு. ஊசியைக் குத்திக் குத்தி உருவினாள். அம்மாவின் மனக் கொதிப்பையும், முகச் சிணுங்கலையும், யாரையோ சபிக்கிற முணுமுணுப்பையும், சின்னவள் மவுனமாகப் பார்த்தாள். அந்தச் சின்ன விழிகளில் புரியாமையும், குழப்பமும்.

தீபாவளிக் கண்டத்திலிருந்து தப்பித்துவிட்ட நிம்மதி, ராமசுப்புவுக்கு. தைப் பொங்கலுக்குத் தள்ளிப் போட்டது... நாளை நகர்த்த மட்டுமல்ல... நிஜமாகவே தைப் பொங்கலுக்குள் கணிசமாகப் பணம் கிடைத்துவிடும் என்று நினைத்தான். அப்படி நம்புவதற்கான நியாயம் இருந்தது. சாத்தியம் இருந்தது. அந்த ஐப்பசியில் அந்த நம்பிக்கை ரொம்ப ரொம்ப நிச்சயமாக இருந்தது.

காரணம்... அப்போதுதான் கரும்பு நட்டியிருந்தான்.

கரும்பு... இந்த ஊருக்கே புதுசு. மிளகாய் வற்றல், பருத்தி, கம்பு, சோளம் என்று மட்டுமே வெள்ளாமை ஊருக்குள். இவன் கிணற்றில் மட்டும் தண்ணீர்ச் செழுமை. நெல்லும் போடுவான். அப்பத்தான் சர்க்கரை மில்லுக்காரர்கள் கரும்பு போடும்படி சொன்னார்கள், ஊர்ச் சம்சாரிகளிடம். யாரும் செவிசாய்க்கிற மாதிரி தெரியவில்லை.

கரும்பு போட்டால்... ஏக்கருக்கு 40 டன் விளையும் என்று சாதித்தார்கள். இவனுக்கும் போட்டுப் பார்க்க ஆசைதான். ஆனால்...

கரும்பு போட்டால், அந்தளவுக்கு தண்ணீர் காணாது. ரெண்டு கெஜம் வெட்டினால் தண்ணீர் பெருகும். சரிக்கட்டி விடலாம். கிணறு வெட்டுவது என்றால்... சும்மாவா? பத்தாயிரம் ஆகுமே...

இவன் மெல்ல வாய் விட்டான், மில்லுக்காரர் ஒரே பிடியாக இவனைப் பிடித்துக் கொண்டார். கிணறு வெட்ட பத்தாயிரம் லோன் வாங்கித் தருவதாக சத்தியம் செய்தார்.

''அதெப்படி... முடியும்? லோன் வாங்குறதுன்னா... சும்மாவா? எம்புட்டு அலையணும்? எம்புட்டு நாளாகும்? அதுக்குள்ளே பயிர் பச்சைக வாடிப்போகும்...''

''அதெல்லாம்... நீங்க லோன் வாங்கப் போறப்பதான்... அப்படி. நாங்க அப்படியில்லே. மில்லு மேனேஜர் போன் போட்டு பேசுனார்னா... ரெண்டே நாள்லே லோன் உங்களைத் தேடிக்கிட்டு வந்து சேரணும்''

''மேனேஜர் போன் போடுவாரா?''

''நாங்க எதுக்கு இருக்கோம்? உங்களுக்கு மான்யம் குடுத்து நட்டவைக்கிற கரும்பு, நல்லா வெளைஞ்சாத் தானே எங்களுக்கு ஆதாயம்? லோன் வாங்கித் தர்றது எங்க கடமை. நிச்சயமா செய்ஞ்சு தர்றேன்''

மில்லுக்காரர் இவனிடம் பின்னிப் பின்னிப் பேசினார். அவர் சொல்லை நம்பாமலும் இருக்க முடியவில்லை. அப்படியிருந்தது, அவர் பேச்சு. கரும்பாய் தித்தித்தது.

நம்பினான். கிணறுவெட்ட லோன் வாங்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையின் பலத்தில் துணிச்சலாக அந்தப் புதுக் காரியத்தில் இறங்கிவிட்டான்.

ஆவணி புரட்டாசியில் பருத்தியும், பங்குனி சித்திரையில் ஒட்டுக் கம்பும் பயிரிடக்கூடிய ரெண்டு ஏக்கரில் கரும்பு நட்டினான். இவனுக்கு ஏகப் பெருமை. விதைக் கரும்பை வெட்டித் துண்டாக்குவதையும் துண்டுகளை ஊன்றுவதையும் ஊர்ப் பெரிசுகள் வந்து ரொம்ப ஆச்சர்யமாகப் பார்த்தார்கள்.

கரும்பு நன்றாகத்தான் வளர்ந்தது. இடுப்பு உயரத்துக்கு வந்தது. சாம்பல் நிறத் தோகைகள், உள்ளே தண்ணீர் பாய்ச்சப் போனால் உடம்பெல்லாம் உரசு ம். அந்த உரசல் ஒரு சுகமாக இவனுக்குள் பரவும். கரும்பு, நிறைய கனவுத் தோகைகளை வளர்த்தது. டன் கணக்கான கனவுகள், சீனிக் கனவுகள், இனிப்பு இனிப்பான பணக் கனவுகள், டன் டன்னாக பணக் கனவுகள்.

நெல் நாற்றங்கால் வளர்கிறவரை பிரச்சினை யில்லை. நடுவை நடந்தது. நெல் பயிரிடாமல் இருக்க முடியாது. வருஷப் பாட்டுக்கு நெல் வந்துவிடும். சோற்றுக் கவலையை இல்லாமல் ஆக்கிவிடும்.

நெல் நடுவைக்குப் பிறகு... கரும்புக்கு நீர் பாய்ச்ச வழியில்லை. நீரில்லை. மழையுமில்லை. கிணறு வெட்டலாம் என்று பார்த்தால்... கையில் பணமுமில்லை.

மில்லுக்காரப் பிரதிநிதி 'வருவார், வருவார்' என்று வழிபார்த்து காத்துக் கிடந்தான், ராமசுப்பு. 'லோன் வாங்கித் தந்தால் கிணறு வெட்டலாமே' என்று மனசுக்குள் ஆலாய்ப் பறந்தான்.

சத்தியம் பண்ணினாரே... என் கடமை என்றாரே... 'போன்போட்டால்... ரெண்டே நாளில் கையில் கிடைக்கும்' என்றாரே...

வருகிற மாதிரித் தெரியவில்லை. கைச் செலவை யோசிக்காமல், பஸ்ஸேறி, ரெண்டு தடவை மில்லுக்கும் போனான். அந்தப் பிரதிநிதியை 'தேடு, தேடு'வென்று தேடினான். யார் யாரிடமோ விசாரித்தான். எல்லோரும் கேணப் பயலைப் பார்த்த மாதிரி ஏளனமும் இகழ்ச்சியுமாய் இவனைப் பார்த்தனர்.

ராமசுப்பு உள்ளுக்குள் ரொம்ப நொந்து போனான்.

இவனை ஏமாற்றி விட்டார்கள். வஞ்சித்து விட்டார்கள். மில்லுக்கு வேண்டிய கரும்பை பயிரிட வைப்பதற்காக, இவனை ஆசை காட்டி மோசம் பண்ணிவிட்டார், அந்தப் பிரதிநிதி.

'ச்சேய்... தமிழ்ச் சம்சாரியை தமிழ் மில் முதலாளிகளே ஏமாற்றிச் சாறு பிழிகிறார்களே' என்று உள்ளுக்குள் கசந்து போனான்.

கிணற்றை எட்டிப் பார்த்தான். வாழ்க்கையைப் போல வறண்டு கிடந்தது.

ரங்கம்மா நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

''பருத்தி போட்டுருந்தா... பத்து குவிண்டாலாச்சும் வெடிச்சிருக்கும். கோடையிலே கம்பு பத்தாயிரத்துக்கு வந்துருக்கும். எடுக்காத எடுப்பெடுத்து... பொம்பளை பேச்சு கேக்காம, நாசம் பண்ணித் தொலைச்சுட்டீகளே... ஒரு வருஷ வெள்ளாமையே... மண்ணாக்கிட்டீகளே...''

கரும்புக்குத் தண்ணீர் பாய்ச்ச வழியில்லை. சாம்பல் நிறத் தோகைகள் வெள்ளை வெள்ளையாக வெளிறி விட்டன. சாவின் பயத்தில் முகம் வெளுத்துப் போன கரும்புத் தோகைகள். நீரில்லாமல் மரண விளிம்பில் கரும்பு.

மாசம் ஒரு தண்ணீர் பாய்ச்சுவதற்கே... 'ஆத்தாடி அம்மாடி' என்று திண்டாடித் தவிக்க வேண்டிய கொடுமை.

பிரதிநிதியோடு சேர்ந்து வானமுமா ஏமாற்ற வேண்டும்?

கரும்புத் தோகைகள் வாடி உலர்ந்துபோய் தேன் நிறத்துக்கு வந்து... ஊளைக்காற்றில் சத்தமாய் சலசலத்தன. இவனது கனவுகளும் உலர்ந்து போய்... கதிர் பருவத்துக்கு வந்துவிட்ட நெல், பருத்தி, மிளகாய் என்று வேறு வெள்ளாமையில்லை. அதுதான் கரும்பு பிடித்துக் கொண்டதே...

எந்தப் பண வருமானத்துக்கும் வழியில்லை. எதை நம்பி எவன் கடன் தருவான்?

தைப் பொங்கலை எப்படித் தாண்ட? தீபாவளியை ஏமாற்றியாகி விட்டது. 'தமிழ்ச் சாதியின் திருநாள் தைப் பொங்கல்' என்று அப்போது காட்டிய வாய்ச் சாமர்த்தியம்.

இப்போது...

தைப் பொங்கலுக்கு துணிமணி எடுக்கணுமே. எடுத்தாகணுமே... உடுத்தத் துணியில்லாமல் பிள்ளைகள் கிழிசலும் தையலுமாய் நூல் நூலாய் தொங்குகிற பிள்ளைகளின் சட்டைகள்.

எப்படிப் பார்த்தாலும்... 1000 ரூபாய் வேண்டுமே... எவனும் தரமாட்டேன் என்கிறானே... என்ன செய்ய?

கழுத்தாம்பிடியாக வந்து நெருக்குகிற கேள்வி. தோள்த் துண்டைப் பிடித்து உலுக்குகிற கேள்வி.

''துணிமணி எடுக்க என்னமும் வழியிருக்கா?'' என்று கேள்வி கேட்பாளே... ரங்கம்மா, அவளுக்கு என்ன பதில் சொல்ல?

''அய்யா''

திரும்பினான், மூத்த பயல்.

''என்னடா?''

''அம்மா கூப்ட்டாக.''

''எதுக்குடா?''

''ஒங்களைத் தேடிக்கிட்டு யாரோ வந்துருக்காக...''

மூத்தவனோடு கிளம்பினான். மனசுக்குள் குழப்பம் 'யாராக இருக்கும்' என்கிற திகைப்பு.

போய்ப் பார்த்தால்... சர்க்கரை மில்லுக்காரர். 'அந்த'ப் பிரதிநிதியில்லை. ஏமாற்றிய அந்தப் பிரதிநிதியில்லை. வேறு ஆள். கரும்பு விலைபேச வந்திருந்தார். புஞ்சைக்குப் போனார்கள். அநத ஆள் சுற்றிப் பார்த்தார். நீர் பாய்ச்சாமல் வாடவிட்டதைக் குற்றம் சொன்னார். இவன் சொன்ன புகார்களை - நிலவரங்களை - காதில் வாங்கவேயில்லை.

''என்ன பாடுபட்டாச்சும் கரும்புக்குத் தண்ணி பாய்ச்சிருக்கணும்'' என்று கமலை வண்டிச் சத்தம் மாதிரி திரும்பத் திரும்ப கீச்சிட்டார். 'நம்ம புள்ளய நாமா கழுத்தை நெருச்சி கொல்லுவோம்? இவர் பெருசா... உபதேசம் பண்ணுதாரே!'

ராமசுப்புவுக்குக் கோபம் என்றால்... கோபம், அப்படிக் கோபம் வந்தது. இருந்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டான். 'நம்ம புத்திக் குறைவுக்கு யாரைக் குத்தம் சொல்லி என்ன ஆகப் போகுது...' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்.

கரும்பின் விளைச்சலின்மையை மாறி மாறி... சொன்னார். 6 டன் தேறும் என்று மதிப்பிட்டார். டன் 700 ரூபாய் ரேட் கிடைக்கும் என்றார். சனியன் விட்டுத் தொலைந்தால் போதும் என்று அட்வான்ஸை வாங்கினான். ஒரு வருஷ வெள்ளாமை போச்சே என்று மனசு கிடந்து மருகித் தவித்தது.

பருத்தியும் கம்பும் போட்டிருந்தால்... இருபத்தையாயிரத்துக்குக் குறையாது. கரும்பு...? வெறும் மூவாயிரம் கை சேருமா என்பதே சந்தேகம்தான்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால்... உழக்கு கூட மிஞ்சாது' என்கிற சொலவடை சரியாய்ப் போயிற்றே என்று சோகமாக நினைத்துக் கொண்டான்.

தைப் பொங்கல். புதுத் துணிமணிகளை உடுத்திக் கொண்டு மூத்தவனும், இளையவளும் சந்தோஷ வெள்ளத்தில் தத்தளித்தனர். ''அய்ய்... புதுச் சட்டை... அய்ய் எனக்கு புதுப் பாவாடை'' என்று குதூகலக் காற்றாக சுழன்று வந்தனர். ராமசுப்புவுக்கும், ரங்கம்மாவுக்கும் புதுத் துணிமணிகள்தான். ஆனால்... ஏதோ கிழிந்து போய் விட்டிருப்பதை உணர்ந்த மாதிரி, மனசெல்லாம் கசப்பு.

15-1-96 கதிரவன், தீபாவளிச் சிறப்பிதழ்

பிரிவு

மம்பட்டியை எடுத்து வீட்டு முற்றத்தில் வைத்த வடிவேலுவை, கண்ணில் சிறு கேள்வியோடு ஏறிட்டுப் பார்த்தாள்... வேல்த்தாய்.

மணி பத்து இருக்கும். ஏறுவெயில் சுள்ளென்று அறைகிறது. சாரல் கட்டியிருக்கிறது. மழைக் கோப்பு. காற்றில்லாத வெயில் தகிப்பாக எரிக்கிறது.

வாசலருகில் நடையில் உட்கார்ந்து 'அடிப்பெட்டி' ஒட்டுகிற அவள், இடது காலை மடக்கி, வலது காலை நீட்டி வைத்துக் கொண்டு, விரலும் தாளும் பசையுமாக விறுவிறுவென்று இயங்குகிற சுறுசுறுப்பில் வேல்த்தாய்.

பார்வையில் உறுத்திய கேள்வியை அவன் கவனிக்கவில்லை. அவளைத் தாண்டிக் கொண்டு கதவை உரசியவாறு வெளியே வந்த அவன், மம்பட்டியைப் பார்த்தான்.

ஈரமண்ணாக அப்பி, உலர்ந்து போயிருந்தது. மம்பட்டியை மாற்றிப் பிடித்து ஓங்கி ஒரு போடு. சில்லு சில்லாகச் சிதறியோடுகிற மண்கட்டித் துகள்கள்.

சத்தமாக வெளி வந்த கேள்வி.

''என்ன... மம்பட்டிக்கு இப்ப என்ன ஜோலி?''

நேற்று போட்ட சண்டைக்குப் பிறகு... இப்போது தான் முதல் பேச்சு. இறுகலாகிப் போயிருந்த மௌனம் உடைந்து நொறுங்குகிற சத்தம். சண்டையைத் துவக்கியவளே... இப்போது வெள்ளைக் கொடி காட்டுகிறாள். இனி விறைத்துக் கொண்டிருப்பது நியாயமில்லை.

''தண்ணி பாய்ச்சப் போறேன்... வேலய்யா நாயக்கரு புஞ்சைக்கு.''

''மதியக் கரண்டு தானே? அதுக்கு இப்பவே போவணுமா?''

''வாய்க்கால் செதுக்க வேண்டியிருக்கு.''

''அப்ப... சோறுவைக்கட்டா...?''

''வேண்டாம்!''

''தண்ணியும் சோறும் கொண்ணாந்துரவா... புஞ்சைக்கு?''

''ம்...''

வடிவேலுவிடம் சலிப்பு. சிரத்தையில்லாத 'ம்'. உயிரற்ற குரலின் 'ம்'. நிர்ப்பந்தத்திற்கு மனசில்லாமல் பணிகிற வாட்டத்துடன் கூடிய 'ம்'.

புருஷனை நினைத்து அவளுள் சுரக்கிற அனுதாப உணர்ச்சி.

வெயிலில் மினுமினுக்கிற கருந்திரேகம். ரோமக்கட்டு. தோளில் கிடக்கிற துண்டைத் தலையில் வட்டக்கட்டாகக் கட்டிக் கொண்டு, மம்பட்டியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு சொல்லிக் கொள்ளாமல்

நகர்கிற புருஷன். அரைமனசாகப் பள்ளிக்கூடம் போகிற சின்னப் பிள்ளை மாதிரி... தளர் நடை.

நாலுநாளாக எந்தக் கூலி வேலைக்கும் போகாமல் சோம்பலாய் ஊரைச் சுற்றித் திரிந்தவன், நேற்று போட்ட சண்டைக்குப் பிறகு... இன்று நகர்கிறான். அதுவும் அரை மனசாய், குறை மனசாய்.

புருஷன் முதுகையே பார்க்கிற வேல்த்தாய். இரக்கமும் குழப்பமுமாய் நினைப்புகள்.

'என்ன கேடு வந்துச்சு இந்த ஆளுக்கு? என்னத்துக்கு இப்படியாயிட்டாரு? சுதாரிப்பு இல்லாம, சோம்பல் அடைஞ்சு போய்... சுருண்டு கெடக்காரே... ஒரு இழவும் புரியமாட்டேங்குதே...'

சிலந்தி வலையாகப் பின்னிக் கொள்கிற நினைவுகள். குறுக்கும் நெடுக்குமாய் ஓடி, குழம்பிக் கெள்கிற எண்ண ஓட்டம்.

'மம்பட்டி வேலை என்றால்... அதில் மாமன்னன் வடிவேல்தான்' என்று ஊரெல்லாம் பேச்சு. மண்ணோடு பின்னிக் கிடப்பதில் அப்படியோர் மோகம். காடுகரைகளில் பாடுபடுகிற சம்சாரி வேலைகளில் ஓர் ஆர்வம். பிடிப்பு. மம்பட்டியைத் தூக்கித் தோளில் வைத்து விட்டாலே... கோட்டையைப் பிடிக்கப்போகிற ராஜா மாதிரிதான் - தனி கம்பீரம் வந்து விடும். நெஞ்சை நிமிர்த்தி, படு உற்சாகமாய் நடப்பான். நடையில் ஒரு துள்ளல். துடிப்பு.

கூலிக்காக செய்கிற வேலைதானே... கொஞ்சம் மாரடிப்போமே என்ற எண்ணமே இருக்காது. சூது,

ஏமாற்றம் எதுவும் இருக்காது. வஞ்சகமில்லாமல் ஓடியாடி வேர்வை சிந்துவான். மனசு கலந்த பாடு. உணர்வு கரைந்த உழைப்பு. சாதனை செய்து காட்டப் போகிறவனின் விறுவிறுப்பு. போட்டியில் ஜெயிக்கப் போகிறவனைப் போல... சுயமான உத்வேகம்.

விவரமறிந்த வயசிலிருந்து செம்மறியாடுகளை மேய்த்துத் திரிந்தவன். அதன் கொச்சை வாடையிலேயே உறங்கி முழித்தவன். ஆட்டுக் கம்பு தூக்கி, காட்டு வெளியில் சுற்றியவன். வெயிலும் சாமமும் அவனுக்கு ஒன்றுதான். தரிசுகளில் மேய்ப்பான். பேய் திரிகிற சாமத்தில் ஊரான் புஞ்சைகளில் கொழை ஒடிப்பான்.

கல்யாணம் நடக்கிற போது, ஆடுதான் மேய்த்துக் கொண்டிருந்தான். வாரத்து ஆடு.

கல்யாணமான புதுசு. மாப்பிள்ளை முறுக்கு. புதுப் பெண்டாட்டியோடு எந்நேரமும் கொஞ்சி மகிழணும் என்று தவியாய்த் தவிக்கிற மோகம். இளவட்டப் பிரவாகம்.

ஆடு மேய்ப்புத் தொழில் பெருத்த இடைஞ்சலாக இருந்தது. பூராவும் சாமக் கூத்து. மேய்த்து, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, கிடையில் சேர்த்து வீடு திரும்ப ராத்திரி எட்டாகிவிடும். அப்புறம்தான் இளம் குட்டிகளுக்குக் கொழை ஒடிப்பு.

பெண்டாட்டி முகம் பார்ப்பதே பெரும் அதிசயம். ஆடுகளை நினைத்தாலே இச்சிலாத்தியாயிருந்தது. இதை எப்படியாவது தலை முழுகியாகணும் என்று துடியாய்த் துடித்தான்.

கிடைப் பகிர்வில் ஒரு சண்டைவர... 'இதுதான் சாக்கு' என்று, ஆடுகளை விற்று கணக்கு கண்டு கழித்து விட்டு... மம்பட்டியைத் தூக்கியவன்தான்.

காட்டு வேலை என்றால்... கணக்கு வழக்கே பார்க்க மாட்டான். வேலைக்கு ஆள் கூப்பிடுகிற சம்சாரிகள், வடிவேலுவை 'பிரியப்பட்டு'த் தேடுவார்கள். வஞ்சகமில்லாத பாட்டாளி சர்டிபிகேட்டோடு.

தண்ணீர்ப் பாய்ச்சுவது என்றால்... அதில் ஒரு வேகம்.

சொந்தப் புஞ்சை போன்ற அக்கறை. வாய்க்கால் புல்லைச் செதுக்குகிற தீவிரம். பாய்ந்த பாத்திகளுக்குள் இருக்கும் களைகளைப் பிடுங்குகிற சுத்தம். வரப்பை இழுத்து, மண் வைத்து வேர்வை சிந்துகிற நேர்மை.

பாத்தி கட்டு என்றாலும் அப்படித்தான், விறு விறுப்பும், வேலைத் தெளிவும் இருக்கும். டக்கருக்கு மண் அள்ளிவிட, குப்பையள்ளிவிடப் போனாலும்... அதேதான். மற்றவர் ஒரு கூடை அள்ளுவதற்குள், இவன் நாலு கூடைக்கு அள்ளி முடித்து விடுவான்.

கூட வேலை பார்க்கிறவர்கள் இவனைச் 'சரியான கோட்டிக்காரப்பய' என்று கேலி கிண்டல் பண்ணி கூத்துக் கட்டுவார்கள்.

''ஊரானுக்கு ஒழைக்குறதுலே இப்படியா உசுரைக் குடுக்கணும்? கிரீடமா வைச்சு விடப் போறாக? இல்லே... நடுத் தெருவுலே ஒனக்குச் செலை வைப்பாகளா?'' என்றெல்லாம் குத்திக்காட்டி நையாண்டி பண்ணுவார்கள்.

ஊ... ஹூம். அதுக்கெல்லாம் அசரவே மாட்டான். 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று அவன் போக்கிலேயே... அவன்.

அப்படி இருந்த ஆளுக்கு, இப்ப என்ன கேடு வந்து விட்டது.

வாத்தியாருக்குப் பயந்தபிள்ளை திடுமென்று பள்ளிக் கூடம் போக மறுப்பதைப் போல, இவனும் சண்டித் தனம் பண்ணுகிறான். வேலைக்குப் போகிற இஷ்டமேயில்லை. சும்மாவே ஊரைச் சுற்றுகிறான். சோம்பலில் முடங்கி உறங்குகிறான்.

''வேலைக்கு வாரீயா?'' என்று யாராச்சும் கூப்பிட்டால் 'வேலை இருக்கு' என்று தட்டிக் கழிப்பான். 'என்ன வேலை' என்று கேட்டால் 'குண்டக்க மண்டக்க' என்னத்தையாச்சும் பொய் சொல்லுவான்.

நாலைந்து நாளாகப் போக மாட்டான். அப்புறம் வேல்த்தாய் சண்டை போட்டால்... ரெண்டு நாளைக்குப் போவான், நச்சரிப்பு தாளாமல். அப்புறம் முடக்கம்தான்.

நேற்று ராத்திரிகூட... அதே சண்டைதான்.

சண்டையின் வெக்கைக்கு மத்தியில்... அவன் சலிப்பும் சமாதானமுமாய்ச் சொன்ன வார்த்தைகள். ''ஆமா... அவுக குடுக்குற இருபது ரூவா சம்பளத்துக் காக... வேணாக் கொதிக்கிற வெயில்லே கெடந்து சாகணுமாக்கும்? இருபதுரூவாயை வைச்சு என்ன செய்ய? நாக்கு வழிக்கக் கூடப் பத்தாது...''

இப்போது கூட, வேல்த்தாய் மனசுக்குள் மங்கலாய் ஒலிக்கிற அந்த முணுமுணுப்பு. ஏதோ மர்மம் பிடிபடுகிற மாதிரியோர் உணர்வு. இவளுள் எங்கெங்கோ பரவி, ஆழ அதிர்வுகளை நிகழ்த்துகிற உணர்வின் முகங்கள்!

அசமந்தமாகிப் போன புருஷனை நினைத்தால்... கோபப்பட முடியவில்லை இப்போது. பாவமாக இருக்கிறது.

வேலய்யா நாயக்கர் புஞ்சைக்குள் இறங்கினான் வடிவேல். புஞ்சை லட்சணம் கெட்டுப் போயிருந்தது. கோடைப் பருத்தி. நெஞ்சுக்கு மேல் வளர்ந்திருக்க வேண்டிய எல்.ஆர்.ஏ. பருத்திச் செடிகள். முழங்கால் உயரத்தில் உயிரில்லாமல் முழித்துக் கொண்டிருந்தன. அங்கொன்றும் இங்கொன்றும் மஞ்சள், சிவப்பு பூக்கள். பாத்திக்குப் பாத்தி கீரைமாதிரி அப்பிப் போய் படர்ந்திருக்கிற சாரணத்திக் கொழை.

வானம்பார்த்த சம்சாரித்தனம். சம்சாரிகளுக்கும் காடுகரைகள் விளைய மாட்டேன் என்கிறது.

விளைகிற விளைச்சலுக்கும் உருப்படியான விலையுமில்லை. வியாபாரிகள் கொள்ளை. கடனும் உடனுமாய் இடுப்பொடிந்து கிடக்கிற சம்சாரி... எதை வைத்துக் கூலி ஜனத்துக்குச் சம்பளம் கொடுப்பான்? உள்ள சம்பளத்துக்கே வழியற்ற கதியில், நல்ல சம்பளத்துக்கு எங்க போக?

கிணற்றுத் தொட்டியிலிருந்து புஞ்சைக்கு வருகிற பெருவாய்க்கால். வேரோடிப்போன அருகம்புல்லும்,

கொடி கொடியாய்ப் படர்ந்த பொடுதலையும் போட்டு மூடிக் கிடந்தன. உள்ளங்கையில் எச்சிலைத் துப்பி 'பரபர'வென்று தேய்த்துக் கொண்டு, மம்பட்டியைப் பிடித்தான். ஓங்கி ஓங்கிப் போட்டான். 'சதக்', 'சதக்' கென்று விழுகிற மம்பட்டி. கொத்திக் கண்ட கோழியும், நக்கிக் கண்ட நாயுமாய்... அவனுள்ளிருந்து வியர்வையாய்ப் பீறிடுகிற உழைப்பு வெறி.

புல்லும் மண்ணும் குவியக் குவிய... மம்பட்டியால் அள்ளி அள்ளிக் கரையில் போட்டுக் கொண்டே பின் நகர்கிறான்.

'மூசு, மூசெ'ன்கிற மூச்சிறைப்பு. நிமிர்ந்து பார்க்கவே யில்லை. சதக், சதக், சதக், 'சதக்'குகள்...

அன்றைய வெயில் முழுவதும், அவன் முதுகில்தான்.

மண்வெட்டி வேலையில் வடிவேலுவோடு போட்டிக்கு நிற்க முடியுமென்றால்... அது முத்தையா ஒருத்தன்தான். வேலய்யா நாயக்கருக்குப் பண்ணையாளாக - பதிவுக் கூலிக்காரனாக - இருந்தவன். வேலைகளில், இவனைப் போல அசுரன்.

சாயங்காலம் வரை மாடும் கலப்பையுமாக வந்து உழுது முடிப்பான். ராத்திரி நிலா வெளிச்சத்தில் ஒத்தையாளாக வந்து பாத்தி கட்டி முடித்து விடுவான். அப்பேர்ப்பட்ட பாட்டாளி.

அவன் மம்பட்டியைப் பாதுகாத்து வைத்திருக்கும் விதமே... தனி.

அகலமான - கனத்த - மம்பட்டி. வழுவழுப்பான கணை. மம்பட்டியில் ஒரு நெளிவு கூட இருக்காது. சூரிக்கத்தி மாதிரி கதுமை. கை அசந்தால் கால் கட்டை விரலைப் பதம் பார்த்துவிடும்.

யார் வந்து கேட்டாலும் உயிரைக் கூடக் கொடுத்து விடுவான். மம்பட்டியை மட்டும் தரவே மாட்டான். ''அதை விட்டுட்டு, வேற பேச்சுப் பேசு'' என்று மூஞ்சியில் அடித்தமாதிரி சொல்லிவிடுவான். அப்படி 'அருமை'யாய் நினைப்பான், உழைப்புக் கருவியை.

இப்போது -

அவன் கொய்யாப் பழ வியாபாரத்துக்குப் போகிறான். மம்பட்டி வேலையையே தலை முழுகி விட்டான், 'கட்டுப்படியாகவில்லை' என்று.

'ணங்ங்ங்.'

தீப்பொறி பறந்தது. வடிவேலு திகைத்துப் போனான். ஓங்கி ஓங்கிப் போட்ட மம்பட்டி வெட்டு. வாய்க்கால் வரப்புக்குள் புதைந்து கிடந்த பொழிக்கல்லில் விழுந்து விட்டது. மோதிய மோதலில் மம்பட்டி எகிற. இவன் கையையே உதறியெறிந்தது.

பதறிப் போய் மம்பட்டியைப் பார்த்தான். பயந்த மாதிரியே ஆயிற்று. மம்பட்டியின் காம்பையும், இலைத் தகடையும் இணைக்கும் ஆணிகள் உடைந்து, இலைத் தகடு தனியாக ஆடியது.

எரிச்சலோடு நிமிர்ந்து பார்த்தான். பொழுது, நேர் உச்சியில். காலடிக்குள் குறுகிக் கிடந்த நிழல். சரிமதியம்.

ரெண்டு பேஸ் கரண்டு நின்று, மூன்று பேஸ் கரண்டு வருகிற நேரம். மோட்டாரைத் தட்டிவிட வேண்டிய சமயம்.

'இப்பப் போய்... மம்பட்டிக்கு யாருகிட்டே போக? எங்க போய் ஓசி கேக்க?''

வடிவேலுக்குள் முட்டிக் கொண்டு வந்த குருட்டுக் கோபம். பற்றிக் கொண்டு வருகிற கற்றைத் தீ. 'யாரை வைய' என்று புரியாமல்... எல்லாரையும் மனசுக்குள் திட்டித் தீர்த்தான்.

'வேறு புகலில்லை. முத்தையா வீட்லே கேட்டு வாங்கிட்டு வரவேண்டியதுதான். அவன்தான் மம்பட்டி வேலையை விட்டுட்டானே...'

விறுவிறுவென்று நடந்தான், ஊரை நோக்கி. அவன் திரேகமெல்லாம் வரிவரியாய் வேர்வைப் பெருக்கு. அதில் போய் அப்பியிருக்கிற மண்துகள். வேர்வையில் கரைந்த மண்வாசம், எப்பவும் இவனுக்குப் பிடிக்கும்.

ஊர், ஆளில்லாமல் 'வெறீச்' சென்றிருந்தது.

''முத்தையா ஏவாரத்துக்குப் போயிருக்கானா?''

''ம்...''

''கொஞ்சம் மம்பட்டி வேணும்''

''ஏன், உங்க இது என்னாச்சு?''

''வாய்க்கா வரப்பை கொத்துனேன். ஒடிஞ்சு போச்சு!''

வாசலோரத்தில் உட்கார்ந்து 'மேல் பெட்டி' ஒட்டிக் கொண்டிருந்த முத்தையா பொஞ்சாதி. அட்டைக் கட்டுகளையும், தாள் கட்டுகளையும் தள்ளி வைத்து விட்டு... எழுந்தாள்.

''இந்தாங்க.''

ரொம்ப நாளாகக் 'கை படாத' மம்பட்டி. இலைத் தகடெல்லாம் துரு ஏறிப்போய், லட்சணம் கெட்டிருந்தது.

முத்தையா மம்பட்டிதானா, இது? பளபளப்பா யிருக்குமே மம்பட்டி? வழுவழுப்பாயிருக்குமே கணை? உயிரைவிட அருமையாக நினைப்பானே... என்னாயிற்று? உயிரே துருவேறிப் போச்சா?

மம்பட்டியைப் பார்த்தான்.

''என்ன பாக்கீக?''

''ஒண்ணுமில்லே. முத்தையா ரொம்ப நாளா மம்பட்டியை மூலை சேத்துட்டானோ?''

''அதை மூலை சேத்தப் பெறவுதான்... வவுறார கஞ்சி குடிக்க முடியுது!''

அவள் குரலில் கொப்பளித்த கசப்பு. வெளிப் படையாக முகம் திறந்து காட்டிய வெறுப்பு. அதில் முகம் காட்டாமல் உறைந்து போயிருந்த வாழ்வின் குரூரம். படுத்த படுக்கையில் 'சட்டடியாய்' சாகக் கிடக்கிற சம்சாரித்தனம்.

மண்ணை நம்புகிற பிழைப்பே... மண்ணாகிப் போயிற்றா?

எதையும் யோசித்துக் கொண்டு நிற்க நேரமில்லை. கரண்டைத் துரத்திக் கொண்டு கரண்டாக ஓடவேண்டிய அவசரம்.

'டடக்'

கரண்டு நின்றவுடன் மோட்டார் மூச்சடைக்க... அதிர்வோடு ஆடுகிற பம்ப். வரத்துத் தண்ணீருக்கு ரெண்டு பாத்திகளைக் கொத்திவிட்டு, புஞ்சையை விட்டு வெளியேறினான். கால்களில் சகதி. வாய்க்கால் தண்ணீரில் மம்பட்டியை அலசிவிட்டு, தொட்டித் தண்ணீரில் உடம்பைக் கழுவிவிட்டு வண்டிப் பாதைக்கு வந்தான். தோளில் முத்தையா மம்பட்டி, கையில் உடைந்த மம்பட்டி.

பொழுது அடைந்துவிட்டது. மேற்கு மலைத் தொடர் முதுகுகளில் நெடுகப் படுத்துக் கிடந்த சாரல் மேகம், ஆறின கங்குத் துண்டுகளாகக் கனிந்திருந்தது. பகலில் அடித்த வெயிலுக்குச் சம்பந்தமில்லாமல் ஊதல்காற்று. ஈரத்துண்டை உருவிக் கொண்டோட முயல்கிற காற்றின் வேகம். குளித்த உடம்பு, புல்லரித்து நடுங்குகிறது.

வேலிக் காட்டுக்குள் மயில்கள் கலைந்து ஓடின.

வண்டிப் பாதையில் சைக்கிளை உருட்டிக் கொண்டு வருகிற முத்தையா. கொய்யாப்பழம் கொண்டுபோன மரப்பெட்டியில் பழைய பிளாஸ்டிக் சாமான்கள். துருவேறின இரும்புகள். கேரியரில் கட்டியிருந்த மரப்பெட்டியில் தொங்கிய தராசு. மரப்பெட்டியோடு

சேர்ந்து தொங்கிய சாக்குப் பையிலும் இரும்புச் சாமான்கள். தகர மடிப்புகள்.

காற்றுக்கு எதிர்த்துப் போக முடியாமல் உருட்டுகிறான்.

''என்ன வடிவேலு, தண்ணி பாய்ச்சப் போனீயா?''

''ஆமா.உங்க நாயக்கருக்குத்தான்.''

''மம்பட்டி எங்க இது மாதிரியிருக்கு?''

''எம்மம்பட்டி ஒடிஞ்சு போச்சு. அதான்... உங்க வீட்லே போய் வாங்கிட்டு வந்தேன்.''

''வேணும்னா... அதை நீயே வைச்சுக்க.''

''ஒனக்கு?''

''எனக்கெதுக்கு இனிமே? அது... என்னை விட்டுக் கழிஞ்சாப் போதும்!''

''அப்ப... இனிமே நெரந்தரமா ஏவாரந்தானா?''

''ஆமா!''

''இதுலே எம்புட்டு கெடைக்கு?''

''பழைய சாமான்க வரத்தைப் பொறுத்து இருக்கு. எப்படிப் பார்த்தாலும், எம்பதுக்கு கொறையாது.''

வடிவேலுவுக்குள் திகைப்பு. பிரமிப்பின் விளிம்பில் அவன். நெஞ்சு முட்டுகிற பிரமிப்பு. 'ஒரு நாளைக்கு எம்பது ரூவா வருமானமா?'

ஏற்கெனவே கேள்விப்பட்டு அறிந்த விஷயம்தான். அதையே முத்தையா வாய் மூலமாக நேருக்கு நேராகச் சொல்லக் கேட்கிறபோது நேர்கிற வியப்புணர்வு.

''ஏம் முத்தையா, ஒனக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியாதே... ஏவாரத்துலே கணக்கு வழக்கெல்லாம் எப்படிப் பாக்கே?''

சிறு குழந்தையைப் போல வெள்ளந்தியாகக் கேட்கிற இவனை சைக்கிளை உருட்டிக்கொண்டே சாதாரணமாகப் பார்க்கிற முத்தையா. பார்வையில் பெரிய மனிதத் தோரணை.

''பழைய இரும்புச் சாமானுக்கு எடைக்கு எடை பழத்தை நிறுத்துப் போடுறதுக்கு... என்ன பெரிய கணக்கு வேண்டிக் கிடக்கு? வவுத்துப் பாட்டுலே, வசங்காத பாஷையும் வசங்கும். வராத கணக்கும் வந்து சேரும்.''

வடிவேலுவுக்குள் ஏதேதோ நினைப்புகள். வடிவமாகாத நினைப்புகள். இனம்புரியாத தடங்களில் வழி தப்பிய செம்மறியாடாக அலைந்து கதறுகிற நினைப்புகள். ஏக்கமும் தயக்கமுமாய் முரண்பட்ட நினைப்புகள்.

பம்ப்செட் ரூம் சாவியைக் கொடுத்தான், வடிவேலு. வேலய்யா நாயக்கர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னான். 'எம்புட்டுப் பாய்ஞ்சது', 'எங்குட்டுப் பாய்ஞ்சது', 'கரண்டு நிக்குறதுக்குள்ளே தண்ணி வத்திப் போச்சா' என்ற கேள்விகள்.

''நாளைக்கு வாரீயா?''

''காலையிலே வந்து சொல்லுதேன்'' என்று அதற்கு மட்டும் 'க்'கன்னா வைத்து பதில் சொல்லிவிட்டு வந்தான்.

வேலய்யா நாயக்கர் மகன் காலையில் கொண்டுவந்து சம்பளத்தைத் தந்தான். இருபது ரூபாய்.

அடிபட்ட வேதனையும் சோகமுமாய் அந்த ரூபாயைப் பார்த்தான். இதுவரை நோட்டையே பார்த்திராதவன் போல... அந்த ரூபாய்த்தாளை மாற்றி மாற்றிப் பார்த்தான். விரித்து, புரட்டி, திருப்பிப் பார்த்தான்.

'இதை வைச்சுக்கிட்டு ஒரு குடும்பத்தை நடத்தவா? எப்படி நடத்த? ரெண்டு கிலோ அரிசிக்கும் கத்தரிக் காய்க்கும் கூட பத்தாது. இதை வைச்சு எப்படிப் பொழுதை ஓட்ட? எப்படிப் பிழைக்க?'

கனத்து அழுத்துகிற பாரக் கேள்விகள். இறக்கி வைக்க முடியாத சுமைக் கேள்விகள்.

''இதை மூலை சேத்த பெறகுதான், வவுறாரக் கஞ்சி குடிக்க முடியுது.''

''அது... என்னைவிட்டுக் கழிஞ்சா... ப் போதும்.''

- என்று முத்தையா ரொம்பக் சசப்பாகப் பேசிய அனுபவ வீச்சுகள். அவனது உயிராக இருந்த மம்பட்டியை ஒதுக்கிய கோபம்.

ஒடிந்து கிடந்த தன் மம்பட்டியையே ஒரு சோகமாகப் பார்த்தான்.

''இந்தா...! அந்தப் புள்ளையாண்டான் என்னமோ கேக்குது. காது கேக்கலியா? செவிடாகிப் போச்சா?'' வேல்த்தாயின் அதட்டல் சத்தத்தில் மன உலகத்திலிருந்து

பிடுங்கப்பட்ட வடிவேலு, ''என்ன, என்ன...'' என்று வெலவெலத்துப் போய்க் கேட்டான்.

''நாளைக்கு வேலைக்கு வாரீயான்னு அய்யா கேட்டுட்டு வரச்சொன்னாரு'' என்று கேட்கிற வேலய்யா வாரிசு.

''வரல்லே'' என்றான் சட்டென்று.

''அப்ப... எங்க போறீக?'' லௌகீக வாழ்வின் தாட்சண்யமற்ற குரலாக... வேல்த்தாய்.

''ஏவாரத்துக்கு.''

பையன் போய்விட்டான்.

வாசலில் நின்ற வடிவேலு. ஒடிந்த மம்பட்டியைப் பார்த்த கண்ணோடு, நடையில் உட்கார்ந்து அடிப்பெட்டி ஒட்டுகிற வேல்த்தாயைப் பார்த்தான். பார்வையில் கனத்து நின்ற சோகம்.

அவனது அடிமன வேதனையைத் துல்லியமாக உணர்ந்து கொண்ட அந்த ஆத்ம பங்காளியின் கண்ணிலும் வருத்த நிழல். மண்ணைப் பிரிகிற பயிர்களின் ரணம். தாயை விட்டு விலகுகிற பிள்ளைகளின் மனக் காயம். அதன் வலி.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு-

கொய்யாப்பழம் நிறைந்த மரப்பெட்டியைச் சைக்கிளில் கட்டிக்கொண்டு, முத்தையா பின்னால் வடிவேலுவும் உருட்டிக் கொண்டே போனான், தெருவுக்குள். காலை வெயிலின் குளுமை.

குற்ற உணர்வும், வெட்க உணர்வும் மனசுக்குள் இண்ட முள்ளாகக் குத்தியழுத்த... யார் முகத்தையும் ஏறிட்டுப் பார்க்கிற மனதிடமில்லாமல் தரை பார்த்து சைக்கிளை உருட்டினான்.

மடத்து வாசலில் வேலய்யா நாயக்கர் யாரிடமோ பேசிக் கொண்டிருக்கிறார். 'இப்ப இப்ப... எல்லாக் கூலிக்காரப் பயல்களும் மம்பட்டி புடிச்சு மண்ணுலே பாடுபட மேல் வலிக்குங்கிறான். உடம்பு அலுங்காமலேயே 'அள்ளிரணும்'னு அலையுறான். நாடு வெளங்கவா... போகுது?''

காற்றில் வந்து சேர்கிற அந்தத் தீயின் வெக்கை. சுடு சொற்கள். கைப்புடன் சிரித்துக் கொண்டான், வடிவேலு.

கல்கி, தீபாவளி மலர், 1995

ஒரு நாள்

மயில்சாமிக்குப் பாவமாக இருக்கிறது, பார்க்கப் பார்க்க. கதர்வேட்டியும் கதர்ப் பனியனுமாய் தும்பைப் பூப்போல தோற்றமளித்தாலும், ராமசுப்பு முகம் இருண்டு கிடக்கிறது. கையறு நிலையில் உழன்று தவிக்கிற அவரின் குமைச்சல். வெளிக்காட்டாத முணுமுணுப்பு.

பருத்தி எடை போட்டு இருபத்தாறு மருகைகளை லாரியில் லோடு பண்ணிக் கொண்டு போய்... ஒரு மாசமாகிறது. இன்னும் பணம் வந்து சேரவில்லை. யூரியா மூட்டை எடுக்க... மருந்தடிக்க... கம்பு விதை வாங்க பணமில்லாமல் நாளைத் தள்ளித் தள்ளிப் போடுகிறார். கூலி ஜனத்துக்கு அன்றாடம் கூலி கொடுத்தாகணுமே. கையில் ஒன்றுமில்லாமல் என்னத்தைக் கொடுக்க? எப்படிப் பதில் சொல்ல?

காடுகரையுள்ள அந்த மத்திய தரச் சம்சாரி படுகிற மனத்தவிப்பை உணர்ந்து... பரிதாபப்பட்டான் மயில்சாமி. வாசலோரத்தில் உள்பக்கமாய் ஒதுங்கி நின்றான். இவனும் கூலி வாங்க வந்தவன்தான். வாயைத் திறந்து எப்படிக் கேட்க? 'இருந்தால்... தூக்கித் தூக்கிக் கொடுக்கிற மகராசன். இல்லாக் கொடுமை. சொல்ல வழியில்லாமல் முழிக்கிறார். இதில் நாமும் போட்டுக் குடையணுமா?'

மயில்சாமிக்குள் ஈரமான தயக்கம்.

உள் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார், ராமசுப்பு. யோசனைத் தீவிரம். வழி தெரியாத திகைப்பு. மழுங்கச் சிரைத்த முகம். மனசுக்குள் நினைவுகள் அடர்த்தியாகி, கனமேறிப்போகிற நேரங்களில் பெருமூச்சு விடமாட்டார். பொடியைத்தான் போடுவார். மூக்குப்பொடி.

''என்ன மயிலு... ரொம்ப நேரமா நிக்கே?''

''சும்மாதான்...''

''இன்னைக்கு மேலக்காட்டுலே தண்ணி பாய்ச்சிரு!''

''ம்.''

''பெருவாய்க்கால்லே புல்லா கெடந்துச்சு. செதுக்கிரு.''

''ஆட்டும்... மோலாளி...''

''முருகத்தாயை தெக்காட்டுக்குப் போகச் சொல்லு. பருத்தி எடுக்கட்டும்.''

''ம்.''

''நீயும் ரூவாய்க்குத்தான் நிக்கியா...?''

''ஏதாச்சும் இருந்தா... நல்லது. ரொம்பச் சிரமமாயிருக்கு.''

''ஒனக்கும் முருகத்தாயிக்கும் சேத்துச் சம்பளம் தரவேண்டியிருக்கு. இருவது நாளைக்கும் மேலே பாக்கி தரணும். இன்னைக்கு இல்லே. ரெண்டு நாளையிலே ஏற்பாடு பண்றேன்.''

''ம்... அப்படியா... மோலாளி? சரி...''

அவனது சம்மதச் சொல்லுக்குள், துல்லியமாய்த் தெரிந்த தயக்கம். தொண்டைக்குள் சத்தமாய் கம்மிய 'சரி'க்குள்... உட்கார்ந்திருந்த மறுப்பு. வற்புறுத்தல் தொனி.

''மயிலு... வைச்சுக்கிட்டா... ஓங்கிட்டே வாய்தா சொல்லுதேன்?''

''இல்லே மோலாளி...''

தலையைச் சொறிந்தான். வேதனை கலந்த சிரிப்பு, அவன் முகத்தில். அரைமனசாக வெளியேறினான்.

தெருவில் இறங்கி நடக்கிற மயில்சாமி மனசுக்குள் ஒரு திகைப்பு. ஏதோ ஒன்று மறித்துக் கொண்டு நிற்கிற மாதிரியோர் மலைப்பு. வீட்டுக்குப் போனால் வந்து மொய்க்கிற நச்சுப் பிடுங்கல்கள். சீட்டுக்குப் பணம் தரணும். கடைக்காரனுக்கு பாக்கி தரணும்! டீக்கடையில் பற்று. இன்னும் இன்னும்... நிறைய கடன்கள்.

கடன்காரர்கள் எல்லோரும் இவனைச் சந்தேகமாகப் பார்க்கிற பார்வைகள். மனசுக்குள் பாய்ந்து குடைகிற ஊசிகள். அடிமனசே அவமானத்தில் கூசிப் போகிற பயங்கரம்.

'ஏமாத்துக்காரன். வாங்குன கடனைத் தராத பாவலாக்காரன். பம்மாத்துக்காரன். ஜால்சாப்பு சொல்லி மாய்மாலம் பண்றவன்...' என்றெல்லாம் வார்த்தையில்லாமல் திட்டித் தீர்க்கிற ஊசிப் பார்வைகள்.

மயில்சாமிக்கு திணறலாக இருக்கிறது.

'கூலிக்காரனுக்கு இருபது நாளைக்கு சம்பளம் தரலேன்னா... என்ன செய்றது? எல்லாக் கடன்காரனுக்கும்

குடுத்துக் கழிச்சு... நல்ல பிள்ளையாகிறது, எப்படி? வீணா... கெட்ட பேரு... எல்லாருக்கும் கெட்ட பிள்ளையாக நிக்கிற கேவலம். ச்சே!''

வக்கற்ற ஏழையாக பிழைக்கிற வாழ்க்கையின் பாரம், அவன் நெஞ்சுக்குள் அழுத்திற்று.

ஐந்து வருஷமாயிற்று. மயில்சாமி வேறு யார் புஞ்சைக்கும் வேலைக்கே போகவில்லை. பதிவாக ராமசுப்பு புஞ்சையிலேயே வேலை. இவனுக்கும், முருகத் தாயிக்கும் வேலை. தினசரி வேலை. தினக்கூலிதான்.

இருந்தாலும் ஐந்து வருஷப் பழக்கத்தில் வந்துவிட்ட ஓர் உறவு. கொடுக்கல் வாங்கலில் வந்துவிட்ட விசுவாசம். தீபாவளி... பொங்கல் போன்ற 'நல்லது, பொல்லது' களுக்கு துணிமணி எடுத்துத் தருகிற ராமசுப்புவின் தயாளம். அதில் வந்துவிட்ட மரியாதை.

இன்றைக்கு உள்ள நிர்பந்தத்திற்காக... எப்படி மனித முகத்தை முறிப்பது? ஆத்திர அவசரத்துக்காக மனசை மாத்திக்கிடவா? மனுச அருமையை மறந்துரவா? மனுசத்தனத்தை மதிக்கிறதுக்குக் கூட ஏழையா பொறந்துட்டவனுக்கு எம்புட்டுப் பெரிய போராட்டமா யிருக்கு?

சலிப்பும் வேதனையுமாக கிழிபடுகிற யோசனைகள். எதுவும் நினைக்க முடியாத அளவுக்கு சுயபச்சாதாப உணர்வின் அவஸ்தை.

மயில்சாமியின் கால்கள் தன் போக்கில் டீக்கடையில் நின்றன. காலை நேரம். டீக்கடையில் ஏக நெரிசல். 'எனக்கு

டீ, ஒனக்கு டீ' என்று நாலா திசைகளிலும் கூப்பாடு. மனிதக் கூச்சல்.

தட்டில் பொன்னிறமாய் உளுந்த வடைகள். 'எடுத்துக்கோ, எடுத்துக்கோ' என்று புன்னகைக்கிற வடைகள்.

எடுக்கும் ஆர்வத்தில் மனசும் விரலும் நீண்டன. டீப் பட்டறையில் கிளாஸ் கழுவிக் கொண்டே கடைக்காரன் பார்த்த பார்வை.

மயில்சாமிக்குள் நறுக்கென்று முள்குத்தியது போலிருந்தது. மனசும் விரலும் தீப்பட்ட புழுவாக உள்ளுக்குள் சுருண்டு கொண்டது. முள் குத்திய வலி, உள்ளுக்குள் பரவி கடுகடுத்தது.

''ஒரு டீ மட்டும் போடப்பா'' என்ற மயில்சாமியின் குரலில் காயம்பட்ட வேதனையும், ஆயாசமும் கசிந்தது.

மீண்டும் கடைக்காரரின் மின்னல் வெட்டுப் பார்வை. 'இதுவும் கடன்தானா?' என்று கேட்காமல் கேட்கிற கோபப்பார்வை.

''வேலைக்குப் போவணும், சீக்கிரம் டீ குடப்பா. நாளைக்கு ஒங்கணக்கை முடிச்சிருதேன்'' என்று வலியச் சொன்னான். மனசுக்குள் படபடப்பு. 'தான் சொன்ன சமாதானத்தில் மௌனமாகிப் போவானா' என்கிற பதைப்பு.

''நீ குடுத்ததும் போதும்... டீ குடிச்சதும் போதும். எடத்தைக் காலி பண்ணு மொதல்லே'' என்று தாட்சண்யப்படுதா கிழிய மூர்க்கமாக வெடித்து

விடுவானோ என்கிற பயம். அடிவயிற்றில் 'பகீர், பகீர்' என்ற உணர்வு.

டீ குடித்து முடித்து வெளியில் வந்தபோது, ஒரு பாரம் இறங்கிய விடுதலை உணர்வு. 'அப்பாடா' என்றிருந்தது, மனசு. ஏனோ... ராமசுப்புவின் முகம் வந்துபோயிற்று.

அவரால்தானே இத்தனை மன உளைச்சல்.

மேலக்காட்டுக்குப் போனான். எள்ளுச் செடியின் உரசல் சடச் சடப்பு. தனக்கு முன்னால் காலடியில் நகரும் தன் நிழல். வாய்க்கால் செதுக்கணும். மதியத்தில் 'த்ரீபேஸ்' கரண்டு வந்தவுடன், பருத்திக்குத் தண்ணீர் பாய்ச்சணும். சாயங்காலம் ஆறு மணியாயிரும், வீடு வந்து சேர.

''சோறு வைக்கட்டா?'' முருகத்தாயின் சத்தம் மயில்சாமிக்குச் சுகமாக இருந்தது.

''வை... வவுரு கெடந்து ஆளைத் திங்கு.''

''கால் கையை கழுவிட்டு வாங்க.''

''ம்... நம்ம புள்ளை எங்க?''

''தெருவுலே வெளையாடப் போயிருப்பான்.''

முற்றத்தில் அக்னிமூலையிலிருந்த வெளிப் பானைக்குப் போனான், மயில்சாமி. முழங்கால் வரைக்கும் காய்ந்த சகதித் திட்டுகள். நீருக்குள்ளேயே கிடந்து ரத்தம் உலர்ந்து போய்... வெளுத்துக் கிடக்கும் பாதங்கள். காய்ந்த பருத்தி மார்கள் பட்டு இழுத்து... தொடையெல்லாம் வெள்ளைக் கோடுகள்.

பாதி உடம்புக்கு நீரை ஊற்றி அலசினான். கழுத்தடி, மார்பு, முதுகு என்று அள்ளி ஊற்றினான். கழுவித் துடைத்தவுடன், திரேகத்தில் ஒரு சுகம். அலுப்பு விலகிற சுகம். உடம்பே... புடைத்தெடுத்த தான்யம் மாதிரி பளிச்சென்றிருந்தது.

சாப்பாட்டுக்கு ஏங்கிப் போய், வயிறும் மனசும் பரபரத்தது. வீட்டு வாசலை மிதிக்கிறபோது-

''மயிலு...''

திரும்பிப் பார்த்தான், மயில்சாமி. அடிவயிற்றில் தீப் பிடித்த மாதிரியிருந்தது. சீட்டுக்காரர். தவணை கடந்து ஏழு நாளாகிவிட்டது. சீட்டு எடுத்தாகிவிட்டது. போன வருஷம் குலதெய்வத்துக்கு மொட்டை போட்டு வந்த செலவில் அந்தச் சீட்டுப்பணம் மாயமாயிற்று. மாசா மாசம் 250 ரூபாய். கண்டிப்பானவர். கறார்ப் பேர்வழி. ஏழு நாள் பொறுத்ததே... குலதெய்வ புண்ணியம்.

''என்ன மாமா...?''

''என்ன... நொன்ன மாமா? சீட்டு ரூவாயைக் குடு.''

''கோவத்தோடு வந்துருக்கீக போலிருக்கே...''

''இந்த சிரிப்பு வெளையாட்டெல்லாம் வேற யாருக்கிட்டேயும் வைச்சுக்க. ரூவாயை எடு...''

அவரது சீற்றத்திலிருந்த குரூரம். தாட்சண்யமற்ற வெக்கை. சிரிக்க முயன்ற அவனது சகஜபாவம், சட்டென்று மறைந்து, முகம் கறுத்துச் சுருங்கியது. அவமானமாய் உணர்ந்தான். யாரும் வேடிக்கை பார்க்கிறார்களா என்கிற பதைப்போடு தெருவைப் பார்த்தான்.

''சரி... மொக தாட்சண்யம் பாக்காமப் பேசுதீக... கடன் படப்போய்த்தானே பேசுதீக? பேசிட்டுப் போங்க... நாளை மறுநாளு ரூவா தாரேன் மாமா...''

''அந்தப் பேச்சே வேண்டாம். ரூவா... இப்ப வேணும்.''

''இப்ப இல்லியே... நா என்ன செய்ய?''

''சீட்டெடுத்து சீமான் கணக்கா செலவழிச்சீயே... இப்ப இல்லியேன்னு கைவிரிச்சா என்ன அர்த்தம்? தவணை தவறி ஒரு வாரமாச்சு. இதுக்கும் மேலே எப்படிப் பொறுக்குறது?''

''பொறுத்தது பொறுத்துட்டீக... இன்னும் ரெண்டே ரெண்டு நாளு...''

''அந்தச் சோலியே ஆகாது, இங்க. இந்த மாசம் சீட்டெடுத்தவனுக்கு நா பணம் கட்டியாகணும்லே? எதை வெச்சு கட்டுறது? என்ன செய்வீயோ... எனக்குத் தெரியாது... காலையிலே கையிலே பணம் வந்தாகணும். இல்லே மானமரியாதை கெட்டுப் போகும்... சொல்லிட்டேன்...''

தெருவே திடுக்கிட்டு ஸ்தம்பிக்க... தாறுமாறான சத்த முழக்கமாய் கத்திவிட்டு, வேகமாய்ப் போகிற சீட்டுக்காரர். வேடிக்கை பார்த்த நாலைந்து தலைகள், உள் சுருக்கமாய் மறைய... அவற்றில் ஏளனச் சிரிப்புகள். இவனது தன்மானத்தை அறுக்கிற அவமானக் கத்திகள்.

ராமசுப்புவை நினைக்காமலிருக்க முடியவில்லை. நினைக்க நினைக்க கோபமாக வந்தது. இருபது நாள்

கூலியை அவர் கொடுத்திருந்தால்... இந்தச் செருப்படி பட்டிருக்க வேண்டாமே! இப்படி மனம் உடைந்து, தலை குனிந்து, சீப்பட்டிருக்க வேண்டாமே...

''வாங்க... சோறு ஆறுது.''

முருகத்தாயின் கவலைப் பெருமூச்சையடுத்த அழைப்பு. மயில்சாமிக்கு மனசு கிடந்து கொதித்தது. அடிவயிற்றிலிருந்து தெறித்த உணர்ச்சி, வார்த்தைகளாகப் பாய்ந்தது.

''ஆமா... சோத்தைக் கொண்ணாந்து தலையிலே கொட்டு. அது ஒன்னுதான் கொறைச்சல்.''

இவனது மனக் கொதிப்பைப் பகிர்ந்து கொண்டு... வாழ்க்கையையும், விதியையும், வறுமையையும் சபித்துப் பேசி, ஆத்ம பங்காளியின் ஆத்திரத்தைப் பேசிப் பேசியே ஆற்றினாள், முருகத்தாய். இவன் சாப்பிடும்போது... மணி எட்டுக்கு மேலாயிற்று.

கையை கழுவினான். அலுத்த உடம்பு. பசித்த வயிறு. உண்ட நிறைவு. நிறைவின் மயக்கப் படபடப்பு. ஆயாசமாக வந்தது. மகனைக் கூப்பிட்டான்.

''என்னய்யா?''

''கடையிலே போய்... வெத்தலை பாக்கும், பீடியும் வாங்கிட்டு வா.''

''துட்டு?''

''பாக்கியிலே எழுதிக்கிடச் சொல்லு.''

பையன் வாசலில் நின்றான். இருட்டைக் கண்டு பயந்துபோய் திகைத்தான். அய்யா முகத்தைத் திரும்பிப்

பார்த்தான். 'அடிச்சாலும் அடிப்பாரோ' என்ற பயம் வேறு. பயத்தில் பயத்தைக் கடந்து... கண்ணை மூடிக் கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடினான், பையன்.

மயில்சாமி சுவரில் சாய்ந்தான். கால்களை நேராக நீட்டிக் கொண்டான். உண்ட மயக்கத்தோடு நாள்முழுக்க பட்ட மனக்காயங்களின் ரணமும் சேர்ந்துகொள்ள... ஆழ்ந்து பெருமூச்சு விட்டான்.

அட... இந்த ஒரு நாள்லே பட்ட அவமானமும் கேவலமும் கொஞ்சமா? எல்லாம் ராமசுப்பு முதலாளியாலே வந்த வெனை. அவரை மனுசரா மதிச்சு... மனுசத் தன்மையோட விசுவாசம் காட்டி... பல்லைக் கடிச்சுக்கிட்டு பொறுமையா வந்த பலன். முகத்தை முறிக்காம... கூலிப் பாக்கியை வற்புறுத்தி கேட்காம வந்ததாலே வந்த கேவலம்.

நாளைக்கு, விடிஞ்சா சீட்டுக்காரரு வாசலை மறிப்பாரே... என்ன பதில் சொல்ல? எப்படி மீள?

நினைவுகளின் நீட்சி, இந்தக் கேள்வியில் அறுபட்டுத் தொங்கியது. வெட்டுப்பட்ட பல்லி வாலாக துடித்தது.

பையன் வந்து நின்றான். ஓடிவந்த வேகத்தில் 'தஸ்ஸு புஸ்ஸெ'ன்று இளைத்தான். மூச்சிறைத்தது. அதையும் மீறிய முகவாட்டம். அந்தப் பிஞ்சுக் கண்களில் நீரின் உறுத்தல். அடிபட்ட வலியின் துடிப்பு.

மயில் சாமி பதறிப் போனான். குழப்பம், திகைப்பு.

''என்னலே... வெத்தலை வாங்கலையா?''

கலங்கிப் போன குரலில் அழப்போவதைப் போன்ற திணறலோடு... சிறுவன்.

''தரமாட்டேனுட்டாக...''

''ஏண்டா?''

''கடன் ரொம்ப இருக்காம். அதுக்காக சத்தம் போட்டாக. கூவக்காடு போட்டாக. 'வெத்தலையும் இல்லே, ஒன்னுமில்லே'ன்னு வெரட்டிட்டாக...''

செருப்படிபட்ட மாதிரி இருந்தது, மயில்சாமிக்கு. மகன் முன்னால் குற்றவாளியாக உணர்ந்தான். தனது செயலால்... அந்தச் சிறு பூ பட்டு வந்த அவமானம். நாலுபேர் பார்த்துச் சிரிக்க, துரத்தப்பட்டு வந்திருக்கும் சின்னக் குருவி.

இவனுக்குள் சுரீரென்று சுட்டது. மனசுக்குள் சட்டென்று தோன்றி மறைந்த மின்னலாய்... ராமசுப்பு முகம். துடித்துப் போனவனைப் போல, சட்டென எழுந்த மயில்சாமி, வெறிபிடித்தவனைப் போல - ஒரு சூறாவளியைப் போல தெருவில் இறங்கினான். 'தக், தக்'கென்று நடந்தான், காட்டு யானையைப் போல.

விளக்கு வைத்த பிறகு... வழக்கமில்லாத கோபத்தில் 'திடுதிப்'பென்று வந்து பணத்துக்கு நின்று பிடிவாதம் பிடிக்கிற மயில்சாமி.

ராமசுப்புக்கு பொத்துக் கொண்டு வந்தது. இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு... பருத்தி

வியாபாரி பணம் தராமல் இழுத்தடிப்பதையும், காத்திருக்கும் செலவுகளையும் சொந்தப் பாடுகளையும் சொன்னார்.

சட்டென்று இடை மறிக்கிற மயில்சாமி.

''மோலாளி, அர(ண்)மனைக்கு ஆயிரம் இருக்கும். அதுக்கு எளியவங்க நாங்க என்ன செய்ய? எங்க சம்பளத்தை ஏங்கிட்டே வீசியெறிஞ்சிருங்க.''

''என்ன இப்படி... விசுவாசமில்லாம... விட்டேத்தியா பேசுறே? கேவலம்... வெறும் எண்ணூத்தி இருபத்தைஞ்சு ரூவாய்க்காகவா... இப்படிப் பேசுறே?''

''இந்த ரூவா... உங்களுக்கு கையிலே ஒட்டுன பருக்கையை ஒதறுன மாதிரி. நாங்க சித்தெறும்பு. எங்களாலே பருக்கையை தாங்க முடியாதே...''

ராமசுப்புவுக்கும் கோபம் எகிறிக் கொண்டு வந்தது. விறுவிறுவென்று உள்ளே போய்விட்டு, ஒரு புயல் போல திரும்பி வந்தார்.

''இந்தா... ஐந்நூறு ரூவாயிருக்கு. எடுத்துட்டுப் போ...'' என்று முகம் முறித்த ஆத்திரத்தில் வீசி யெறிந்தார். திண்ணையில் சிதறிக்கிடந்தது ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள்.

எடுத்துக் கொண்டு வெளியேறினான், மயில்சாமி. வீட்டு வாசல் படியில் ஐந்தாவது படியில் கால் வைக்கிற போது, உள்ளிருந்து வந்த எரிச்சலான குரல்.

"தரங்கெட்ட பயலோட சகவாசம் வைச்சிக் கிட்டது... நம்ம தப்பு. விசுவாசங்கெட்ட நாயி. ஏழைப்பய, அவனோடு ஈனப்புத்தியை காட்டிட்டானே..."

அந்தக் குரல், இவன் மனசுக்குள் தீக்கங்குகளாக வந்து விழுந்தன. இவனது உணர்வை விசுவாசத்துக்காக இவன்பட்ட வேதனைகளை - ரணங்களை - ஓர் இம்மி கூட அறிந்து கொள்ளாமல்... இவனை 'அளந்து' முடிந்துவிட்ட அந்த மத்தியதரச் சம்சாரி.

இவனுக்குள்ளிருந்து ஒரு கசந்த சிரிப்பு வெளிவந்து, உதட்டில் உறைந்து கொண்டது.

ஏப்ரல் 1996 புதிய பார்வை

சபிக்கப்பட்ட ஆன்மாக்கள்

அறைபட்டது போலிருந்தது. தூக்கத்திலிருந்து சட்டென்று எழுந்தேன். 'என்னவோ ஏதோ'வென்று திகைத்தேன்.

''முத்தையா... முத்தையா'' என தடதடக்கும் கதவை மீறிக் கொண்டு, பதற்றத்துடன் வந்த அழைப்புச் சத்தத்தில் அவசரமும் முந்திக் கொண்டு வந்தன.

விடிவிளக்கு வெளிச்சத்தில் வேஷ்டியை ஒழுங்கு படுத்திக் கொண்டு கதவைத் திறந்தேன். என்னவென்று நான் விசாரிப்பதற்குள், கருப்பையா குரலால் மோதினான்:

''எம்மகனுக்கு ஜன்னி கோளாறு மாதிரியிருக்கு. வெட்டி வெட்டி இழுக்கு. குருதைலம் இருக்கா?''

அவனது பரபரப்பு என்னையும் கவ்விக் கொள்ள, தொண்டை ஒத்துழைக்க மறுத்தது. அவசர அவசரமாக கடையின் உள்கதவைத் திறந்தேன். சுவிட்சைப் போட்டேன். கையும் மனசும் பரபரத்து தவிக்க... சட்டென்று எடுக்கமுடியாமல் தேடினேன். ஆர்.எஸ். பதி கிடைத்தது.

கொடுத்தேன்.

''மாந்தக் கோளாறு இருந்துச்சா?''

''தெரியலியே...'' கருப்பையாவின் குரலில் சோகம் இழைந்தது.

''பெறகு?''

''ஒன்னுக்கிருக்க வெளியே வந்துட்டு படுக்கப் போகையிலே தற்செயலா புள்ளையைப் பார்த்தேன். முழியைச் சொருகிக்கிட்டு, ஒரு மாதிரியா கிடந்தான். கொஞ்ச நேரத்துலே விரல் சுண்டிச்சு. அப்புறம் வாய் சுண்டிச்சு. இப்போ, உடல் பூராவும் வெட்டி வெட்டி இழுக்கு.''

''சரி சரி... ஓடு... நானும் இதோ வாரேன்.''

புயல் என்னுள் புகுந்துகொண்டது. உந்தித் தள்ளியது. மீண்டும் கடைக்குள் பாய்ந்து, வேப்பெண்ணெய் கொஞ்சம் எடுத்துக் கொண்டேன். ரெண்டு பூடு. சின்ன இஞ்சித் துண்டு.

எல்லாவற்றையும் வினாடியில் எடுத்துக்கொண்டு வெளிப்பட்ட போது... தூக்கக் கலக்கத்துடன் பதறிப் போய் கண்ணம்மா கேட்டாள்: ''என்ன?''

''கருப்பையா மகனுக்கு ஜன்னி கோளாறாம்... நா போறேன். வீட்டைப் பாத்துக்கோ.''

ஒரேயடியாக அதிர்ந்து போய்விட்டது, அவள் பதைப்பில் தெரிந்தது. ''ஐய்யய்யோ! ஒத்தப் புள்ளைன்னு செல்லமா வளர்த்தாகளே... அந்தப் புள்ளைக்கா இந்தச் சீக்கு! அடக் கடவுளே... நீங்க ஓடுங்க...''

சுவரில் ஆணியில் தொங்கிய வாட்சை கையில் கட்டும் போதே பார்த்தேன். மணி 1-22. தெருவில் இறங்கி

ஓடினேன். இரண்டுநாள் மழையில் குழம்பிப்போன தெருச் சகதி காலுக்கடியில் நழுக்கிட்டது.

மேலத்தெருவின் கடைக்கோடியிலிருந்து கீழத் தெருவிலிருக்கும் கருப்பையா வீட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தேன்.

உழைத்த களைப்பில் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்து, மறுநாளைக்கான சக்தியை வரவழைத்துக் கொள்ள வேண்டிய கிராமத்து வீடுகளில் விளக்கு வெளிச்சம், சன்னமான சலசலப்புகள்.

இந்தச் செய்தி, அதற்குள்ளாகவா கிராமத்தின் கதவுகளைத் தட்டிவிட்டது! ஐந்து நிமிடத்திற்குள்ளாகவா?

எனக்கு முன்பாக இருட்டில் யாரோ ஓடுவது தெரிந்தது. குரைக்க வேண்டிய நாய்கள்கூட திகிலடித்துப் போய் ஏறிட்டுப் பார்த்தன.

நடுத்தெருவைக் கடந்தேன்.

திண்ணையில் படுத்திருந்த ஒரு பெரியவர் திடுக்கிடலுடன் எழுந்தவாறே கேட்கிற சத்தம்: ''என்னப்பா, ஓட்டம்?''

ஓடுகிறவனின் பதிலில் மூச்சிரைப்பு தெரிந்தது, ''கருப்பையா மகனுக்கு ஜன்னி!''

''அடக் கடவுளே! 'ஒரே புள்ளைதான் ஒனக்கு'ன்னு சொன்ன தெய்வம், அதையும் பிடுங்கிக்கவா பாக்குது? குருட்டுப்பய தெய்வம்!''

கிழவரின் வருத்தம் கலந்த முணுமுணுப்பு, என்னை எட்டுகிறது.

கருப்பையா வீட்டை நெருங்கினேன். கூட்டம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது, ஆண்களும் பெண்களுமாய்... பரிதவிக்கும் இதயங்களாய்... திகில் படிந்த முகங்களாய்... நாணிலிருந்து விடுபட்ட அம்புகளைப் போல அங்கும் இங்குமாய் ஓடித் திரிகிற மனிதர்களாய்...

அசாதாரணமான சுறுசுறுப்பில் புயல் வசப்பட்ட சிலரின் துரித மருத்துவ நடவடிக்கைகள்...

எட்டு வயசு இருக்கும். என்னமாய் பேசுவான்; பெரிய மனுசனைப் போல சீரியஸான செய்திகளை படிப்பானே... அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் 'இவனால் இந்த குக்கிராமத்தின் பெயர் நாடெல்லாம் புகழப்படப் போகிறது' என்ற வசந்தக் கனவுப் பூங்கொத்துகளை மனசுள் புஷ்பிப்பானே...

அவன், இதோ-

ஏதோ ஒரு பெண்ணின் மடியில் துவண்டு அலங்கோலமாய்க் கிடக்கிறான். கையும் காலும் வெட்டி வெட்டி இழுக்க, உதடுகளும் கண்களும் கோணிக் கோணி... உடல் பூராவும் சுண்டிச் சுண்டி வலித்துக் கொள்ள தரையில் தூக்கிப் போட்ட மீனைப் போல...

மரணத்தழுவலுக்கு ஆசைப்பட்டு, உலகப்பிடியி லிருந்து திமிறிக் கொண்டிருப்பவனைப் போல...

எனக்கு மனசுக்குள் பிழிபடுவதைப் போன்றதோர் கொடிய வேதனை.

ஒருவர் வெங்காயத்தை நசுக்கிக் கொடுக்கிறார். ஒரு பெண் அதை வாங்கி அவன் நாசியிலும், செவியிலும்

வைத்து மூச்சை இழுத்து இழுத்து ஊதுகிறாள்; இன்னொருத்தி உள்ளங்கையில் தைலத்தைச் சாய்த்து சாய்த்து தேய்க்கிறாள்; மற்றொருத்தி வறுத்தெடுத்த நெல்லுமியை ஒரு துணியில் கட்டி உடம்பெல்லாம் ஒத்தி ஒத்தி எடுக்கிறாள்.

''வெங்காயத்தைக் கொண்டா... அதை எடுத்துவா, இதை எடுத்துவா'' என்று சில பெரியவர்கள் பதைப்போடு யோசனைகள் சொல்ல...

சிலர் ஓடியாடிச் செய்ய...

ஏதேனும் ஒன்றில் பங்கெடுத்து ஒத்துழைக்க வேண்டும் என்று கிராமத்து இதயங்களெல்லாம் துடித்துக் கொண்டு போட்டியிட்டன.

யாரிடமோ ஆத்திரப்பட்டு அங்கலாய்ப்பதைப் போல ஒரு கிழவி முணுமுணுத்தாள். ''எப்படா குழி கிடைக்கும்னு காத்துக்கிட்டிருக்கோம். தலைநரைச்ச எங்ககிட்டே வரமாட்டேங்குது. பாவம், வளர வேண்டிய இந்த பிஞ்சுகிட்டே ஏறிக்கிட்டு... 'இது' இந்தக் கூத்து போடுது.''

நானும் சுறுசுறுப்பானேன்.

''சரி... யாராச்சும் இந்த வேப்பெண்ணெயைக் காச்சுங்க...'' என்றேன். ஒரு பெண் அவசரமாக வாங்கிக் கொண்டு ஓடினாள். வெள்ளைப் பூண்டை உடைத்தேன். பருப்பின் தோலை பரபரப்போடு உரித்தேன்.

அந்தப் பெண்ணிடம் ஓடிப்போய் ''இதையும் எண்ணெய்க்குள்ளே போட்டுக் காய்ச்சு. ரெண்டு மிளகாய் வத்தலையும் போட்டுக்கோ.''

சட்டென்று இன்னொரு பெண்ணை அழைத்தேன்.

''இந்தா... இந்த இஞ்சித்துண்டை தட்டி நசுக்கி சாறெடுத்து லேசாய்க் காச்சிட்டுவா... வெருசா வரணும்... ஓடு''

என்னுடைய துரிதம் அவளையும் பற்றிக் கொள்ள, ஓடினாள். பதைபதைப்போடும் பரபரப்போடும் எல்லோரும் செய்கிற வைத்தியங்களையெல்லாம் பிடிவாதமாக மறுத்தொதுக்குவதைப்போல அவன் உடம்பெல்லாம் வெட்டி வெட்டி இழுக்க... தொண்டைக்குள் 'கொரட் கொரட்' டென்ற இழுவை சப்தம்...

இதோ... ஒரு ஜீவனிடம் நங்கூரமிட்டிருக்கிறது, மரணம்.

உள்ளுக்குள் உடைந்து போய் கருப்பையா அழுவதைப் போல மூலையில் நின்றான். அவன் முகம் கறுத்து, திகிலால் விகாரப்பட்டிருந்தது. அவனது ஒரே மகன்-

சந்தோஷக்கனி மரணத்தின் வாசலில் துடித்துக் கொண்டிருக்கிறான். கருப்பையாவின் மனைவி அதோ... ஒப்பாரியே வைக்கத் துவங்கி விட்டாள்.

"பூப்போல நீ பொறந்தே எங்கண்ணு
மலடிங்கிற பேரைத் துடைச்சே... எஞ்செல்லம்...
எந்தங்கம்...
பூமிக்குள்ளே போகத்துடிக்கிறீயே... எனக்கு
பொல்லாத பேரு வாங்கித் தரப்போறீயோ..."

அவளை ஒரு கிழவி உரிமையோடு அதட்டி, ஆறுதல் கூறுகிறாள். ''ஏண்டி கிறுக்கி, எதுக்குடி அழுகிறே? இத்தனை பேர் இருந்துகிட்டு, ஒம் பிள்ளையை சாகவா விட்டிடுவாக? கொத்துப் போல ஒத்தைப் புள்ளையை குடுத்த கடவுள், அதையும் எடுத்துக்கிடவா செய்வான்? அழுகாதே''

அவளது சோகக் கோலம் எந்த இரும்பு மனசையும் உருக வைத்துவிடுவதாக இருந்தது. ஒரு நடுவயதுப் பெண்மணி பரிவோடு அவளைத் தொட்டு மெதுவாகச் சொன்னாள்:

ஆயிரங் கண்ணுடையாள் மாரியம்மாளுக்கு நேர்த்திக் கடன் போடு. ஒம் பிள்ளையை ஒரு நொடியிலே காப்பாத்துவா. அவா நெனச்சா, நடக்காத காரியமா ஒலகத்துலே இருக்கு?''

கருப்பையா மனைவி விருட்டென்று எழுந்து, மச்சு வீட்டுக்குள் ஓடினாள். ஒரு வேஷ்டியிலிருந்து வெள்ளைத் துணியை சரட்டென்று கிழித்தாள். ஒரு மஞ்சள் துண்டையும், மூன்று உப்புக்கல்லையும், ஐம்பது பைசா நாணயத்தையும் வெள்ளைத் துணியில் வைத்து கைகள் நடுங்க முடிச்சு போட்டாள்.

உள்ளங்கையில் வைத்து முகத்துக்கு நேராக ஏந்திக் கொண்டாள். கண்ணீர் சாரை சாரையாக வழிய, குரல் கரகரக்க...

''ஆயிரங் கண்ணாத்தா... சக்தியுள்ள மாரியாத்தா, ஏம்புள்ளை உசுரை காப்பாத்திக் குடு. உன் சன்னதிக்கு வந்து, கெடா வெட்டி, பொங்க வைச்சு எம்மவனோட முடியையும் தாரேன், தாயே...''

வாய் ''தாயே, தாயே தாயே'' என்று முணங்க, நான்கு திசைகளையும் நோக்கி கும்பிட்டு விட்டு, அந்த முடிச்சை அடுக்குப் பானைக்குள் போட்டு மூடி வைத்தாள்.

அவள் தவிப்பும்.. துடிப்பும்... பதைபதைப்பும்... சோகத்தின் இருள் படிந்த முகமும் என் மனசைப் பிசைந்தன.

நான் சந்தோஷத்தைப் பார்த்தேன். அவன் இன்னும் வெட்டி, வெட்டி இழுத்துக் கொண்டு, தொண்டைக்குள் 'கொரட் கொரட்'டென்ற சப்தத்தோடு...

ஏக காலத்தில் வேப்பெண்ணையும், இஞ்சிச் சாறும் வந்து சேர்ந்தது. இரண்டையும் கலந்தேன். சூடாய் இருந்தது. கைக்குக் கிடைத்த துணியால் வீசி, காற்று உற்பத்தி செய்து அதை ஆற்றினேன்.

''கொஞ்சம் பொறு, சூடு ஆறட்டும்.''

''யாராச்சும் போய்... ஒரு சங்கு எடுத்துட்டு வாங்க''

பலவிதக் குரலலைகள் எழுந்தன. எல்லா அலைகளிலும் அவசரம், துடிப்பு.

வெட்டி வெட்டி இழுத்துக் கொண்டிருந்த உடம்பை இருவர் இறுக்கிப் பிடிக்க, கோணிக் கோணி வலிக்கும் வாயைச் சுற்றி உள்ளங்கையைக் கரையாக வைத்துக் கொண்டு எண்ணெய் ஊற்றப்பட்டது.

எண்ணெய் கொஞ்சம் வெளியே வழிந்தாலும், கணிசமாய் உள்ளே இறங்கி விட்டது.

இதோ... இன்னும் சில வினாடிகளில் கோழை (சளி) 'கத கதா'வென்று பீறிட்டு வெளிவரும். வெட்டுதல் நின்று உடம்பின் விறைப்பு தளர்ந்து சாந்தமாகி விடும்.

கசகசப்பும் சளசளப்பும் அதிகமாக... நான் ஓங்கிச் சத்தமிட்டேன்: ''எதுக்கு கண்டது கழியதைப் பேசுதீக? எண்ணெய் குடுத்துருக்கு. இன்னும் சித்த நேரத்துலே சரியாயிடும்.''

எனக்கு சட்டென மனதில் ஒரு மின்னல் வெட்டியது.

''மலச்சிக்கல் இருக்குமோ யாராச்சும் ஒரு சோப்பை கொண்டு வாங்க. வழுவழுப்பா சீவி, பின்னாலே சொருகணும். மலமும், சளியும் வெளிவந்தாத்தான்... சீக்கு வுடும்.''

சோப்பை எடுக்க நாலைந்து பேர் வெவ்வேறு திசைகளில் பறக்கின்றனர். நான் சந்தோஷத்தின் உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். குளிர்ச்சி கண்டு கொண்டே யிருந்தது. உஷ்ணப்படுத்துவதற்கு தைலத்தேய்ப்புகள்... தவிட்டு ஒத்தடங்கள்...

கடிகாரத்தைப் பார்த்தேன். பல நிமிடங்கள் ஆகி விட்டன. இன்னும் கோழை வரவில்லை. உடம்பு முன்னை விடக் கூடுதல் வேகத்தில் உதற லெடுத்தது. மிரட்டுகிற தோரணையில் வாய் கோணிக் கொண்டிருந்தது.

எல்லோருக்கும் தைர்யம் சொல்லிக் கொண்டிருந்த எனக்கே மனதில் பயம் நிழலாட ஆரம்பித்தது.

பெண்கள் அரற்றவும், அங்கலாய்க்கவும் ஆரம்பித்து விட்டனர். கிழவிகள் அழப்போகிற கரகரப்பில் புலம்பினர்.

ஜாமத்தைக் கடந்த இந்த அகாலத்தில்-

ஒரு சின்னஞ்சிறு ஜீவனைப் பாதுகாக்க எத்தனை மனித ஜீவன்கள் பரிதவிக்கின்றன. கிராமத்து இதயங்கள் சகலமும் துடித்தலைகின்றன!

கைவைத்தியங்கள் பயனற்றுப் போய்விட்டன என்ற யதார்த்தமும், என்னைப் போலவே அனைவரையும் அச்சுறுத்தியது. கையறு நிலைமையில் மனசுகள் அடித்துக் கொண்டன.

நான் உள்ளுக்குள் பரபரத்தேன். யோசிக்க முடியாத அவசரத்தில் மனசு துடித்தது. ஊருக்குள் ஓடினேன். ஒரேயொரு ஹோமியோபதி டாக்டர். அலோபதியும் செய்வார். அடுத்த கணத்தில் அவரை எழுப்பிக் கொண்டிருந்தேன்.

''சார், சார்''

உறக்கக் கலக்கத்துடன் கையிலிருந்த ஹென்றி சாண்டஸ்ஸைப் பார்த்துவிட்டு, எச்சிலைத் துப்பிவிட்டு, எரிச்சலூட்டுகிற நிதானத்துடன் விசாரித்தார்.

பரபரப்பில் எனக்கு மூச்சிரைத்தது. சரியாகச் சொல்ல முடியாமல், வார்த்தைகள் முட்டிமோதிக் கொண்டு சிதறி விழுந்தன. அவர் கையை விரித்து விட்டார்.

''இஞ்செக்ஷன் மருந்து கைவசமில்லியே...'' என்றவர், அசிரத்தையோடு, ''வேப்பெண்ணெய் காச்சிக் குடுங்க. சரியாப் போகும்'' என்றார்.

நெஞ்சுக்குள் அலைவீசிப் புரண்ட ஆத்திர உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, வீட்டை நோக்கி ஓடினேன். சைக்கிளை எடுத்தேன். மீண்டும் கருப்பையா வீடு.

சைக்கிளோடு நான் வந்து நின்றவுடன், கூட்டத்தினர் முகத்தில் புதிய எதிர்பார்ப்புகள்... புதிய கவலையின் கரிய நிழல்கள்...

பெரியவர்கள் ஓடி வந்தனர்.

''ஏம்ப்பா முத்தையா, டாக்டரையாச்சும் கூட்டிட்டு வர ஆள் அனுப்புவோமா?''

''அதுக்குத் தான் சைக்கிளை எடுத்துக்கிட்டு வந்தேன்.''

''நல்லவேளை! டேய், யாராச்சும் ரெண்டு பேரு முத்தையாகூட துணைக்குப் போங்கடா...''

வாலிபர்கள் 'நா முந்தி, நீ முந்தி' என்று பாய்ந்தோடினர். ''நீ போ நீ போ'' என்று உசுப்பி விட்டனர். இதயங்கள் சிறகு முளைத்துக் கொண்டு பறந்தன.

''இப்ப எப்படி இருக்கு?'' பெடலில் காலை வைத்துக் கொண்டு விசாரித்தேன்.

''இன்னும் அப்படியேதான் இருக்கு.''

கூட்டம் முன்னை விடக் கூடுதலாகியிருந்தது. பதைப்பும், திகிலுமாய் மனிதர்கள் அங்கும் இங்குமாய் ஓடியலைந்தனர். கண்ட கண்ட சாமிகளை அழைத்து பிரார்த்திக்கிற பெண்கள்...

கிராமம் முழுவதும் ஒரே இதயமாக ஒரே நினைவாக - ஒரே உணர்ச்சியாக வடிவம் கொண்டு அலை மோதிக் கொண்டிருந்தது.

சைக்கிள் பறந்தது. இருட்டு. கிள்ளிவிட்டு ஓடுகிற ஆளை இனம் பார்க்க முடியாத மையிருட்டு. ஈரச் சதசதப்பு. எதையும் பொருட்படுத்தாமல் சைக்கிள்கள் இரைச்சலுடன் விரைந்தன.

முன்னால் இரண்டு - பின்னால் இரண்டு சைக்கிள்கள் யாரும் பேசிக் கொள்ளவில்லை. பேச மனமில்லை. மனமெல்லாம் சாவின் விளிம்பில் துடிக்கிற சந்தோஷக் கனி.

மௌனம், ஆறாவது சைக்கிளில் தொடர்ந்து கொண்டிருந்தது.

சைக்கிளின் வேகத்தில் உற்பத்தியாகிற காற்று உடலுக்குள் பாய்கின்றது. செவியோரங்களில் இரைச்சலிடு கிறது.

இன்னும் நான்கு மைல்கள். அதைக் கடந்து விட்டால், அந்தச் சின்ன நகரம், அங்கே அந்த டாக்டர். எம்.பி.பி.எஸ்.

அவர் மட்டும் வந்து விட்டால்...

ஓ... எவ்வளவு நன்றாக இருக்கும்!

சந்தோஷக்கனி மீண்டும் சந்தோஷமாகி விடுவான். மீண்டும் வயதுக்கு மீறிய அறிவுச் செழுமையோடு பேசுவான். மீண்டும் சீரியசான செய்திகளை பத்திரிகைகளில் படிப்பான். மீண்டும் அந்தத் தாய்க்கு ஒற்றை மகனாக இன்ப ஊற்றாக அடி வாழையாக வளர்வான். மீண்டும் மீண்டும்...

இதேபோல், ஒரு தடவை டாக்டரை அழைக்க சைக்கிளில் பறந்தது, நினைவுக்கு வந்தது. அப்பொழுதும் அப்படித்தான்.

நாலு பிள்ளைக்கு தகப்பனான பால்ச்சாமி, பயங்கரமான வயிற்றுப் போக்கில் துவள கைவைத்தியங்கள் சக்தியற்றுப் போக - வேகத்தில் ஆளைச் சுருட்டி, உணர்வற்றுச் சாய்த்துவிட.

ஓடினேன். டாக்டர் மோட்டார் பைக்கில் என்னையும் ஏற்றிக் கொண்டு நிமிஷங்களில் வந்தார். உடனடியான இஞ்செக்ஷன்கள், க்ளுகோஸ் பாட்டில்கள் நான்கை காலி செய்து உயிரைக் காப்பாற்றிவிட்டார்.

இதோ... அந்தப் பெரிய குடும்பமெனும் வாழ்க்கைக் கப்பலை கவிழ்ந்து போகாமல்... பால்ச்சாமி ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

டாக்டர் மட்டும், அப்போது வர மறுத்திருந்தால்...

பால்ச்சாமியை புதைத்த இடத்தில் புல் மண்டிக் கிடக்கும்.

அப்போது டாக்டர் க்ளினிக் ஆரம்பித்த புதிது. வாடகை இடத்தில்தான் க்ளினிக் வைத்திருந்தார்.

இப்போது, அவர் பாடு வசதியாகிவிட்டது.

இருக்கட்டும்... டாக்டர், தங்கமான மனிதர். அந்தஸ்தோடு, பணச் செழிப்போடு அவர் வாழ்ந்தால்... சந்தோஷம்தான்.

மீண்டும் என் மனசில் சந்தோஷக்கனி. அவனது துடிப்பு வெட்டி வெட்டி இழுக்கிற உடம்பு. கோணிக் கொண்டு செல்கிற வாய். 'கொரட் கொரட்'டென்று இழுக்கிற தொண்டை.

டாக்டர் மட்டும் உடனே புறப்பட்டு விட்டால்...

இரண்டே ஊசியில் வெட்டுதல் நின்று போகும். மேலும் இரண்டு ஊசியில் சந்தோஷக்கனி, எல்லோருக்கும் சந்தோஷமான கனியாகி விடுவான்.

எனக்கு உடம்பு வியர்த்துக் கொட்டியது. சட்டை வியர்வையில் நனைந்து கசகசத்தது. சைக்கிள் மண்ணில் பறந்தது. சிறுசிறு குழிகளில் விழுந்து எழும் போதெல்லாம்... உடம்போடு சேர்ந்து மனசும் குலுங்கியது.

நகரத்துக்குள் பிரவேசித்தோம். அடுத்த நிமிஷத்தில் டாக்டர் பங்களா முன்பு நின்றோம். பஸ்ஸரைத் தேடினேன். இல்லை.

தொடுவதற்கு மனம் கூசக்கூடிய புதுமைப் பொலிவோடு பளபளத்த கதவில் கைவைத்து தட்டினேன்.

''யாரது?'' தூக்கக் கலக்கத்தில் டாக்டரின் குரல்.

'நல்ல வேளை, டாக்டர் வெளியூர் எங்கும் போய்விடவில்லை'' என்ற திருப்தி மனசின் இறுக்கத்தை சற்றுத் தளர்த்தி ஆசுவாசப்படுத்தியது.

லைட்டைப் போட்டார். கதவைத் திறந்தார்.

''யாரது?'' மீண்டும் டாக்டர்.

''என்ன சார்?''

''என்ன வேணும்?''

''சார், ஒரு பையனுக்கு கடுமையான ஜன்னி சார். நாட்டு வைத்தியமெல்லாம் செய்ஞ்சு பாத்துட்டோம். ஒன்னும் ஆகலே, சார்... நீங்க வரணும்.''

ஒருகணம்கூட அவர் யோசிக்கவில்லை; திகைக்க வில்லை; தயங்கவில்லை; சட்டென்று சொன்னார்;

''இப்போவெல்லாம் நா இப்படி போறதில்லே. வேணுமின்னா... இங்க கொண்டு வாங்க. எவ்வளவு டயமானாலும் சரி... ட்ரீட்மெண்ட் எடுக்கிறேன்.''

என்னுள் இடி இறங்கியது. எங்கோ ஓடப்போவதைப் போல இதயம் அடித்துக் கொண்டது. அந்தச் சப்தம் எனக்குக் கேட்பது போலிருந்தது.

''சார், அஞ்சு மைல் சார். அவனைக் கொண்டுவர முடியாது. கொண்டு வர்ரதுக்கும் லாயக்கில்லே. இடை வழியிலேயே 'ஏதாச்சும்' ஆனாலும் ஆகிப்போயிடும், சார்.''

''அதுக்கு நா என்ன செய்ய முடியும்?''

''சார், நீங்க அப்படிச் சொல்லக் கூடாது. இப்போது நீங்க வந்திங்கன்னா அந்தப் பையன் பொழைச்சுக்குவான். நல்ல பையன் சார், நீங்க நிச்சயமா காப்பாத்திடுவீக.''

''ஸாரி, நா இந்த மாதிரி வர்ரதை நிறுத்திட்டேன். வர முடியாது. வேணுமின்னாக் கொண்டு வாங்க. ட்ரீட் மெண்ட் செய்றேன்.''

''சார், ப்ளீஸ்...''

''ஸாரி... என்னாலே வர முடியாது, வேணுமின்னா கொண்டு வாங்க.'

விஷயம் முடிந்தது என்பதைப்போல அவர் வீட்டுக்குள் ஒடுங்கினார். ஒரு இளமையான நல்ல உயிரை

ஏந்தியிருந்த எங்கள் கெஞ்சுதல்கள், அவர் மனசில் சிறு சலனத்தைக்கூட நிகழ்த்த முடியாமல் விரையமாயிற்று.

அவரை விட்டு நாங்கள் அகன்றபோது - இருட்டு எங்களை மோதியது. மனசுக்குள்ளும் நுழைந்து நிறைத்துக் கொண்டது.

இப்படியும் ஒரு மனிதரால் சொல்ல முடியுமா? சொல்ல மனம் வருமா? மனசென்ன இரும்பா? அதுவும் ஒரு டாக்டர், சராசரியான மனிதரல்ல... விசேஷ சமூகக் கடமைகளை வரித்துக் கொண்ட டாக்டர்...

இதே டாக்டர்... முன்னால் மனிதராக இருந்தாரே... பதற்றத்துடன் வந்து அழைத்தவுடன் கருணையோடு வந்தாரே... பால்ச்சாமி போன்ற உயிர்களைப் பாதுகாத்து, பல குடும்பங்களின் விபத்துகளை தவிர்த்தாரே... அவரா இப்படி?...

எதனால் இப்படியானார்? எது இவரை இப்படி கொடுமையாக மாற்றியது? சமீபத்தில் வந்து சேர்ந்த பணச்செழுமைதானா? பணச்செழுமை, மனுஷத்தனத்தை அகற்றிவிடவா செய்யும்? இரக்கத்தையும் தொழிலுக்கான மனோதர்மத்தையும் கூட சாகடித்துவிடவா செய்யும்.

என் கூட வந்தவர்கள்... புகலற்ற நிலைமையில் மனம் போன போக்கில் திட்டித் தீர்த்தனர்.

'அட, இப்போ என்ன செய்றது?' என்ற கேள்வி எங்களை மறித்துக் கொண்டு நின்றது, மோதித் திணற வைத்தது.

சந்தோஷக்கனி... அடடா... எவ்வளவு அருமையான பையன்! அந்தக் கனி, உதிர வேண்டியதுதானா? அந்தக்

குடும்பம், சந்தோஷத்தை சாஸ்வதமாய் இழந்துவிட வேண்டியதுதானா?

நினைக்கும்போதே அந்தத் துயரம் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது. இருதயம் தோண்டி அகற்றப்பட்டதைப் போல உள்ளுக்குள் கொடிய வெறுமை.

கிராமத்தில் மட்டும் வைத்திய வசதி இருந் திருந்தால்...

இப்படி நாயாய் அலைய வேண்டியதில்லையே. அலைந்தும் ஏமாற்றத்தில் பரிதவிக்க வேண்டிய தில்லையே...

கிராமங்கள் தேசத்தின் ஆன்மாவாமே! அக்டோபர் 2-இல் பிறந்த மாமனிதர் கூறினாராமே! அவருக்கு வருஷம் தவறாமல் அரசு விழா எடுக்கிறதே.

அந்த ஆன்மாவில் ஒரு மெடிக்கல் சென்டர்கூட கிடையாதே!

சுதந்திர தேசத்தில் ஆன்மாக்களுக்கு கிடைக்கிற பராமரிப்புகள், பாதுகாப்புகள்... நல்ல வேடிக்கை!

'அட, இப்போ என்ன செய்றது?'

கையறு நிலைமையில் மனம் சிக்கித் தவித்தது. கட்டறுந்த நினைவுகள் குருட்டு ஈயாகப் பறந்து எங்கெங்கோ மோதியது.

நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொள்ள... சைக்கிளில் திரும்பினோம். மனசெல்லாம் சோர்வு; பீதி.

ஒப்பாரி சப்தம் கேட்பது போன்ற பிரமை. அந்தப் பிரமையே இதயத்தை அதிரச் செய்கிறது; ரம்பம் போட்டு அறுக்கிறது.

சைக்கிள் நகர மறுத்தது. சுற்றிலும் மொய்த்த இருட்டு... கனத்து தொங்குகிற கரியமேகங்கள்... வெட்டிச் சிரிக்கின்ற மின்னல்கள்...

ஒரு பேய் மழைக்கான கட்டியங்கள்.

கிராமத்துக்குள் பிரவேசித்தோம். ''டாக்டர் வர்ராரா?'' என்ற கேள்விக்கணைகள் நெஞ்சைத் தாக்கி என்னை மௌனப்படுத்த, கூட வந்தவர்கள் டாக்டரைப் பற்றி 'வல்க்கரா'ன வர்ணனைகளைப் பதிலாகத் தர...

கருப்பையா வீடு.

அதே கூட்டம். ஆனால் கூடுதலான பதைப்பு; கலவரம், டாக்டரில்லாத எங்களைக் கண்டு திடுக்கிட்டது.

''வரலியா... வரலியா...'' என்ற விசாரிப்புகள்... தொடர்ந்த வசவுகள்... கொதிப்பான சபித்தல்கள்...

உள்ளே போனேன். பையனைப் பார்த்தேன். அதே வெட்டுதல், இழுப்பு, வலிப்பு.

இரண்டாவது தடவையும் வேப்பெண்ணெய் ஊற்றப் பட்டதாம்! கோழை கொஞ்சமாய் வந்ததாம்! ஆனால்...

ஜன்னியின் அதே ஆரவாரம்; பேயாட்டம்.

பார்க்கப் பார்க்க மனசு வலி தாளாமல் திணறியது.

எனக்குள் பளிச்சிட்ட ஒரு நினைவு. மீண்டும் சுறுசுறுப்பானேன். ''யாராச்சும் ஒன்றுக்கு இருந்து கொஞ்சம் சிறுநீர் கொண்டுவாங்க'' என்று கத்தினேன்.

கூட்டத்தில் கண்ணம்மா இருண்டு போய் நின்றாள்.

''ஓடு! கடையிலே போய் கொஞ்சம் அரப்பு எடுத்துட்டுவா... ஓடு சீக்கிரம்!''

அவளைத் துரிதப்படுத்தி துரத்தினேன்.

வந்தது. அரப்புத் தூளை ஒரு வெள்ளைத் துணியில் முடிந்தேன். சிறுநீருக்குள் கொஞ்ச நேரம் ஊறவைத்தேன். அரப்பு முடிந்திருந்த துணிமுடிச்சை எடுத்து, பையனின் நாசித்துவாரத்தில் வைத்து-

மூச்சைத் பிடித்து சர்ர்ரென்று ஊதினேன். மூன்று முறைகள். அவன் மண்டை உச்சிக்குள் போய்த் தாக்கியிருக்கும். உடம்பை வலுக்கிக் கொண்டு மூன்று தும்மல்கள். கதக்கென்று சளி வெளிப்பட்டது. ஆனால் கொஞ்சமாய்... மேலும் வைத்தியங்கள் தொடர்ந்தன; தைலத் தேய்ப்புகள், தவிட்டு ஒத்தடங்கள்...

கொஞ்ச நேரத்திற்கெல்லாம்... வெட்டுதல், இழுப்பு, வலிப்பு எல்லாம் ஓய்ந்தது.

ஆம்.. எல்லாமே ஓய்ந்துவிட்டது!

இதயமே வெடித்ததைப் போல பெண்கள் வைத்த ஒப்பாரிச் சத்தத்தில் கிராமமே அதிர்ந்து குலுங்கியது.

கருப்பையா மூலையில் அழுது கொண்டிருந்தான். அவன் மனைவி வெறிகொண்டவளைப் போல வீட்டுக்குள் ஓடினாள். மாரியாத்தாளுக்கு நேர்த்திக்கடன்

போட்டு, முடிந்துவைத்த துணியை எடுத்து 'கோ'வென்று கதறிக் கொண்டே தெருப் புழுதியில் வீசியெறித்தாள்.

''மாரியாத்தாளாம் மாரியாத்தா, என்னைப் பட்ட மரமா நிக்க வைச்சு பரிதவிக்க விட்டவளா, ஆயிரங் கண்ணாத்தா?''

என்று கதறியவள், தலையிலும் நெஞ்சிலுமாய் அடித்துக் கொண்டே அவள் அழுத கோலம்... என் மனசைப் பிய்த்து எறிந்தது போலிருந்தது.

பெண்கள் வாய்விட்டு ஓலமிட்டு ஒப்பாரி வைக்க... கிராமத்து ஆண்கள் என்னைப் போலவே ஆன்மாவை அழுத்தும் சோகத்தில் மௌனமாய்க் குலுங்கிக் கொண்டிருந்தனர்.

நிறைந்தது

MALAR PRINTERS 044-8224803